
# திருஞான சம்பந்தர் தேவாரமும் சைவ சித்தாந்தக் கருத்துக்களும்





டாக்டர் கோமதி சூரியமூர்த்தி M.A., Ph.D., PGDCP

# திருஞானசம்பந்தர் தேவாரமும் சைவசித்தாந்தக் கருத்துக்களும்





"அன்னல் ஆலவாய், நண்ணினான் தனை
எண்ணியே தொழத் திண்ணம் இன்பமே"



டாக்டர் கோமதி சூரியமூர்த்தி Ph.D., PGDCP
சைவ சித்தாந்தத் தத்துவத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

மெய்யப்பன் அறக்கட்டளை

வெளியீடு :
ஈஸ்வரகம்
391, இந்திராகாந்தி தெரு,
ஆழ்வார் நகர்,
மதுரை 625 019.

# பதிப்பு விவரங்கள்


| | | |
|---|---|---|
| 1. நூற்பெயர் | : | திருஞானசம்பந்தர் தேவாரமும் சைவசித்தாந்தக் கருத்துக்களும். |
| 2. ஆசிரியர் | : | டாக்டர் கோமதி சூரியமூர்த்தி, சைவசித்தாந்தத் தத்துவத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை - 21. |
| 3. மொழி | : | தமிழ் |
| 4. பதிப்பு | : | முதல் பதிப்பு |
| 5. அச்சிட்ட நாள் | : | ஜனவரி, 1994. |
| 6. உரிமை | : | ஆசிரியர் |
| 7. நூல் அளவு | : | 1/8 டெம்மி |
| 8. மொத்த பக்கங்கள் | : | 400 |
| 9. படிகள் | : | 1000 |
| 10. அச்சிட்டோர் | : | குரு சிஸ்டம்ஸ் & கிராஃபிக்ஸ் 6A, T.P.K. Road, ஆண்டாள்புரம் மதுரை - 3. Ph : 602604 |
| 11. விலை | : | ரூ. 100 |
| 12. வெளியீடு | : | ஈஸ்வரகம், 391, இந்திரா காந்தி தெரு, ஆழ்வார் நகர், மதுரை - 625 019. Ph : 85318 |
| 13. பொருள் | : | சமயமும் தத்துவமும் |

# ஆசியுரை

## குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதினம்
26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம்
மயிலாடுதுறை (அஞ்சல்)
609 001.
7-----9-----1993.

" ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே."

எல்லாம் வல்ல சிவபரம்பொருள் விறகில் தீயாகவும், பாலில் நெய்யாகவும் மறைந்து உறைபவன். அளப்பரிய பக்தி மேலீட்டால் மட்டுமே அவனைக் கண்டு தொழ இயலும் என்பர் திருநாவுக்கரசர். அது போல் திருமுறைகளின் உள்ளீடாகச் சைவசித்தாந்த சாத்திர நுண்பொருள்கள் மறைந்து கிடக்கின்றன. அவற்றைப் பக்தியுணர்வுடன் தேடிக் கண்டு காட்டுவது சைவர்களின் கடனாகும்.

நமது ஆதீன பக்தசிரோமணியும், மதுரை காமராசர் பல்கலைக் கழகச் சைவசித்தாந்த மெய்ப்பொருளியல் துறை விரிவுரையாளருமாகிய முனைவர் திருமதி. கோமதிசூரியமூர்த்தி, திருஞானசம்பந்தர் தேவாரத்தில் பொதிந்திருக்கும் சைவசித்தாந்தக் கூறுகளை அரிதின் முயன்று திரட்டி, வகைப்படுத்தி 'திருஞானசம்பந்தர் தேவாரமும் சைவசித்தாந்தக் கருத்துக்களும்' என்ற தலைப்பில் ஒரு நூலாக வெளிக்கொணர்வது பாராட்டிற்குரியது.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெறுவதற்காக வழங்கப் பெற்ற இவ்வாய்வு நூல், முன்னுரை, முடிவுரை நீங்கலாக எட்டு இயல்களைக் கொண்டுள்ளது. திருஞானசம்பந்தர் தேவாரத்தில் காணப்பெறும் சைவசித்தாந்தக் கூறுகளை பதி, பசு, பாச இயல் கோட்பாடுகள் என்ற மூன்று தலைப்பில் விரிவாக ஆராய்கின்றன. சாதனமும் - பயனும் என்ற

இயல் சிவஞானபோதம் மற்றும் சித்தியார் நெறிநின்று சைவசித்தாந்தக் கூறுகளை இனங்- கண்டு காட்டுகிறது.

இறைவன் உலக உயிர்களுக்குச் செய்யும் உதவிகள் ஒன்றாதல், வேறாதல், உடனாதல் என மூவகைப்படும், என்பதைத் திருஞான- சம்பந்தர் விளக்கியுள்ளமை அறிந்து இன்புறற்பாலது. இது சைவசித்தாந்தம் கூறும் அத்துவிதம் என்பதற்கும் விளக்கமாக அமைகிறது. உயிர் அநாதி என்ற சைவசித்தாந்தக் கோட்பாட்டை 'விளையாததொர் பரிசில் வரும் பசு' என்ற தொடரில் கண்டு காட்டுவதும், உயிர்கள் வினைப்பயனைத் தப்பாது அனுபவிக்கும் என்பதும், இறைவழிபாட்டால் வினை நீக்கம் பெறும் என்பதும் முரண்பாடுடையன அன்று என்பனவாகிய ஆய்வுப் பகுதிகள் நூலாசிரியரின் நுண்மாண் நுழைபுலத்தை விளக்குவன. பின் இணைப்பாகத் தரப்பெற்றிருக்கும் செய்திகள் மேல்நிலை ஆய்வுகளுக்குத் துணையாகும்.

முனைவர் திருமதி. கோமதி சூரியமூர்த்தியின் இந்நூல் இனிதே வெளிப் போந்து சைவத் தமிழ் உலகிற்குத் பயன்படவும், அம்மையார் மேலும் இத்தகு நல்முயற்சிகளில் ஈடுபட்டுச் சைவசமயத்திற்குத் தொண்டாற்றி நீடு இனிது வாழவும், இந்நூலைத் தமிழ் உலகம் ஏற்றுப் போற்றிப் பயன்பெறவும், செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

## நன்றியுரை

"திருஞானசம்பந்தர் தேவாரமும் சைவ சித்தாந்தக் கருத்துக்களும்" என்னும் தலைப்பில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நான் அறிஞர் பட்டத்திற்காக (1983ல்) அளித்த ஆய்வேடு இன்று நூல் வடிவம் பெறுகின்றது. நூல் வெளிவரத் துணை நின்ற திருவருளுக்கு முதற்கண் என் வணக்கத்தைச் சமர்ப்பிக்கின்றேன்.

ஆய்வேட்டினை நூலாக வெளியிட அனுமதி தந்த மதுரை காமராசர் பல்கலைக்கழக துணைவேந்தருக்கும், ஆட்சிக்குழு, ஆட்சிப் பேரவை உறுப்பினர்கட்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நூலிற்கு ஆசியுரையருளிய திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம் 26 ஆவது குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கட்கு என் பணிவான வணக்கத்தையும், உளங்கனிந்த நன்றியையும் சமர்ப்பிக்கின்றேன்.

ஆய்விற்கு மேற்பார்வையாளராக இருந்து நாள்தோறும் அன்புடன் நெறிப்படுத்தி, தளர்வுறா வண்ணம் ஊக்கப்படுத்தி ஆய்வு சிறப்புற அமையத் துணையாக இருந்தவர் எனது பேராசிரியர் பெருந்தகையார் அமரர் டாக்டர் நா.செயராமன் ஆவார். அவர்களுக்கு என் இதயங்கனிந்த நன்றியைக் காலமெல்லாம் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய ஆய்வுப் பணிக்கு இடம் அளித்த முன்னாள் தமிழ்த்துறைத் த்லைவர் பேராசிரியர் டாக்டர் முத்துச் சண்முகனார் அவர்கட்கும், அவ்வப்போது ஆராய்ச்சி பற்றிக் கேட்டு ஊக்கப்படுத்திய முன்னாள் தமிழியல்துறைத் தலைவர் டாக்டர் தமிழண்ணல் அவர்கட்கும் நான் நன்றி கூறுகின்றேன்.

ஆய்வின் ஆரம்பநிலையில் அறிவுரைகள் கூறிய அமரர் திரு.க. வச்சிரவேல் முதலியார், அமரர் திரு. ச. தண்டபாணி தேசிகர், டாக்டர் ச. கங்காதரன், திரு. சி. அருணைவடிவேல் முதலியார், டாக்டர் டி.பி. சித்தலிங்கையா, என் துணைவரின் தந்தை சி.ஈ. நாயகம் ஆகியோருக்கும் நன்றி கூறுதற்குரியேன்.

ஆய்விற்குரிய நூல்களுள் பெரும்பாலானவற்றை எனக்குக் கொடுத்து உதவிய என் அன்புத் தந்தையார் திரு. இ.க.சேதுராமலிங்கம் அவர்கட்கும், ஆய்வின்போதும், ஆய்வேடு தற்போது நூலாக வெளிவரவும் எனக்குப் பெரிதும் உதவி செய்த என் வாழ்க்கைத் துணைவர் டாக்டர் சி.ஈ. சூரியமூர்த்தி அவர்களுக்கும் என் நன்றி என்றும் உரித்து.

நூலினை மின்ஒளி அச்சுக்கோர்வை முறையில் சிறப்பாக வெளியிட்ட குரு சிஸ்டம்ஸ் &கிராபிக்ஸ் உரிமையாளர்கட்கும் என் நன்றி.

மதுரை–19. கோமதி சூரியமூர்த்தி
1-12-'93.

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

## பொது

| | | |
|---|---|---|
| உ.ஆ. | - | உரையாசிரியர் |
| சூத். | - | சூத்திரம் |
| திருஞான. | - | திருஞானசம்பந்தர் தேவாரம் |
| தொ.ஆ. | - | தொகுப்பாசிரியர் |
| ப. | - | பக்கம் |
| பக். | - | பக்கங்கள் |
| பொ.ப.ஆ. | - | பொதுப்பதிப்பாசிரியர் |
| மு.நூல். | - | முற்காட்டிய நூல் |
| மொ.ஆ. | - | மொழி பெயர்ப்பாசிரியர் |
| வி.ஆ. | - | விளக்கவுரையாசிரியர் |
| வி.உ. | - | விற்பனை உரிமை |
| 1:90:12 | - | முதல் எண் (1) திருமுறையைக் குறிக்கும். இரண்டாம் எண் (90) திருஞானசம்பந்தர் தேவாரப் பதிகத்தைக் குறிக்கும். மூன்றாவது எண் (12) அப்பதிகத்திலுள்ள பாடலைக் குறிக்கும். |
| P. | – | Page |
| P.P. | – | Pages |
| Ibid. | – | Ibidem |
| Vol. | – | Volume |

# பதிப்பகங்கள்

| | | |
|---|---|---|
| இ.ப.க.த. மன்றம் | - | இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம். |
| கழகம். | - | திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட். |
| சமாசம். | - | சைவசித்தாந்த மகாசமாசம். |
| **Kazhagam.** | – | **The South India Saiva Siddhanta Works Publishing Society, Trinelveli Dist.** |

## பல்கலைக் கழகங்கள்

| | | |
|---|---|---|
| அ.ப.கழகம். | - | அண்ணாமலைப் பல்கலைக் கழகம். |
| ம.கா.ப. கழ்கம். | - | மதுரை காமராசர் பல்கலைக் கழகம். |

# பொருளடக்கம்

# சந்தான குரவர்கள்













"மானுடப் பிறவி தானும் வகுத்தது மன வாக் காயத்து
ஆனிடத்து ஐந்தும் ஆடும் அரன் பணிக்காக அன்றோ
வானிடத்தவரும் மண்மேல் வந்து அரன்தனை அர்ச்சிப்பர்
ஊன்எடுத்து உழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ !".

# 1. முன்னுரை

# 1. முன்னுரை

## 1.1. ஆய்வு நோக்கம் :

"திருஞான சம்பந்தர் தேவாரமும் சைவ சித்தாந்தக் கருத்துக் களும்" என்னும் இவ் ஆய்வு, சைவ சித்தாந்த நூல்களுக்குரிய அடிப்படை மூலங்கள் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் காணப்படு கின்றனவா என்பதைக் கண்டறிவதையே நோக்கமாகக் கொண்டு-ள்ளது.

## 1.2. ஆய்வு முன்னோடிகள் :

இவ் ஆய்விற்குரிய முன்னோடிகளை இரண்டு வகைப்படுத்த லாம்.

1. திருஞானசம்பந்தர் தேவாரம் தொடர்பாக ஆய்வு செய்தவர்கள்
2. சைவ சித்தாந்த நூல்கள் பற்றியும், சைவ சமயம் பற்றியும் ஆய்வு செய்தவர்கள்

***1.2.1.*** பி.சௌந்திரா, "திருஞானசம்பந்தர் தேவாரம் ஓர் ஆய்வு" என்னும் பொருளில் ஆய்வு செய்துள்ளார்.[1] இவ் ஆய்வு திருஞானசம்பந்தர் பாடல்களில் உள்ள யாப்பமைப்பையே பெரும்பாலும் ஆய்வு செய்கின்றது. எஸ். ராஜலெட்சுமி, திருஞான சம்பந்தர் தேவாரத்தை திறனாய்வு செய்துள்ளார்.[2] ச.சவகர்லால் "தேவாரத்தின் தொன்மைக் கூறுகள்" என்னும் தலைப்பில் செய்துள்ள ஆய்வில், தேவாரத்திலுள்ள புராணக் கதைகளில் பொதிந்துள்ள தத்துவங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.[3]

இனித் திருஞானசம்பந்தர் தேவாரத்தைப் பற்றி வெளி வந்துள்ள ஆய்வு நூல்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். வ.சு.செங்கல்வராயபிள்ளை "தேவார ஒளிநெறி சம்பந்தர் தொகுதி

1, 2, 3", "தேவார ஒளிநெறிக் கட்டுரை சம்பந்தர்" என்னும் பெயரில் நூல்கள் எழுதியுள்ளார். இவற்றில் திருஞானசம்பந்தர் தேவாரத் திலுள்ள பொருட்குறிப்புக்கள் பல தலைப்புக்களில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. அவை அகர வரிசையில் நிரல்படத் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன. வை.இரத்தினசபாபதி, "திருமுறைத் தெளிவே சிவஞானபோதம்" என்ற தலைப்பிலும், "திருஞானசம்பந்தர் ஓர் ஆய்வு (முதற்பகுதி)" என்ற தலைப்பிலும் திறனாய்வு நூல்கள் எழுதியுள்ளார்.

சொ.சிங்காரவேலன், "திருஞானசம்பந்தர் வரலாற்றாராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும்" என்ற ஆய்வு நூலினை எழுதியுள்ளார். இந்நூல் திருஞான சம்பந்தர் வரலாறு, பதிகங்கள், பொருள் நோக்கு, யாப்பு, முப்பொருள் திருநெறி, அகப்பாட்டு நெறி, அடியவர் அன்புநெறி, உயிரியல் நுட்பம், இயற்கை நலம், கவிதைப் பண்பும், நடையும், பழந்தமிழ்க் கருத்துவளம் என வெவ்வேறு தலைப்புக்களில் ஆய்வு செய்கின்றது. அவற்றுள் "முப்பொருள் திருநெறி" என்னும் பிரிவில் திருஞான சம்பந்தர் தேவாரத்தில் உள்ள சமயக் கருத்துக்கள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

***1.2.2.*** வி.பொன்னையா "சைவ சித்தாந்த முறைகளின் அறிவாதார இயல்" என்னும் பொருளில் ஆய்வு செய்துள்ளார்.[4] சித்தலிங்கையா, "உமாபதியின் அட்டகத்தில் உள்ள சைவசித்தாந்த ஆய்வு" என்பது குறித்து ஆய்வு செய்துள்ளார்.[5]

மா. இராசமாணிக்கம் "காஞ்சிப் பல்லவர்கள் காலத்திலும் சோழர்கள் காலத்திலும் தென்னிந்தியாவில் சமய வளர்ச்சி" என்ற பொருளில் ஆய்வு செய்துள்ளார்.[6] மொ.அ. துரை அரங்கனார், "சுந்தரர் தேவாரத்தில் சமயமும் தத்துவமும்" என்னும் பொருள் குறித்து ஆய்வு செய்துள்ளார்.[7] இவர் சுந்தரர் தேவாரத்தை மேனாட்டு மெய்யறிவியல் முறையில் ஆராய்ந்துள்ளார்.

திருஞானசம்பந்தர் தேவாரத்திலுள்ள கருத்துக்கள், பிற் காலத்தில் தோன்றிய மெய்கண்ட சாத்திர நூல்களில் உள்ள

கருத்துக்களுக்குக் கருப்பொருளாய் அமைகின்ற பான்மையைக் காட்டுவதில் இவ்ஆய்வு முதல் முயற்சியாக உள்ளது.

## 1.3. ஆய்வு எல்லை

திருஞானசம்பந்தர் தேவாரத்தை இலக்கியம், சமயம், பா அமைப்பு, பண், இயற்கை வருணனை, புராண மரபுக் கதைகள், அகப்பொருள் பண்புகள் முதலிய பல நோக்குகளில் ஆராய வாய்ப்பிருக்கிறது. அவை பற்றிய செய்திகள் இந்த ஆய்வில் இடம் பெறவில்லை. அவருடைய பாடல்களில் உள்ள சித்தாந்தக் கருத்துக்கள் மட்டுமே இங்கு ஆய்வுக்குரிய எல்லையாக அமைந்துள்ளன.

சைவசித்தாந்த நூல்களில் மெய்கண்ட சாத்திரங்கள் எனப்படும் பதினான்கு நூல்களே ஈண்டு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன.[8] மெய்கண்ட சாத்திர நூல்களுக்கு புறம்பான ஞானாமிர்தம் என்ற சாத்திர நூல் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் படவில்லை. அவ்வாறே மெய்கண்ட சாத்திர நூல் களுக்குப் பின் உருவான திருவாவடுதுறை ஆதீனத்துப் பண்டார சாத்திர நூல்களும், தருமபுர ஆதீனத்து பண்டார சாத்திர நூல்களும், சைவசித்தாந்தக் கருத்துக்களை விளக்கும் நூல்களாக வெளிவந்துள்ளன. அவைகளும் இங்கு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 1.4. ஆய்வு அடிப்படைகள் :

ஆய்வு அடிப்படை இருவகையாகும்.

1. முதன்மை ஆதாரம்
2. துணைமை ஆதாரம்

***1.4.1.*** திருஞானசம்பந்தர் தேவாரமும், மெய்கண்ட சாத்திர நூல்கள் பதினான்கும் இவ் ஆய்விற்கு முதன்மை ஆதாரங்களாக அமை

கின்றன. தருமபுர ஆதீனத்தில் வெளியிடப்பட்ட திருஞானசம்பந்தர் தேவாரப் பதிப்பே இவ்ஆய்விற்குரிய முதன்மை ஆதாரமாகப் பின்பற்றப்படுகின்றது. மெய்கண்ட சாத்திர நூல்களுக்குச் சமாசப் பதிப்பே முதன்மை ஆதாரமாக இங்குக் கையாளப்பட்டுள்ளது.

***1.4.2.*** இவ்ஆய்விற்குப் பின்வரும் நூல்கள் துணைமை ஆதாரங்கள் ஆகின்றன.

1. சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம் என வழங்கும் பெரிய புராணத்திலுள்ள திருஞானசம்பந்தர் புராணமும், சி.கே.சுப்பிரமணிய முதலியார் உரையும்.
2. திருஞானசம்பந்தர் தேவாரம் தொடர்பான ஆய்வேடுகள், நூல்கள், திறனாய்வு நூல்கள்
3. சைவ, பக்தி, இலக்கியம் பற்றிய நூல்கள்
4. சைவசித்தாந்தக் கருத்துக்கள்தொடர்பான நூல்கள்
5. சைவசித்தாந்த நூல்கள் பற்றிய திறனாய்வு நூல்கள்
6. தேவாரம் தொடர்பாகவும் சைவசித்தாந்தம் தொடர்பாகவும், ஞானசம்பந்தம், சித்தாந்தம், குமரகுருபரன் முதலிய சமயப் பத்திரிகைகளிலும், மலர்களிலும் வெளிவந்துள்ள ஆய்வுக்கட்டுரைகள்

## 1.5. அணுகுமுறை :

இவ்ஆய்வில் பகுப்பு முறை (Analytical) விளக்கமுறை (Descriptive), ஒப்பீட்டுமுறை (Comparative), திறனாய்வு முறை (Critical) ஆகிய அணுகுமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முதலில் திருஞானசம்பந்தர் தேவாரப் பாடல்கள் வாயிலாகவும், சைவசித்தாந்த நூல்கள் வாயிலாகவும் தெரியவரும் பதி, பசு, பாச இயல்புகள், பசு பாசத்தை விட்டுப் பதியை அடைவதற்குக் கூறப்படும் சாதனம், பயன் பற்றிய கருத்துக்கள் எனப் பகுப்பாய்வு

செய்யப்பட்டுள்ளன. அதன் பின்னர் அக்கருத்துக்கள் விளக்கமுறை ஆய்வு செய்யப்படுகின்றன. பின் திருஞானசம்பந்தர் கூறும் கருத்துக்கள் சைவ சித்தாந்த நூல்கள் கூறும் கருத்துக்களுடன் ஒப்பிட்டுத் திறனாய்வு செய்யப்படுகின்றன.

"ஆய்வு என்ற சொல்லின் ஆழமும் அகலமும் எல்லாத் துறைகளிலும் ஒரே மாதிரி இருப்பதில்லை. ஆய்வு என்ற சொல்லைச் சமயத்துறையில் பயன்படுத்தும்பொழுது அதன் எல்லைகள் வேறு. அறிவியல் துறையில் பயன்படுத்தும் பொழுது அதன் எல்லைகள் வேறு. ஒருசில நம்பிக்கைகளை ஆய்வுக்கு அப்பாற்பட்டதாக வைத்து, அதற்கு மேல் ஆய்வு செய்வதுதான் சமயத்துறையில் இயன்ற ஒன்று" என்று வா.செ. குழந்தைசாமி கூறுகின்றார்.[9] அக்கூற்றுப்படி சைவசித்தாந்தம் கூறும் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மைகளின் அடிப்படையின் மீது இவ் ஆய்வு மேற்கொள்ளப் படுகின்றது.

## 1.6. ஆய்வுப் பகுப்பு :

இவ்ஆய்வு பத்து இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவை யாவன:

1. முன்னுரை
2. திருஞானசம்பந்தர் வரலாறு
3. திருமுறைகளின் அமைப்பும் தத்துவமும்
4. சைவசித்தாந்த நூல்கள் ஓர் அறிமுகம்
5. பதி இயல் கோட்பாடுகள்
6. பசு இயல் கோட்பாடுகள்
7. பாச இயல் கோட்பாடுகள்
8. சாதனமும் பயனும்

9. திருஞான சம்பந்தர் தேவாரமும் சைவசித்தாந்த நூல்களும்
10. முடிவுரை

### 1.6.1. முன்னுரை :

'முன்னுரை'யாக அமையும் இவ்வியல் ஆய்வு நோக்கம், ஆய்வு முன்னோடிகள், ஆய்வு எல்லை, ஆய்வு அடிப்படைகள், ஆய்வு அணுகுமுறை, ஆய்வுப் பகுப்பு, இயல் செய்திகள், முடிவுரை, பின்னிணைப்புக்கள், மேற்கோள் விளக்கம் ஆகிய செய்திகளை விளக்குகின்றது.

### 1.6.2. திருஞானசம்பந்தர் வரலாறு :

இவ்வியலில் திருஞானசம்பந்தர் வரலாறு ஆராயப்படுகின்றது. திருஞானசம்பந்தர் சமணமும், பௌத்தமும் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் மக்களிடையே சைவ சமய உண்மையை உணர்த்திச் சைவத்தை நிலைநாட்டப் பிறந்தவர். அவருடைய வாழ்க்கை வரலாறு சைவசித்தாந்த உண்மைகளை விளக்குவதற்கு ஓர் இலக்கியம் போல் அமைந்துள்ளது , எனலாம். அவருடைய வாழ்க்கையை விரிவாகப் பார்க்கும்போது சைவசித்தாந்த உண்மைகள் பலவற்றைப் புரிந்து கொள்ள முடிகின்றது. எனவே அவருடைய வரலாறு எடுத்துக் கொண்ட தத்துவ ஆய்விற்கேற்பச் சித்தாந்த நோக்கில் ஆய்வு செய்யப்படுகின்றது.

### 1.6.3. திருமுறைகளின் அமைப்பும் தத்துவமும் :

இவ்வியலில் திருமுறைகளின் தொகுப்பும், அதில் திருஞான சம்பந்தர் பாடல்கள் முதலிடம் பெறும் காரணங்களும் ஆராய்ந்து விளக்கப்படுகின்றன. மேலும் திருஞானசம்பந்தர் தேவாரத்தின் பதிக அமைப்பில் காணப்படும் ஒருமைப்பாடும், அதில் பொதிந்துள்ள தத்துவங்களும் ஆராயப்படுகின்றன.

**1.6.4.** சைவசித்தாந்த நூல்கள் ஓர் அறிமுகம் :

சைவசித்தாந்த நூல்கள் எவை என்பதும், அவை தோன்றிய வரலாறும், உணர்த்தும் செய்திகளும், பகுப்பு முறையும் இவ்வியலில் ஆராயப்படுகின்றன.

**1.6.5.** பதி இயல் கோட்பாடுகள் :

இவ்வியலில் திருஞானசம்பந்தர் கூறும் பதி இயல்புகள், சைவசித்தாந்த நூல்கள் கூறும் பதி இயல் கோட்பாட்டிற்கு எப்படி அடிப்படையாய் அமைகின்றன என ஆய்வு செய்யப்படுகின்றது. திருஞானசம்பந்தர் இறைவனைச் சில முரண்டான சொற்களால் குறிப்பிடுவதற்குரிய காரணங்களும் ஆராயப்படுகின்றன. மேலும் அவருடைய பாடல்களில் சொல் முரண்கள் மட்டுமல்லாமல், பொருள் முரண்பாடுகளும் காணப்படுவதன் காரணங்கள் சைவசித்தாந்த நூல்களின் துணைகொண்டு ஆய்வு செய்து விளக்கப்படுகின்றன.

**1.6.6.** பசு இயல் கோட்பாடுகள் :

பசு என்பது உயிரைக் குறிக்கும் தத்துவக் கலைச்சொல் ஆகும். பசு இயல் கோட்பாடுகள் என்னும் இவ்வியலில் திருஞானசம்பந்தர் பாடல்களாலும், சைவசித்தாந்த நூல்க ளாலும் அறியப்படும் உயிரியல்புகள் ஆராயப்படுகின்றன. உயிர்கள் திருவருளை உணராமைக்குத் திருஞானசம்பந்தர் கூறும் காரணங்களும், சைவ சித்தாந்த நூல்கள் கூறும் காரணங்களும் ஆய்வு செய்யப்படுகின்றன. உயிர்கள் திருவருளை உணரச் செய்ய வேண்டியவை யாவை என்பது திருஞான சம்பந்தர் பாடல்கள் மூலம் விள்க்கப்படுகின்றன. திருஞானசம்பந்தர் உயிர்களை இறைவன் வெவ்வேறு விதமாக ஆட்கொள்வதாகக் கூறுவதற்குரிய காரணம் சைவசித்தாந்த நூல்களின் உதவியால் விளக்கப்படுகின்றது.

**1.6.7.** பாச இயல் கோட்பாடுகள் :

இவ்வியலில் பாசம் என்பது எது என விளக்கப்படுகின்றது. ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்கள் பற்றிய திருஞான சம்பந்தரின் கருத்துக்களும், சைவ சித்தாந்த நூல்களின் கருத்துக் களும் ஒப்பிட்டு இவ்வியலில் ஆய்வு செய்யப்படுகின்றன. திருஞான சம்பந்தர் வினையைப் பற்றி குறிப்பிடும் அடைமொழிகளில் அமைந் துள்ள தத்துவங்களும் விளக்கப்படுகின்றன. உயிர்கள் மும்மலங்களி லிருந்து நீங்குவது எப்படி என்பதும் விளக்கப்படுகின்றது.

**1.6.8.** சாதனமும் பயனும் :

இவ்வியலில் உயிர்கள் இறைவனை அடைவதற்குரிய சாதனமும், அச்சாதனத்தால் பெறும் பயன்களும், திருஞான சம்பந்தர் பாடல்களின் துணை கொண்டும் சைவ சித்தாந்த நூல்களின் துணை கொண்டும் ஆராயப்படுகின்றன. திருஞானசம்பந்தர் கூறும் பலவகை வழிபாடுகள், சைவசித்தாந்த நூல்களில் கூறப் படும் சரியை, கிரியை, யோகம், ஞானம் இவற்றுக்கும், அடியார் வழிபாட்டிற்கும் அடிப்படை-யாய் அமைவது ஆராயப்படுகின்றது. திருவைந்தெழுத்துப் பற்றியும், ஓதும் முறையும், ஓதுதலின் பயன்களும் எடுத்துக் கூறப்படுகின்றன. சீவன் முக்தர்களின் இயல்புகளும் கூறப்படுகின்றன.

**1.6.9.** திருஞானசம்பந்தர் தேவாரமும் சைவசித்தாந்த நூல்களும் :

இவ்வியலில் திருஞானசம்பந்தர் தேவாரத்திற்கும் சைவ சித்தாந்த நூல்களுக்கும் உள்ள சொற்றொடர் ஒப்புமைப் பகுதி சுட்டிக்காட்டப்படுகின்றது. திருஞானசம்பந்தரால் கூறப்படாமல் சைவ சித்தாந்த நூலாசிரியர்களால் மட்டும் கூறப்படும் சைவசித்தாந்த உண்மைகள் சாத்திர நூல் வரிசையில் கூறப்படுகின்றன.

### 1.6.10. முடிவுரை :

இவ்வியலில் ஆய்வின் முடிவுகள் தொகுத்துக் கூறப்படுகின்றன. மேலும் இவ்ஆய்வினால் ஏற்பட்ட பயனும், இவ் ஆய்வு எதிர் காலத்தில் மேலும் எவ்வித ஆய்வுகள் செய்வதற்கு வழிகோலுகிறது என்பதும் கூறப்படுகின்றன.

## 1.7. பின்னிணைப்புக்கள் :

ஆய்வின் இறுதியில் சில செய்திகள் பின்னிணைப்புக்களாகத் தரப்படுகின்றன. அவை பின்வருமாறு :

1. இறைவன் திருஞான சம்பந்தருக்குச் செய்த அற்புதங்கள்
2. இறையருளால் திருஞான சம்பந்தர் பிறருக்கு செய்த அற்புதங்கள்
3. அகச்சான்றுள்ள அற்புதங்கள்
4. பன்னிரு திருமுறை வைப்புமுறை
5. முதல் மூன்று திருமுறைகளின் அமைப்பு
6. பாடல்களின் எண்ணிக்கை வேறுபட்டுள்ள திருஞான சம்பந்தரின் பதிகங்கள்
7. அடிக்குறையுடைய பாடல்கள் கொண்ட திருஞான சம்பந்தரின் பதிகங்கள்
8. ஒருமைப்பாட்டுச் செய்தி வேறுபட்டுள்ள பதிகங்கள்
   - 8.1. இராவணன் செய்தி வேறுபட்டுள்ள பதிகங்கள்
   - 8.2. அடிமுடி தேசிய செய்தி வேறுபட்டுள்ள பதிகங்கள்
   - 8.3. புறச்சமய செய்தி வேறுபட்டுள்ள பதிகங்கள்
9. மெய்கண்ட சாத்திர நூல்கள்
10. தசகாரியம்

11. திருவுந்தியார், திருக்களியற்றுப்படியார் ஒப்புமையுடைய பாடல் எண்கள்
12. சிவஞானசித்தியார் பரபக்கத்திலும், சங்கற்ப நிராகரணத்திலும் மறுக்கப்படும் மதங்கள்
13. மெய்கண்ட சாத்திர நூல்களுக்குப் பின் தோன்றிய சைவ சித்தாந்த நூல்கள்
14. வடமொழியிலுள்ள சைவசித்தாந்த நூல்கள்
15. நால்வகைச் சாதன நெறிகள்
16. இறைவனின் ஐந் தொழில்களும் தத்துவங்களும்
17. உயிரின் அவத்தைகள்
18. முப்பத்தாறு தத்துவங்கள்
19. தத்துவ விளக்கம்

இறுதியாக ஆய்விற்கு துணைபுரிந்த நூல்களின் பட்டியல் இடம் பெறுகின்றது சைவ சித்தாந்தத் தத்துவக் கலைச்சொல் விளக்கப் பட்டியலும் தரப்பட்டது.

## 1.8. மேற்கோள் விளக்கம் :

இவ் ஆய்வில் தேவையான இடங்களில் உரையாசிரியர்கள், பதிப்பாசிரியர்கள், திறனாய்வாளர்கள் ஆகியோரின் கருத்துரைகள் மேற்கோள்களாகக் காட்டப்படுகின்றன. கருத்துக்களை விளக்க துணையாக எடுத்தாண்ட நூல்களிலுள்ள பாடல் தொடர்கள் தேவைப் படுமிடங்களில் மேற்கோளாகக் கொடுக்கப்படுகின்றன. இம்மேற்கோள்கள், ஒவ்வோர் இயலின் இறுதியிலும் "குறிப்புக்கள்" என்னும் பகுதியில் இடம் பெறுகின்றன. மேலும் இந்த ஆய்வில் ஆய்யப்படுவன திருஞானசம்பந்தர் பாடல்களும் மெய்கண்ட சாத்திர நூல்களின் பாடல்களுமாகையால், இவற்றின் பாடல் தொடர்களும், அல்லது தேவையான இடங்களில் முழுப்பாடல்களும், மேற்கோள்களாக ஆய்வேட்டின் உடற்பகுதியிலேயே அமைகின்றன. அவற்றுள்

திருஞான சம்பந்தர் பாடல்களுக்குப் பெரும்பாலும் மேற்கோள்களின் வலது பக்கம் அடைப்புக் குறிக்குள் எண்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் முதல் எண் திருஞான சம்பந்தர் தேவாரத் திருமுறை எண்ணையும், அடுத்த எண் அவரது தேவார பதிக எண்ணயும், இறுதி எண் பாடல் எண்ணையும் குறிக்கும். ஆனால் ஒரு கருத்திற்குத் திருஞானசம்பந்தரின் பாடல்களிலிருந்து பல சான்றுகள் தர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ள இடங்களில் அவை குறிப்புக்கள் பகுதியில் இடம் பெற்றுள்ளன. சைவ சித்தாந்த சாத்திர நூல்களின் பாடல் மேற்கோள்களுக்கு அடிக்குறிப்பு எண் இடப்பட்டு, குறிப்புக்கள் பகுதியில் சாத்திர நூலின் பெயரும், பாடல் எண்ணும் தரப்பட்டுள்ளன.

*குறிப்பு :* இந்த ஆய்வேட்டில் ஒரே பொருளைக் குறிக்கும் பல கலைச்சொற்கள் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. தோற்ற மில்லாதது என்ற பொருளைத் தரும் சொல் 'அனாதி' என்றும், 'அநாதி' என்றும் சைவ சித்தாந்த நூல்களில் கூறப்பட்டுள்ளது. அம்முறையே இவ் ஆய்வேட்டிலும் பின்பற்றப் பட்டுள்ளது.

## குறிப்புக்கள்


1. P.Soundra, A study of St.Thirugnana campantar, Published Ph.D. Thesis, Annamalai University, 1979.
2. S.Rajalakshmi, 'Critical study of St. Gnana Sambandar's Thevaram', Unpublished M.Litt. Thesis, Madras University 1963.
3. ச.சவகர்லால், தேவாரத்தில் தொன்மைக் கூறுகள் (மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் பிஎச்.டி. பட்டத்திற்காக அளிக்கப்பட்ட ஆய்வேடு) 1981.
4. V.Ponniah, The Saiva Siddhanta Theory of Knowledge, Published Ph.D. Thesis, Annamalai University, 1952.
5. T.B. Siddhalingiah, Studies in the Saiva Siddhanta in the light of Umapati's astagam, Published Ph.D. Thesis, Benares Hindu University, 1970.

6. M. Rajamanikkam, Development of Saivism in South India under the Pallavas of KANCI and imperial colas, Published Ph.D. Thesis, Madras University, Madras, 1950.
7. M.A. Durai Arangasamy, Religion and Philosophy of Tevaram with special reference to Nambi Arurar (Cuntarar). Published Ph.D. Thesis, Madras University, Madras, 1954.
8. மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்காவன :

| | |
|---|---|
| 1. திருவுந்தியார் | 8. திருவருட்பயன் |
| 2. திருக்களிற்றுப்படியார் | 9. வினாவெண்பா |
| 3. சிவஞானபோதம் | 10. போற்றிப்பஃறொடை |
| 4. சிவஞானசித்தியார் | 11. கொடிக்கவி |
| 5. இருபா இருபஃது | 12. நெஞ்சுவிடுதூது |
| 6. உண்மை விளக்கம் | 13. உண்மை நெறி விளக்கம் |
| 7. சிவப்பிரகாசம் | 14. சங்கற்ப நிராகரணம் |

9. வா.செ. குழந்தைசாமி, 'பொது ஆராய்ச்சி நெறி முறைகள்' ச.வே. சுப்பிரமணியன் (ப.ஆ.) ஆராய்ச்சி நெறிமுறைகள் பக். 53-54.

# 2. திருஞான சம்பந்தரின் வரலாறு

2.0. முன்னுரை
2.1. வரலாற்று மூலம்
2.2. வரலாற்றுச் சுருக்கம்
2.3. வரலாற்றாய்வு
2.3.1. திருஞானசம்பந்தரின் காலம்
2.3.2. பிறப்பு
2.3.2.1. பிறப்பின் நோக்கம்
2.3.2.2. பிறந்த இடமும் குலமும்
2.3.3. இயற்பெயர்
2.3.4. சிறப்புப் பெயர்கள்
2.3.5. திருஞான சம்பந்தரும் அற்புத நிகழ்ச்சிகளும்
2.3.5.1. அற்புதங்களின் மெய்ம்மை
2.3.5.2. அற்புதங்களும் அவற்றிற்குரிய சான்றுகளும்
2.3.5.3. அற்புதங்களும் அவற்றின் தத்துவங்களும்
2.3.6. திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும்
2.3.7. திருஞானசம்பந்தரும் அடியார்களும்
2.3.8. திருஞானசம்பந்தர் வரலாறு பற்றி நம்பியாண்டார் நம்பியும் சேக்கிழாரும்
2.3.9. திருஞான சம்பந்தர் வரலாறு பற்றிச் சைவசித்தாந்த நூல்கள்
முடிவுகள்

# 2. திருஞான சம்பந்தரின் வரலாறு

## 2.0. முன்னுரை :

இவ் ஆய்விற்குத் திருஞான சம்பந்தரின் வரலாற்றைப் பின்வரும் காரணங்களால் அறிந்து கொள்வது இன்றியமையாததாகும். திருஞானசம்பந்தர் சைவத்தை நிலைநாட்டப் பிறந்த அவதார புருடர் எனக் கூறுவர். அவதார புருடர்களின் வாழ்க்கை வரலாறு சரித்திர நிகழ்ச்சிகளாய் இருப்பதோடு ஞானக் கருத்துக்களையும் விளக்கு கின்றன. சரித்திர நிகழ்ச்சிகள் ஆன்மீக உண்மைகள் என்னும் கடலின் மேல் எழும் அலைகள் போல்வன என்பர் [1]. மேலும், சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் சிலவற்றிலும் அவரது வரலாற்று நிகழ்ச்சிகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. எனவே இவ்வியலில் திருஞான சம்பந்தரின் வரலாறு முதலில் கூறப்பட்டு, பின் அவ்வரலாறு உணர்த்தும் சைவசித்தாந்த உண்மைகள் ஆராயப்படுகின்றன.

## 2.1. வரலாற்று மூலம் :

திருஞான சம்பந்தரின் வரலாற்றை ஆராய்வதற்குத் துணை செய்யும் மூல நூல்களாவன :

1. பெரிய புராணத்தில் அமைந்துள்ள திருஞானசம்பந்தர் புராணம்
2. திருஞான சம்பந்தர் தேவாரம்
3. நம்பியாண்டார் நம்பி திருஞானசம்பந்தரைப் பற்றிப் பாடிய ஆறு பிரபந்தங்கள்
    1. ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி
    2. ஆளுடையபிள்ளையார் திருச்சண்பை விருத்தம்
    3. ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை
    4. ஆளுடையபிள்ளையார் திருவுலாமாலை

5. ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்

6. ஆளுடையபிள்ளையார் திருத்தொகை

இவற்றுள் அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாற்றைப் பாடும் சேக்கிழாரின் பெரிய புராணத்திலுள்ள 4287 செய்யுட்களில், 1256 செய்யுட்கள் திருஞான சம்பந்தரின் வரலாற்றை விளக்குவதே இவரது வரலாற்றின் சிறப்பினை உணர்த்தும்.

## 2.2. வரலாற்றுச் சுருக்கம் :

பெரிய புராணத்தின் அடிப்படையில் திருஞான சம்பந்தரின் வரலாற்றைப் பின்வருமாறு சுருக்கமாகக் காணலாம்.

திருஞான சம்பந்தர் சோழநாட்டில், சீர்காழி என்னும் ஊரில் சிவபாத விருதயர், பகவதியார் எனனும் இருவருக்கும் ஒரு நல்ல நாளில் திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தார்.

இவர் தமது மூன்றாவது வயதில் ஒருநாள் தம் தந்தையுடன் கோயிலுக்குச் சென்றார். அங்குத் தந்தை குளத்தில் இறங்கி நீராடும் பொழுது தந்தையைக் காணாது குழந்தை அழ, இறைவன் உமாதேவி யோடு இடபவாகனத்தில் தோன்றி, திருமுலைப்பாலைப் பொற் கிண்ணத்தில் கறந்து சிவஞானத்தையும் குழைத்துக் குழந்தைக்கு ஊட்டக் கட்டளையிட்டார். அப்பாலை உண்ட குழந்தை ஞானம் பெற்றது. குளித்துக் கரையேறிய தந்தை, வாயில் பால் ஒழுக நின்ற குழந்தையைக் கண்டு, 'உனக்கு இப்பாலைக் கொடுத்தது யார்' என வெகுண்டு கேட்க, ஞானக் குழந்தை தான் கண்ட இறைவன் இறைவி கோலத்தை நினைத்துப் பாடிய பதிகமே "தோடுடைய செவியன்" (1:1:1) எனத் தொடங்கும் பதிகமாகக் கூறப்படும். அன்றிலிருந்து குழந்தைக்கு இறைவன் மீது இசைப்பாடல்கள் பாடும் திறனும், பல அற்புதங்களை நிகழ்த்தும் ஆற்றலும் உண்டாயின.

சிலநாள் கழித்து, திருஞானசம்பந்தர் சீகாழிக்கு அருகிலுள்ள திருக்கோலக்கா இறைவன் மீது "மடையில் வாளை" (1 : 23 : 1) என்று

தொடங்கும் பதிகத்தைக் கைகளால் தாளமிட்டுப் பாட இறையருளால் பொற்றாளம் பெற்றார்.

பின் திருஞானசம்பந்தர் தம் தாய் பிறந்த ஊராகிய திருநனிபள்ளி செல்ல இவர் வருகையால் அவ்வூர் வளம் பெற்றது. அவ்வமயம் திருஞானசம்பந்தர் பற்றிக் கேள்வியுற்று, சிதம்பரத்திற் கருகிலுள்ள திருஎருக்கத்தம்புலியூரில் வசித்த திருநீலகண்டப் பெரும் பாணரும், அவரது மனைவி மதங்க சூளாமணியும் சீகாழி சென்று திருஞான சம்பந்தரை வணங்கி அவரது பாடல்களை யாழில் அமைத்துப் பாட அனுமதி பெற்றனர்.

திருஞான சம்பந்தர் பல தலங்களை வணங்கி திருநெல்வாயில் அரத்துறை சென்றபோது இறையருளால் முத்துச்சிவிகை, முத்துக் குடை, முத்துச் சின்னம் பெற்றார். அப்பொழுது பாடப்பட்டது "எந்தை யீசெனம் பெருமான்" (2 : 226 : 1) என்று தொடங்கும் பதிகமாகும்.

உபநயனப் பருவத்தில் திருஞானசம்பந்தருக்கு வேதவிதிப்படி உபநயனச் சடங்கு நடந்தது. அப்பொழுது ஐந்தெழுத்தின் பெருமையை விளக்கித் "துஞ்சலுந் துஞ்சலிலாத போழ்தினும்" (2 : 280 : 1) என்று தொடங்கும் பஞ்சாக்கரப் பதிகத்தைப் பாடினார்.

அக்காலத்தில் திருஞானசம்பந்தரைப் பற்றிக் கேள்வியுற்ற திருநாவுக்கரசர் அவரைக் காண சீகாழி வந்து சில நாட்கள் அவருடன் தங்கிச் சென்றார்.

திருஞானசம்பந்தர் பல தலங்களைத் தரிசித்துத் திருப்பாச்சிலாச் சிரமத்தை அடைந்தபொழுது அங்குள்ள கொல்லிமழவன் என்ற மன்னர் மகளின் முயலகன் நோயை "துணி வளர் திங்கள்" (1 : 44 : 1) என்று பதிகம் பாடிக் குணப்படுத்தினார். பின் திருக்கொடிமாடச் செங்குன்றூரில் அடியவர்கட்கு முன்பனிக் காலத்தில் உண்டாகிய ஒரு வித சுரநோயை "அவ்வினைக் கிவ்வினை" (1 : 116 : 1 ) என்று தொடங்கும் பதிகம் பாடிக் குணப்படுத்தினார்.

திருப்பட்டீச்சரத்தில் இறையருளால் முத்துப்பந்தர் பெற்ற பொழுது "பாடன் மறைசூடன்" (3 : 331 : 1) என்று தொடங்கும் பதிகம் பாடினார். பின் பல தலங்களைத் தரிசித்து திருவாவடுதுறையை அடைந்தார்.

அங்கிருக்கும் நாளில் தந்தை சிவபாதவிருதயர் வந்து வேள்வி செய்யப் பொன் வேண்டியபொழுது "இடரினுந் தளரினும்"(3 : 262 : 1) என்று தொடங்கும் திருப்பதிகம் பாடி இறையருளால் 'உலவாக்கிழி' பெற்றுத் தந்தைக்கு உதவினார்.

பிறகு பல தலங்களை வணங்கித் திருநீலகண்டப் பாணனாரின் தாய் பிறந்த ஊராகிய தருமபுரத்தைத் திருஞான சம்பந்தர் அடைந்தார். திருநீலகண்டப் பாணனாரின் உறவினர்கள் அவரது யாழிசையால் திருஞானசம்பந்தரின் பாடல்கள் சிறப்படை கின்றன என்ற கருத்துக் கொண்டிருந்தமையால், திருநீலகண்டப்பாணனார் அவர்களது தவறான கருத்தை நீக்க யாழிசையில் அடங்காதபடி ஒரு பதிகம் பாடத் திருஞானசம்பந்தரை வேண்ட அவர் "மாதர் மடப்பிடி" (1 : 136 : 1) என்று தொடங்கும் யாழ்மூரிப்[2] பதிகம் பாடினார்.

திருமருகலில் "சடையாயெனுமால்" (2 : 154 : 1) என்று தொடங்கும் பதிகம் பாடி அரவு தீண்டி இறந்த வணிகனை உயிர்பெறச் செய்தார். திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் திருவீழி மிழலையில் படிக்காசு பெற்றுப் பஞ்சம் தீர்த்தனர். திருமறைக் காட்டில் வேதத்தால் பூசித்து, அடைக்கப்பெற்ற கதவினைத் திருநாவுக்கரசர் திறக்கப் பாடிய பிறகு திருஞானசம்பந்தர் "சதுரம் மறைதான்" (2 : 173 : 1) என்று தொடங்கும் பதிகம் பாடி மறைக் கதவினை மூடச் செய்தார்.

அக்காலத்தில் பாண்டிய நாட்டில் மன்னரும் மக்களும் சமண சமயம் சார்ந்தவர்களாக இருந்தனர். அரசன் அனுமதி பெற்று அரசி மங்கையர்க்கரசியாரும், மந்திரி குலச்சிறையாரும் சைவராக வாழ்ந்து வந்தனர். அரசியார், மந்திரியார் இவர்களின் அழைப்பிற்கிணங்கத் திருஞானசம்பந்தர் மதுரை சென்றார். அங்கு இவர் தங்கிருந்த

மடத்திற்குப் பொறாமையால் சமணர்கள் தீ வைக்க, திருஞான சம்பந்தர் அவ்வெப்பம் பாண்டியனைப் பற்றப் பணித்தார். (3 : 309 : 1) அரசன் வெப்பு நோயால் பீடிக்கப்பட, மந்திரத்தாலும், மருந்தாலும் சமணர்களால் அதைக் குணப்படுத்த இயலவில்லை. அரசியாரின் வேண்டு கோளுக்கு இணங்கித் திருஞான சம்பந்தர் மன்னனின் வெப்புநோயைத் தீர்க்க அழைக்கப்பட்டார்.

திருஞான சம்பந்தர் "திருநீற்றுப்பதிகம்" (2 : 202 : 1 ) பாடி மன்னனின் வெப்பு நோயை நீக்கினார். பொறாமை கொண்ட சமணர்கள் திருஞான சம்பந்தரை அனல் வாதத்திற்கும் புனல் வாதத்திற்கும் அழைத்தனர். மன்னனும் வென்றவர் பக்கம் சேரக் கருதினான். அனல்வாதில் சமணர்கள் இட்ட ஏடு அழிந்து போயிற்று. திருஞானசம்பந்தரின் "போகமார்த்த" (1 : 49 : 1) என்று தொடங்கும் திருநள்ளாற்றுப் பதிகம் எழுதிய ஏடு நெருப்பிலிட்டும் பச்சையாய் விளங்கிற்று. புனல்வாதில் சமணர்கள் இட்ட ஏடு ஆற்றோடு அடித்துச் செல்லப்பட்டது. திருஞானசம்பந்தர் இட்ட "வாழ்க அந்தணர்" (3 : 312 : 1) என்று தொடங்கும் திருப்பாசுரம் எழுதிய ஏடு ஆற்றினை எதிர்த்துச் சென்றது. வாதில் திருஞானசம்பந்தர் வென்றமையால் மன்னனும் சைவனானான்.

பிறகு திருஞானசம்பந்தர் பாண்டி நாட்டிலிருந்து சோழநாடு சென்று பல தலங்களைத் தரிசித்துக் காவிரியை அடைந்து ஓடமேறி "கொட்டமே கமழும்" (3 : 264 : 1) என்று தொடங்கும் பதிகம் பாட ஓடம், விடுவாரின்றித் தானாகவே திருக்கொள்ளம் புதூரை அடைந்தது.

திருஞானசம்பந்தரும் அவரது அடியார்களும் இறைநாமத்தை முழக்கிக் கொண்டு போதிமங்கை என்னும் ஊருக்கு அருகில் வரும்பொழுது புத்த நந்தி என்பவன் வெகுண்டு அவர்களை எதிர்த்தான். திருஞானசம்பந்தர் பாடலை ஏட்டில் எழுதும் அன்பர், "புத்தர் சமண்கழுக்கையர்" (3:280:10) என்ற பஞ்சாக்கரப் பதிகத்து அமண் பாட்டைப் பாடப் புத்தநந்தி தலையில் இடி விழ இறந்தான். பின் இவ்வன்பரே சாரிபுத்தன் என்பவனோடு வாதம் செய்து வென்றார்.

பின் திருஞானசம்பந்தர் திருவோத்தூர் சென்றபொழுது அங்குள்ள சிவனடியார் தாம் திருக்கோயிலுக்கு நிவேதனமாக விட்ட பனைமரங்கள் ஆண்பனைகளாகக் காயாது நிற்பதைக் கண்டு சமணர்கள் தம்மை இகழ்வதாகக் கூறி அருள் புரியும்படி வேண்ட, "பூத்தேர்ந்தாயன" (1 : 54 : 1) என்று தொடங்கும் பதிகம் பாடி ஆண்பனைகளைப் பெண் பனைகளாக்கினார்.

திருமயிலாப்பூரில் சிவநேசச் செல்வரின் மகள் பாம்பு கடித்து இறந்த பூம்பாவையின் எலும்பினை "மட்டிட்ட புன்னை" (2 : 183 : 1) என்று தொடங்கும் பதிகம் பாடி உயிர்ப்பித்தார்.

பல தலங்களையும் தரிசித்து சீகாழி மீண்ட திருஞான சம்பந்தருக்கு நம்பாண்டார் நம்பியின் மகளை மணம் பேசித் திருநல்லூரில் திருமணம் நடந்தது. திருமணம் முடிந்ததும் "கல்லூர்ப் பெருமணம்" (3 : 383 : 1) என்று தொடங்கும் பதிகம் பாடத் தோன்றிய சிவசோதியுள் திருஞானசம்பந்தர் தம் திருமணத்திற்கு வந்த அனைவருடனும் கலந்து வீடுபேறடைந்தார்.

## 2.3. வரலாற்றாய்வு

### *2.3.1.* திருஞானசம்பந்தரின் காலம் :

திருஞானசம்பந்தர் வாழ்ந்த காலம் பற்றி கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. அவ்வேறுபாடுகள் பற்றிய கால ஆராய்ச்சி இவ் ஆய்விற்குத் தேவையில்லை. திருஞானசம்பந்தரின் காலம் கி.பி.ஏழாம் நூற்றாண்டு என சி.வி. நாராயண அய்யர் ஆராய்ந்து கூறியுள்ளார்.[3] மனோன்மணிய ஆசிரியர் சுந்தரம் பிள்ளையும்[4], வெள்ளை வாரணனாரும்[5] அவ்வாறே கூறுகின்றனர்.

"அப்பரும் சம்பந்தரும் வாழ்ந்த காலத்தில் சமணர்கள் சைவர் களுக்கு இடையூறு செய்யும் வண்ணம் செல்வாக்குப் பெற்றிருந்தனர்" என்று திருஞானசம்பந்தரின் காலச்சூழல் பற்றி சி.வி.நாராயண அய்யர் கூறுகின்றார்.[6] பின்னால் திருஞான சம்பந்தர் பாடல்கள் ஆய்வு

செய்யப்படுவதற்கு, பதிகங்களில் பத்தாம் பாடல்தோறும் பௌத்தர் சமணர்களைப் பற்றி கண்டித்துப் பாடி இருப்பதற்கும் காரணம் காண இக்காலச்சூழல் இங்குக் குறிப்பிடப்படுகின்றது.

## 2.3.2. பிறப்பு :

### 2.3.2.1. பிறப்பின் நோக்கம் :

சேக்கிழார், திருஞானசம்பந்தர் புராண ஆரம்பத்தில் வணக்கமும், வருபொருளும் கூறுமிடத்தில் "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க"[7] என்று கூறுவதும், பிறப்பு பற்றிக் கூறுமிடத்தில், "சைவமுதல் வைதீகமும் தழைத் தோங்க'[8] என்று கூறுவதும் திருஞானசம்பந்தரின் பிறப்பின் நோக்கம் வேதத்தையும் சைவத்தையும் விளங்கச் செய்தல் ஆகும் என அறியலாம். திருஞான சம்பந்தர்,

> *"வேத வேள்வியை நிந்தனை செய்துழல்*
> *ஆத மில்லியமணொடு தேரர்"(3: 366: 1)*
> *"மறைவ ழக்கமி லாதமா பாவிகள்"(3 : 366: 3)*
> *"அந்த ணாளர் புரியு மருமறை*
> *சிந்தை செய்யா அருகர்"(3: 366: 5)*

என்று சமணர்களைக் கண்டிப்பதும்,

> *"............சைவனே*
> *ஞாலநின்புக ழேமிக வேண்டும்"(3 : 366: 7)*

என்று திருஆலவாய்ப் பதிகப்பாடல் இறுதிதோறும் இறைவனை வேண்டுவதும் இக்கருத்தினை வலியுறுத்தும்.

திருஞானசம்பந்தர் உபநயனத்தின் பொழுது தமக்கு உபநயனம் செய்ய வந்தவர்களுக்கு வேதப்பொருளை விரித்துக் கூறிப் பின் பஞ்சாக்காரப் பதிகம் பாடியதாகச் சேக்கிழார் கூறுவார்[9] அந்தணர்கள் உபநயனத்தின் பொழுது காயத்திரி மந்திரம்[10] ஓதுவர்.

சைவர்களுக்கேயுரிய சிறப்பான மந்திரமாகக் கருதப்படுவது பஞ்சாக்கரம் எனப்படும் திருவைந்தெழுத்தாகும். அந்தணரான திருஞானசம்பந்தர் பஞ்சாக்கரம் பற்றிப் பாடியதும், அவர் வைதிகத்தையும் சைவத்தையும் வளர்க்க வந்தவர் என்பதைப் புலப்படுத்தும்.

## 2.3.2.2. பிறந்த இடமும் குலமும் :

திருஞானசம்பந்தர் சுமார் இருநூறு இடங்களில் தம்மைக் காழியுள் பிறந்தவர் என்று கூறுவதும்,[11] 18 இடங்களில் தம்மைக் கவுணியர் குடியினர் என்று கூறுவதும்,[12] திருஞானசம்பந்தர் சீகாழியில் அந்தணர் மரபில் கவுணியர் கோத்திரத்தில் பிறந்தவர் என்பதற்குச் சான்றுகளாகும்.

## 2.3.3. இயற்பெயர் :

திருஞானசம்பந்தருக்குப் பெற்றோர் இட்ட பெயர் எந்நூலிலும் குறிப்பிடப்படவில்லை. குழந்தைக்கு பத்துநாள் நடைபெற்ற சடங்குகளை விவரித்துக் கூறும் சேக்கிழார், பதினோராம் நாள் பெயர் இடுதலாகிய அழகிய சடங்கினைத் திருஅவதார நாளுக்கு இசையும் படி நிலைபெறச் செய்து குழந்தையைத் தொட்டிலில் இட்டனர்[13] என்று கூறுகிறாரே தவிர என்ன பெயர் சூட்டப்பட்டது என்று கூறவில்லை. எனவே திருஞான சம்பந்தர் என்ற பெயர் அவர் ஞானப்பால் உண்டதாகக் கூறப்படும் நிகழ்ச்சியினால் ஏற்பட்ட காரணச் சிறப்புப் பெயராகும் என அறியலாம்.

## 2.3.4. சிறப்புப் பெயர்கள் :

திருஞான சம்பந்தருக்கு சேக்கிழார் வழங்கும் வேறு சிறப்புப் பெயர்கள் : ஆளுடையபிள்ளையார்,[14] சிவஞானசம்பந்தர்,[15] பாலறாவாயர்[16] பரசமய கோளரி[17] முதலியன.

திருஞான சம்பந்தர் இளம் பருவத்திலேயே அம்மையப்பரால் ஆட்கொள்ளப் பெற்றார் எனக் கூறப்படுவதால் ஆளுடைய பிள்ளையார் எனப் பெயர் பெற்றார்.[18] ஞானத்தோடு உறவு கொண்டவராகக் கருதப்பட்டதால் திருஞானசம்பந்தர் எனப்பட்டார்[19]. இந்த ஞானமாகிய திருஞானத்தைத் தாம் பெற்றது மட்டுமல்லாமல் உலகில் வாழும் அனைவருக்கும் சம்பந்தப்படுத்தி வழங்கப்போகும் பெருமையால்தான் இவருக்குத் திருஞானசம்பந்தர் என்ற காரணப்பெயர் உண்டாயிற்று என்பார் தண்.கி.வேங்கடாசலம்.[20] தேவர்களுக்கும் முனிவர் களுக்கும் தெரிவரிய சிவஞானம் இவர் பெற்றார் எனக் கருதப்படுவதால் சிவஞானசம்பந்தர் எனவும் அழைக்கப்பட்டார்.[21] ஞானப்பாலானது அவருடைய உள்ளத்தில் நீங்காது தங்கி ஞானமொழியாக வெளிப்படுதலால் பாலறாவாயர் எனப்பட்டார் என்பர்[22]. பரசமயச் செல்வாக்கு மங்கக் காரணமானவர் ஆதலால் பரசமயக் கோளரி எனப்பட்டார் எனலாம். இத்தகைய சிறப்புப் பெயர்களை மூன்று வயதிலேயே பெற்றதனால் திருஞான சம்பந்தரின் இயற்பெயர் நாளடைவில் தெரியவராது மறைந் தொழிந்தது எனலாம். திருஞானசம்பந்தரும் தம்முடைய தேவாரத்தில் தம்மைத் தாம் பிறந்த ஊர், குலம், குடி சேர்த்துச் சம்பந்தர் [23] என்றும், ஞானசம்பந்தர்[24] என்றும் குறிப்பிடுகின்றார்.

## 2.3.5. திருஞானசம்பந்தரும் அற்புத நிகழ்ச்சிகளும் :

திருஞானசம்பந்தர் வாழ்க்கையில் பல அற்புதங்களை நிகழ்த்திய தாகச் சேக்கிழார் கூறுவார். அற்புதம் என்பது ''சாதாரண இயற்கை-யில் நிகழக் கூடாததும், மனிதனது இயல்புக்கு மிஞ்சி இருப்பதுமான ஒரு நிகழ்ச்சியே''[25] எனலாம்.

திருஞானசம்பந்தர் வாழ்வில் நடந்ததாகக் கூறப்படும் அற்புதங்களை இரண்டு வகைப்படுத்தலாம்.

1. இறைவன்திருஞான சம்பந்தர்க்கு ஆற்றிய அற்புதங்கள்

2. இறையருளால் திருஞானசம்பந்தர் மற்றவர்க்குச் செய்த அற்புதங்கள்

இறைவன் திருஞானசம்பந்தருக்கு ஆற்றிய அற்புதங்களாவன:

1. ஞானப்பால் கொடுத்தது
2. பொற்றாளம் கொடுத்தது
3. முத்துச்சிவிகை, குடை, சின்னம் கொடுத்தது
4. முத்துப் பந்தர் அளித்தது
5. சோதியில் கலக்கச் செய்தது

இறைவன் அருளால் திருஞானசம்பந்தர் மற்றவர்கட்குச் செய்த அற்புதங்களாவன:

1. பாலை நெய்தலாகப் பாடியது
2. முயலகன் நோய் தீர்த்தது
3. பனிநோய் நீக்கியது
4. உலவாக்கிழி பெற்றது
5. விடம் தீர்த்தது
6. படிக்காசு பெற்றது
7. மறைக்கதவம் அடைத்தது
8. பாண்டியனின் வெப்புநோய் தீர்த்தது
9. புனல்வாதில் வென்றது
10. அனல்வாதில் வென்றது
11. ஓடம் செலுத்தியது
12. ஆண்பனைகளைப் பெண் பனைகளாக்கியது
13. எலும்பைப் பெண்ணாக்கியது

திருஞான சம்பந்தரின் வரலாற்றில் கூறப்படும் அற்புதங்கள் இரண்டு காரியங்களைச் சாதித்தன என்பார் கோ.சுந்தரமூர்த்தி.

1. இவை திருஞானசம்பந்தரின் தெய்வீகத்தைத் தெரிவித்தன.
2. எந்தப் பாடல்கள் பாடி இவ்வற்புதங்கள் நிகழ்த்தப் பட்டனவோ அவைகளும் தெய்வீகத் தன்மை வாய்ந்தன என்பதை உலகிற்கு உணர்த்தின.[26]

### 2.3.5.1. அற்புதங்களின் மெய்ம்மை :

அற்புத நிகழ்ச்சிகள் உண்மையா புனைந்துரையா என ஐயுறுவர் சிலர். தற்காலத்தில் இத்தகைய அற்புதங்களை ஏற்பது கடினம். ஆதலால் அதுபற்றிய கருத்து இங்கு தெரிவிக்கப்படவில்லை. திருக்களிற்றுப்படியார் என்ற சைவ சித்தாந்த சாத்திர நூலில் சிவஞானியர்களின் கரணங்கள் 'பசு கரணங்கள்' அல்ல, 'சிவகரணங்கள்' என்று கூறப்படுவதற்குத்[27] திருஞானசம்பந்தர் போன்ற நாயன்மார்கள் ஆற்றிய இத்தகைய அற்புதங்களே அடிப்படையாகின்றன எனலாம்.

### 2.3.5.2. அற்புதங்களும் அவற்றிற்குரிய சான்றுகளும் :

திருஞானசம்பந்தர் ஆற்றியதாகக் கூறப்படும் அற்புதங் களுக்கான இலக்கியச் சான்றுகளை இருவகைப்படுத்தலாம்

1. அகச்சான்றுகள்
2. புறச்சான்றுகள்

இவ்ஆய்வில் அற்புதங்கள் பற்றித் திருஞானசம்பந்தர் பாடல்களில் காணப்படும் குறிப்புக்கள் அகச்சான்றுகள் ஆகும். சேக்கிழார், நம்பியாண்டார் நம்பி, பிற சைவசித்தாந்த சாத்திர ஆசிரியர்கள் கூறும் குறிப்புக்கள் புறச்சான்றுகள் ஆகும்.[28]

ஞானப்பால் கொடுக்கப்பட்டு ஆட்கொள்ளப்பட்டமை (3:282:2), படிக்காசு பெற்றது (1 : 92 : 1, 2), சுரநோய் தீர்த்தது (2 : 202 : 11), அனல்வாதில் வென்றது (3 : 345 : 1-11), புனல்வாதில் வென்றது

(3:312:11), ஓடம் விட்டது (3 : 264 : 6), ஆண் பனையைப் பெண் பனையாக்கியது (3 : 383 : 8, 10) முதலியனவற்றிற்கு இவருடைய பாடல்களே சான்றுகளாகும்.[29] இவை தவிர ஏனைய அற்புதங்களுக்கு இவரது பாடல்களில் சான்றுகள் இல்லை.

திருஞானசம்பந்தரின் பாடல்கள் அவரது வாழ்க்கை அனுபவங்களைக் கூறுவனவாதலால் அற்புதங்கள் சிலவற்றின் குறிப்புக்கள் அவரது பாடலின்கண் அமைந்துள்ளன. அற்புதங்கள் நிகழ இறையருளை வேண்டுவதன் மூலமாகவோ, அற்புதம் நிகழ்ந்த பின் இறையருளைப் போற்றுவதன் மூலமாகவோதான் அவை பற்றிய குறிப்புகள் அவரது பாடல்கள் வாயிலாகத் தெரிய வருகின்றன. மறைக்கதவம் அடைக்கவும், படிக்காசிலுள்ள குற்றம் நீங்கவும் இறையருளை வேண்டு கின்றார்.

பாண்டியன் சுரநோயைத் தீர்த்த குறிப்படங்கிய பதிகத்திலும் அவர் ஆற்றிய அற்புதத்தின் பெருமையை விட அவ்வற்புதத்தை நிகழ்த்திய திருஆலவாயானின் திருநீற்றுச் சிறப்பே பெரிதும் வெளிப்படுத்தப்படுகின்றது. முத்துச்சிவிகை, குடை, சின்னம் இவை பெற்றபோது "எந்தை யீசன்" (2 : 226 : 1) எனத் தொடங்கும் பதிகம் பாடப்பட்டதாக்ச் சேக்கிழாரால் கூறப்படுகின்றது. ஆனால் அப்பதிகத்தில் அவ்வற்புதம் நிகழ்ந்ததற்கான குறிப்பு எதுவும் இல்லை. அரத்துறை அடிகள்தம் அருளை வியந்து அப்பதிகம் முழுவதும் பாடப்பட்டுள்ளது. இதனால் திருஞான சம்பந்தர் அற்புதங்களைத் தம் பாடல்களில் குறிப்பிட்டுப் பாடுவது தம் பெருமை பாடும் நோக்கத்தால் அல்ல; இறை அருளை வேண்டியோ, வியந்தோ பாடியவை அவை என்பது புலனாகும்.

### 2.3.5.3. அற்புதங்களும் அவற்றின் தத்துவங்களும் :

இறைவன் திருஞானசம்பந்தருக்கு ஆற்றியதாகக் கூறப்படும் அற்புதங்கள் திருஞானசம்பந்தர் இறைவனிடம் வேண்டாமலேயே நடைபெற்றவையாகும். இது தன் அடியார்களுக்குத் தேவையான வற்றைத் தானே அறிந்து கொடுக்கும் இறைவனது பண்பை விளக்கும்

எனலாம். திருஞானசம்பந்தர் பிறருக்கு ஆற்றியதாகக் கூறப்படும் அற்புதங்கள் அவர் இறைவனிடம் வேண்டியதனால் இறையருளால் நடைபெற்றவையாகும். இது தன் அடியார்கள் வேண்டுவனவற்றை நிறைவேற்றும் இறைவனது பண்பை விளக்கும்.

இறைவன் திருநாவுக்கரசரைச் சூலைநோய் கொடுத்து ஆட்கொண்டதாகவும், [30] சுந்தரரை அந்தணர் வடிவில் வந்து ஆட்கொண்டதாகவும்[31] கூறும் சேக்கிழார், திருஞான சம்பந்தரை அம்மையப்பர் வடிவில் ஞானப்பால் தந்து ஆட்கொண்டதாகக்[32] கூறுவதற்கு அவர் குழந்தை பிராயத்தவர் என்பதே காரணம் எனலாம். இதனால் இறைவன் உயிர்களின் பக்குவநிலைக்கு ஏற்ற வடிவில் வந்து ஆட்கொள்வான்; அவற்றுள் தெய்வ வடிவமும் ஒன்று என்ற சைவசித்தாந்த உண்மை உணர்த்தப்படுகிறது.

*"பண்டைநற் றவத்தால் தோன்றிப் பரமனைப் பத்தி*
*பண்ணும்*
*தொண்டரைத் தானே தூய கதியினில் தொகுப்பன்"*[33]

என்ற சிவஞானசித்தியார் பாடலுக்கு திருஞானசம்பந்தரை இறைவன் தானே நேரில் ஆட்கொண்டதாகக் கூறப்படும் நிகழ்ச்சி எடுத்துக் காட்டாய் அமைகின்றது எனலாம்.

மேலும் மகன் என்ற முறையில் இறைவி திருஞான-சம்பந்தருக்குப் பால் ஊட்டியதாகக் கூறப்படும் இந்நிகழ்ச்சியே பின்னால் திருஞானசம்பந்தர், மகன் வழியை விளக்க வந்த (சத்புத்திர மார்க்கம்) குரவர் எனக் கூறக் காரணமாய் அமைகின்றது எனலாம்.

அரத்துறை இறைவன் அருளால் அவ்வூர் அந்தணர்கள் மூலம் திருஞான சம்பந்தருக்கு முத்துச்சிவிகை, குடை, சின்னம் முதலியன கொடுக்கப்பட்டதாகச் சேக்கிழார் கூறுகிறார்[34] சிவிகை, குடை, சின்னம் முதலியன அரசருக்குரிய அடையாளங்கள் ஆகும். சமய குரவர் ஏனைய மூவருக்கும் (திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர்) கிடைக்காத பேற்றைத் திருஞானசம்பந்தருக்குக்

கொடுத்தது, அவர் சைவ சமயத்தை நிலைநாட்ட வந்த ஞானாசிரியர் என்ற உட்கருத்தை உணர்த்துகின்றது என்பர்.[35]

கொல்லி மழவன் என்ற மன்னன் தன் மகளுக்கு ஏற்பட்டிருந்த முயலகன் நோயை நீக்கச் செய்த முயற்சிகள் யாவும் பயனற்றுப்போகவே, இறைவனையே நம்பி, அவன் முன்னிலையில் மகளைக் கிடத்தி விட்டான். சிவபெருமான் தன்னையே எக்காலத்தும் போற்றிவரும் மழவன் துயர் நீக்கத் திருஞானசம்பந்தரை அங்கு விடுத்து அவன் மகள் நோயை நீக்குமாறு செய்தார் என்று வரலாற்றில் கூறப்படுகின்றது.[36] இந்நிகழ்ச்சி முற்செய் வினைப்பயனால் உயிர்கள் நோய் முதலியவற்றினால் துன்பம் அடையின், தன்னையே முழுவதுமாக நம்பி அவ்வுயிர்கள் நோய் தீர்க்க வேண்டும்பொழுது இறைவன் குணப்படுத்துவான் என்பதனை உணர்த்துகின்றது. இறைவனைச் சைவ பக்தி இலக்கியங்களும், சாத்திர நூல்களும் 'மருத்துவன்'[37] என்று கூறுகின்றன. எனவே உயிர்களிடத்து வினைப்பயனைச் சேர்ப்பிப்பவனும் இறைவன்; வினைப்பயனால் துன்பம் அனுபவிக்கும் உயிர்கள் தன்னை நம்பிக்கை கொண்டு வழிபடும்போது அவைகளை வினைப்பயனிலிருந்து விடுவிப் பவனும் அவனே என்ற தத்துவம் உணர்த்தப்படுகின்றது.

திருஞானசம்பந்தர் சமணர்களுடன் வாது செய்யப் புகுமுன் "வாது செயத் திருவுள்ளமே" (3:366:2-10) என இறைவனிடம் கேட்பது சிவஞானியர்கள் எச்செயலையும் திருவருட் செயலாகக் கருதிச் செயலாற்றும் பண்பினை விளக்கும்.

காவிரியில் வெள்ளம் பெருக்கெடுத்தோடியதால் ஒடம் விடப்படவில்லை. திருஞான சம்பந்தரோ அக்கரையிலுள்ள திருக்கொள்ளம்புதூர் இறைவனை விரைந்து சென்று வழிபட விரும்பி, அடியார் கூட்டத்துடன் ஒடத்தில் ஏறி, இறைவன் மீது பதிகம் பாட, ஒடம் தானாகவே மறுகரையை அடைந்ததாகக் கூறப்படுகின்றது.[38] இது சீவன் முத்தர்கள் உலகியல் சிந்தனையின்றி இறைவனையே நினைத்திருப்பர்[39] என்று சிவஞானசித்தியாரில் கூறப்படுவதற்கு எடுத்துக்காட்டாய் அமைகின்றது எனலாம்.

திருவோத்தூர்த் திருக்கோயிலில் உள்ள பனைகள் இறைவனுக் குரியனவாக விடப்பட்டவைகள். இறைவனுக்கு அமுதமாக ஆக்கப் பெற்றவைகள் தவறுபட்டபோது, அத்தவற்றை நீக்கி இறைவனுக்குரிய நிவேதனப் பொருளாக ஆக்குகிறார் திருஞானசம்பந்தர். சைவ சமயத்தில் அறத்தின் நிகழ்முறைகள் வினைக்கொள்கைகள் என வகுக்கப்பட்டுள்ளன. வினைக் கொள்கைகளைச் செயற்படுத்தும் போது ஏற்படும் சிக்கல்கள் திருவருளால் விலக்கப்படும் என்பது ஆண்பனைகளைப் பெண் பனைகளாக்கியதால் உணர்த்தப்படு கின்றது. ஆண்மையும் பெண்மையும் இணைய நிற்கும் இறைவனிடம், அவன் கோயிலிலுள்ள பனைகளும் அவ்வாறே ஆக அருள் செய்யத் திருஞானசம்பந்தர் வேண்டுவதே திருவோத்தூர்த் திருப்பதிகத்தின் உட்பொருளாகும்.[40]

சிவஞானசித்தியார் பரபக்கத்தில் சத்தமே பிரமம் எனக்கூறும் சத்தம் பிரமவாதி மத மறுதலையில், ஆண்பனைகளில் குரும்பை தோன்றியது சத்தத்தாலன்று சிவோகம்பாவனையால் என்று தத்துவப்பிரகாசர் விளக்கம் கூறுகின்றார்.[40அ]

பூம்பாவையின் எலும்பைப் பெண்ணாக்கியதாகக் கூறப்படும் நிகழ்ச்சி பற்றி, "பூம்பாவை திருஞானசம்பந்தருக்கென உடைமை யாக்கப்பட்டவள். இறைவனுக்கும் இறைவன் அடியார்களுக்கும் அடைக்கலமாக அருளப்பெற்ற பொருள்களாக அமையும் புண்ணியத் தன்மை வாய்ந்த உயிர்கள் நிகழ்வினையும், தொல்வினையும் நீங்கப்பெற்று, பிறவி நீக்கம் பெற்று நன்னெறிப்படும் நன்மை நிலையை எய்துகின்றன என்பதைக் காட்சி அளவையால் உலகவர் காண அமைத்துக் காட்டினார் திருஞானசம்பந்தர்[41] என்று கூறுகிறார். வை. இரத்தினசபாபதி.

திருஞானசம்பந்தர் காலத்தில் திகம்பர சமணர்கள் மிகுதி. சமணர்கள் துறவு பூண்டவர்களே வீடுபேறு அடைய முடியும், இல்லறத்தார்கள் வீடுபேறு அடைய முடியாது என்ற கொள்கை உடையவர்கள்[42]. அத்தகைய கொள்கை உடையவர்கள் காலத்தில் திருஞானசம்பந்தர் தம் திருமணத்திற்கு வந்த அனைத்து

ஆண்களோடும், பெண்களோடும் சோதியில் கலந்ததாகக் கூறப் படுவது பெண்களும் வீடுபேறு பெறலாம் என்பதைப் புலப்படுத்துவதாகும்.

திருஞானசம்பந்தர் வாழ்க்கையானது அவர் ஞானப்பால் உண்டதாகக் கூறப்பட்டுப் பதிகம் பாடத் தொடங்கியதிலிருந்து வீடுபேறு அடையும் வரை பெரும்பாலும் தலயாத்திரை செய்வதிலேயே கழிந்ததாகத் தெரிகின்றது. எனவே, திருஞானசம்பந்தர் தேவாரமானது அவர் சென்ற தலங்களின் கோயில்களில் உள்ள இறைவன் மீது பாடிய அனுபவப் பாடல்களாகும். இவ்வாறு திருஞானசம்பந்தர் கோயில்களிலுள்ள இறைவனைப் புகழ்ந்து பாடி வழிபட்டது "ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே"[43] என்ற சிவஞானபோதக் கருத்திற்கு எடுத்துக்காட்டாயிற்று எனலாம்.

### 2.3.6. திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் :

திருஞானசம்பந்தருக்குத் திருநாவுக்கரசருடன் ஏற்பட்ட சந்திப்பு மூன்று இடங்களில் நிகழ்ந்ததாகப் பெரிய புராணத்தின் வாயிலாகத் தெரிய வருகின்றது. 1. சீர்காழியில், 2. திருப்புகலூரில், 3.திருப்பூந்துருத்தியில். இவ்விருவரும் இணைந்து தொண்டாற்றியதை ஞானமும் செயலும் இணைந்து தொண்டாற்றின என்பார் வை.இரத்தினசபாபதி.[44] திருநாவுக்கரசரின் திருவேடத்தை தூரத்தே கண்டபொழுதே திருஞானசம்பந்தர் வணங்கியதாகக் கூறப்படுவது[45] "மாலற நேயம் மலிந்தவர் வேடத்தை அரன் எனத் தொழும்"[46] பண்பை உணர்த்தும்.

### 2.3.7. திருஞானசம்பந்தரும் அடியார்களும் :

திருஞான சம்பந்தரின் வரலாற்றிலிருந்து அவர்தம் காலத்தில் வாழ்ந்த திருநாவுக்கரசர், சிறுத்தொண்டர், திருநீலநக்கர், முருகர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், குங்குலியக்கலயர், குலச்சிறையார், நின்றசீர் நெடுமாறர், மங்கையர்க்கரசியார் முதலிய சிவனடியார் களுடன் நட்புக் கொண்டிருந்தமை தெரிய வருகின்றது. இது

சைவசித்தாந்த சாத்திர நூல்களில் சீவன் முத்தர்கட்கும் அடியார் கூட்டுறவு அவசியம் [47] என்று கூறப்படும் கருத்திற்கு எடுத்துக் காட்டாய் அமைகின்றது.

### 2.3.8. திருஞானசம்பந்தர் வரலாறு பற்றி நம்பியாண்டர் நம்பியும் சேக்கிழாரும் :

நம்பியாண்டார் நம்பி பாடல்களாலும், சேக்கிழாரின் திருஞானசம்பந்தர் புராணத்தாலும் தெரியவரும் திருஞான சம்பந்தரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் பெரும்பாலும் ஒத்துள்ளன. ஆனால், பின்வரும் செய்திகள் நம்பியாண்டார் நம்பியால் கூறப்பட்டுச் சேக்கிழாரால் கூறப்படவில்லை;

1. திருஞானசம்பந்தர் பாலை நெய்தலாகுமாறு பாடியதை நம்பியாண்டார் நம்பி அற்புதமாகக் கூறுவார். சேக்கிழார் இதனை அற்புதமாகக் கூறவில்லை. இது திருநனிபள்ளிக்குத் திருஞான சம்பந்தரின் வருகையால் ஏற்பட்ட அறநிகழ்ச்சி யாதலால் இதனைச் சேக்கிழார் அற்புதமாகக் கூறவில்லை என்பார் வை.இரத்தினசபாபதி[48].

2. திருஞானசம்பந்தர் தமக்கு ஏவல் செய்த தொண்டனாகிய புலையன் ஒருவனை அந்தணன் ஆக்கினார் என்று பொருள்படும்படி ஒரு செய்தியை நம்பியாண்டார் நம்பி கூறியுள்ளார்[49].

3. நம்பியாண்டார் நம்பி, திருஞான சம்பந்தர் இறைவி முன்பும், இறைவன் முன்பும் நடனம் ஆடியதாகக் கூறியுள்ளார்.[50]

4. நம்பியாண்டார் நம்பி திருஞானசம்பந்தர் முத்துச்சிவிகை மட்டும் பெற்றதாகக் கூறுகிறார். சேக்கிழாரோ திருஞான சம்பந்தர் முத்துச்சிவிகை, குடை, சின்னம், முத்துப்பந்தர் முதலியன பெற்றதாகக் கூறுகின்றார்.

### 2.3.9. திருஞானசம்பந்தர் வரலாறு பற்றிச் சைவசித்தாந்தநூல்கள் :

திருஞானசம்பந்தரின் வரலாற்று நிகழ்ச்சிகள் சைவசித்தாந்த நூலாசிரியர்களாலும் குறிப்பிடப்படுகின்றன.

திருக்களிற்றுப்படியார் என்ற சைவசித்தாந்த நூலில் திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்ட செய்தி, பொற்றாளம் பெற்றது, பாலை நெய்தலாகப்பாடியது, முத்துச்சிவிகை பெற்றது, உலவாக்கிழி பெற்றது, ஆண் பனைகளைப் பெண் பனைகளாக்கியது, அனல்வாதிலும் புனல்வாதிலும் வென்றது, வெப்புநோய் தீர்த்தது, எலும்பைப் பெண்ணாக்கியது ஆகிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.[51] திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்ட செய்தியைக் கேட்ட பாண்டிமா தேவிக்குப் பால் சுரந்ததாகவும் அந்நூலில் கூறப்பட்டுள்ளது.[52]

புத்தநந்தியின் தலையை உருட்டிய செய்தி சங்கற்ப நிராகரணம் என்ற சைவசித்தாந்த நூலில் கூறப்பட்டுள்ளது.[53]

திருஞானசம்பந்தரின் வரலாற்று நிகழ்ச்சிகள் சில சைவ சித்தாந்த நூல்களில் குறிப்பிடப்பட்டதிலிருந்து சைவசித்தாந்த நூலாசிரியர்களுக்குத் திருஞானசம்பந்தரிடம் உள்ள அன்பும் மதிப்பும் புலனாகின்றன.

மேலும் சிவஞானசித்தியார் ஆசிரியரான அருணந்தி சிவாசாரியார் மெய்கண்ட தேவரின் பெற்றோர் மகப்பேறு வேண்டிய பொழுது திருஞானசம்பந்தரின் திருமுறையில் கயிறு சாத்திப் பார்த்து அதற்குரிய வழியை அறிவுறுத்தியதாகக் கூறப்படுவதும்[54] இங்கு நினைவுகூரத்தக்கது.

முடிவுரை :

1. வேதத்தையும், சைவத்தையும் விளங்கச் செய்தலே திருஞானசம்பந்தரின் பிறப்பின் நோக்கம் ஆகும்.
2. திருஞானசம்பந்தரின் இயற்பெயர் எந்நூலிலுமே குறிப்பிடப் படவில்லை. அவர் மூன்று வயதிலேயே பல காரணச் சிறப்புப்

பெயர்களைப் பெற்ற காரணத்தினால் அவருடைய இயற்பெயர் நாளடைவில் மறைந்துவிட்டது எனலாம்.

3. இறைவன் திருஞானசம்பந்தருக்கு ஆற்றிய அற்புதங்களின் வாயிலாக அடியவர்கட்குத் தானே அருள்புரியும் தன்மை உணர்த்தப்படுகிறது.

4. திருஞானசம்பந்தர் பிறருக்கு இறையருளால் ஆற்றிய அற்புதங்களினால் இறைவன் உயிர்களுக்குத் தன்னால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் மூலம் அருள் செய்யும் தன்மை உணர்த்தப்படுகின்றது.

5. இறைவன் அம்மையப்பர் வடிவில் தோன்றி திருஞானசம்பந்தரை ஆட்கொண்டதாகக் கூறப்படுவது இறைவன் உயிர்களுக்கு அருள்புரியும் கோலங்களுள் தெய்வ வடிவம் ஒன்றாகும் என்பதனை உணர்த்தும்.

6. இறைவி திருஞான சம்பந்தருக்கு மகன் என்ற முறையில் ஞானப்பால் கொடுத்து ஆட்கொண்டதாகக் கூறப்படுவதே அவர் மகன் வழியை (சத்புத்திர மார்க்கம்) விளக்க வந்த குரவர் என பிற்காலத்தில் கூறக் காரணமாய் அமைகின்றது எனலாம்.

7. திருக்களிற்றுப்படியாரில் கூறப்படும் 'முத்தருடைய போதம் பெத்தருடைய போதம் போல் அல்ல' என்ற கருத்திற்கும், இறைவன் தான் செய்யும் தன்மைகளைத் தன் அன்பர்களுக்கு ஆக்கிடுவன்' என்ற கருத்திற்கும் திருஞானசம்பந்தர் ஆற்றிய அற்புத நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டுக்களாய் அமைகின்றன எனலாம்.

8. திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசரின் திருவேடத்தைத் தூரத்தே கண்டபொழுதே வணங்கியதும், பல தலங்களிலுள்ள கோயில்களை வழிபட்டதும், 'மாலற நேயம் மலிந்தவர் வேடத்தையும் ஆலயத்தையும் அரன் எனத் தொழும்' தன்மையை உணர்த்தும்.

9. திருஞானசம்பந்தர் அடியவர்களுடன் கொண்ட நட்பு சீவன் முத்தர்களுக்கும் அடியார் கூட்டுறவு அவசியம் என்பதனை உணர்த்தும்.

10. திருஞானசம்பந்தரின் வரலாற்று நிகழ்ச்சிகள் சில திருக்களிற்றுப்படியார், சங்கற்ப நிராகரணம் என்ற சைவசித்தாந்த நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனால் சைவசித்தாந்த நூலாசிரியர்களுக்குத் திருஞான சம்பந்தரின் மீதுள்ள அன்பும் மதிப்பும் புலனாகின்றன.

## குறிப்புக்கள்

1. திருஅருள்மொழி, ப.63.
2. முரி என்பது ஓரடியில் தொடங்கிய யாப்பியலையும், இசை நடையையும் அவ்வடியிலேயே முரித்து மாற்றி மற்றொரு யாப்பியலும் இசை நடையும் அமையப் பாடப்பெறும் இசைப்பாட்டு ஆகும். இதனை முரிவரி என்றும் கூறுவர்.

   - 'கானல்வரி' சிலப்பதிகாரம், அரும்பதவுரை மேற்கோள், ப. 208.
3. C.V. Narayana Ayyar, Origin and Early History of Saivism in South India, P.125.
4. மேற்கோள் : ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, சைவ இலக்கிய வரலாறு, ப.50.
5. க.வெள்ளைவாரணன், பன்னிரு திருமுறை வரலாறு, முதற்பகுதி, ப.292
6. "Appar and Sambandar lived at a time when the Jains were powerful enough to cause trouble to the Saivas".

   -C.V. Narayana Ayyar, Op.cit., P.285.
7. சேக்கிழார், திருஞானசம்பந்தர் புராணம், 1.
8. மேலது, 22.
9. மேலது, 264-266

10. "ஓம்! பூர்வுவஸ்ஸுவ : தத்ஸவிதுர்வரேண்யம்!

பர்க்கோ தேவஸ்ய தீ மஹி!

தியோ யோ ந: ப்ரச்சோதயாத்"

ஓங்காரப் பொருளான எந்தப் பரமாத்மா நம்முடைய புத்தி சக்திகளைத் தூண்டுகிறாரோ அந்த அனைத்தையும் படைக்கிறவரான பகவானுடைய சிறந்த ஜோதி ஸ்வரூபத்தை தியானிப்போம் என்பது இதன் பொருளாகும்.

அண்ணா (உ.ஆ.), யஜுர் வேத ஸந்த்யாவந்தனம், பக்.31-32.

11. திருஞான : 3 : 373, 2 : 192, 2 : 166, 1 : 90, 3 : 345, 2 : 222, 2 : 224, 2 : 243, 3 : 269, 3 : 283, 3 : 294, 3 : 300, 3 : 349, 3 : 374, 3 : 378, 3 : 380 முதலியன.

12. மேலது : 1 : 14, 1 : 17, 1 : 41, 1 : 63, 1 : 98, 1 : 127, 1 : 128, 2 : 145, 2 : 179, 2 : 187, 2 : 216, 3 : 258 முதலியன.

13. சேக்கிழார், திருஞானசம்பந்தர் புராணம், 41.

14. மேலது, 69.

15. மேலது.

16. மேலது 98, 222, 450, 738.

17. மேலது, 653, 904

18. மேலது 69.

19. 'சம்' என்றால் நல்ல என்றும், 'பந்தம்' என்றால் உறவு என்றும் பொருள். ஞானத்தோடு உறவு கொண்டவராதலால் ஞானசம்பந்தர் ஆவார்.

- கிருபானந்தவாரியார், சிவனருட் செல்வர், ப. 333.

20. தண்.கி. வேங்கடாசலம், சம்பந்தர், ப.24.

21. சேக்கிழார், திருஞானசம்பந்தர் புராணம், 69

22. திருஞான : 1 : 90 : 12, 2 : 150 : 11, 1 : 64 : 11, 1 : 92 : 11

23. திருஞான : 1 : 90 : 12, 2 : 150 : 11, 1 : 64 : 11, 1 : 92 : 11 முதலியன.

24. மேலது, 3 : 345 : 11, 3 : 346 : 11, 3 : 379 : 11, 3 : 285 : 11 முதலியன.

25. திருஅருள்மொழி, ப.56.

26. கோ.சுந்தரமூர்த்தி, சைவசமயம், ப. 62

27. திருக்களிற்றுப்படியார், 69.

28. பின்னிணைப்பு எண் 1, 2.

29. பின்னிணைப்பு எண் 3.

30. சேக்கிழார், திருநாவுக்கரசர் புராணம், 48, 49.

31. சேக்கிழார், தடுத்தாட்கொண்ட புராணம் 2868.

32. சேக்கிழார், திருஞானசம்பந்தர் புராணம், 67, 68.

33. சிவஞானசித்தியார் சுபக்கம், 4.

34. சேக்கிழார், திருஞானசம்பந்தர் புராணம், 195

35. வை.இரத்தினசபாபதி, திருமுறைத்தெளிவே சிவஞான போதம், ப. 44

36. சேக்கிழார், திருஞானசம்பந்தர் புராணம், 317, 318.

37. (i) திருஞான : 1 : 110 : 1, 1 : 114 : 1, 2 : 145 : 4,
    (ii) சிவஞானசித்தியார் சுபக்கம், 123, 124, 125.

38. சேக்கிழார், திருஞானசம்பந்தர் புராணம், 898, 899

39. சிவஞானசித்தியார் சுபக்கம் , 311.

40. வை.இரத்தினசபாபதி, மு.நூல்., பக்.31-32

40அ. சிவஞானசித்தியார் பரபக்கம், சத்தப்பிரம மதவாதி மறுதலை, 7. தத்துவம் பிரகாசர் உரை.

41. மேலது, ப. 39

42. மயிலை.சீனி.வேங்கடசாமி, சமணமும், தமிழும் ப.10.

43. சிவஞானபோதம், சூத்.12.

44. வை.இரத்தினசபாபதி, மு.நூல்., பக். 48-49.

45. சேக்கிழார், திருஞானசம்பந்தர் புராணம், 271.

46. சிவஞானபோதம் சூத்.12.

47. மேலது.

48. வை.இரத்தினசபாபதி, மு.நூல்., பக். 32-33.

49. "புலையடித் தொண்டனைப் பூசுரன் ஆக்கி"

- *நம்பியாண்டார் நம்பி, ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி, 37.*

50. (i) ".... பொருகயற்கண்

*மலைநடப்பாவைக்கு மாநடம்*

*ஆடுமணியை"*

- நம்பியாண்டார் நம்பி, ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி. 37

(ii) "தாளம் பிரியாத் தடக்கை அசைத்துச்

*சிறுகூத் தியற்றிச் சிவன்அருள் பெற்ற*

*நற்றமிழ் விரகன்"*

- நம்பியாண்டார் நம்பி, ஆளுடையபிள்ளையார் திருமும் மணிக்கோவை, 19.

51. திருக்களிற்றுப்படியார், 70.

52. மேலது 54.

53. 'ஈசுவர அவிகாரவாதி நிராகரணம்', சங்கற்ப நிராகரணம், வரி, 21-27.

54. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, மெய்கண்டார், பக். 12-13.

# 3. திருமுறைகளின் அமைப்பும் தத்துவமும்

# 3. திருமுறைகளின் அமைப்பும் தத்துவமும்

## 3.0. முன்னுரை :

இவ்வியலில் திருமுறைகளைப் பற்றிய செய்திகளும், பதிகங்களைப் பற்றிய செய்திகளும் கூறப்படுகின்றன. திருமுறைகள் பற்றிய செய்திகளில் 'திருமுறை' சொற்பொருள் விளக்கப்பட்டு, நம்பியாண்டார் நம்பி தொகுத்த திருமுறைகள் பற்றி ஆராயப் படுகின்றது; திருஞானசம்பந்தர் தேவாரம் திருமுறைகளில் முதலில் அமைந்ததற்கான காரணங்களும் ஆய்வு செய்யப்படுகின்றன.

பதிகங்களைப் பற்றிய செய்திகளில் திருஞானசம்பந்தர் பதிகங்கள், பாடல்கள் பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. பதிக அமைப்பில் உள்ள ஒருமைப்பாடு, ஒருமைப்பாட்டிற்கான காரணங்கள், ஒருமைப்பாடு உணர்த்தும் தத்துவங்கள் ஆய்வு செய்யப்படுகின்றன. பதிக அமைப்பில் உள்ள வேறுபாடுகளும், வேறுபாட்டிற்கான காரணங்களும் ஆய்வு செய்யப்படுகின்றன. மேலும் சில பதிகங்களில் உள்ள சித்தாந்தப் பொருள் நோக்குகள் சுட்டிக்காட்டப்படுகின்றன.

தேவாரம் என்ற சொல்லின் பொருள், தேவாரம் என்ற பெயர் வழக்கு, பதிகங்கள் பற்றிய பொதுச்செய்திகள் ஆகியவற்றைப் பற்றி முன்பே பல ஆய்வாளர்கள் கூறியுள்ளதால், அவை இங்குக் கூறப்படாது விடப்படுகின்றன.

## 3.1. திருமுறைசொற்பொருள் விளக்கம் :

'திரு' என்பது தெய்வத்தன்மை என்பதையும்,[1] 'முறை' என்பது ஒழுங்கு என்பதையும்[2] குறிக்கும் எனலாம். எனவே திருமுறை என்பது தெய்வத்தைப் பற்றிப் பாடப்பட்ட பாடல்கள் கொண்ட நூல்களின் தொகுப்பு அல்லது ஒழுங்கு என்பதைக் குறிக்கும். "உயிருக்கு ஒழுங்கையும், அதனால் வருகின்ற ஒழுக்கத்தையும், உயிருக்கு

இறைவனோடுள்ள உறவையும், உயிர் இறைவனோடு கலக்கின்ற கூட்டையும் அதனால் உயிருக்கு ஏற்படுகின்ற நன்மைகளையும் நூலிலே கூறுவது திருமுறைகளாகும்'' என்று கூறப்படும்.[3]

### 3.1.1. திருமுறைகளின் தொகுப்பு :

திருமுறைகள் மொத்தம் பன்னிரண்டு ஆகும்.[4] இப்பன்னிரண்டு திருமுறைகளும் தொகுக்கப்பட்ட வரலாறு உமாபதி சிவத்தால் திருமுறை கண்ட புராணத்தில் பாடப்பட்டுள்ளது. திருமுறைகளைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி.

### 3.1.2. நம்பியாண்டார் நம்பி தொகுத்தவை :

நம்பியாண்டார் நம்பி தொகுத்த திருமுறைகள் எத்தனை என்பது ஆய்வுக்குரியதாக உள்ளது. முதல் பதினொரு திருமுறைகளை நம்பியாண்டார் நம்பியே தொகுத்தார் என்று திருமுறைகண்ட புராணம் கூறுகின்றது.[5] நம்பியாண்டார் நம்பி முதல் ஏழு திருமுறைகளை மட்டுமே தொகுத்திருக்க வேண்டும். எட்டு முதல் உள்ள திருமுற்றைப் பகுப்பு நம்பியாண்டார் நம்பியால் அமைக்கப் பெற்றதன்று. அவைகள் நம்பியாண்டார் நம்பியின் காலத்திற்குப் பின்னர் வாழ்ந்த சிவநேசச் செல்வர்களாலும், பெரியபுராணம் எழுந்த பின்னர், அந்நூல் 12-ம் திருமுறையாக அக்காலத்தில் வாழ்ந்த சிவநேசச் செல்வர்களாலும் வகுக்கப் பெற்றிருக்கலாம் என்ற கருத்தும் நிலவுகின்றது.[6] இக்கருத்தே பின்வரும் காரணங்களால் பொருத்தமாகத் தெரிகிறது.

நம்பியாண்டார் நம்பி திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் எட்டாம் திருமுறையாகச் சேர்த்திருந்தால், சிவநெறிச் செல்வனான இராசராசன், திருவாசகத்திற்கு உருகி, மாணிக்க வாசகரது திருவுருவத்தையும் எடுத்து வழிபட்டிருப்பான் அல்லவா ?. அவனது ஆட்சியிலும், பிற்பட்ட ஐம்பது ஆண்டுகள் வரையிலும் வெளிப்பட்ட கல்வெட்டுக்களில் மாணிக்கவாசகர் பெயரோ, திருவாசகப் பாடல்களோ குறிக்கப்படவில்லை. வீரராசேந்திரன் (கி.பி. 1063 - 1069) கால முதலே திருவெம்பாவை,

திருச்சாழல் என்பன சில கோவில்களில் ஓதப்பட்டன. அவர் திருவுருவமும் பிற்பட்ட காலத்தேதான் எழுப்பிக்கப்பட்டது. திருவாசகத்தின் சிறப்பு இராசராசன் காலத்தில் வெளிப்படவில்லை.[7] ஆதலால் நம்பியாண்டார் நம்பி திருவாசகத்தை எட்டாம் திருமுறையாகத் தொகுத்திருக்க முடியாது. திருமுறைகளைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பி இராசராசன் காலத்தவர் என்பது பெரும்பாலோர் கருத்தாகும். இராசராசன் காலம் கி.பி. 985 - 1014. அவன் மகன் இராசேந்திரன் காலம் கி.பி.1012 - 1044. இவன் புதிதாக உண்டாக்கிய கங்கை கொண்ட சோழபுரத்தில் கட்டப்பட்ட கங்கை கொண்ட சோழீச்சுவரம் கோயில் பற்றிக் கருவூர்த்தேவர் பாடிய திருவிசைப்பா ஒன்பதாம் திருமுறையில் உள்ளது. மகன் தனது ஆட்சிக்காலத்தில் கட்டிய கோவிலைப் பற்றிய பாடல் அடங்கிய நூலை, அம்மகனது தந்தை காலத்துப் புலவர் அத்தந்தை முன்னிலையில் மற்றத் திருமுறைகளைத் தொகுத்த பொழுதே தொகுத்திருக்க முடியாது. எனவே நம்பியாண்டார் நம்பி ஒன்பதாம் திருமுறையைத் தொகுத் திருக்க முடியாது.[8]

பத்தாம் திருமுறை ஆசிரியரான திருமூலர் தேவார ஆசிரியர்கள் காலத்திற்கு முற்பட்டவர். நம்பியாண்டார் நம்பியே பதினோரு திருமுறைகளைத் தொகுத்திருப்பாரானால், காலத்தால் முற்பட்ட திருமூலரின் திருமந்திரத்தை முதலிலேயே தொகுத்-திருப்பார். அது பத்தாவதாக அமைக்கப்பட்டது பின்வந்தோரால் எனலாம். பதினோராம் திருமுறை ஆசிரியர்கள் கால வரிசையில் ஒழுங்கில்லை. பன்னிரண்டாம் திருமுறை ஆசிரியரான சேக்கிழார் நம்பியாண்டார் நம்பியின் காலத்திற்குப் பிற்பட்டவர். எனவே நம்பியாண்டார் நம்பி ஏழு திருமுறைகளைத் தொகுத்த பின்பு, பின்வந்தோர் ஏனைய திருமுறைகளைத் தொகுத்து திருமுறைகள் பன்னிரண்டு என்று ஆக்கியிருக்கலாம்.

திருமுறைத் தொகுப்பில் ஆசிரியர் வாரியாகவோ, தலங்கள் வாரியாகவோ, எண்ணிக்கை முறையிலோ, பாடல் தலைவர்கள் முறையிலோ, கால முறையிலோ ஒர் ஒழுங்கு அமையவில்லை. எனவே

முதல் ஏழினையும் ஒருவர் தொகுக்கப் பிறவற்றைப் பின்வந்தோர் தொகுத்திருக்கக் கூடும் எனலாம்.

நம்பியாண்டார் நம்பி இராசராசன் காலத்தில் முதல் ஏழு திருமுறைகளைத் தொகுத்துப் பின், அவர் மகன் இராசேந்திரன் காலத்தில் எட்டு முதல் பதினோரு திருமுறைகளைத் தொகுத்திருக்க வேண்டும் என்ற கருத்தும் நிலவுகின்றது.[8அ]

### 3.1.3. திருஞானசம்பந்தர் பாடல்கள் முதலில் அமைந்திருப்பதற்கான காரணங்கள் :

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் ஏழு திருமுறைகளின் ஆசிரியர்கள் ஆவர். இவர்களுள் சுந்தரர் காலத்தால் பிற்பட்டவர். எனவே சமகாலத்தவர்களான திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் இருவருள், திருஞான சம்பந்தர் பாடல்கள் முதலில் அமையக் காரணங்கள் என்ன என்பதே ஆய்வு செய்யப்பட வேண்டும். இதற்குப் பின்வரும் காரணங்களைக் கூறலாம்.

1. திருஞானசம்பந்தர் முதலில் பதிகம் பாடினமையும், மூன்று வயதில் இறையருளால் ஞானப்பால் உண்ணக் கிடைத்தமையால் ஏனைய நாயன்மார்களைக் காட்டிலும் உயர்ந்த சிறப்புப் பெற்றமையும் காரணங்களாகும் என்று மறைமலையடிகள் கூறுவார்[9].
2. சமய நாயன்மார்களில் பிறந்த தினத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. அவர்கள் இறைவன் திருவடி அடைந்து முக்தி பெற்ற நாளே குருபூசை நாள் என்று கொண்டாடப்படுகிறது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் இருவருள் திருஞானசம்பந்தரே முதலில் முக்தி அடைந்தவர். அவர் பாடல்கள் முதலில் அமைக்கப் பெற்றமைக்கு இது ஒரு காரணம் ஆகலாம்.[10]
3. திருஞானசம்பந்தர் சாமுசித்தர் ஆவார். முற்பிறவிகளில் சரியை, கிரியை, யோகம் செய்து எடுத்துள்ள பிறவியில்

வீடுபேறு அடைவதற்குரிய ஞானநிலையை விரைவில் அடைபவர் சாமுசித்தர் எனப்படுவர்.[11]

4. திருநாவுக்கரசர் உலகியல் முறைப்படி கல்வி கற்றவர். திருஞானசம்பந்தரோ மூன்றாண்டிலேயே இறையருளால் உவமையிலாக் கலைஞானம் பெற்றவர்.

5. சமணர்களும் பௌத்தர்களும் மிக்க ஆதிக்கம் பெற்றிருந்த காலத்தில் சமணர்களை வாதில் வென்று சைவத்தை நிலைநாட்டியவர் திருஞானசம்பந்தர்.

6. திருநாவுக்கரசர் சமணசமயம் சார்ந்து பல ஆண்டுகள் வாழ்ந்து, இறைவனால் சூலைநோய் கொடுத்து ஆட்கொள்ளப்பட்டுச் சைவசமயம் திரும்பியவர். ஆனால் திருஞானசம்பந்தரோ எப்பொழுதும் தூய்மையான சைவராக வாழ்ந்தவர்.[12]

7. திருநாவுக்கரசரைவிடத் திருஞானசம்பந்தர் மிகுதியான தேவாரப் பண்கள் பாடிய காரணத்தினால் அவர் இசைத் தமிழுக்குச் செய்த தொண்டு பெரிதாகும். இதுவும் ஒரு காரணம் ஆகலாம்.

8. திருஞானசம்பந்தர் பிராமணர். திருநாவுக்கரசர் சைவ வேளாளர். அக்காலத்தில் சாதி வேறுபாடு மிகுந்திருந்தது. திருஞானசம்பந்தர் பாடல்கள் முதலில் அமைக்கப்பட அவர் பிராமணராயிருந்ததும் ஒரு காரணம் ஆகலாம்.

9. திருஞானசம்பந்தர் தேவாரம் இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழின் தனித்தன்மைகளைக் கொண்ட இலக்கிய வகைகளைக் கொண்டுள்ளது. எனவே இலக்கிய நோக்கில் சுவை மிகுந்ததால் முன்னர் வைக்கப்பட்டது எனலாம்.[13]

சைவசமயத்துள் இறைவனை அடைவதற்குரிய மார்க்கங்கள் நான்கினுள் முதல் மார்க்கம் சத்புத்திர மார்க்கம் ஆகும். அதற்கு எடுத்துக்காட்டாகக் கூறப்படுவது திருஞானசம்பந்தரின் வாழ்க்கை வரலாறாகும். முதல் மார்க்கத்திற்கு உதாரணமாகக் கூறப்படுபவரின் பாடல்கள் முதலில் வைக்கப்பட்டது பொருத்தமே என்பார் சௌந்திரம்[14]. ஆனால் தாசமார்க்கம், சத்புத்திர மார்க்கம்,

சகமார்க்கம், சன்மார்க்கம் என இறைவனை அடைவதற்குரிய மார்க்கங்கள் வரிசைப்படுத்தப்பட்டுச் சிவஞானசித்தியாரில் கூறப் பட்டுள்ளன.[15] எனவே முதல் மார்க்கம் தாசமார்க்கமாதலால் சௌந்தரம் கூறும் இக்காரணம் பொருத்தமாக இல்லை.

திருஞானசம்பந்தர் பாடல்கள் ஒரே திருமுறையாக அமையாமல் பாடல்கள் மிகுதி காரணமாகப் பண்முறை அமைப்பையொட்டி மூன்று திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன.[16]

### 3.2.0. திருஞானசம்பந்தரின் பதிகங்கள் :

*"துன்றிய*
*பன்னு தமிழ்ப்பதினா றாயிர நற்பனுவல்"*[17]
*"பச்சைப் பதிகத் துடன்பதினா றாயிரம்பா"*[18]
*"தோடுடைய செவியன்முதல் கல்லூர் என்னும்*
*தொடை முடிவாப் பரசமயத் தொகைகள் மாளப்*
*பாடினார் பதிகங்கள் பாவில் ஒன்றாம்*
*பதினாறா யிரம்உளதாப் பகரு மன்றோ"*[19]

என்ற தொடர்களால் திருஞானசம்பந்தர் பாடிய பதிகங்கள் 16,000 என அறியப்படும். ஆனால் இன்று நமக்குக் கிடைத்துள்ள பதிகங்கள் 384 மட்டுமே ஆகும்.

*"பண்புற்ற திருஞான சம்பந்தர் பதிகமுந்நூற்(று)*
*எண்பத்தி னான்கில் இலங்குதிரு முறைமூன்று"*[20]

என்று திருமுறைகண்ட புராணம் கூறுகின்றது.

### 3.2.1. திருஞானசம்பந்தரின் பதிகப்பாடல்கள் :

இப்பொழுது நமக்குக் கிடைத்துள்ள திருஞானசம்பந்தர் பாடல்கள் 4159 ஆகும்.

திருஞானசம்பந்தர் பதிகங்களில் சில ஆறு பாடல்களும், சில ஏழு பாடல்களும், சில எட்டுப் பாடல்களும், சில ஒன்பது பாடல்களும், சில பத்துப் பாடல்களும், சில பன்னிரண்டு பாடல்களும் கொண்டவை. 313 பதிகங்கள் பதினொரு பாடல்கள் கொண்டவை. ஒரே பாடலால் அமைந்தது திருவெழுகூற்றிருக்கை[21].

திருஞானசம்பந்தர் பதிகங்களில் சில பாடல்கள் அடிக்குறை உடையனவாக உள்ளன.[22]

இவ்வாறு பாடல்களில் சில எண்ணிக்கைக் குறைவாக இருப்பதற்கும், அடிக்குறை உடையனவாக இருப்பதற்கும், அவருடைய ஏடுகள் தில்லைக்கோயிலில் பூட்டப்பட்டிருந்தபோது செல்லரித்துப் போனது காரணமாய் இருக்கலாம்.

### 3.2.2. பதிக அமைப்பில் ஒருமைப்பாடு :

திருஞானசம்பந்தரின் ஒவ்வொரு பதிகத்திலும் 8, 9, 10, 11 ஆம் பாடல்களில் ஒரு குறிப்பிட்ட செய்தி மீண்டும் மீண்டும் கூறப்படுகின்ற ஒழுங்கமைப்பே இங்கு ஒருமைப்பாடு எனப்படுகின்றது.

எட்டாம் பாடல் இராவணன் பற்றிய செய்தியைக் கூறுகின்றது. ஒன்பதாம் பாடல் திருமாலும், பிரமனும் இறைவனின் அடிமுடி தேடிய செய்தியைக் கூறுகின்றது.

பத்தாம் பாடல் சமணர், பௌத்தர் பற்றிக் கூறுகின்றது. பதினோராம் பாடல் அல்லது பதிக இறுதிப்பாடல் திருஞான சம்பந்தரின் பெயர், குலம், பிறப்பிடம் அந்தப் பதிகம் பாடிய காரணம், பதிகக் கருத்து, பதிகப் பயன் ஆகியவற்றைத் தெரிவிக்கும். எனவே அதனைப் 'பயனுதலிய திருப்பாட்டு' என்பர். அது திருப்பதிகத்தை முடித்து நிற்பதால் அதனைத் திருக்கடைக்காப்பு என்றும் கூறுவர்.[23]

### 3.2.2.1. ஒருமைப்பாட்டிற்கான காரணங்கள் :

ஒருசில குறிப்பிட்ட உண்மைகளை மக்கள் மனத்தில் நன்கு பதிய வைக்க வேண்டும் என்ற காரணத்தினால் திருஞானசம்பந்தர் தம் பதிகத்தில் இத்தகைய ஓர் ஒழுங்குமுறையைக் கைக் கொண்டிருக்க வேண்டும்.

இராவணன் சிவனை மதியாதவனாய்ச் சிவன் வாழ்விடத்தையே அப்புறப்படுத்தப் பார்த்தான். அதன் பலனாகச் சிவனால் கைலைமலையின்கீழ் நசுக்கப்பட்டான். தவறு உணர்ந்து வருந்தி அழுது மனம் உருகி பாடச் சிவனருள் பெற்று உய்ந்தான். இச்செய்தியைத் தவிர இராவணன் பற்றிய பிற செய்தி பேசப்படவில்லை. (திருவடகுரங்காடுதுறைப்பதிகம் (3 : 349 : 8) மட்டும் விதிவிலக்காய் உள்ளது.)

இராவணின் இயற்பெயர் தசக்கிரீவன். அவன் கைலையின்கீழ் நசுக்குண்டு அழுத செயல் பற்றி இராவணன் எனப் பெயர் பெற்றான். இராவணன் என்ற சொல்லுக்கு என்றும் அழுதுகொண்டே இருப்பவன் என்பது பொருளாகும்.[24] முதல் திருமுறையில், திருஇடும்பாவனம் பதிகம் எட்டாம் பாடலில் (1 : 17 : 8) வரும் 'குணநாமம்' என்ற சொற்றொடர் அழுத செயல் பற்றி இராவணன் என்று பெயர் தந்தருளிய வரலாற்றைக் குறிப்பால் உணர்த்துகின்றது. இராவணனைப் பற்றிய செய்தியில் அவனுக்கு அப்பெயர் வந்த நிகழ்ச்சியைச் சுட்டுவது பொருத்தமேயாகும்.

பிற்காலத்தில் வாழ்ந்த சுந்தரர், மாணிக்க வாசகர் முதலியவர்கள் இராவணனைப் பற்றிய இச்செய்திக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துத் தங்கள் பாடல்களில் குறிப்பிடவில்லை. திருஞானசம்பந்தரும், அவர் காலத்தில் வாழ்ந்த திருநாவுக்கரசருமே இச்செய்தியைக் குறிப்பிடுகின்றனர். திருஞானசம்பந்தர் இச்செய்தியை எட்டாம் பாடலில் கூறத் திருநாவுக்கரசர் இதனைப் பதிக இறுதிப் பாடலில் கூறுகின்றார். திருநாவுக்கரசர் இச்செய்தியைக் கூறுவதற்கான காரணங்கள் சில :

1. இராவணன் கைலைமலையைப் பெயர்த்தபொழுது இறைவன் காற் பெருவிரலால் அழுத்த, வலி பொறுக்க முடியாமல் இராவணன் அலறியபொழுது கைலைமலையில் தவம் செய்து கொண்டிருந்த வாகீச முனிவர் 'இறைவன் சாமகானப் பிரியன்' என்று ஒர் உபாயத்தைக் கூறினார். அதைக் கேட்ட இராவணன் அவ்விசையைப் பாடி உயிர்பிழைத்தான். இராவணனுக்கு உபாயம் கூறிய காரணத்தினால் வாகீச முனிவரே மருள் நீக்கியாராக (திருநாவுக்கரசர்) இப்பிறவியில் பிறந்தார். முற்பிறவியின் தொடர்பு காரணமாகவே திருநாவுக்கரசர் பதிகந்தோறும் இச்செய்தியைக் குறிப்பிடுகின்றார் என்பர்[25].

2. கைலைமலையைப் பெயர்த்தபொழுது இராவணன் எவ்வாறு துன்புற்றானோ, அதுபோலத் திருநாவுக்கரசர் சூலைநோயின் கொடுமைக்கு ஆளானார் என்றும், 'கூற்றாயினவாறு' எனத் தொடங்கும் முதல் பதிகத்தில் ஒன்பது பாடல்கள் பாடியும் இறைவன் அருளாது பத்தாவது பாடலில், இராவணனை அடர்த்து அருள் செய்த நீர் எனக்கு அருளவில்லையே என்று பாடியபொழுதே அவருக்கு ஏற்பட்ட நோய் நீங்கிற்று என்றும் கூறுவர். எனவேதான் அவர் பதிகந்தோறும் இறுதிப்பாடலில் அவனைப்பற்றிக் கூறுகின்றார்.[26]

3. "இராவணன், கைலைமலையைப் பெயர்க்கத் துணிந்த போது, 'தன் அடியான் தவறு செய்கின்றானே' எனத் திருவுளங் கொண்டு, அவன் தவற்றைத் திருத்தும் முகமாகத் தன் காற்பெருவிரலால் அழுத்திக் ஆட்கொண்டார். அதுபோல அப்பரும் (திருநாவுக்கரசரும்), தமக்குரிய சைவசமய நிலையினை விட்டு சமணசமயம் புகுந்தது கண்ட இறைவனும், 'தன் அடியான் தவறு செய்கின்றானே' என்றெண்ணிச் சூலைநோய் கொடுத்து ஆட்கொண்டான். இந்த நன்றியறிதலைக் காட்டுமுகத்தான் திருநாவுக்கரசர், இராவணன் நிகழ்ச்சியைப் பதிகந்தோறும் இறுதிப்பாடலில் கூறினார்".[27]

திருஞானசம்பந்தர், தம் பதிகங்களில் இராவணன் பற்றிய செய்தியைக் கூறுவதற்கு அவரது காலச்சூழலே காரணம் ஆகலாம். திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் வாழ்ந்த காலப்பகுதி பல்லவர் காலத் தொடக்கமாகும். இக்காலத்தில்தான் தமிழ்நாட்டில் பல்லவப் பேரரசு, பாண்டியப்பேரரசு என இரு பேரரசுகள் தோன்றின. புதிதாகப் பேரரசு கண்டு வாழ்பவர்கள் இராவணன் போலச் செருக்குறுவது இயல்பு. மேலும் இருபேரரசுகளையும் ஆட்சிபுரிந்தவர்கள் சமணசமயத்தவர்கள். அம்மன்னர்கள் சைவ மறுமலர்ச்சியை எதிர்க்கலாம். அவர்கள் அவ்வாறு எதிர்த்தால் இராவணன் போலத் துன்பமடைய நேரிடும் என்பதையே திருஞானசம்பந்தர் சுட்டுகிறார்.[28]

திருமாலும் பிரமனும் சிவபெருமானின் அடிமுடி தேடிய செய்தியால் சிவன் மும்மூர்த்திகளிலும் உயர்ந்தவர் எனக் கூறுவர். குப்தர் காலத்தில் உருவாகிய பௌராணிக சமயம் கடவுளை மும்மூர்த்திகளாக அமைத்து வழிபட்டது. பல்லவர் காலத்தில் சைவ சமய எழுச்சியுடன், வைணவ சமய எழுச்சியும் நிகழ்ந்தது. திரிமூர்த்தி வழிபாட்டைத் தொடர்ந்து, ஹரிஹர மூர்த்தி வழிபாடு ஏற்பட்டது. ஒரே உருவச் சிலையில், சிவனையும் திருமாலையும் அமைத்து இருவரையும் வணங்குதலே இவ்வழிபாடு. சைவத்தை நிலைநிறுத்த வந்த திருஞானசம்பந்தருக்கு வைணவத்திலும் சைவத்தை உயர்த்திக் காட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பல்லவ மன்னனான மகேந்திரவர்மன் மண்டகப்பட்டு என்னும் ஊரில் தான் அமைத்த முதற்குகைக்கோவிலில் மும்மூர்த்திகளுக்கும் சமமான இடம் அளித்திருக்கிறான். இப்போக்கைத் தடுத்து நிறுத்திச் சைவத்திற்கு ஏற்றம் கொடுக்கத் திருஞானசம்பந்தர் சிவனை உயர்த்திக் கூறுகிறார் என்பார் ஆ.வேலுப்பிள்ளை[29].

திருஞானசம்பந்தர் பத்தாம் பாடலில் சமண, பௌத்த மதத்தாரின் குற்றங்களைக் கண்டித்துக் கூறுகிறார். இவருடைய நோக்கம் புறச்சமய ஒழிப்பன்று; அவர்தம் கொள்கைகளில் உள்ள குறைகளைச் சுட்டித் திருத்துவதே ஆகும் எனலாம்.

*"குண்டாடு குற்றுடுக்கைச் சமணரொடு*
*சாக்கியருங் குணமொன்றில்லா*
*மிண்டொடு மிண்டருரை கேளாதே"(1: 130: 10)*

*"குண்டர் தம்மொடு சாக்கியர் சமணருங்*
*குறியினி னெறிநில்லா*
*மிண்டர் மிண்டுரை கேட்டவை மெய்யெனக்*
*கொள்ளன்மின்"(2: 240: 10)*

என்று திருஞானசம்பந்தர் புறச்சமயத்தாரின் உரையைக் கேட்கவேண்டாம் என்றும், அவற்றை உண்மை எனக் கொள்ள வேண்டாம் என்றும் மக்களுக்கு அறிவுறுத்துகிறார். அம்மதங்கள் கடவுள் நம்பிக்கை அற்றவை. இவருடைய நோக்கமோ மக்களிடையே கடவுள் நம்பிக்கையை ஊட்ட வேண்டும் என்பதாகும். எனவே அவ்வாறு கூறுகிறார். மேலும் திருஞானசம்பந்தர் மக்களைச் சமணர், பௌத்தர் உரைகளைக் கேட்க வேண்டாம் என்றதனால் அம்மதத்தார் தங்கள் கொள்கைகளை மக்களிடையே பரப்பி வந்தது தெரிய வருகின்றது. அம்மதத்தாரின் வாதத்திறமையே பின்னால் சைவ சித்தாந்தம் தோன்றுவதற்குக் காரணமாயிற்று எனலாம்.

சிவனையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு பாடிய திருஞானசம்பந்தர் வேறு தெய்வங்களைச் சில இடங்களில் கூற நேரிடும் பொழுதும் சிவனோடு சேர்த்தே பாடிய அவர், தன்னுடைய பதிகத்தின் பத்தாம் பாடலில் புறச்சமயம் பற்றிக் கூறியிருப்பதற்குப் பின்வரும் இரு காரணங்களைக் கூறலாம் :

1. புறச்சமயங்கள் தத்தம் அளவில் நில்லாமல் வேத வேள்வியை நிந்தனை செய்வதைக் கண்டிக்க
2. சைவ சமயத்தை நிலைநாட்ட,

*"வேத வேள்வியை நிந்தனை செய்துழல்*
*ஆத மில்லியம் னொடு தேரர்" (3: 366: 1)*

என்று திருஞானசம்பந்தர் புறச்சமயத்தார் வேதவேள்வியை நிந்தனை செய்வதைத் தம் பாடலில் குறிப்பிடுவதும்,

*"சைவனே*

*ஞாலநின்புக ழேமிக வேண்டும்"(3:366:7)*

என்று குறிப்பிடுவதும் இங்கு நினைவுகூரத்தக்கன.

சைவ சித்தாந்த சாத்திர நூல்களில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் மட்டும் கூறப்படாமல், பிற சமய வாதமும் நிராகரிப்பும் காணப்படுவதற்குத் திருஞானசம்பந்தரே வழிகாட்டியாக அமைகிறார் எனலாம்.

பதிக இறுதிப் பாடலில் பதிகப் பயன் கூறப்பட்டிருப்பதற்குரிய காரணம் சிந்திப்பதற்குரியது. அவர் காலத்திலுள்ள சமணமும், பௌத்தமும் கடவுள் நம்பிக்கை இல்லாதவை. வினைக் கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுப்பவை. எனவே அக்கால மக்களிடையே முதலில் கடவுள் நம்பிக்கையை ஊட்ட வேண்டியது திருஞான சம்பந்தருக்கு அவசியமாகியது. ஏதேனும் ஒரு பயன் கருதியே மக்கள் செயலாற்றுவர் என்ற உளவியல் கருத்தைத் தழுவி, தம் பதிகத்தைப் படிப்பதாலும், அப்பதிகம் பாடப்பட்ட தலத்து இறைவனை வழிபடுவதாலும் பெறும் பயனை வலியுறுத்திருக்கிறார் எனலாம்.

திருஞானசம்பந்தர் பதிகப் பயன் பாடியது தற்புகழ்ச்சி ஆகாதா எனத் தற்கால மக்கள் சிலர் வினவுவர். தற்புகழ்ச்சி அன்று என்பதற்குப் பின்வரும் காரணங்களைக்கூறலாம்.

1. தம் காலத்தில் இறைநம்பிக்கை குன்றியிருந்த மக்களை பயன் கருதியாவது இறைவனை வழிபடச் செய்து சைவ சமயத்தைப் பரப்ப அவ்வாறு பாடினார் எனலாம்.
2. மேலும் திருஞானசம்பந்தர் தாம் கூறுவனவற்றைத் தம் முயற்சியால் கூறுவதாக நினைக்கவில்லை. இறைவன் உள்நின்று உணர்த்துவதால் தம்முடைய வாக்கை இறைவாக்காகவே கருதியதாலும் (1: 76:1-10) இறைவாக்கு

வினைகளை அழிக்கும் ஆற்றல் உடையது என்ற நம்பிக்கையாலும் அவ்வாறு பதிகப் பயன் பற்றிக் கூறுகிறார் எனலாம்.

அவருக்கு முன்னோடியான காரைக்கால் அம்மையாரும் தம் மூத்த திருப்பதிகத்திலும், தம் திருவாலங்காட்டு மூத்த திருப்பதி-கத்திலும் பதிகப் பயனைப் பாடியுள்ளது இங்கு நினைவுகூரத்தக்கது.

இதே போன்று பாடலின் பெருமையைக் கூறும் மரபு வடமொழி இலக்கியத்திலும் உள்ளது. இது வடமொழிமரபில் 'பலசுருதி' எனக் கூறப்படும்.[30]

## 3.2.2.2. ஒருமைப்பாட்டில் தத்துவம் :

திருஞானசம்பந்தர் பதிகத்தின் இறுதி நான்கு பாடல்களில் உள்ள செய்திகள் சில குறிப்பிட்ட தத்துவங்களை விளக்குகின்றன.

### *3.2.2.2.1. இராவணன் செய்தி உணர்த்தும் தத்துவம் :*

உயிர்கள் சிற்றறிவுடையன; அறியாமையால் குற்றங்கள் செய்யலாம். செய்த குற்றத்தை உணர்ந்து வருந்தி இறைவனை மனம் உருகி வழிபட்டால், அவர்களை ஆட்கொள்ளும் கருணையுள்ளம் படைத்தவன் அவன் என்பதை இராவணன் செய்தி உணர்த்துவதாகச் சேக்கிர் கூறுகிறார்[31]

இராவண்ன் சிறந்த சிவபக்தன்; அவன் தவறு செய்த பொழுது தன் பக்தன் என்றும் பாராமல் இறைவன் அவனைத் தண்டிக்கிறான். இது இறைவனது நீதி வழுவாத் தன்மையைக் காட்டும் எனலாம். தன் தோழரான சுந்தரர் சத்தியத்திலிருந்து தவறியதற்கு ஒரு கண் பார்வையை இழக்கும்படிச் செய்தது இங்கு நினைவு கூரத்தக்கது.

மெய்கண்ட தேவர் ஆணவத்தின் இலக்கணம் யாது என்று தம்மைச் செருக்குடன் கேட்ட சகலாகம பண்டிதருக்கு, அவரையே விரலால் சுட்டிக்காட்டி அதற்குரிய விடையாகக் கூறியதுபோல,

திருஞானசம்பந்தும் ஆணவத்தின் இயல்பை விவரித்துக் கூறாமல், இராவணனையே அதற்கு ஓர் உருவகமாகக் கூறினார் எனலாம்.

**3.2.2.2.2.** *திருமாலும் பிரமனும் அடிமுடி தேடிய நிகழ்ச்சி உணர்த்தும் தத்துவம் :*

திருமாலும் பிரமனும் தன்னுடைய அடியையும் முடியையும் காணமுடியாமல் இறைவன் சோதிவடிவாய் நின்றதாய்க் கூறப்படும் நிகழ்ச்சியானது' உருவம் உடைய இறைவன் உருவத்தைக் கடந்த நிலையிலும் இருக்கின்றான் என்ற சைவசித்தாந்தக் கோட்பாட்டினை உணர்த்துகின்றது.

வடிவம் படைத்த பகுதி, வடிவத்திற்கு அப்பால் உள்ளதை அறிந்து கொள்ள முடியாது என்ற தத்துவத்தை உணர்த்துகின்றது[32]

திருமாலும் பிரமனும் தாமே தலைவர் என்று தருக்குக் கொண்ட காரணத்தால் இறைவனை உணர முடியவில்லை. தான் என்ற தன்முனைப்பே ஆணவம் என்று கூறப்படுகின்றது. எனவே இறைவனை உணர வெட்டாமல் தடுப்பது ஆணவம் என்ற சைவ சித்தாந்தக் கோட்பாடு இதனால் உணர்த்தப்படுகின்றது.

"அடிகாணுதல் என்பது சிவனது ஆற்றலை அறிதல். முடிகாணுதல் என்பது சிவஞானத்தை உணர்தல். இவை இரண்டும் ஆணவமுடையார்க்கு இயலாதென்பது இதனால் போதரும் உண்மை யாகும். கீழே அகழ்ந்து அகழ்ந்து தேடுவதென்பது அறிவாராய்ச்சி. மேலேமேலே பறப்பதென்று ஆணவம். அறிவும் ஆணவமும் காணமாட்டாத இறைவனை அன்பினாலேதான் காணமுடியும்"[33] உயிர்கள் பசுஞானத்தாலோ, பாசஞானத்தாலோ இறைவனைக் காணமுடியாது. பதிஞானத்தாலேயே காண முடியும் என்று சைவ சித்தாந்தக் கோட்பாட்டினை இது உணர்த்துகின்றது.

திருமாலும் பிரமனும் அடிமுடி தேடிய நிகழ்ச்சி இவ்வாறு பல சித்தாந்தக் கோட்பாடுகளை விளக்குவதற்கு அடிப்படையாய் அமைகின்ற காரணத்தால் சைவ சித்தாந்த சாத்திரநூல்கள் பலவற்றுள் இந்நிகழ்ச்சி சுட்டப்படுகிறது[34] எனலாம்.

**3.2.2.2.3.** *புறச்சமயச் செய்தி உணர்த்துவது :*

உயிர்களிடத்துள்ள மலம் நீங்க வேண்டுமானால் கடவுள் நம்பிக்கை கொண்ட அடியார்களின் கூட்டுறவு தேவை என்ற சைவசித்தாந்தக் கருத்து, குற்றங்களை உடைய புறச்சமயத்தாரின் கூட்டுறவு தவிர்க்கப்பட வேண்டும் என்பதன் மூலம் உணர்த்தப் படுகின்றது எனலாம்.

**3.2.2.2.4.** *பதிகப் பயன் உணர்த்துவது :*

பதிக இறுதிப்பாடல் ஆலயத்தை அரன் எனத் தொழுதல், தொழுவதால் உண்டாகும் பயன் ஆகிய செய்திகளை உணர்த்து கின்றது.

**3.2.2.2.5.** பதிக இறுதி நான்கு பாடல்களின் தொடர் இயைபு:

திருஞானசம்பந்தரின் பதிக இறுதி நான்கு பாடல்கள் உணர்த்தும் தத்துவக் கருத்துக்களில் தொடர் இயைபு காணப்படு கின்றது.

இராவணன் செய்தி உணர்த்தும் எட்டாம் பாடல் கடவுள் வழிபாட்டின் இன்றியமையாமையையும், பயனையும் அறிவுறுத்தும் திருக்குறிப்புடன் இறைவனின் பேரருள் திறத்தினை விளக்குவதால் அது பதியின் சிறப்பியல்பு உணர்த்துகின்றது. அடிமுடி தேடிய செய்தி கூறும் ஒன்பதாம் பாடல், திருமால் பிரமன் இவர்களின் ஆணவ மலத்தையும், அதன் கேட்டினையும் விளக்கி, அம்மலமும் அக்கேடும் ஒழிதற்கும், பேரின்பப் பெருவாழ்வு பெறுவதற்கும் கடவுள் வழிபாடு இன்றியமையாதது என்பதைக் கூறுவதால் அது பாச இயல்பு உணர்த்து கின்றது. பத்தாம் பாடல் சமண பௌத்தக் கொள்கை தவறுடையது என்பதை விளக்குவதன் மூலம் பாசப் பிணிப்புடைய உயிர்கள் கடவுளது திருவருளின்றித்தாமே எவ்வாற்றானும் உய்தி கூடுதல் இல்லை என்பதை உணர்த்துகின்றது. எனவே தலைவனை இன்றியமையாத உயிரியல்பு விளக்கப்படுகின்றது. மூன்று பாட்டினுள்ளும் முப்பொருளின் உண்மையும், தன்மையும், கடவுள் வழிபாடாகிய சாதனமும் உணர்த்தப்படுகின்றன. இறுதிப்பாடலில்

திருஞானசம்பந்தர் வழிபாட்டின் பயனைத் தம்அனுபவத்தில் வைத்து உரைக்கின்றார். இவ்வாறு இறுதி நான்கு பாட்டினுள்ளும் சிவஞானபோதத்துள் கூறப்படும் பிரமாண இயல், இலக்கண இயல், சாதன இயல், பயன் இயல் என்ற நான்கு இயல் பொருட்களும் கூறப்படுகின்றன என்பார் கா.சுப்பிரமணியபிள்ளை[35]

"ஆணவ மலத்தைக் குறிக்க இராவணனைப் பற்றியும், காமிய சொரூபத்தைப் புலப்படுத்தத் திருமால், பிரமன் இவர்களையும், மாயையின் தன்மையைக் காட்டச் சமண பௌத்தர்களையும், முறையே எட்டு, ஒன்பது,பத்தாம் பாடல்களில் திருஞானசம்பந்தர் தம் பதிகத்தில் அமைத்தார் எனலாம். இவ்வாறு முக்தி பெறுவதற்குக் கழுவ வேண்டிய மும்மலங்களின் உருவகங்களை எட்டு, ஒன்பது, பத்தாம் பாடல்களில் உணர்த்தி மும்மலங்கள் நீங்கி வீடுபேறு அடைதலை இறுதிப்பாடலில் உணர்த்துகின்றார்" என்பர்[36]

இராவணனை ஆணவமாக உருவகப்படுத்தி, இறைவனை உணரவொட்டாமல் தடுப்பது ஆணவம் என்ற உண்மையை முதலில் கூறுகிறார். இறைவனைப் பாசஞானத்தாலோ, பசுஞானத்தாலோ ஆராயமுடியாது; பதிஞானத்தாலேயே காணமுடியும் என அடுத்த பாடலில் கூறுகிறார். பதிஞானத்தால் இறைவனை உணர்ந்தாலும், வீடு பேறு அடையும் வரையில் அதிலேயே நிலைத்து நிற்க வேண்டுமானால், கடவுள் நம்பிக்கையற்ற புறச்சமயத்தாரின் கூட்டுறவை விலக்க வேண்டும் என்பதை அதற்கடுத்த பாடலில் கூறுகிறார். அவ்வாறு விலக்கினால் மட்டும் போதாது, அடியார் கூட்டத்துடன் கலந்து, ஆலயத்திலுள்ள இறைவனை வணங்கி அவன் புகழைப்பாடுவதால் வினைநீங்கி வீடுபேறு அடையலாம் என அடுத்துக் கூறுகிறார். இது சிவஞானபோதம் பன்னிரண்டாம் சூத்திரக் கருத்தை நினைவுறுத்துகிறது எனலாம்.

### 3.2.3. பதிக அமைப்பில் வேறுபாடுகள் :

திருஞானசம்பந்தர் தேவாரப் பதிகங்களில் காணப்படும் பொருள் அமைப்பு முறை - எட்டாவது பாடலில் இராவணன் செய்தி

கூறப்படல், ஒன்பதாவது பாடலில் திருமாலும் பிரமனும் சிவனின் அடிமுடி தேடிய செய்தி கூறப்படல், பத்தாவது பாடலில் புறச்சமயச் செய்தி கூறப்படல், இறுதிப்பாடலில் பதிகப்பலன் கூறப்படல் சிற்சில பதிகங்களில் முறைமாறியும், கூறப்படாமலும் காணப்படுகின்றது.[37]

### 3.2.3.1. வேறுபாட்டிற்கான காரணங்கள் :

திருஞான சம்பந்தர் பதிக அமைப்பில் உள்ள ஒருமைப் பாட்டிலிருந்து வேறுபட்டுச் சில பதிகங்கள் காணப்படுவதற்குப் பின்வரும் காரணங்களைக் கூறுவார் சொ.சிங்காரவேலன்[38]

1. திருஞானசம்பந்தர் சில மாற்றங்களைத் தாமே ஒரு சில குறிப்புக்களால் அமைத்துப் பாடியிருக்கலாம்.
2. பதிகங்களைத் திருஞானசம்பந்தர் கூற அதனைப் பின்பற்றி எழுதி வருவோரது மனநிலைகளால் இவ் வேறுபாடு ஏற்பட்டிருக்கலாம்.
3. ஏடு பெயர்த்து எழுதுவோர் வழியாக இம்மாற்றம் ஏற்பட்டிருக்கலாம்.
4. மேலே கூறிய காரணங்கள் தவிரச் சில ஏடுகள் செல்லரித்துப் போனதும் காரணம் ஆகலாம்.

அகப்பொருள் மிக்க திருப்பிரம்மபுரப் பதிகம் (1 : 60) ஒன்றில் பாடல்கள் தோறும் இறைவனிடம் தூது அனுப்பும் செய்தியே கூறப்படுகின்றது. பதிகப்பலன் தவிர ஒருமைப்பாட்டுச் செய்தி ஒன்றுகூடக் கூறப்படவில்லை. இது இறைவன் மீது காதல் வயப்பட்ட உயிர் தன்னையும் தலைவனையும் தவிர வேறொன்றையும் உணராது என்ற குறிப்பைப் புலப்படுத்துகின்றது எனலாம். இதைப்போலத் திருப்பாற்றுறைப் பதிகத்தில் (1:56)தலைவியின் உள்ளத்தில் தலைவன் உருவன்றி வேறொன்றும் தோன்றாத நிலையில், ஊடியும், பிரிந்தும், நுகரும் இன்ப நிலைகள் கூறப்படுகின்றன. இப்பதிகத்தில் இராவணனை அடர்த்ததும், புறச்சமயிகளைப் பற்றிய குறிப்பும் இல்லை.

இராவணன் கைலைமலையின்கீழ் நசுக்கப்பட்ட செய்தி கூறப்படாமல் வாலியின் வாலினால் கட்டப்பட்ட செய்தி திருவடக்குரங்காடுதுறைப் பதிக்கத்தில் (3 : 349 : 8) கூறப்பட்டுள்ளது. திருவடகுரங்காடுதுறை வாலி வழிபட்ட தலம். எனவே வாலியோடு இணைந்த இராவணன் செய்தி கூறப்பட்டது எனலாம்.

### 3.2.4. பதிகங்களின் தொகுப்பு முறை :

திருஞான சம்பந்தர் திருப்பதிகங்கள் முழுவதும் தேவாரம் என்ற பெயரால் ஒருங்கே தொகுக்கப் பெற்ற இரு முறைகளில் வழங்கப்பட்டு வருகின்றன.[39] அவை :

1. பண்முறை அமைப்பு
2. தலமுறை அமைப்பு

### 3.2.4.1. பண்முறை அமைப்பு :

பண்முறை என்பது திருஞானசம்பந்தரின் திருப்பதிகங்களில் அமைந்த பண்களை வகைப்படுத்தி ஒவ்வொரு பண்ணுக்கும் உரிய திருப்பதிகங்களை வரிசையாக தொகுத்தது[40]

பண்முறை அமைப்பே பழைய ஏட்டுச் சுவடிகளில் இடம் பெற்றுள்ளது. திருஞானசம்பந்தர் தேவாரம் மூன்று திருமுறைகளாக வழங்கப்படும் திருமுறைப் பகுப்பிற்கு அடிப்படையாய் அமைந்தது இந்தப் பண்முறை அமைப்பே ஆகும்.

### 3.2.4.2. தலமுறை அமைப்பு :

தலமுறை என்பது 'கோயில் திருவேட்களம்' முதலாகத் திருப்பதிக் கோவையில் குறித்த முறையை ஒட்டித் தேவாரப்பாடல் பெற்ற திருத்தலங்களை எல்லாம் தில்லைப் பெருங்கோயில் முதலாக வரிசைப்படுத்தி, அவ்வத்தலங்களுக்கு உரிய தேவாரப் பதிகங்களை முறைப்படச் சேர்த்து அமைத்த முறையாகும்.[41]

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவற்றை முறையே கண்டு வழிபடும் விருப்பம் உடைய அன்பர்கள், தாம் வழிபட விரும்பிய ஒவ்வொரு தலத்திற்கும் அமைந்த தேவாரத் திருப்பதிகங்கள் முழுவதையும், நாள்தோறும் முறையே பாராயணம் செய்ததற்கு ஏற்ற வண்ணம் முறைப்படுத்தப் பெற்றதே இத்தலமுறைப் பகுப்பாகும்[42].

### 3.2.5. பொதுநெறிப் பதிகங்கள் :

திருஞானசம்பந்தர் திருப்பதிகங்களுள் ஒரு தலத்திற்கென்று உரிமையாக்கப் பெறாத தன்மை உடைய திருப்பதிகங்கள் சில உள்ளன. அவற்றைப் பொதுநெறிப் பதிகங்கள் என்று வழங்குவது மரபு. அவ்வாறு அமைந்த பதிகங்கள் ஏழாகும்.[43]

### 3.2.6. சித்தாந்த நோக்கில் சில பதிகங்கள் :

எல்லாப் பதிகங்களின் பாடல்களிலும் சைவசித்தாந்தக் கருத்துக்கள் விரவிக் காணப்பட்டாலும், சில பதிகங்கள் குறிப்பிட்ட சித்தாந்தப் பொருளை விளக்கும் முறையில் அமைந்துள்ளன.

திருஎழுகூற்றிருக்கைப் பதிகம் (1:128) இறைவனுடைய இலக்கணங்கள் பலவற்றை எடுத்துக் கூறுகின்றது. "திருமுறையின் பிழிவே சிவநெறிக் கொள்கைகள் என்ற கருத்தைச் செயற்படுத்திக் காட்டிய பகுதியே திருஎழுகூற்றிருக்கை" ஆகும்.[44]

திருப்பிரமபுரம் பதிகத்தில் (2:201) இறைவனின் சொருபலக்கணம் கூறப்படுகின்றது.

இறைவனுடைய வீரம் முதலிய இயல்புகளை எடுத்துக் கூறும் பதிகம் திருவிடைச்சுரப் பதிகம் (1 : 78) ஆகும்.

இறைவனின் திருவருட் சிறப்பை உணர்த்தும் பதிகம் திருநெல்வாயிலரத்துறைப் பதிகம் (2 : 226) ஆகும்.

திருந்து தேவன்குடிப்பதிகம் (3 : 283) அடிகள் வேடத்தின் பெருமையைக் கூறும். திருப்புறவார் பனங்காட்டூர்ப் பதிகம் (2 : 189) பாடல் இறுதிதோறும் அருளாயே என முடிவதால் அதனை அடியார்க்கு அருளாய் என வேண்டும் பதிகம் எனலாம். "பண்ணினேர் மொழி" எனத்தொடங்கும் சீகாழிப் பதிகத்தை (2 : 185 : 1) அடியார் பெறும் பயன்கூறும் பதிகம் எனலாம்.

திருவாலவாய்ப் பதிகம் (2:202) திருநீற்றின் சிறப்பை உரைக்கும். "துஞ்சலும் துஞ்சலிலாத" எனத் தொடங்கும் பதிகமும் (3:280), "காதலாகிக் கசிந்து" எனத் தொடங்கும் பதிகமும் (3:307) திருவைந்தெழுத்தின் பெருமையை விளக்குவன ஆகும். திருவாப்பனூர்ப்பதிகம் (1:88) பாடல் இறுதிதோறும் 'வினை பற்றறுப்பாரே' என முடிகின்றது. 'அவ்வினைக் கிவ்வினை' எனத் தொடங்கும் திருநீலகண்டப் பதிகப்பாடல்கள் (1:116) 'தீவினை தீண்டப் பெறாத் திருநீலகண்டம்' என முடிகின்றன. எனவே இவைகளை வினைநீக்கும் பதிகங்கள் எனலாம்.

முடிவுகள் :

1. நம்பியாண்டார் நம்பி தொகுத்த திருமுறைகள் ஏழாகும்.
2. திருமுறைத் தொகுப்பில் ஆசிரியர் வாரியாகவோ, தலங்கள் வாரியாகவோ, கால வரிசையிலோ ஓர் ஒழுங்கு காணப்படாமைக்கு முதல் ஏழினையும், நம்பியாண்டார் நம்பி தொகுக்க, பின்வந்தோர் பிறவற்றைத் தொகுத்தது காரணம் ஆகலாம்.
3. திருஞானசம்பந்தர் பாடல்கள் பன்னிரு திருமுறைத் தொகுப்பில் முதலில் அமைந்திருப்பதன் காரணங்கள் கூறப்பட்டன. சாதிவேறுபாடுகள் மிகுந்திருந்த அக்காலத்தில் திருஞானசம்பந்தர் பாடல்கள் முதலில் அமைக்கப் பெற்றமைக்கு அவர் பிராமணராயிருந்ததும் ஒரு காரணம் ஆகலாம்.

4. திருஞானசம்பந்தர் பாடல்கள் எண்ணிக்கை மிகுதியான காரணத்தினால் பன்முறை அமைப்பை ஒட்டி மூன்று திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன.

5. திருஞானசம்பந்தர் தம் பதிகங்களில் இராவணனை ஆணவத்தின் அடையாளமாகக் காட்டுகின்றார்.

6. சைவசித்தாந்த சாத்திர நூல்களில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் மட்டும் கூறப்படாமல், பிற சமயவாதமும், நிராகரிப்பும் காணப்படுவதற்குத் திருஞானசம்பந்தர் சிவனையே முழுமுதற் கடவுளாகப் பாடும் தம் நூலில் புறச்சமயம் பற்றிக் கூறியிருப்பது வழிகாட்டியாக உள்ளது எனலாம்.

7. பதிக இறுதி நான்கு பாடல்களில் கூறப்படும் செய்திகள் சில தத்துவக் கோட்பாடுகளை விளக்குகின்றன.

8. பதிக இறுதி நான்கு பாடல்களின் கருத்துக்கள் இணைந்து சிவஞானபோதம் பன்னிரண்டாம் சூத்திரக் கருத்திற்கு விளக்கம்போல் அமைந்துள்ளது.

9. பயன்கருதிச் செயலாற்றும் மக்களின் உளவியல் பண்பைத் தழுவித் தம்கால மக்களிடையே கடவுள் நம்பிக்கையை ஊட்டுவதற்காகப் பதிகப்பயன் கூறுகிறார்.

## குறிப்புக்கள்

1. 'திரு' என்ற சொல் செல்வம், இறை, அழகு, ஒளி, பொலிவு, தெய்வத்தன்மை, நல்வினை போன்ற பல பொருள்களைக் கொண்டுள்ளது.

– Tamil Lexicon - Vol.III, P.1896.

2. 'முறை' என்ற சொல் ஒழுங்கு, ஒழுக்கம், உறவு, கூட்டு, நன்மை, நூல் போன்ற பொருள்களைக் கொண்டுள்ளது.

- Tamil Lexicon - Vol.VI. P.3299

3. ச.வே.சுப்பிரமணியன், 'முதல் மூன்று திருமுறைகள்' தெய்வத்தமிழ், ப.2.
4. பின்னிணைப்பு எண். 4.
5. உமாபதிசிவம், திருமுறை கண்ட புராணம், 27.
6. க.வெள்ளைவாரணன், பன்னிரு திருமுறை வரலாறு முதற்பகுதி, ப.31.
7. மா.இராசமாணிக்கனார், பெரியபுராண ஆராய்ச்சி, பக்.69-70.
8. மேலது ப.10.

8அ. மு.அருணாசலம், ஒன்பதாம் திருமுறை பாவும் பயின்ற நிலையும், பக் 9-11.

9. மறைமலையடிகள், மாணிக்கவாசகர் வரலாறும் காலமும், பகுதி 2, பக். 824-829.
10. க.வெள்ளைவாரணன், மு.நூல்., ப.27.
11. "He (Thirugnana Campantar) must be said to have been a camucittar ie, one who had completed the courses of Cariya, Kiriya and Yokam in the previous births and started the course of gnanam as soon as he was born again."
    – P.Soundra, A study of St. Thirugnana Campantar, P.14.
12. Ibid, P.15.
13. Ibid.
14. Ibid, P.16.
15. சிவஞானசித்தியார் சுபக்கம், 270
16. பின்னிணைப்பு எண் 5.
17. நம்பியாண்டார் நம்பி, ஆளுடையபிள்ளையார் திருவுலாமாலை, கண்ணி 61.
18. நம்பியாண்டார் நம்பி, ஆளுடையபிள்ளையார் திருத்தொகை, 22.

19. உமாபதி சிவம், திருமுறை கண்ட புராணம், 14.
20. மேலது, 25.
21. பின்னிணைப்பு எண் 6.
22. பின்னிணைப்பு எண் 7.
23. சேக்கிழார், திருஞானசம்பந்தர் புராணம், 80.
24. வை.இரத்தினசபாபதி, திருஞானசம்பந்தர் - ஓர் ஆய்வு, ப.32.
25. கு.நடேச கவுண்டர், அப்பர் வரலாற்றாராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும், ப. 116.
26. ம.சா. அறிவுடை நம்பி, திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படும் இலக்கியக் கொள்கைகள் (மதுரை காமராசர் பல்கலைக்கழக பிஎச்.டி. பட்டத்திற்காக அளிக்கப்பட்ட ஆய்வேடு, 1981), ப. 262.
27. மேலது, ப.263.
28. ஆ.வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், பு.83.
29. மேலது, ப.84.
30. கோ.சுந்தரமூர்த்தி, சைவசமயம், ப.100.
31. சேக்கிழார், திருஞானசம்பந்தர் புராணம், 77.
32. சுவாமி சித்பவானந்தா, சிவதத்துவம், பக், 50-51.
33. ச.சவகர்லால், தேவாரத்தில் தொன்மைக் கூறுகள் (மதுரை காமராசர் பல்கலைக்கழக பிஎச்.டி. பட்டத்திற்காக அளிக்கப்பட்ட ஆய்வேடு, 1981), ப.62.
34. (I) போற்றிப்பஃறொடை, கண்ணி 1-3.
    (II) நெஞ்சுவிடு தூது, கண்ணி 1-2.
35. கா.சுப்பிரமணிய பிள்ளை, திருஞானசம்பந்தர் சரித்திரம், பக். 43-46.

36. நெ.தணிகாசல முதலியார், "திருஞானசம்பந்தரின் பதிக அமைப்பு" சித்தாந்தம், மலர் 6, இதழ் 9, செப்டம்பர் 1933, ப.210.

37. பின்னிணைப்பு எண் 8.

38. சொ.சிங்காரவேலன், திருஞானசம்பந்தர் வரலாற்றா-ராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும், ப.74.

39. க.வெள்ளைவாரணன், மு.நூல்., ப.310.

40. மேலது.

41. மேலது.

42. மேலது, ப.311.

43. திருஞான : 1:116, 2:175, 2:221, 3:280, 3:293, 3:307, 3:312.

44. வை.இரத்தினசபாபதி, திருமுறைத் தெளிவே சிவஞானபோதம், ப.105.

# 4. சைவசித்தாந்த நூல்கள் - ஓர் அறிமுகம்

# 4.சைவ சித்தாந்த நூல்கள் ஓர் அறிமுகம்

## 4.0. முன்னுரை :

இவ்வியல் சைவ சித்தாந்தத்தைப் பற்றிய அறிமுகச் செய்திகளைக் கூறுகிற முறையிலும், சைவசித்தாந்த சாத்திர நூல்களின் தோற்றம், அவற்றின் அமைப்பு, பொருளமைதி ஆகியவற்றை ஆராய்கின்ற முறையிலும் அமைந்துள்ளது.

சைவ சமயம் என்பது மிகத் தொன்மை வாய்ந்த சமயம் ஆகும். இதன் முழு முதற் கடவுள் சிவன் எனப்படுவார். சிவ வழிபாடானது சிந்து சமவெளி நாகரிக காலத்திலிருந்தே உள்ளது. சங்கநூல்களிலும், சங்கம் மருவிய நூல்களிலும், சிவன் என்ற சொல் காணப்படாவிடினும், சிவனைப் பற்றிய குறிப்புக்கள் பல காணப்படுகின்றன. சைவ சமயத் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி மா.இராசமாணிக்கனார், டி.பி.சித்தலிங்கையா முதலியோர் நூல்கள் எழுதி உள்ளனர்.[1]

சைவம் என்னும் சொல் முதன்முதல் மணிமேகலையில் காணப்படுகின்றது. சைவசமயக் கருத்துக்கள் சைவவாதியின் கூற்றாக மணிமேகலையிடம் கூறப்படுகின்றன.[2] சைவசமயக் கொள்கையானது திருஞானசம்பந்தர் காலத்திற்கும் மிக முற்பட்டு வழங்கியதாகும். பன்னிருதிருமுறை ஆசிரியர்களுள் திருமூலரும், காரைக்காலம்மையாரும் திருஞானசம்பந்தருக்குக் காலத்தால் முற்பட்டவர்கள் ஆவர். திருமூலர் எழுதிய திருமந்திரத்தில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் மிகுதியாக உள்ளன. சைவசித்தாந்தத் தத்துவக் கலைச்சொற்களும் கையாளப்பட்டுள்ளன. காரைக் காலம்மையார் நூல்களிலும் சைவசித்தாந்தக் கருப்பொருட்கள் உள்ளன.[3] இத்தகைய தொன்மை வாய்ந்த சைவசமத்தில், அச்சமய அநுபவ நூல்களிலிருந்து அச்சமயக் கோட்பாடுகளைப் பற்றிப் பிற்காலத்தில் எழுந்த நூல்கள் சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் அல்லது மெய்கண்ட சாத்திர நூல்கள் என்ற பெயரால்

வழங்கப்படுகின்றன. அவற்றைப் பற்றிய அறிமுகச் செய்திகளைக் கூறுவது இவ்வியலின் நோக்கமாகும்.

## 4.1. சைவசித்தாந்தம் :

சைவசித்தாந்தம் என்ற சொல் முதன்முதல் திருமந்திரத்தில்தான் காணப்படுகின்றது[4]. "சைவம் என்றது சிவம் என்னுஞ் செந்தமிழ்ச் சொல்லடியாய்ப் பிறந்து சிவனோடு தொடர்புடைமை என்னும் பொருளில் வழங்குவது. சிவனைப் பற்றிய நிலையையும், சைவ நூல்களையும், சிவனடி சேர்தற்குரிய நெறியையும் அச்சொல் குறிக்கும். சித்தாந்தம் என்பது சித்த + அந்தம் என்ற இரு சொற்களால் ஆகி முடிபின் முடிபு என்று பொருள்பெறும்"[5]. சைவ நூல்களின் முடிந்த முடிபைக் கூறும் நூல்கள் சைவ சித்தாந்த நூல்கள் எனப்படும்.

## 4.2. சைவசித்தாந்த நூல்கள் :

சைவசித்தாந்த நூல்களைப் பற்றிய தெளிவான குறிப்புக்கள் பழைய ஏட்டுச்சுவடிகளில் காணப்படவில்லை. 1866-இல் மதுரை நாயகம்பிள்ளை என்பவர் சித்தாந்த சாத்திர மூலங்களை முதன்முதலில் அச்சிட்டார்.[6] இவர் தமது சிவஞானபோத மூலப்பதிப்பின் முகவுரையில் நூல் வரலாறு, நூற்சிறப்பு, நூற்கருத்து, நூற்பாடற்றொகை, சூரணித்தொகை என்பனவற்றைக் கூறிப்பின், "சைவ சாத்திரம் பதினான்கையும் உணர்த்தும் வெண்பா"[7] என்ற தலைப்பில் ஒரு வெண்பா தந்துள்ளார். அவ்வெண்பா மூலம் தெரியவரும் பதினான்கு சாத்திர நூல்கள் பின்வருமாறு :

1. திருவுந்தியார்
2. திருக்களிற்றுப்படியார்
3. சிவஞானபோதம்
4. சிவஞானசித்தியார்
5. இருபா இருபஃது
6. உண்மை விளக்கம்
7. சிவப்பிரகாசம்
8. திருவருட்பயன்

9. வினா வெண்பா
10. போற்றிப்பஃறொடை
11. கொடிக்கவி
12. நெஞ்சுவிடுதூது
13. உண்மைநெறி விளக்கம்
14. சங்கற்ப நிராகரணம்

எனவே சைவசித்தாந்த நூல்கள் பதினான்கு என வழங்கும் வழக்கம் மதுரை நாயகம் பிள்ளை காலத்தில்தான் ஏற்பட்டிருக்க வேண்டுமென்று கொள்ள இடமுண்டு.

***4.2.1.*** இப்பதினான்கு சாத்திர நூல்களுக்கு முன் தமிழில் உள்ள சாத்திர நூல்கள் திருமந்திரமும், ஞானாமிர்தமும் ஆகும். சாத்திர நூல்களில் கூறப்படும் கருத்துக்கள் அனைத்தும் திருமந்திரத்தில் உள்ளன. ஆனால் திருமந்திரம் சாத்திரநூல் வரிசையில் சேர்க்கப் படவில்லை. அவ்வாறு சேர்க்கப்படாததற்குப் பின்வரும் இரு காரணங் களைக் கூறலாம்.

1. திருமந்திரத்தில் சாத்திரக் கருத்துக்கள் மட்டும் அல்லாமல் தோத்திரம், அறம், யோகம் முதலிய கருத்துக்களும் கூறப்பட்டுள்ளன.
2. சாத்திர நூல்கள் தொகுத்துக் கூறப்படும் காலத்திற்கு முன்பே இந்நூல் திருமுறைகளின் தொகுப்பில் இடம் பெற்று விட்டது ஒரு காரணமாய் அமையலாம்.

***4.2.2.*** வாகீச முனிவர் எழுதிய ஞானாமிர்தம் என்ற சாத்திர நூலும் மெய்கண்ட சாத்திர நூல்களின் தொகுப்பில் இடம் பெறவில்லை. ஞானாமிர்தத்தின் காலம் கி.பி. 6-ம் நூற்றாண்டு என மறைமலையடிகள், கா.சுப்பிரமணியபிள்ளை, மு.கோவிந்தசாமி முதலியோர் கூறுவர்.[8] இதன் காலம் கி.பி. 1185 என்பது ஒளவை துரைசாமிப்பிள்ளை கருத்து ஆகும்.[9] ச.கங்காதரனும் இதன் காலம் கி.பி. 12-ம் நூற்றாண்டு என்பார்.[10] இது சாத்திர நூல்களின் தொகுப்பில் இடம் பெறாமைக்குப் பின்வரும் காரணங்களைக் கூறலாம்.

1. இது வடமொழி ஆகமங்களைத் தழுவித் தமிழில் எழுதப்பட்ட நூலாகக் கருதப்படுகின்றது.[11]

2. சாத்திரநூல்கள் பதினான்கினுள் முதலில் உள்ள திருவுந்தியாரின் ஆசிரியர் திருவியலூர் உய்யவந்த தேவர் ஆவர். இவருடைய மாணாக்கரின் மாணாக்கரான திருக்கடவூர் உய்யவந்த தேவர் திருக்களிற்றுப்படியார் என்ற சாத்திர நூலை எழுதியவர். திருவுந்தியாருக்கு விளக்கமாக எழுதப்பட்ட நூலே திருக்களிற்றுப்படியார் ஆகும்.

இவ்விரு நூல்களின் ஆசிரியர்களும் ஒரு பரம்பரையில் வந்தவர்கள். அடுத்துள்ள சிவஞானபோத நூலின் ஆசிரியர் மெய்கண்ட தேவர் ஆவார். சிவஞானபோதத்திற்குப் பின் உள்ள நூல்கள் மெய்கண்ட தேவர் வழிவந்த மாணாக்கர்களால் எழுதப்பட்டவை. இவ்வாறு முதல் இரு நூல்களும் ஒரு பரம்பரையைச் சார்ந்தும், அடுத்த பன்னிரண்டு நூல்களும் மெய்கண்ட தேவர் பரம்பரையைச் சார்ந்தும் உள்ளன. இரு பரம்பரையைச் சார்ந்த நூல்களே தொகுக்கப்பட்டுள்ளன. ஞானாமிர்தம் தனி ஒருவரால் இயற்றப்பட்டது தனியாகவே உள்ளது என்லாம்.

3. ஞானாமிர்தம் சரியைபாதம், கிரியைபாதம், யோகபாதம், ஞானபாதம் இவைகளை விளக்கிக் கூறும் நூலாகும். ஏனையவை அழிந்துபோக, ஞானபாதம் மட்டுமே கிடைத்துள்ளது. நூல் முழுமையாகக் கிடைக்கப் பெறாததும் காரணம் ஆகலாம்.

4. வேறு யாரும் சித்தாந்த நூல்கள் பதினான்குதான் என வரையறுத்துக் கூறவில்லை. மதுரை நாயகம் பிள்ளையின் வெண்பாவில் பதினான்கு நூல்களின் பெயர்கள் கூறப்படுவதால் அவர் ஞானாமிர்தம் பற்றி அறியாமல் இருந்திருக்கலாம் எனவும் கருதலாம்.

**4.2.3.** காஞ்சிநாகலிங்க முனிவர் என்பவர் இச்சித்தாந்த சாத்திரங்கள் முழுமையும் உரையுடன் ஒரே தொகுதியாக 1897-ல் பதிப்பித்தார். இவரே முதன்முதல் இச்சாத்திரங்கட்கு "மெய்கண்ட சாத்திரங்கள்" என்று பெயர் கொடுத்தார்.[12] மதுரை நாயகம் பிள்ளை சித்தாந்த சாத்திரங்கள் என்று மட்டும் கூறுகிறார்.

சைவசித்தாந்த நூல்கள் மெய்கண்ட சாத்திர நூல்கள் என அழைக்கப்படக் காரணம் பெரும்பான்மையான நூல்கள் மெய்கண்ட தேவர் வழிவந்த சந்தான ஆசிரியர்களால் இயற்றப்பட்டவை என்பதனாலாகும். "மனித வாழ்வியலின் மெய்ம்மைகளை உள்ளவாறு கண்டுணர்ந்து வகுத்து விளக்குகிற நூல்களாதலால் இவற்றிற்கு மெய்கண்ட நூல்கள் என்னும் பெயர் பொருந்துவதாயிற்று" என்பார் முருகவேள்.[13]

மெய்கண்ட நூல்களின் பெயர்கள், ஆசிரியர்கள், பாடல்வகைகள், பாடல்களின் எண்ணிக்கை இவை பற்றிய செய்திகள் அட்டவணையாக பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.[14]

## 4.3. மெய்கண்ட சாத்திரங்கள் தோன்றிய வரலாறு :

மெய்கண்ட சாத்திரங்கள் ஒரு பரம்பரை வழியாக வந்தவை. இச்சந்தான பரம்பரை பற்றிச் சிவப்பிரகாச ஆசிரியர் தம் நூலின் குரு வணக்கப்பாடலில் கூறுகிறார்.[15] சந்தானாசாரிய புராண சங்கிரகம் என்ற நூல் சந்தானசாரியர்களின் வரலாற்றினைச் சுருக்கமாகக் கூறுகின்றது. மெய்கண்ட சாத்திரங்களின் தோற்றத்திற்குக் காரணமான ஆசிரியர்களை அகச்சந்தானாசிரியர்கள், புறச் சந்தானாசிரியர்கள் என இரு பிரிவுகளாகப் பிரிப்பர். இவர்களுள் புறச்சந்தானாசிரியர்கள் வரலாற்றுக்குட்பட்டவர்களாயும், அகச் சந்தானாசிரியர்கள் புராண வகைக்குட்பட்டவர்களாயும் காணப் படுகிறார்கள்.

அகச்சந்தானாசிரியர்களைப் பற்றிச் சைவ சமயத்தாரிடையே நிலவும் நம்பிக்கை பின்வருமாறு : கைலையில் சிவபெருமான் நந்தி

தேவருக்குச் சித்தாந்த உண்மைகளை உபதேசித்தார். நந்திதேவர் சனற்குமார முனிவருக்கு உபதேசித்தார். சனற்குமார முனிவர், சத்தியஞானதரிசினிகள் என்பவருக்கு உபதேசித்தார். சத்திய ஞானதரிசினிகள் பரஞ்சோதி முனிவருக்கு உபதேசித்தார். இவ்வாறு சிவபெருமானிடமிருந்து உபதேசம் பெற்ற இந்நால்வரும் அகச்சந்தானாசிரியர்கள் எனப்படுவர்.

அகச்சந்தானாசிரியர்களுள் நாலாமவரான பரஞ்சோதி முனிவர் மெய்கண்ட தேவருக்குச் சித்தாந்த உண்மைகளை உபதேசித்தார். இவர் அதனைச் சிவஞானபோதம் என்ற நூலாக இயற்றினார். மெய்கண்ட தேவரிடமிருந்து உபதேசம் பெற்றார் அவருடைய மாணவரான அருணந்தி சிவாசாரியார். இவர் சிவஞான சித்தியார், இருபா இருபஃது என்னும் இரு நூல்கள் இயற்றினார். மெய்கண்ட தேவரின் நாற்பத்தொன்பது மாணாக்கர்களுள் ஒருவர் திருவதிகை மனவாசகம் கடந்தார் என்பவர். இவர், உண்மை விளக்கம் என்ற சாத்திர நூலை எழுதினார். அருணந்தி சிவாச்சாரியார், மறைஞானசம்பந்தருக்கு உபதேசித்தார். மறைஞானசம்பந்தரின் மாணாக்கர் உமாபதிசிவம். இவர் சிவப்பிரகாசம் முதலாகச் சங்கற்ப நிராகரணம் ஈறாக எட்டு நூல்களை எழுதினார். இவ்வாறு மெய்கண்ட சாத்திரங்கள் ஒரு பரம்பரையினரால் எழுதப்பட்டன.

மெய்கண்ட தேவர், அருணந்தி சிவாசாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம் நால்வரும் புறச்சந்தானா சாரியர்கள் எனப்படுவர். இச்சந்தான பரம்பரையை அகச்சந்தான்ம், புறச்சந்தானம் எனப் பிரித்தது பிற்காலத்தில் ஏற்பட்டதாக இருக்கலாம்.

## 4.4. மெய்கண்ட சாத்திரங்களின் அமைப்பும் பொருளும் :

### 4.4.1. திருவுந்தியார் :

காலவரிசையில் இந்நூல் முதலில் உள்ளது. இதன் ஆசிரியர் திருவியலூர் உய்யவந்த தேவர்; காலம் கி.பி. 1148. இந்நூல் 45 கலித்தாழிசைகளால் ஆனது. பாடல்கள்தோறும் 'உந்தீபற' என்ற சொற்றொடர் வந்துள்ளது. இறைவனே ஞானகுருவாக வந்து ஞானத்தை அளிப்பான். உயிர்கள் சிவபோகப் பெரும் பயனை அடையும் என்பது இந்நூலில் கூறப்படும் கருத்துக்களாகும்.

### 4.4.2. திருக்களிற்றுப்படியார் :

இதன் ஆசிரியர் திருக்கடவூர் உய்யவந்ததேவர்; காலம் கி.பி.1178 ஆகும். இந்நூல் நூறு வெண்பாக்களால் ஆனது. இந்நூலில் அறுபத்து மூன்று நாயன்மார்களின் அனுபவங்கள் சில எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. சிவதர்மம், சிவயோகம், சிவஞானம் ஆகிய மூன்றும் இறைவனடி சேர்வதற்கு உரிய சாதனங்களாகக் கூறப்பட்டுள்ளன.

### 4.4.3. சிவஞானபோதம் :

இதன் ஆசிரியர் மெய்கண்ட தேவர் ஆவார். அளவில் மிகச்சிறிய நூல். பன்னிரண்டு சூத்திரங்களில் கருத்துக்களை விளக்குகின்றது. முதல் மூன்று சூத்திரங்களும் பதி, பாசம், பசு உண்மைகளை உணர்த்தும். இது பிரமாண இயல் எனப்படும். நான்கு, ஐந்து, ஆறு சூத்திரங்கள் பசு, பாசம், பதி இலக்கணங்களைக் கூறும். இது இலக்கண இயல் எனப்படும். ஏழு, எட்டு, ஒன்பது சூத்திரங்கள் பசு பாசத்தை விட்டுப் பதியை அடையும் சாதனம் கூறும். இது சாதன இயல் எனப்படும். இறுதி மூன்று சூத்திரங்களும் இறைவனை அடைவதால் உண்டாகும் பயன்கூறும். இது பயன் இயல் எனப்படும். முதல் ஆறு

சூத்திரங்களும் அடங்கிய பகுதி பொது எனவும், இறுதி ஆறு சூத்திரங்களும் அடங்கிய பகுதி சிறப்பு எனவும் கூறப்படும்.

சிவஞானபோதத்தின் அமைப்பைப் பின்வருமாறு காணலாம்.

சிவஞானபோதம்

- பொது அதிகாரம்
  - பிரமாண இயல்
    1. பதி உண்மை
    2. பாச உண்மை
    3. பசு உண்மை
  - இலக்கண இயல்
    4. பசு இலக்கணம்
    5. பாச இலக்கணம்
    6. பதி இலக்கணம்
- சிறப்பு அதிகாரம்
  - சாதன இயல்
    7. சாதன் இயல்பு
    8. சாதித்துப் பெறுவது
    9. சாதிக்கும் முறை
  - பயன்இயல்
    10. பாச நீக்கம்
    11. சிவப்பேறு
    12. சீவன்முத்தர் செயல்கள்

### 4.4.4. சிவஞானசித்தியார் :

இதன் ஆசிரியர் மெய்கண்ட தேவரின் மாணவரான அருணந்தி சிவாசாரியார் ஆவர். இந்நூல் பரபக்கம், சுபக்கம் என இரு பகுதிகளை உடையது. பரபக்கத்தில் மதமும் மறுப்புமாகப் புறச்சமயங்கள் விளக்கப்படுகின்றன. சுபக்கத்தில் சித்தாந்த சைவ உண்மை நிலைநாட்டப்படுகின்றது. பரபக்கம் 311பாக்களை உடையது. சுபக்கம் 328பாக்களை உடையது. இந்நூல் சிவஞானபோதத்திற்கு விளக்கமாய் எழுதப்பட்ட நூல்; எனவே சூத்திரக் கருத்துக்களை விளக்குவதற்கு ஏற்றவாறு விருத்தப்பாவில் இந்நூல் அமைந்துள்ளது.

### 4.4.5. இருபா இருபஃது

இதுவும் அருணந்தி சிவாசாரியாரால் எழுதப்பட்ட நூல் ஆகும். இருபது பாடல்கள் கொண்டது. ஒரு பாடல் வெண்பாவாகவும், அடுத்த பாடல் ஆசிரியப்பாவாகவும் இவ்வாறு மாறிமாறி அமைந்து அந்தாதியாக அமைந்து முடிகிறது. இதன் ஆசிரியர் தம் ஞானாசிரியனான மெய்கண்ட தேவரைப் போற்றிப் பல்வேறு வினாக்களை வினவும் முறையில், சைவசித்தாந்த உண்மைகள் உணர்த்தப்படுகின்றன. இந்நூலில் கூறப்படும் பொருள் குருவணக்கம், முப்பொருள் உண்மை, குருவருள் என்ற மூன்று பாகு பாட்டில் அடங்கும். இந்நூலில் ஆணவத்தின் எட்டுக் குணங்களும், மாயையின் ஏழு தன்மைகளும், கன்மத்தின் ஆறுஇயல்புகளும் விளக்கப்படுகின்றன.

### 4.4.6. உண்மை விளக்கம் :

இதன் ஆசிரியர் திருவதிகை மனவாசகங் கடந்தார் ஆவார். 53 வெண்பாக்களால் ஆனது. இதன் ஆசிரியர் தம் ஆசிரியரான மெய்கண்ட தேவரை வினவ அவர் விடை பகர்ந்தது போல் அமைந்தது இந்நூல். முப்பத்தாறு தத்துவங்கள் பற்றி இந்நூலில் கூறப்படுகின்றது. திருவைந்தெழுத்தின் பொருள், ஓதும் முறை, ஓதலால் உண்டாகும் பயன், இறைவனின் நடனம், குரு லிங்க சங்கம வழிபாடு, முக்திப்பேறு இவைபற்றி இந்நூலில் கூறப்பட்டுள்ளன. இந்நூல் சைவசித்தாந்த உண்மைகளைச் சுருக்கமாகவும், தெளிவான விளக்கத்துடனும் தருகின்றது.

### 4.4.7. சிவப்பிரகாசம் :

இதனை இயற்றியவர் உமாபதிசிவம் ஆவார். இந்நூல் 100 விருத்தங்களால் ஆனது. இந்நூல் முதலாக உள்ள எட்டு நூல்களும் இவர் எழுதியவையே. திருக்கயிலாய பரம்பரை ஆசிரியர்கள், சைவநூல்களின் இயல்பு, தீட்சை பெறும் முறைகள், ஆணவம், கன்மம்

வினைப்பயன் வரும் வழிகள், மாயையின் பிரிவுகள் ஆகியன இந்நூலில் கூறப்படுகின்றன.

### 4.4.8. திருவருட்பயன் :

இதன் ஆசிரியர் உமாபதிசிவம். இது குறள் வெண்பாவால் ஆன நூல். 100 குறட்பாக்கள் பத்து அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவை :

| | |
|---|---|
| 1. *பதிமுதுநிலை* | 6. *அறியும் நெறி* |
| 2. *உயிரவை நிலை* | 7. *உயிர் விளக்கம்* |
| 3. *இருள்மல நிலை* | 8. *இன்புறு நிலை* |
| 4. *அருளது நிலை* | 9. *ஐந்தெழுத்தருள் நிலை* |
| 5. *அருளுரு நிலை* | 10. *அணைந்தோர் தன்மை* |

முதல் ஐந்து அதிகாரம் பொது எனவும், பின் ஐந்து அதிகாரம் சிறப்பு எனவும் கூறப்படும்.

முதல் அதிகாரம் திருவருளைக் கொடுக்கும் பதியின் தன்மையைக் கூறுவது. இரண்டாம் அதிகாரம் திருவருளைப் பெறும் உயிரின் தன்மையைக் கூறுவது. மூன்றாம் அதிகாரம் திருவருளால் நீக்கப்படும் மலத்தின் தன்மையைக் கூறுவது. நான்காம் அதிகாரம் திருவருளின் தன்மையைக் கூறுவது. ஐந்தாம் அதிகாரம் திருவருள் உயிர்களிடம் கொண்ட கருணையினால் குருவாக வரும் நிலையைக் கூறுவது. ஆறாம் அதிகாரம் குருவாக வந்து அறிவிக்க உயிர் அறியும் நிலை கூறுவது. ஏழாம் அதிகாரம் அதனால் உயிர்பெறும் விளக்கம் கூறுவது. எட்டாம் அதிகாரம் விளக்கம் பெற்ற உயிர் இன்புறு நிலை கூறுவது. ஒன்பதாம் அதிகாரம் பெற்ற இன்பத்தை நெகிழ விடாது தொடர்ந்து நின்று பயன்பெறத் திருவைந்தெழுத்தை ஒத வேண்டும் எனக்கூறுவது. பத்தாம் அதிகாரம் திருவருளால் படிப்படியாக உயர்ந்த உயிர் இறைவன் திருவடிக்கண் அணுகிய போது எவ்வாறு இருக்கும் என்று அணைந்தோர் தன்மை கூறுவது.

முதல் மூன்று அதிகாரங்களில் முப்பொருட்களான பதி, பசு, பாச இயல்புகள் கூறப்பட்டுள்ளன. அதனை அடுத்து முப்பொருளையும் தொடர்புபடுத்தி நிற்கும் அருளது தன்மை கூறப் படுகின்றது. அருளைக் கொண்டே உயிர்கள் இறைவனை அறிய வேண்டும். அவ்வாறு அறிய மாட்டாத உயிர்களுக்குத் தன்னை உணர்த்த குரு வடிவிலும் இறைவன் வருவதுண்டு. எனவே அருளது நிலையை அடுத்து அருளுரு நிலை கூறப்படுகின்றது. ஞானகுரு அறிவுறுத்தருளிய அருள்மொழியின் பொருளைச் சிந்தித்து உணரும் முறை அறியும் நெறியில் கூறப்படுகின்றது. அறிந்தபின் அக இருளால் மூடப்பட்ட உயிர்கள் அம்மாசினின்றும் நீங்கி விளக்கம் பெறுவதால் அறியும் நெறியை அடுத்து உயிர் விளக்கம் கூறப்படுகின்றது. மாசு நீங்கித் தூய்மை பெற்ற உயிர் இறை இன்பத்தில் திளைக்கும். ஆதலால் உயிர் விளக்கத்திற்குப் பின் இன்புறுநிலை கூறப்படுகின்றது. இன்புறு நிலையை அடையத் துணை செய்யும் ஐந்தெழுத்து மந்திரம் அடுத்துக் கூறப்படுகின்றது. இறுதியாக ஐந்தெழுத்துச் சாதனையில் நின்று பயன் அடையும் சீவன் முத்தர்கள் இயல்பு கூறப்படுகின்றது. இவ்வாறு ஒவ்வொரு அதிகாரமும் முந்தின அதிகாரத்துடன் தொடர்பு பெற்று விளங்குகின்றது.

### 4.4.9. வினா வெண்பா :

இதன் ஆசிரியர் உமாபதிசிவம் ஆவார். பதின்மூன்று வெண்பாக்களை உடையது. ஆசிரியர் தம் குருவான மறைஞான சம்பந்தரை வினவும் முறையில் சாத்திர உண்மைகள் முதல் பன்னிரண்டு பாடல்களில் வெளிப்படுத்தப்படுகின்றன. இறுதிப் பாடலில் இந்நூற்பொருளை உணர்வார் பெறும் பயன் கூறப்படு கின்றது.

### 4.4.10. போற்றிப்பஃறொடை :

இந்நூலின் ஆசிரியர் உமாபதிசிவம் ஆவார். இது பஃறொடை வெண்பாவால் ஆன நூல். இறைவனைப் போற்றிப் புகழ்ந்து கூறும்

தோத்திரநூல் என்றும், பதி,பசு, பாசம் என்ற முப்பொருட்களின் இயல்புகளையும், அவைகளுக்குள்ள தொடர்பு நிலைகளையும் தத்துவ முறையில் விளக்கிக் கூறும் நூல் சாத்திர நூல் என்றும் கூறப்படுவது மரபு. இந்நூல் சாத்திரக் கருத்துக்களைக் கூறும் போதே 'போற்றி, போற்றி' என்று இறைவனைப் புகழ்ந்து வணக்கம் கூறுவதால் அதனைச் சாத்திர நூல்களில் தோத்திர நூல் எனக் கூறலாம். இறைவனது நிலை, ஐந்தொழில் நடத்தும் திறம், ஆணவத்தின் இயல்பு, இம்மை, மறுமைப் பயன்கள், இறைவன் மூவகை உயிர்களை அருளும் திறம் ஆகியவைகள் இந்நூலில் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

### 4.4.11. கொடிக்கவி :

இந்நூல் நடராசப் பெருமானது கோயிலில் கொடி ஏறும் பொருட்டு உமாபதிசிவத்தால் பாடப்பட்ட நூலாகும். ஒரு கட்டளைக் கலித்துறையும், நான்கு வெண்பாக்களும் கொண்டது. ஞானத் தீட்சையின் பயன், ஐந்தெழுத்தின் பெருமை ஆகியவை கூறப்படு கின்றன. கொடியேற்றுதலில்.

*கொடிமரம் - சிவவடிவத்தையும்*

*கொடிச்சீலை - மறைப்புச் சக்தியையும்*

*அதில் வரையப்பட்ட இடபம் - உயிரையும்*

*கொடிக்கயிறு - அருளையும்*

*அதனோடு இணைந்துள்ள*

*தருப்பக்கயிறு - பாசத்தையும்*

குறிக்கும். எனவே தருப்பைக் கயிறான பாசத்தோடு இணைந்துள்ள கொடிச்சீலையில் இணைப்புண்டு கிடக்கும் உயிர், கொடிக்கயிறான அருளின் துணை கொண்டு, கொடிமரமாகிய சிவத்தைச் சேர வேண்டும் என்பது இதன் உட்கருத்து ஆகும் என்பர்[16]

**4.4.12.** நெஞ்சுவிடு தூது :

இந்நூலின் ஆசிரியர் உமாபதிசிவம் ஆவார். இந்நூல் கலிவெண்பாவால் ஆனது. 129 கண்ணிகளை உடையது. இந்நூலின் ஆசிரியர் தம்மைத் தலைவியாகவும் தம் ஞானாசிரியரான மறைஞானசம்பந்தரைத் தலைவராகவும், கருதி அவரிடம் சென்று, அவரருளைப் பெற்று அதற்கு அடையாளமாக அவரிடமுள்ள மாலையை வாங்கி வருமாறு தம் நெஞ்சைத் தூதாக அனுப்பும் முறையில் அமைந்துள்ளது.

இச்சாத்திரநூல் பிற சாத்திர நூல்களில் இருந்து இரண்டு காரணங்களால் தனித்து விளங்குகின்றது.

1. இறைவனுக்குத் தசாங்கம் கூறுவது
2. அகப்பொருளில் அமைந்துள்ளது

**4.4.13.** உண்மை நெறி விளக்கம் :

உமாபதிசிவம் எழுதிய இந்நூல் ஆறு ஆசிரிய விருத்தப்பாக்களால் அமைந்துள்ளது. இதில் தத்துவரூபம், தத்துவக்காட்சி, தத்துவசுத்தி, ஆன்ம ரூபம், ஆன்மக்காட்சி, ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்னும் பத்துக்காரியங்களால் உயிரானது இறைவனது திருவடியை அடையும் எனக் கூறப்படுகின்றது. இப்பத்துக் காரியங்களும் உயிர் மெய்யுணர்வு அடையும்போது உயிரின்கண் ஏற்படும் உணர்வு மாற்றங்கள் ஆகும். இது தசகாரியம் என்று சொல்லப்படும்[17].

**4.4.14.** சங்கற்ப நிராகரணம் :

இந்நூலும் உமாபதிசிவத்தால் எழுதப்பட்டதாகும். இருபது அகவற்பாக்களாலும், ஒரு வெண்பாவாலும் ஆகியது. மாயாவாதம் என்ற புறச்சமயம், ஐக்கியவாத சைவம் என்ற அகப்புறச்சமயம், ஏனைய அகச்சமயங்களின் கொள்கைகளைக் கூறி அவற்றை

நிராகரித்து, சித்தாந்தத்தின் வழியே முக்தி அடையும் நிலை கூறப்படுகின்றது.

## 4.5. முதல், வழி, சார்பு நூல்கள் :

சைவசித்தாந்த நூல்களுள் சாத்திர நுட்பங்களை முழுமையாக விளக்குவன சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் ஆகிய மூன்று நூல்களாகும். சிவஞானபோதத்தை முதல் நூலாகவும், சிவஞானசித்தியாரை வழிநூலாகவும், சிவப் பிரகாசத்தைச் சார்பு நூலாகவும் கூறுவது மரபு ஆகும்.

சிவஞானபோதம் முதல் நூலாகக் கருதப்படுவதற்கு பின்வரும் காரணங்களைக் கூறலாம்.

1. சிவஞானபோதத்திற்கு முற்பட்ட திருவுந்தியாரிலும், திருக்களிற்றுப்படியாரிலும் சைவசித்தாந்த உண்மைகள் முழுவதும் கூறப்படவில்லை. கூறப்பட்டுள்ள சில உண்மைகளும் வெளிப்படையாக இல்லாமல் குறிப்பாகப் புலப்படும்படி அமைந்துள்ளன.
2. சிவஞானபோதத்தின் ஆசிரியரான மெய்கண்ட தேவர் அகச்சந்தான ஆசிரியர்களுள் நாலாமவரான பரஞ்சோதி முனிவரிடமிருந்து நேரடியாக ஞானம் பெற்றவராகக் கருதப்படுகின்றார்.
3. மேலும் மெய்கண்ட தேவர் புறச்சந்தான ஆசிரியர்களுள் தலைமையானவர் ஆவார். இவரது மாணாக்கர்களும் அவர் வழி வந்தவர்களுமே ஏனைய சாத்திர நூல்களை இயற்றியவர்கள்

சிவஞானசித்தியாரின் சுபக்கம் சிவஞானபோதத்தின் பன்னிரண்டு சூத்திரக் கருத்துக்களைப் பன்னிரண்டு அதிகாரங் களில் விரித்து விளக்குவதால் வழிநூல் எனப்படுகின்றது.

சிவப்பிரகாசத்தில் நூல்வழியில், சிவஞானபோதம், சிவஞானசித்தியார் ஆகிய இரு நூற் கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு, அவற்றுடன் ஆகமங்களின் கருத்தையும் ஏற்று, இந்நூலைச் செய்வதாக ஆசிரியரே கூறியுள்ளார்.[18] அஃது இந்நூல் சார்புநூல் என்ற உண்மையை உணர்த்தும்.

## 4.6. சித்தாந்த அட்டகம் :

பதினான்கு சாத்திரங்களுள் சிவப்பிரகாசம் முதலாகச் சங்கற்ப நிராகரணம் ஈறாக எட்டு நூல்களும் சித்தாந்த அட்டகம் எனப் பெயர் பெறும். இவற்றுள் உண்மை நெறி விளக்கம் உமாபதி சிவம் இயற்றியதன்று. சீர்காழி தத்துவநாதர் இயற்றியது என்ற கருத்தும் நிலவுகின்றது.[19] இது உமாபதிசிவத்தால் இயற்றப்பட்டதே என்பதற்குச் சித்தலிங்கையா பின்வரும் காரணங்களைக் கூறுகிறார்.[20]

1. வேறொருவர் எழுதிய ஒரு நூலை உமாபதிசிவம் இயற்றிய நெஞ்சுவிடு தூது, சங்கற்ப நிராகரணம் என்னும் இரண்டுக்கும் இடையில் வைக்கும் செயலைத் தொகுப்பாசிரியர் செய்திருக்க மாட்டார்.

2. மேலும் 14 நூல்களும் கால முறைப்படி தொகுக்கப்பட்டுள்ளன. முதல் இருநூல்களும் மெய்கண்ட தேவருக்கு முற்பட்ட நூல்கள். அதனை அடுத்து, மெய்கண்ட தேவர் எழுதிய சிவஞானபோதம் (3-வது) அமைந்துள்ளது. அடுத்து அவரது மாணவர் அருணந்தி சிவாசாரியார் இயற்றிய சிவஞானசித்தியாரும், இருபாஇருபஃதும் பின் மெய்கண்ட தேவரின் மற்றொரு மாணவரான மனவாசகங்கடந்தார் இயற்றிய உண்மை விளக்கமும் அமைந்துள்ளன. அருணந்தி சிவாசாரியாரின் மாணவர் மறைஞான சம்பந்தர். அவருடைய சீடர் உமாபதிசிவம். எனவே உமாபதிசிவத்தின் எட்டு நூல்களும் உண்மை விளக்கத்தை அடுத்து அமைந்துள்ளன. சீர்காழி தத்துவநாதர் மெய்கண்டதேவரின் மாணவர் என்பது கா.சுப்பிரமணியபிள்ளையின் கருத்து.[21] இது உண்மையானால்

அவருடைய நூல் உமாபதிசிவத்தின் நூல்களுக்கு முன் மனவாசகங்கடந்தாரின் உண்மை விளக்கத்தை அடுத்து இடம் பெற்றிருத்தல் வேண்டும். உறுதியாக உமாபதிசிவத்தின் நூல்களுக்குப் பின்னால் அஃதும் அவரது இரண்டு நூல்களுக்கு இடையில் இடம் பெற்றிருக்க முடியாது.

3. உமாபதிசிவம் தத்துவ அறிஞர் மட்டும் அல்லர். ஒரு கை தேர்ந்த நூலாசிரியரும் கூட. தம் நூல்களை முறைப்படி அமைத்துள்ளார். தம் முதல் நூல் சிவப்பிரகாசத்தில் கூறியதைப் பின்வந்த நூல்களில் விரித்துக் கூறியுள்ளார். சிவப்பிரகாசத்தில் திருவருளைப் பற்றி (செ.18), திருவைந்தெழுத்தைப் பற்றிச் (செ.90-92) சுருக்கிக் கூறியது திருவருட்பயனில் விரித்தோதப்பட்டன. தம் முதல் நூலில் சுருக்கிக் கூறப்பட்ட திருவருளும், குருவின் பெருமையும் (செ.68) போற்றிப்பஃறொடையிலும், நெஞ்சுவிடு தூதிலும் விரித்துக் கூறப்பட்டன. இதைப்போல இவர் தம் முதல் நூலில் ஆன்மதரிசனம், ஆன்மலாபம், ஆன்மசுத்தி (செ. 71 - 83) என்ற மூன்று தலைப்புக்களில் தசகாரியம் கூறியதை உண்மை நெறி விளக்கத்தில் பத்துத் தலைப்புக்களில் விரித்துக் கூறுகிறார் எனலாம்.

எனவே உண்மைநெறி விளக்கத்தின் ஆசிரியர் உமாபதி சிவம் என்பதே பொருத்தமாகும்.

## 4.7. சாத்திர நூல்களின் பகுப்பு :

மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கையும் அமைப்பு முறையைக் கொண்டு பின்வரும் பாகுபாட்டில் அடக்கலாம் என்பார் கு.சுந்தரமூர்த்தி [22].

1. ஒன்றன் விளக்கமாய் மற்றொன்று அமைந்த நூல்கள்
2. வினாமுறையிலும், வினாவிடை முறையிலும் அமைந்த நூல்கள்
3. மறுப்பு வகையில் அமைந்த நூல்கள்

4. ஒரு தனிப்பட்ட நோக்கில் அமைந்துள்ள நூல்கள்

**4.7.1.** ஒன்றன் விளக்கமாய் மற்றொன்று அமைந்தவை:

திருவுந்தியாருக்கு விளக்கமாய் அமைந்த நூல் திருக்களிற்றுப்படியார் ஆகும்.[23]

சிவஞானபோதத்திற்கு விளக்கமாய் அமைந்த நூலே சிவஞானசித்தியாரும், சிவப்பிரகாசமும் ஆகும். இவைகள் முதல், வழி, சார்பு நூல்கள் என்று கூறப்படுவதே இவ்வுண்மையை உணர்த்தும்.

**4.7.2.** வினா முறையில், வினா விடை முறையில் அமைந்தவை:

இருபா இருபஃது, வினாவெண்பா, உண்மை விளக்கம் முதலியன இம்முறையில் அமைந்தவை. முன் இரண்டு நூல்களிலும் வினாக்கள் மட்டும் உள்ளன. அவைகளுக்கான விடைகள் இவர்கள் இயற்றிய பிற நூல்களிலும், ஏனைய நூல்களிலும் இருந்து கண்டறிந்து தெளிதல் வேண்டும். இவ்வினாக்கள் படிப்பவர்களின் சிந்தனையைத் தூண்டி, உய்த்துணர்வைப் பெருக்கித் தத்துவக் கருத்துக்களில் ஒரு தெளிவைக் காண வழிவகுக்கின்றன. உண்மை விளக்க நூலில் வினாவும், அதற்கான விடையும் உள்ளன.

**4.7.3.** மறுப்பு வகையில் அமைந்தவை :

சிவஞானசித்தியார் பரபக்கமும், சங்கற்ப நிராகரணமும், சமயவாதிகளை மறுப்பதற்கென்றே எழுந்த எதிர்நூல்களாகும். சமயவாதிகள் எதிர்நூல் செய்யும் கொள்கையினர் என இதனால் உணரப்படும். சைவசித்தாந்தம் பிற சமயங்களை நான்கு வகைப்படுத்திக் கூறும். அவை 1. புறப்புறச்சமயம், 2. புறச்சமயம், 3. அகப்புறச்சமயம், 4. அகச்சமயம்

இவற்றுள் சிவஞானசித்தியாரின் பரபக்கத்தில் புறப்புறச்சமயமும், புறச்சமயமும் மறுத்துரைக்கப்படுகின்றன. சங்கற்ப

நிராகரணத்தில் அச்சமயமும், மாயாவாதம் என்ற புறச்சமயமும் ஐக்கியவாத சைவம் என்று அகப்புறச் சமயமும் மறுத்துரைக்கப்படுகின்றன.[24] மாயாவாதம் சிவஞானசித்தியார் பரபக்கத்தில் மறுக்கப்பட்ட போதிலும், சங்கற்ப நிராகரணத்திலும் மறுக்கப்படக் காரணம் உமாபதிசிவம் காலத்திலும் மாயாவாதம் ஓங்கியிருந்தமையே ஆகும் எனலாம். மேலும் உமாபதிசிவம் சிவப்பிரகாசத்தில் "வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம்"[25] என்று வேதாந்தத்திற்கும் சைவ சித்தாந்தத்திற்கும் உள்ள தொடர்பை சுட்டிக் கூறுகின்றார். ஆனால் வேதாந்திகள் கூறும் மாயைக்கும், சைவசித்தாந்திகள் கூறும் மாயைக்கும் வேறுபாடு உண்டு. அவ்வேறுபாட்டினைக் காட்ட விரும்பியே மாயாவாதத்தைச் சங்கற்ப நிராகரணத்தில் கூறுகிறார் எனலாம்.

### 4.7.4. ஒரு தனிப்பட்ட நோக்கில் அமைந்தவை :

மேற்கூறிய பகுப்புக்களில் அடங்கிய சித்தாந்த நூல்களைத் தவிர ஏனைய சாத்திர நூல்கள் இப்பிரிவில் அடங்கும். அவை :

1. திருவருட்பய ன் குறள் வெண்பாவால் ஆனது.
2. போற்றிப்பஃறொடை சாத்திரத்துள் தோத்திரமாய் விளங்குவது.
3. கொடிக்கவி கொடியேற்றுதலின் தத்துவம் உணர்த்தும்.
4. நெஞ்சுவிடுதூது அகப்பொருள் மரபில் அமைந்தது.
5. உண்மைநெறி விளக்கம் தசகாரியம் கூறுவது.

## 4.8. சைவசித்தாந்தப் பொருட் சுருக்கம் :

சைவசித்தாந்தம் கூறும் உண்மைகள் அனைத்தும் பதி, பசு, பாசம் என்ற மூன்று பிரிவிற்குள்அடங்கும். இதனை இறை, உயிர், தளை என்பர். இம்மூன்றும் வேறுவேறு பொருட்கள் ஆனாலும், ஒன்றுடன் ஒன்று கலந்தே காணப்படும். இம்முப்பொருட்கட்கிடையில்

உள்ள தொடர்பைத் "தண்கடல்நீ ருப்புப்போல்" என்கிறார் மெய்கண்டதேவர்.[26] இதில் கடல் நிற்பிற்கு இடம் தரும் ஆகாயம் போன்றது பதி. கடலில் நிறைந்து நிற்கின்ற நீர் போன்றது பசு. அந்நீரில் கலந்துள்ள உப்புப் போன்றது பாசம் ஆகும்.

பசுவானது பதியை உணவரொட்டாமல் தடை செய்வது பாசம் ஆகும். பசுவானது பாசத்தை விட்டுப் பதியினைச் சென்றடைந்து இரண்டறக் கலத்தலே சித்தாந்த முக்தி எனப்படும்.

## 4.9. பிற சைவசாத்திர நூல்கள் :

மெய்கண்ட சாத்திர நூல்கள் பதினான்கு மட்டுமே இவ்வியலில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. சைவ சித்தாந்த உண்மைகளை எளிதில் உணரப் பல சிறு நூல்கள் தோன்றியுள்ளன. அவை கட்டளைகள் எனப்படும்.

மெய்கண்ட பரம்பரையில் பின்னால் உருவான திருவாவடுதுறை ஆதீனமும், தருமபுர ஆதீனமும் பல சாத்திர நூல்களை எழுதி வெளியிட்டுள்ளன. அவை பண்டார சாத்திரங்கள் எனப்படும். மெய்கண்ட சாத்திர நூல்களுக்குப் பின் உருவான சாத்திர நூல்கள் பற்றிய செய்திகள் அட்டவணையாகப் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.[27] வடமொழியிலுள்ள சைவசித்தாந்த நூல்களும் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.[28]

முடிவுகள் :

1. சைவசமயத்தின் முடிந்த முடிவான கொள்கைகளே சைவசித்தாந்தம் எனப்படும். இக்கொள்கைகளை விளக்கும் நூல்கள் சைவசித்தாந்த நூல்கள் எனப்படு கின்றன.
2. சைவசித்தாந்த சாத்திர நூல்கள் 14 என்று கூறுவது பழமையான வழக்கன்று. இது மதுரைநாயகம் பிள்ளை காலத்தை ஒட்டி ஏற்பட்ட வழக்கெனக் கருதலாம்.

3. காஞ்சிநாகலிங்க முனிவரே சித்தாந்த சாத்திரங்கட்கு முதன்முதலில் 'மெய்கண்ட சாத்திரங்கள்' எனப் பெயரிட்டனர்.

4. சித்தாந்த சாத்திர நூல்களின் தொகுப்பிற்கு முன் தமிழில் உள்ள சாத்திர நூல்கள் திருமந்திரமும், ஞானாமிர்தமும் ஆகும்.

5. திருமந்திரத்தில் சாத்திர நூல் கருத்துக்களுடன் தோத்திரக் கருத்துக்களும் வேறுபல கருத்துக்களும் கூறப்பட்டிருப்பதாலும், காலத்தால் மிக முற்பட்டு ஏற்கனவே தோத்திர நூல்களான திருமுறைகளின் வரிசையில் தொகுக்கப்பட்டு விட்ட காரணத்தாலும், இது சாத்திர நூல்களின் வரிசையில் சேர்க்கப்படவில்லை எனலாம்.

6. ஞானாமிர்தம் என்ற சாத்திர நூலானது வடமொழி ஆகமங்களைத் தழுவி எழுதப்பட்ட நூல் ஆதலாலும், நூலின் பெரும்பகுதி அழிந்து பட்ட காரணத்தினாலும், சந்தான பரம்பரை வழியில் வராத நூலாததாலும், மெய்கண்ட சாத்திர நூல்களுள் ஒன்றாகச் சேர்க்கப்படவில்லை.

7. மெய்கண்ட தேவர் கச்சந்தான ஆசிரியர்களுள் ஒருவரான பரஞ்சோதி முனிவரிடமிருந்து நேரடியான ஞானம் பெற்றவர் எனக் கருதப்படுவதாலும், ஏனைய புறச்சந்தான ஆசிரியர்களுள் இவரே தலைமை வாய்ந்தவர் ஆதலாலும், சாத்திரக் கருத்துக்களை முழுவதுமாக விளக்கும் நூல்களின் முதல் நூல் ஆதலாலும், தகுதி பற்றி சிவஞானபோதம் முதல் நூலாகக் கூறப்படுகின்றது.

8. சாத்திரக் கருத்துக்களை எடுத்துக் கூறும் முறையைக் கொண்டு சாத்திர நூல்களை விளக்க முறையில் அமைந்தவை, வினா முறையிலும், வினாவிடை முறையிலும் அமைந்தவை, மறுப்பு வகையில் அமைந்தவை, தனிப்பட்ட நோக்கில் அமைந்தவை எனப் பாகுபாடு செய்யலாம்.

9. சிவஞானசித்தியார் பரபக்கத்தில் மறுக்கப்பட்ட மாயாவாதம் சங்கற்ப நிராகரணத்திலும் மறுக்கப்படு வதற்கு உமாபதிசிவம் காலத்திலும் மாயாவாதம் ஓங்கியிருந் தமையே காரணம் ஆகும் எனலாம். மேலும் வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம் எனத் தம் சிவப்பிரகாச நூலில் கூறிய உமாபதிசிவம் வேதாந்தம் கூறும் மாயைக்கும், சைவசித்தாந்தம் கூறும் மாயைக்கும் உள்ள வேறுபாட்டினைக் காட்டவே மாயாவாதம் பற்றிச் சங்கற்ப நிராகரணத்தில் கூறுகிறார் எனலாம்.

## குறிப்புக்கள்

1. (i) மா.இராசமாணிக்கனார், சைவசமய வளர்ச்சி.

   (ii) டி.பி.சித்தலிங்கையா, சைவசமயத் தோற்றமும் வளர்ச்சியும்

   (iii) T.B.Siddalingaiah, Origin and Development of Saiva Siddhantha upto 14th Century.

2. மணிமேகலை 27:89-95.

3. "திருமந்திரத்தில் சைவசித்தாந்தக் கருத்துக்கள்", "காரைக்காலம்மையார் நூல்களில் சைவசித்தாந்தக் கருத்துக்கள்" என்னும் இருஆய்வுக் கட்டுரைகளும் ஆய்வாளரால் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியல் துறையில் புதன் வட்டக் கருத்தரங்கில் வாசித்தளிக்கப் பெற்றன.

4. திருமந்திரம், 2394.

5. கா.சுப்பிரமணியபிள்ளை, சைவசித்தாந்த உண்மை வரலாறு, ப.5.

6. மு. அருணாசலம், 'சித்தாந்த சாத்திரங்கள் வரலாறு' குமரகுருபரன், தொகுதி 4, பகுதி 9, ப.391.

7. “உந்தி களிறு வுயர்போதஞ் சித்தியார்
பிந்திருபா வுண்மை பிரகாசம் வந்தவருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
வுண்மைநெறி சங்கற்ப முற்று”

8. (i) மறைமலையடிகள், மாணிக்கவாசகர் வரலாறும் காலமும், ப. 119.
(ii) கா.சுப்பிரமணியபிள்ளை, இலக்கிய வரலாறு (இரண்டாம் பாகம்) ப.297.
(iii) மு.கோவிந்தசாமி, இலக்கியத் தோற்றம் ப.126.

9. ஔவை, துரைசாமிப்பிள்ளை, ஞானாமிர்த மூலமும் பழைய உரையும், முகவுரை, ப. xxxviii.

10. S.Gangadharan, Studies in Jnanamrtam, Preface.

11. Ibid, Preface.

12. மு.அருணாசலம், மு.நூல்., ப.392.

13. ந.ரா.முருகவேள், மெய்கண்ட நூல்களின் வாழ்வியல் உண்மைகள் ப.9.

14. பின்னிணைப்பு எண் 9.

15. உமாபதிசிவம், சிவப்பிரகாசம், குருவணக்கம்.

16. கு.சுந்தரமூர்த்தி (ப.ஆ.) கொடிக்கவியும் வினாவெண்பாவும், ஆராய்ச்சி முன்னுரை, P.IV.

17. பின்னிணைப்பு எண் 10.

18. சிவப்பிரகாசம், பாயிரம் 12.

19. எஸ். அனவரதநாயகம் பிள்ளை, சித்தாந்த சாத்திரம், ப.1161.

20. டி.பி.சித்தலிங்கம், சைவசமயத்தோற்றமும் வளர்ச்சியும், பக். 139-140.

21. கா.சுப்பிரமணியபிள்ளை, சைவசித்தாந்த சந்தானாசிரியர்களும் அவர்களது அருள் நூல்களும், ப. 17.

22. கு.சுந்தரமூர்த்தி, 'மெய்கண்ட நூல்கள்', ஞானசம்பந்தம், மலர் 36,இதழ் 12,ப. 602.
23. பின்னிணைப்பு எண் 11.
24. பின்னிணைப்பு எண் 12.
25. சிவப்பிரகாசம், பாயிரம் 7.
26. சிவஞானபோதம் உதாரண வெண்பா 44.
27. பின்னிணைப்பு எண் 13.
28. பின்னிணைப்பு எண் 14.

# 5. பதி இயல் கோட்பாடுகள்

# 5. பதி இயல் கோட்பாடுகள்

## 5.0. முன்னுரை :

சைவ சித்தாந்தத்தில் அடிப்படையாகக் கொள்ளப்படும் பொருட்கள் மூன்று ஆகும். அவை பதி, பசு, பாசம் என்பவை. பொருட்களைப் பதி, பசு, பாசம் என மூவகைப்படுத்திப் பேசுவது வேத ஆகம காலத்திலேயே உள்ளது.

*“பலகலைஆ கமவேதம் யாவையினுங் கருத்துப்*
*பதிபசுபா சந்தெரித்தல்”*[1]

என்று சிவப்பிரகாசத்தில் கூறப்படுகின்றது. பதி என்பது இறைவனைக் குறிக்கும். அச்சொல் தலைவன் எனப் பொருள்படும். பதி, இறைவன், கடவுள் முதலிய சொற்கள் ஒரு பொருள் குறிப்பன. திருஞானசம்பந்தர் பாடல்களின் வாயிலாகத் தெரியவரும் இறை இயல்புகள், சைவசித்தாந்த நூல்களில் கூறப்படும் பதி இயல் கோட்பாட்டிற்கு அடிப்படையாய் அமைகின்ற பான்மை இவ்வியலில் ஆராயப்படு கின்றது. திருஞானசம்பந்தர் தம் பாடல்களில் இறைவனின் இயல்புகளை எதிர்மறைகளில் குறிப்பிடுவதற்குரிய காரணங்களும் இவ்வியலில் விளக்கப்படுகின்றன. அவருடைய பாடல்களில் பொருள் முரண்பாடுகள் போலத் தோன்றும் தொடர்கள் சாத்திர நூல்களின் துணையால் இவ்வியலில் ஆராயப்படுகின்றன.

## 5.1. பதியின் உண்மை :

***5.1.1.*** திருஞானசம்பந்தர் தம் தேவாரத்தில் கடவுள் ஒருவர் என்ற உண்மையைப் பல இடங்களில் ‘ஒருவன்’[2], ‘ஒருவனார்’[3], ‘ஒருவர்’[4], ‘ஒருத்தர்’[5] ‘ஒருத்தன்’[6] என்ற சொற்களால் குறிப்பிடுகின்றார்.

**5.1.2.** சாத்திர நூல்களில்

*"ஒன்றென்ற தொன்றே காண் ஒன்றே பதி"*[7]

என்ற மெய்கண்ட தேவரும்,

*"ஒருவனோ டொருத்தி ஒன்றன் றுரைத்திடும்*
*உலகமெல்லாம்*
*வருமுறை வந்து நின்று போவதும் ஆத லாலே*
*தருபவன் ஒருவன் வேண்டும்"*[8]

என்று அருணந்தி சிவாசாரியாரும், பதி ஒன்று என்ற உண்மையைக் கூறுகின்றனர்.

**5.1.3.** திருஞானசம்பந்தர் காட்சியளவையால் கடவுளைக் கண்டு பதி ஒன்று உண்டு என்ற உண்மையைக் கூறுகின்றார். சாத்திர நூலாசிரியர்கள் உரை அளவையால் பதி உண்மையை மெய்ப்பிக்கின்றனர். இவ்வுலகம் தோன்றி நின்று, அழியும் தன்மையுடையதாய் இருத்தலால், அதைத் தேர்ற்றுவித்தவன் ஒருவன் இருத்தல் வேண்டும் என்கின்றனர். உலகம் சடப்பொருள்; தானே தோன்றியிருக்க முடியாது. மண்ணிலிருந்து குடம் செய்வதற்குக் குயவன் ஒருவன் இருத்தல் போல இவ்வுலகைத் தோற்றுவித்தவன் ஒருவன் இருத்தல் வேண்டும் என்பர் சாத்திர நூலார்[9]. இவ்வுலகமானது தானே தோன்றியதன்று. ஒருவனால் தோற்றுவிக்கப்பட்டது என்ற காரணத்தினால்தான் மெய்கண்ட தேவர் சிவஞானபோதம் முதல் சூத்திரத்தில் 'தோன்றியதிதி' என்று சொல்லாமல் 'தோற்றியதிதி' என்கின்றார்.

திருஞானசம்பந்தரின் முன் இறைவன் தோன்றி ஞானப்பால் கொடுத்து ஆட்கொண்டதாக வரலாற்றில் கூறப்படுகின்றது. இவர் காட்சி அளவையால் கடவுளைக் கண்டவராகக் கருதப்படுவதால், பதி உண்மையை மெய்ப்பிக்க வேண்டிய அவசியம் அவருக்கு ஏற்படவில்லை எனலாம். சாத்திர நூல் தருக்க நூலாதலால் அதில் கடவுள் இல்லை என்று கூறும் பிற மதங்களின் கொள்கைகள் காரண

காரியங்களோடு மறுக்கப்பட்டுப் பதி உண்மை உரை அளவையால் மெய்ப்பிக்கப்பட்டுள்ளன.

## 5.2. பதியின் பெயர்கள் :

***5.2.1.*** திருஞானசம்பந்தர் தம் பாடல்களில் இறைவனை, 'சிவன்'[10], 'சிவனார்',[11] 'சிவம்'[12], 'சிவமூர்த்தி'[13], 'சைவன்'[14], 'சைவர்'[15], 'சைவனார்'[16], 'அரன்'[17], 'அரனார்'[18] 'சங்கரன்'[19], 'சங்கரர்'[20], 'சங்கரனார்'[21] ஆகிய சொற்களால் குறிப்பிடுகின்றார்.

***5.2.2.*** சாத்திர நூல்கள் தத்துவ ஆய்வு காரணமாகப் பெரும்பாலும் இறைவனைப் பெயர் சுட்டிக் கூறவில்லை. எனினும் அவை சில இடங்களில் இறைவனுக்குப் பெயர் சுட்டுகின்றன. அவ்வாறு சுட்டப்படும் பெயர்களுள் சில, 'அரன்'[22] 'சிவன்'[23], 'சங்கரன்'[24] என்பனவாகும்.

***5.2.3.*** இறைவன் உயிர்களின் வினையை நீக்குவதால் 'அரன்' என்றும், மங்கலக் குணத்தன் ஆதலால் 'சிவன்' என்றும்[25] உயிர்களுக்குச் சுகத்தைச் செய்வதால் 'சங்கரன்' என்றும்[26] கூறப்படுகின்றான்.

***5.2.4.*** ஒன்றாகிய பதியே பல பெயர்களால் அழைக்கப்படு-கின்றான்.

> *''ஆயிரம் பேர்மிக வுடையார்'' (2 : 230 : 5)*
>
> *''பேர் பலவுடையான்'' (2 : 176 : 5)*
>
> *''நாமநூ றாயிரஞ் சொல்லிவா னோர்தொழுநாதனும்''*
> *(3 : 265 : 5)*
>
> *''பாரினார் தொழுதெழு பரவுபல்லாயிரம் பேரினார்''*
> *(3 : 285 : 7)*

முதலிய திருஞானசம்பந்தரின் பாடல் தொடர்கள் இதனை வலியுறுத்துகின்றன.

பதி பல பெயர்களால் அழைக்கப்பட்டாலும் பொதுவாகச் சிவன் என்ற பெயரால் அழைக்கப்படுவதே சைவசமய மரபாகும்.

## 5.3. பதி அநாதி :

**5.3.1.** அநாதி என்ற சொல்லுக்குத் தோற்றமில்லாதது எனப் பொருள். அது என்றும் நிலைத்துள்ள நித்தப் பொருள் ஆகும்.

**5.3.2.** திருஞானசம்பந்தர் தேவாரத்தில் அநாதி என்ற சொல் இல்லை. அதற்குரிய பொருள் அமைந்த தொடர்கள் காணப்படுகின்றன.

*''பிறப்பாதி யில்லான்''(16 : 134 : 4)*

*''பிறப்பில் பெருமானைப் பின்றாழ் சடையானை''*
*(1 : 80 : 2)*

*''பிறவா தவ னேபிணி யில்லவனே'' (2 : 156 : 6)*

*''இறப்பில்லார் பிணியில்லார் தமக்கென்றும் கேடிலார்*
*பிறப்பிலாப் பெருமானார் பெருவேளூர் பிரியாரே''*
*(3 : 322 : 7)*

*''முன்னைப்பி றப்பிறப்பிலா தவர்'' (1 : 136 : 5)*

*''தோற்றங்கே டில்லாதவன்'' (2 : 178 : 9)*

என்று திருஞானசம்பந்தர் சிவனுக்குப் பிறப்பும் இறப்பும் இல்லை என்கிறார்.

**5.3.3.** சிவஞானசித்தியார் என்ற சாத்திர நூலும், சிவனே பிறப்பும் இறப்பும் இல்லாதவர்; ஏனைய தெய்வங்கள் பிறக்கும் இறக்கும் வேதனைப்படும் என்கிறது.[27]

**5.3.4.** அறிவாதார ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்ட சாத்திர நூல்கள் இறைவன் பிறம்பும் இறப்பும் இல்லாதவன் என்று கூறப்படுவதற்குரிய காரணத்தை ஆராய்ந்து கூறுகின்றன. உலகம் தோற்றம், நிலை, அழிவு என முத்தொழில்படுதலால், அவற்றைத் தொழிற்படுத்துகின்ற இறைவன் தோற்றமும் நாசமும் இல்லாதவனாய் இருத்தல் வேண்டும்.[28]

திருஞானசம்பந்தர் இறைவன் என்றும் நிற்றலையுடைய நித்தப் பொருள் என்ற பொருளில்,

"நிலையார் தரு நிமலன்" (1 : 17 : 2)

என்கிறார்.

இவ்வாறு திருஞானசம்பந்தர், பிறப்பும் இறப்பும் இல்லாத என்றும் உள்ள நித்தப் பொருள் என்று கூறும் இறை இயல்பானது, சைவசித்தாந்த நூல்களில் பதி 'அநாதி'[29] என்று கூற அடிப்படையாய் அமைகிறது எனலாம்.

சைவ சித்தாந்த உண்மைகளைப் பதி, பசு, பாசம் என மூவகைப்படுத்தி, இம்மூன்றும் அநாதி என்பது திருமூலர் காலத்திலும் கூறப்படுகின்றது.

*"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்*
*பதியினைப் போற்பசு பாசம் அனாதி"*[30]

என்கிறார் திருமூலர்.

*"ஏகன் அநேகன் இருள் கருமம் மாயையிரண்*
*டாக இவை ஆறாதி யில்"*[31]

என்ற திருவருட்பயனில் 'ஏகன்' என்ற சொல் பதியைக் குறிக்கின்றது.[32] அது 'ஆதி இல்' என்றது அநாதி என்ற உண்மையை உணர்த்தும்.

## 5.4. பதிஎங்கும் நிறைந்தது :

**5.4.1.** திருஞானசம்பந்தர்,

*"எங்குமாகி நின்றான்"(2 : 142 : 6)*

*"எங்குமாய் இருப்பார்"(3 : 370 : 7)*

*"எங்கும் பரவி"(1 : 74 : 5)*

என்று இறைவன் எங்கும் நிறைந்து நிற்றலைக் கூறுகிறார்.

**5.4.2.** "வானகமும் மண்ணகமு மாய்நிறைந்த வான்பொருளை"[33] என்று திருக்களிற்றுப்படியார் இறைவனை எங்கும் நிறைந்த பொருளாகக் கூறுகின்றது.

பாலில் நெய் போலவும், பழத்தில் சுவை போலவும், எள்ளில் எண்ணெய் போலவும் எங்கும் நிறைந்தவன் இறைவன் என்று அருணந்தி சிவாசாரியார் கூறுகிறார்.[34]

திருவருட்பயன் என்ற சாத்திர நூலும் அகரமாகிய உயிர், பிற எழுத்துக்கள் எல்லாவற்றிலும் பொருந்தி வேறற நின்றாற் போல, தனக்கோர் உவமை இல்லாத இறைவன் உலகு, உயிர் முழுவதும் நிரம்பி உள்ளான் என்று கூறுகின்றது.[35]

**5.4.3.** ஒன்றாகிய இறைவன் எங்கும் நிறைந்து நிற்றல் எவ்வாறு என்பது சிந்தித்தற்குரியது. கதிரவன் ஒன்றுதான். ஆனால் அதனுடைய சக்தி (கதிர்ஒளி) உலகெங்கும் நிறைந்துள்ளது. அதுபோல ஒன்றாகிய இறைவனின் சக்தி உலகெங்கும் நிறைந்து நிற்றலால் இறைவனை எங்கும் நிறைந்தவர் என்கின்றனர்.

## 5.5. பதி உலகிற்கு ஆதி, நடு, அந்தம் ஆவது :

**5.5.1.** திருஞானசம்பந்தர் தம் பாடல்களில்,

*"ஆதியந்த மாயினாய்" (3 : 310 : 7)*

*"ஆதியாய் நடுவா யந்தமாய் நின்ற வடிகளார்"*
*(3 : 377 : 6)*

*"அந்த நீர்முத னீர்நடு வாமடி கேள்" (2 : 138 : 7)*

*"அந்த மாயுல காதியு மாயினான்" (3 : 303 : 1)*

*"அந்த முதலாகி நடுவாய பெருமானை"(2 : 165 : 11)*

*"அந்தமுமாதியு மாகிய வண்ணலார்" (1 : 39 : 1)*

*"தோற்றமீறு மாகி நின்றாய்" (1 : 51 : 5)*

என்று இறைவன் உலகிற்கு ஆதி, நடு, அந்தம் ஆனவன் என்கின்றார்.

அவனே யாவற்றையும் தோற்றுவிக்கும் முதல்வனாதலின் ஆதி என்றும், அவுனே யாவும் நிலைத்து நின்று இயங்கக் காரணன் ஆதலின் நடு என்றும், அவனே யாவற்றையும் தன்பால் ஒடுங்கச் செய்தலின் அந்தம் என்றும் கூறுகிறார். இவ்வாறு ஒருவனே படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில் செய்வதும் உணர்த்தப்படுகின்றது.

**5.5.2.** இதனையே மெய்கண்ட தேவரும் சங்காரகாரணணாகிய கடவுளே உலகிற்குத் தோற்றகாரணர் ஆவார் என்ற பொருளில்,

*"அந்தம் ஆதி என்மனார் புலவர்"*[36]

என்கிறார்.

வழிநூலாகிய சிவஞானசித்தியார் சங்காரகாரணான கடவுளே உலகிற்குத் தோற்ற காரணன் ஆக முடியும் என்பதற்குரிய காரணத்தை விளக்குகின்றது. சங்கார காலத்தில் படைத்தல் தொழிலைச் செய்யும் பிரமனும், காத்தல் தொழிலைச் செய்யும் திருமாலும் தத்தம் ஆற்றலோடு இருப்பாரேயானால் உலகம் சங்காரம்

ஆகாது. சங்காரக் கடவுளோ சிலவற்றை அழித்துச் சிலவற்றை அழிக்காமல் விடுபவன் அல்லன். எல்லாவற்றையும் அவன் அழித்துவிட்டால் எஞ்சி நிற்பவன் அவன் ஒருவனே. எனவே அவனே ஒடுங்கிய உலகத்தை மீண்டும் தோற்றுவிக்க முடியும் என்பது உணர்த்தப்படும்.[37] எனவே படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களையும் செய்பவன் ஒருவனே என்பது காரணத்துடன் சிவஞான சித்தியாரில் விளக்கப்படுகின்றது.

**5.5.3.** இறைவன் ஆதி, நடு, அந்தம் ஆனவர் என்று திருஞானசம்பந்தர் கூறும் கருத்து சங்காரகாரணனே தோற்றக் காரணனாகி முத்தொழில் புரிவதாகச் சாத்திர நூல்களில் கூற அடிப்படையாய் அமைகின்றது எனலாம்.

## 5.6. பதியின் தலைமை :

முப்பொருட்களுள் பதியாகிய இறைவனே தலைமைப் பொருள் ஆவான்.

**5.6.1.**

*"உயிர்கட்குமுன் றலையானவன்" (1 : 11 : 5)*

*"தாயினு நல்ல தலைவரென் றடியார் தம்மடி*
*போற்றிசைப்பார்கள்"(3 : 381 : 5)*

என்ற திருஞானசம்பந்தரின் தொடர்கள் இறைவன் உயிர்களுக்குத் தலைவன் என்ற உண்மையை உணர்த்தும்.

திருஞானசம்பந்தர் குறிப்பிடும் 'முதல் மூர்த்தி' (3 : 266 : 8), 'முதல்வர்' (1 : 68 : 4, 1 : 79 : 10), 'முதல்வன்' (1 : 32 : 9, 1 : 42 : 2) என்ற சொற்களும் இறைவனின் தலைமைப் பண்பை உணர்த்தும்.

திருஞானசம்பந்தர் இறைவனைப் 'பசுபதி' (1 : 22 : 5, 1 : 42 : 6), பசுபதியார், (3 : 379 : 1 - 9) என்று சில இடங்களில் குறிப்பிடுகின்றார்.

சைவ சித்தாந்தத்தில் உயிர், பசு என்ற சொல்லாலும், முழு முதற் பொருளான இறைவன், பதி என்ற சொல்லாலும் குறிப்பிடப் படுகின்றனர். எனவே பசுபதி என்ற சொல் உயிர்களின் தலைவன் இறைவன் என்ற உண்மையை உணர்த்தும்.

"பசுபதி அல்லது உயிர்கட்குத் தலைவன் என்ற கொள்கையின் பருப்பொருள் உருவகமே விடை ஏறிய வடிவம் ஆகும்" என்பார் துரை அரங்கனார்[38]

**5.6.2.** மூவகைப் பொருட்களுள் இறையே மேலான தலைமைப் பொருள் என்பதைச் சிவப்பிரகாசம் "பதி பரமே"[39] என்று கூறுகின்றது.

"மேல் ஒருவன் இல்லாதவன் எங்கள் இறை"[40] என்ற திருவருட்பயனும் பதியின் தலைமைப் பண்பை உணர்த்தும்.

## 5.7. பதியின் வடிவம் :

பதியின் வடிவம் உருவம், அருவம், அருவுருவம் என்ற மூன்று வகையினுள் அடங்கும்.

### 5.7.1. உருவ வடிவம் :

பொதுவாகத் திருஞான சம்பந்தர் பாடல்கள் ஒவ்வொன்றிலும் இரண்டடிகள் இறைவனைப் பற்றிய வருணனையாகவும், இரண்டடிகள் இயற்கை வருணனையாகவும் அமைந்துள்ளன.

**5.7.1.1.** திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்டவுடன் பாடிய பதிகமாகக் கருதப்படுகின்ற "தோடுடைய செவியன்" (1 : 1 : 1) என்ற பதிகத்தில் "தூவெண் மதிசூடி" (1 : 1 : 1), "காடுடைய சுடலைப்பொடி பூசி" (1 : 1 : 1) என்றும், நாகத்தையும் ஆமை ஒட்டையும் அணிந்தவன்(1 : 1 : 2), கொன்றை மாலையை அணிந்தவன் (1 : 1 : 4) என்றும் இறைவனின் உருவ வருணனை காணப்படுகின்றது.

**5.7.1.2.** சைவசித்தாந்த நூல்களில் அங்க அடையாளங்களுடன் கூடிய இறைவனின் உருவம் கூறப்படவில்லை. ஆனால் உமாபதிசிவம் தம் போற்றிப்பஃறொடை நூலில் தமது ஆசிரியரை இறைவனாகப் போற்றுமிடத்தில் இறைவனின் உருவ வருணனையைக் குறிப்பிடுகின்றார்.[41]

திருஞானசம்பந்தர் இறைவனின் உருவத் திருமேனியை மிகுதியாகப் பாடியுள்ளதன் காரணம் சிந்தித்தற்குரியது. திருஞானசம்பந்தர் பாடல்கள் அவருடைய அனுபவ வெளிப்பாடாகும். எனவே இறைவனின் அருட்டிருமேனியில் அவர் கொண்ட காதலனுபவத்தால் அவ்வாறு பாடுகிறார் எனலாம்.

மேலும் உருவமில்லாத ஒரு பொருளை மக்கள் நினைக்கவோ, மனத்தில் இருத்தவோ, வழிபடவோ முடியாது. எனவே திருஞானசம்பந்தர் தம்கால மக்கள் இறைவனை மனத்தில் நினைந்து வழிபடுமாறு செய்ய இறைவனைப்பற்றிய உருவ் வருணனையை மிகுதியாகக் கூறுகிறார் எனலாம்.

'அருவமாகிய கடவுள் உயிர்கள் உணர்ந்து உய்ய உருவமாகி வருகின்றான்'[42] என்ற திருவுந்தியார் கருத்து இங்குச் சிந்திக்கத் தக்கது.

**5.7.2.** அம்மையப்பர் வடிவம் :

அம்மையைத் தனியே இடப்பக்கத்தில் கொண்ட இறைவனின் வடிவம் அம்மையப்பர் வடிவம் எனப்படும். 5.7.2.1.

*"ஆணும் பெண்ணும் என நிற்பர்" (2 : 251 : 7)*

*"ஆணும் பெண்ணுமாகிய....அண்ணலார்"(3 : 311 6)*

*"ஆணும் பெண்ணுமாய் அடியார்க்கு அருள் நல்கி"*
*(1 : 84 : 5)*

*"பார்ப்பதி பாகன்"(2 : 241 : 9)*

என்ற திருஞானசம்பந்தரின் பாடல் தொடர்கள் இறைவனின் அம்மையப்பர் வடிவை விளக்கும்.

**5.7.2.2.** "அம்மையப்ப ரேஉலகுக் கம்மையப்பர்"[43] என்று திருக்களிற்றுப்படியாரில் கூறுவதற்குத் திருஞானசம்பந்தர் இறை-வனை அம்மையப்பராகப் பாடுவது ஏதுவாகிறது எனலாம்.

### 5.7.3. அர்த்தநாரீசுவரர் வடிவம் :

**5.7.3.1.** அம்மையைத் தனியே இடப்பக்கத்தில் கொள்ளாமல், தன் உடம்பில் ஒரு பாதியாகக் கொண்ட இறைவனின் வடிவம் அர்த்தநாரீசுவரர் வடிவம் ஆகும். அர்த்தநாரீசுவரர் என்பதற்குப் பாதி மாதுடைய பரமன் என்பது பொருளாகும்.[44]

**5.7.3.2**

*"ஏறி லெருதேனு மெழிலா யிழையோடும்*

*வேறும் முடனுமாம் விகிர்த ரவரென்ன"(1 : 86 : 2)*

என்ற தொடரில் வேறாதல் என்றது அம்மையை இடப்பக்கத்தில் கொண்டிருத்தலையும், உடனாதல் என்றது தன் மேனியில் ஒரு பங்காய்க் கொண்டிருத்தலையும் குறிக்கும் என்பர்.[45]

*"பாதி பெண்ணுரு ஆவர்"(1 : 135 : 3)*

*"ஒருடம்புள்ளே யுமையொருபாக முடனாகி"(1 : 100 : 3)*

*"ஆயிழை யாளோர் கூறான்" (2 : 171 : 5)*

*"ஒருமை பெண்மை யுடையவன்" (1 : 1 : 5)*

*"ஒருடம்பினை யீருரு வாகவே" (3 : 372 : 10)*

என்று திருஞானசம்பந்தர், இறைவனும் சக்தியும் ஒருருவில் இருக்கும் அர்த்தநாரீசுவர வடிவம் பற்றிக் கூறுகிறார்.

*"தோடுடைய செவியன்" (1 : 1 : 1)*

*"எந்தாய் என இருந்தான்" (1 : 17 : 5)*

என்ற தொடர்களும் அர்த்த நாரீசுவர வடிவை உணர்த்தும்.

**5.7.3.3.** இந்த அர்த்தநாரீசுவர வடிவமானது,

*"முதலுருப் பாதி மாதர் ஆவது முணரார்"*[46]

என்று சிவஞானசித்தியாரில் கூறப்படுகின்றது.

முதற்பொருள் இவ்வாறு இருதிறப்பட்டுப் பிரிவின்றி நிற்றல்,

*"தாரத்தோ டொன்றாவார் தாரத்தோர் கூறாவர்*
*தாரத்தோ டெங்கும் தலை நிற்பர்"*[47]

என்று சிவஞானசித்தியாரில் கூறப்படுகின்றது.

இறைவனுக்கும் சக்திக்கும் உள்ள தொடர்பானது,

*".......... ஆணையின்*
*நீக்கம் இன்றி நிற்கும் அன்றே"*[48]

என்று சிவஞான போதத்தில் கூறப்படுகின்றது. இங்கு 'ஆணை' என்ற சொல் சிற்சக்தியைக் குறித்து இறைவனுக்கும் சக்திக்கும் உள்ள பிரிப்பில்லாத தன்மையை விளக்கும். இதனைத் தாதான்மிய சம்பந்தம் என்பர்[49].

உமாபதிசிவம்,

*"......... சக்தி*
*பின்னமிலான் எங்கள் பிரான்"*[50]

என்று திருவருட்பயனில் கூறுகிறார். இதில் 'பின்னமிலான்' என்றதற்கு இறைவன் சக்தியோடு வேறுபடப் பிரிதலில்லாதவன் எனப் பொருள் கூறுவர்.[51]

**5.7.3.4.** திருஞானசம்பந்தர் தேவாரத்தில் கூறப்படும் அர்த்த-நாரீசுவர வடிவம் பற்றிய கருத்தே, சாத்திர நூல்களில் சக்தி 'குணமும், குணியும்' போல இறைவனின் ஞானமாக, அருளாகப் பேசப்படு கின்றது.

*"அருளது சக்தி யாகும் அரன் தனக் கருளை யின்றித்*
*தெருள்சிவ மில்லை அந்தச் சிவமின்றிச் சக்தியில்லை"*[52]

என்றும்,

*"சக்திதன் வடிவே தென்னில் தடையிலா*
*ஞானமாகும்"*[53]

என்றும் சிவஞானசித்தியாரில் கூறப்படுவது இதற்குச் சான்றாகும்.

திருஞானசம்பந்தர் சக்தியைப் பெண்ணாக இறைவனோடு இணைத்து அதிகம் பாடுவதன் காரணம் சிந்தித்ததற்குரியது. திருஞான சம்பந்தருக்கு மூன்று வயதாக இருக்கும் பொழுது இறைவன் அம்மையப்பர் வடிவில் தோன்றி ஞானப்பால் கொடுத்து ஆட்கொண்டதாகக்கூறப்படுவது ஒரு காரணம் ஆகலாம்.

மேலும், திருஞானசம்பந்தர் காலத்தில் சமணமும் பௌத்தமும் செல்வாக்குப் பெற்றிருந்தன. அவ்விரு மதத்தாரும் இல்லறத்தைப் பழித்துத் துறவறத்தை மேன்மைப்படுத்திப் பேசினர். அவர்கள் இல்லறத்தார்க்கு வீடுபேறு இல்லை என்ற கொள்கை உடையவர்கள்.[54] எனவே அக்காலச் சூழ்நிலையில் இல்லறத்தைப் போற்றிப் பெண்மையை உயர்த்திக் காட்டவும், இல்லறத்தார்களும் வீடுபேறு அடையலாம் என்பதை உணர்த்தவும் திருஞானசம்பந்தர் அவ்வாறு பாடியிருக்கலாம். கழுமல நகரில் இறைவன் பெண்ணோடு காட்சியளிப்பது மண்ணில் உயிர்கள் நல்ல வண்ணம் வாழ்ந்து சிவகதி அடைய என்ற பொருள்படும்படி அவர் பாடிய பாடலே (3 : 282 : 1) இதற்குச் சான்றாகும்.

**5.7.4.** உருவத் திருமேனியின் வகைகள் :

**5.7.4.1.** அருணந்தி சிவாசாரியார் தம் பாடல்களில் இறைவனின் உருவ வடிவத்தைப் போக வடிவம், வேக வடிவம், யோக வடிவம் எனப் பாகுபடுத்திப் பேசுகிறார்.[55] திருஞானசம்பந்தர் இவ்வாறு மூவகையாகப் பாகுபடுத்தாவிடினும் பின்னால் நிகழ்ந்த இப்பாகு பாட்டிற்கு முன்னோடியாக இறைவனது பல வடிவங்களைக் கூறுகிறார்.

**5.7.4.2.** திருஞானசம்பந்தர் பாடல்களில் வரும் அம்மையப்பர் வடிவமும், அர்த்தநாரீசுவர வடிவமும் சிவஞானசித்தியாரில் போக வடிவம் எனக் குறிப்பிடப்படுகின்றன எனலாம்.

*திருஞானசம்பந்தர்,*

இறைவன் திரிபுரம் எரித்தது (2 : 205 : 6, 1 : 112 : 6) யானைத்தோல் உரித்தது (2 : 253 : 5, 2 : 238 : 2), காலனை உதைத்தது (1 : 99 : 7, 1 : 113 : 6) என்று கூறும் வீரச்செயல்கள் சிவஞானசித்தியாரில் கூறப்படும் வேக வடிவத்திற்கு அடிப்படையாகின்றது எனலாம்.

திருஞானசம்பந்தர், இறைவன் ஆலின் கீழிருந்து அறம் உரைத்த செய்தியைக் (1 : 131 : 7, 2 : 225 : 8) கூறுவது சிவஞானசித்தியாரில் கூறப்படும் யோக வடிவத்தில் அடங்கும்.

**5.7.4.3.** திருஞானசம்பந்தர் பல உருவ வடிவங்களைக் கூறினாலும் அவற்றைப் பாகுபடுத்திக் கூறவில்லை. சிவஞானசித்தியாரில் உருவ வடிவம் பாகுபடுத்திக் கூறப்பட்டுத் தத்துவ விளக்கமும் தரப் பட்டுள்ளது.

**5.7.5.** பல வடிவங்கள் :

திருஞானசம்பந்தர் பாடல்களில் வரும் புராண வரலாறுகளை அடிப்படையாகக் கொண்ட திருச்சின்னங்களுடன் கூடிய உருவம்

மட்டும்தான் சிவனுடைய உருவம் என்றில்லை. அவருக்கு வேறு பல வடிவங்களும் உண்டு.

**5.7.5.1.** *"வடிவு மாயிர முடையார் வண்ணமு மாயிர முடையார்"(2 : 230 : 3)*

*"கோலமும் பலபல வுடையார்" (2 : 230 : 6)*

என்ற திருஞானசம்பந்தரின் வாக்குகள் இதனை வலியுறுத்தும்.

*"நானாவித உருவாய் நமை யாள்வான்"(1 : 9 : 5)*

என்ற தொடரும் இறைவன் வேறு பல உருவங்களை எடுக்கும் வல்லமை உடையவர் என்பதைப் புலப்படுத்தும்.

*திருச்சோற்றுத்துறைப் பதிகத்தில்,*

*"நீதி நின்று நினைவார் வேடமாம் ஆதி"(1 : 28 : 10)*

என்ற திருஞானசம்பந்தரின் தொடருக்குச் சிவாகம நெறிக்கண் நின்று தியானிப்பவர்களுக்குத் தியானித்த உருவில் சென்று அருளும் முதல்வன் எனப் பொருள் கூறுவர்.[56]

**5.7.5.2.** பல வடிவங்களில் இறைவன் தோன்றும் இயல்பினை அருணந்தி சிவாசாரியார்,

*"பெருங் கடவுள் தானும்*

*எண்ணிய யோக சித்தர் போலுரு இசைப்பன் காணே"*[57]

என்கின்றார். ஆனால் யோகசித்தருக்கும் இறைவனுக்கும் வேறுபாடு உண்டு. யோகசித்தர் நினைந்த வடிவங்கொள்வது முதல்வனது அருளாலேயாகும். யோகசித்தர் வடிவம் மாயகாரிய வடிவமாகும். இறைவனது அருள்வடிவமாகும்.

**5.7.5.3.** இறைவனுக்குப் பல உருவம் உண்டு என்று திருஞானசம்பந்தர் கூறும் கருத்து சாத்திர நூலில் பின்வருமாறு விளக்கிக் கூறப்படுகின்றது. இறைவன் தான் குறித்த ஒன்று

ஆகமாட்டாத குறைவை உடையவரல்லர். அவர் நெறிப்பட நிறைந்த ஞானமும், ஐவகைத் தொழிலும் உடையவர். விருப்பு வெறுப்புகள் இல்லாதவர். அவர் அளவிலாற்றலும், முற்றறிவும், இயல்பாகவே பாசத்தின் நீங்கிய தன்மையும், பேரருளும் உடையவராதலால் உயிர்கள் மீது கொண்ட கருணையினால் அவ்வுயிர்கட்கு நலம் புரிதல் பொருட்டுத் தாம் நினைக்கின்றபடியெல்லாம் பல திருவுருவங்களை எடுத்துக்கொள்ள வல்லவர் என்று அருணந்திசிவாசாரியார் கூறுகின்றார்.[57அ]

**5.7.6.** உருவ வடிவம் கொள்ளக் காரணங்கள் :

இறைவனின் உருவ வடிவம் திருஞானசம்பந்தரின் பாடல்தோறும் வெளிப்படையாகக் கூறப்பட, இறைவன் உருவம் எடுப்பதற்கான காரணங்கள் சில பாடல்களில் குறிப்பாக உணர்த்தப் படுகின்றன.

**5.7.6.1.** *''மலைமலி மங்கை பாகம் மகிழ்ந் தானெழில்*
*வையமுய்ய''(3 : 317 : 7)*

என்பதற்கு வையம் உய்ய மங்கை பாகமாக இறைவன் இருப்பதாகக் கூறுவர்.[58]

*''மங்கை யொருபாகமாக*
*வருள்காரணங்கள் வருவான்'' (2 : 223 : 3)*

என்று உயிர்களுக்கு அருள் செய்யவே இறைவன் வடிவெடுத்து வருவதாகத் திருஞானசம்பந்தர் கூறுகின்றார்.

அருணந்தி சிவாசாரியார்,

*''அருளுரு உயிருக் கென்றே ஆக்கினன் அசிந்த*
*னன்றே''[59]*

என்று இறைவன் உருவம் கொள்வது உயிர்களின் பொருட்டு என்பதை உணர்த்துகின்றார்.

**5.7.6.2.**

*"தரைமுதல லுலகினி லுயிர்புணர் தகைமிக*
*விரைமலி குழலுமை யொடுவிர வதுசெய்து" (1: 123: 6)*

என்ற திருஞானசம்பந்தரின் பாடல் தொடருக்குப் பிருதிவியண்டம் முதலான பல்வேறு அண்டங்களில் வாழும் உயிர்கள் யாவும் போகம் நுகரத் தாம் போகியாய் இருந்து உமாதேவியோடு பொருந்துகின்ற இறைவன் எனப் பொருள் கூறுவர்.[60]

இக்கருத்திற்கு ஒப்பாகச் சிவஞானசித்தியாரிலும்,

*"போகியா யிருந்து யிர்க்குப் போகத்தைப் புரிதல்"*[61]

என்று கூறப்படுகின்றது.

**5.7.6.3.** திருஞானசம்பந்தர் பாடல்களில் வரும் அட்டவீரட்டச் செயல்கள் உயிர்களின் வினையை நீக்க இறைவன் அடர்த்துச் செய்யும் அருட் செயல்கள் என்ற உண்மையைக் குறிப்பால் உணர்த்தும்.

அருணந்தி சிவாசாரியார் இறைவன் வேக வடிவம் கொள்வது உயிர்களின் வினையை நீக்க என்கின்றார்.[62] மேலும், தவறு செய்யும் உயிர்களைத் தண்டித்துத் திருத்தி அருள் செய்ய இறைவன் வேக வடிவம் எடுக்கின்றான்.

**5.7.6.4.** இறைவன் ஆலின் கீழமர்ந்து நால்வருக்கு அறம் உரைத்ததாகத் திருஞானசம்பந்தர் கூறும் செய்தி (1 : 13 : 7), வேதாகமங்களை உபதேசித்து உயிர்களை வீடுபேறு அடையும்படிச் செய்ய இறைவன் உருவம் எடுக்கின்றான் என்ற பொருளில்,

*"ஆரணம் ஆக மங்கள் அருளினால் உருவு கொண்டு*
*காரணன் அருளா னாகில் கதிப்பவ ரில்லை யாகும்"*[63]

என்று சிவஞானசித்தியாரில் கூற அடிப்படையாகின்றது எனலாம்.

**5.7.6.5.** மேலும் அருணந்தி சிவாசாரியார் இறைவன் பஞ்ச கிருத்தியம் செய்ய உருவம் எடுப்பதாகக் கூறுகிறார்.[64]

பின்வரும் அட்டவணை இறைவனின் வடிவ வகைகள், பெயர்கள், அவ்வடிவு எடுக்கக் காரணம், அது உணர்த்தும் தத்துவம் இவை பற்றிய செய்திகளை உணர்த்துகின்றது.

| எண் | வடிவம் | பெயர் | காரணம் | தத்துவம் |
|---|---|---|---|---|
| 1. | போக வடிவம் | அம்மையப்பர் அர்த்தநார் சுவரர் | உயிர்கள் உலக இன்பத்தை நுகர, இல்லாவிடில் உயிரினம் அழிந்து விடும். | இல்லறத்தி லிருந்தும் பக்தி நெறியைக் கடைப் பிடிக்கலாம். |
| 2. | வேக வடிவம் | திரிபுரசம்மாரர் கசசம்மாரர் காலசம்மாரர் | குற்றம் புரிபவரை ஒறுக்க | உயிர்களின் பாவங்களை ஒழித்தல், இது இறைவனின் மறக்கருணை எனப்படும். |
| 3. | யோக வடிவம் | தென்முகக் கடவுள் பிட்சாடனர் | உயிர்களின் அஞ்ஞானத் தைப் போக்கி மெய்ஞ்ஞானத் தைத் தர | உயிர்கள் போகத்திலேயே மூழ்கி இராமல் யோகநெறி மேற்கொண்டு உய்ய வேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்தும். |

## 5.7.7. இறைவனின் உருவத்திற்கும், உயிர்களின் உருவங் களுக்குமுள்ள வேறுபாடுகள் :

திருஞானசம்பந்தரும், அருணந்தி சிவாசாரியாரும் இறைவனின் உருவத்தை பின்வரும் தன்மைகளினால் உயிர்களின் உருவத்திலிருந்து வேறுபட்டது என விளக்குவர்.

**5.7.7.1.** திருஞானசம்பந்தர், உயிரின் உருவத்தை 'மாய காயம்' (1 : 50 : 7) என்றும், இறைவனின் உருவத்தை 'ஞானத்திறள்' (1 : 69 : 3) என்றும், 'ஞானப்பொருள்' (1 : 38 : 3) என்றும் கூறுகிறார். இதனையே அருணந்தி சிவாசாரியாரும் இறைவனின் வடிவத்தை 'அருளுரு'[65] என்றும், "காயமோ மாயையன்று காண்பது சக்தி தன்னால்"[66] என்றும் கூறுகிறார். எனவே உயிர்களின் உருவம் மாயாகாரிய வடிவம் என்பதும், இறைவனின் உருவம் மாயாகாரிய வடிவமன்று, அருள் வடிவமாகும் என்பதும் புலப்படும்.[67]

**5.7.7.2.** உயிர்களுக்குரிய பிறப்பு இறைவனால் கொடுக்கப் படுவதாக திருஞானசம்பந்தர் கூறுகின்றார். (1 : 132 : 4, 1 : 79 : 6). அருணந்தி சிவாசாரியார் உயிர்களுக்கு உருவம் தர ஒருவன் வேண்டும் என்றும், இறைவனுக்கு உருவத் திருமேனி தர ஒருவன் வேண்டாம் என்றும் கூறுகிறார்.[68]

**5.7.7.3.** உயிர்களுக்குப் பிறப்பு வினையினால் அமைவதையும் (1 : 16 : 5), இறைவன் பல வடிவங்களை எடுப்பதையும் (1 : 13 : 2) திருஞானசம்பந்தர் கூறுகின்றார். அருணந்தி சிவாசாரியார் உயிர்கள் தாம் விரும்பிய வடிவத்தை எடுக்க முடியாது என்றும், இறைவன் தான் விரும்பிய வடிவத்தை எடுப்பான் என்றும் கூறுகின்றார்.[69]

**5.7.8.** மூவகை வடிவநிலை :

**5.7.8.1.** இறைவனுக்கு உருவநிலை மட்டும் அல்லாமல் அருவநில்லையும், அருவுருவ நிலையும் கூறப்படும். "உருவம் காட்சியால் அறியப்படுவது, அருவம் என்பது காட்சி அளவையால் அறியப்படாது, கருதலளவையால் அறியப்படுவது. அருவுருவம் என்பது ஒரு கால் காட்சியால் அறியப்பட்டும், ஒரு கால் காட்சியால் அறியப்படாமலும் இருப்பது" என்பார் அருணைவடிவேல் முதலியார்.[70]

இதனால் உருவம் என்பது கண்ணுக்குப் புலனாவது, அவயப்பகுப்பு உடையது என்றும், அருவம் கண்ணுக்குப் புலனாகாதது என்றும், அருவுருவம் கண்ணுக்குப் புலனாவது; அவயப்பகுப்பு இல்லாதது என்றும் கூறலாம்.

**5.7.8.2.** திருஞானசம்பந்தர் இறைவனின் உருவம் கூறுவதோ டல்லாமல்,

*''அருவன் ஆலவாய்''(1 : 94 : 9)*

என்று இறைவன் அருவமானவன் எனக் கூறுகிறார்.

*''அழல்போல் உருவன்''(2 : 253 : 8)*
*''அனலுருவினன்''(1 : 19 : 2)*
*''ஓதி யாருமறி வாரிலை யோதி யுலகெலாம்*
*சோதி யாய்நிறைந் தான்சுடர்ச் சோதியுட் சோதியான்''*
*(1 : 142 : 7)*

என்று திருஞானசம்பந்தர் கூறுவது இறைவனின் அருவுருவ நிலையை உணர்த்தும் எனலாம். ஏனெனில் சோதியும் நெருப்பும் கண்ணுக்குப் புலனாகும்; ஆனால் அவயப் பகுப்பு இல்லாதவை.

இறைவனின் இலிங்கவடிவமும் அருவுருவ நிலையைக் குறிக்கும் எனலாம்.[71]

**5.7.8.3.** இறைவனின் உரு, அரு, அருவுரு நிலைகளை,

*''அருவமும் உருவா ரூபம் ஆனது மன்றி நின்ற*
*உருவமும் மூன்றுஞ் சொன்ன ஒருவனுக் குள்ள*
*வாமே''*[72]

என்று அருணந்தி சிவாசாரியாரும், மெய்யுணர்ந்தவர்க்கு ஞானமே தன் இயல்பாக விளங்கி நிற்கும் முதல்வன், ஏனையார்க்கு அருவம்,உருவம், அருவுருவம் என்ற மூன்று திருமேனிகளை உடையவனாய் இருக்கின்றான்[73] என்று உமாபதிசிவமும் கூறுகின்றனர். இவ்வாறு மூவகைத் திருமேனிகள் கூறப்படுவதற்குரிய

காரணம் சிந்தித்தற்குரியது. உயிர்களின் பக்குவநிலையில் காணப்படும் வேறுபாடே அதற்குக் காரணமாகும்.

**5.7.8.4.** திருஞானசம்பந்தர் இவ்வாறு மூவகை நிலலைகளாகப் பாகுபடுத்திக் கூறாவிடினும், சாத்திர நூலாசிரியர்கள் பாகுபடுத்திக் கூறுவதற்கு அவருடைய பாடல்கள் கருப்பொருளாகின்றன எனலாம்.

சாத்திர நூலார், இறைவனின் இம்மூவகை நிலை அவனை உலகப் பொருட்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது என்பர்.[74]

**5.7.8.5.** இறைவனுக்கு உருவம் கூறப்பட்டாலும் அவன் உலகப் பொருட்களுள் ஒருவனாக இல்லாது வேறுபட்டவன் என்பதை 'உலகாதிகன்', 'உலக காரணன்', 'உலக ரூபி', 'உலகாந்தர்யாமி' என்ற சொற்றொடர்களால் வேதங்கள் கூறும். இக்கருத்துக்கள் திருஞான சம்பந்தர் பாடல்களிலும், சிவஞானசித்தியாரிலும் கூறப்படுகின்றன.

'உலகாதிகன்' என்றதற்கு இறைவன் உலகைக் கடந்து நின்றவன் என்பது பொருளாகும். திருஞானசம்பந்தர்; திருமாலும் பிரமனும் அடிமுடி காண முடியாதபடி இறைவன் நின்றதாகக் கூறும் செய்தியானது, அருணந்தி சிவாசாரியார் "உலகினை இறந்து நின்ற தரன் உரு"[75] எனக் கூற ஏதுவாகிறது எனலாம்.

'உலக காரணன்' என்றதற்கு இறைவன் தன்னிடத்திலிருந்து உலகம் தோன்றவும் ஒடுங்கவும் காரணமாயுள்ளவன் என்பது பொருளாகும்.

*"தாங்கரும் காலம் தவிர வந்திருவர்*
*தம்மொடுங் கூடினார் அங்கம்*
*பாங்கினால் தரித்துப் பண்டுபோல் எல்லாம்*
*பண்ணிய கண்ணுதற் பரமர்"* ***(3 : 377 : 4)***

என்ற பாடலில் திருமால், பிரமன் இவர்களது வாழ்நாள் முடிந்தபின் இறந்த அன்னாரது எலும்பினைத் தான் அணிந்து, அழிந்த உலகங்களை முன்போல் மீளவும் படைத்தளிக்க வல்லவன் சிவன்

எனத் திருஞானசம்பந்தர் கூறுவது இறைவன் உலக காரணன் என்பதை விளக்கும்.

*''விரிந்தனைகுவிந்தனை விழுங்குயிருமிழ்ந்தனை''*
*(2 : 166 : 3)*

என்ற தொடர் உலகம் அவனிடமிருந்து விரிந்து தோன்றுதலையும், ஒடுங்குதலையும் உணர்த்தும். இதனை அருணந்தி சிவாசாரியார்,

*''உலகவ னுருவில் தோன்றி ஒடுங்கிவிடும்''*[76]

என்கின்றார்.

இறைவன் உலகப் பொருட்களில் நிறைந்து நிற்றலால் அவனை 'உலகரூபி' என்பர்.

*''வேதி யாகிவிண் ணாகிமண் ணோடெரி காற்றுமாய்*
*ஆதியாகிநின் றான்''(2 : 14 : 7)*
*''மண்ணும் புன லுயிரும்வரு காற்றுஞ் சுடர் மூன்றும்*
*விண்ணும் முழு தானானிடம் வீழிம்மிழ லையே''*
*(1 : 11 : 4)*

என்று திருஞானசம்பந்தர் கூறுவது இறைவன் ஐம்பூதங்களிலும், எட்டுப் பொருட்களிலும், நிறைந்து நிற்றலை உணர்த்தும். ஐம்பூதங்களோடு சூரியன், சந்திரன், உயிர் இம்மூன்றையும் சேர்த்து எட்டுப் பொருட்களிலும் இறைவன் நிறைந்து நிற்றலை அட்டமூர்த்தம்[77] என்பர். இறைவன் அட்டமூர்த்தமாய் உள்ளதை,

*''அட்டமூர்த்தி''(2 : 253 : 8)*
*''அட்டமூர்த்தியனே''(2 : 309 : 4)*

என்கிறார் திருஞானசம்பந்தர்.

இதனை அருணந்தி சிவாசாரியார், 'உலகுமாய் நின்றது'[78] எனக் குறிப்பிடுகின்றார்.

'உலகாந்தர்யாமி' என்றதற்கு இறைவன் உலகிற்கும் உயிர்களுக்கும் உயிராய் உள்ளான் எனப் பொருளாகும். இக்கருத்தை,

*"உலகுக் குயிராய் நின்றான்" (3 : 306 : 6)*

*"ஒருத்தன்மற் றெல்லா வுயிர்கட்கு முயிராயுளன்"*

*(3 : 377 : 3)*

*"உயிருக்குயிரா யங்கங்கே நின்றான்" (1 : 132 : 4)*

என்ற திருஞானசம்பந்தர் தொடர்கள் வலியுறுத்தும். இதனை அருணந்தி சிவாசாரியார் 'உலகினுக் குயிரு மாகி'[79] என்கின்றார்.

இறைவனுக்கு உருவம் கூறப்பட்டாலும், அவன் உலகப் பொருட்களில் ஒருவன் அல்லன் என்பது விளக்கப்படும். 'உலகினை இறந்து நின்ற தரன் உரு'[80] எனத் தொடங்கும் சிவஞானசித்தியாரின் பாடல் கருத்துக்களுக்குத் திருஞானசம்பந்தர் பாடல்கள் கருப்பொருளாகின்றன.

## 5.8. பதியின் தொழில்கள் :

**5.8.1.** பதியின் தொழில்களை முத்தொழில் என்றும், ஐந்தொழில் என்றும் வகைப்படுத்திக் கூறுவர். முத்தொழில் என்றது படைத்தல், காத்தல், அழித்தலைக் குறிக்கும். இவற்றுடன் மறைத்தலையும், அருளலையும் சேர்த்து ஐந்தொழில் என்பர்.

**5.8.2.**

*"பேருலகம் படைத்தளிக்கும் பெருமான்"*

*(1 : 132 : 5)*

என்று திருஞானசம்பந்தர் இறைவனின் படைத்தல் தொழிலையும், காத்தல் தொழிலையும் குறிப்பிடுகின்றார்.

*"கரைகடல் சூழ்வையங் காக்கின்றானும்"*

*(2 : 266 : 9)*

*"உலகம் காக்க நின்ற கண்ணுதல்" (1 : 65 : 2)*

என்ற தொடர்களால் இறைவன் காத்தல் தொழில் செய்வதைக் குறிப்பிடுகின்றார்.

*"கருவுடை யாருல கங்கள்வேவச்*
*செருவிடை யேறி"(1 : 114 : 3)*

என்ற தொடரில், 'கருவுடையார் உலகங்கள் வேவ' என்பதற்குப் 'பிறப்புடைய ஆன்மாக்களின் போக நுகர்ச்சிக்காகப் படைக்கப் பெற்ற உலகங்கள் அழிய' எனப் பொருள் கூறுவர்.[81] இதில் அழித்தல் தொழில் குறிப்பிடப்படுகின்றது.

திருஞானசம்பந்தர் பாடலில் மறைத்தல் தொழில் பற்றிய வெளிப்படையான குறிப்பு இல்லை. உயிர்களோடு உடனாய் இருக்கின்ற இறைவன் உயிர்கள் அறியாவண்ணம் மறைந்து நிற்றலை,

*"உள்ளமெல்லா முள்கிநின்றாங்கே யுடனாடும்*
*கள்ளம்வல்லான்"(1 : 103 : 6)*

என்று திருஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார். இத்தொடரிலுள்ள 'கள்ளம்வல்லான்' என்ற சொல் இறைவன் மறைந்து நின்று உயிர்களைத் தொழிற்படுத்தும் தன்மையைக் குறிப்பால் உணர்த்துகின்றது எனலாம்.

*"அடியார்க் கருணல்கி"(1 : 84 : 5)*

*"பக்தர்க்கருள் செய்தான்"(1 : 14 : 10)*

*"அரவம ருஞ்சடை யானடி யார்க்கருள் செய்யுமே"*

*(3 : 272 : 8)*

என்ற தொடர்களால் இறைவனின் அருளல் தொழிலைத் திருஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார்.

**5.8.3.** இறைவன் செய்யும் ஐந்தொழில்கள் பற்றிச் சாத்திர நூல்களில் கூறப்படுகின்றன.[82] மேலும்,

> *"தோற்றுவித் தளித்துப் பின்னும் துடைத்தருள்*
> *தொழில்கள் மூன்றும்"*[83]

என்று சிவஞானசித்தியாரில் இறைவன் செய்யும் தொழில் மூன்றாகவும் கூறப்படுகின்றது.

> *"ஆக்கி எவையும் அளித்தா சுடன் அடங்கப்*
> *போக்கும்அவன் போகாப் புகல்"*[84]

என்ற திருவருட்பயனில் 'ஆக்கி', 'அளித்து', 'போக்கும்' என்ற சொற்கள் முறையே இறைவன் செய்யும் படைத்தல், காத்தல், அழித்தலைக் குறிக்கும். இறைவன் உயிர்களைக் காக்கும் பொழுது மறைந்து நிற்றலால், மறைத்தல் தொழில் காத்தலிலும், அழித்தல் தொழில் உயிர்களின் இளைப்பாற்றலின் பொருட்டுச் செய்யப் படுவதலால், அழித்தல் அருளலிலும் அடங்கும். இவ்வாறு ஐந்தொழில்களும் முத்தொழில்களில் அடங்கும்.

**5.8.4.** திருஞானசம்பந்தர் இறைவனைப் புகழ்ந்து பாடும் பொழுதே இறைவன் செய்யும் தொழில்கள் பற்றிக் குறிப்பிடுகின்றார். ஆனால் அவ்வாறு தொழிலாற்றுவதன் காரணத்தை விளக்கிக் கூறவில்லை. ஆனால் சாத்திர நூல்களில் இறைவன் ஐந்தொழில் செய்வதற்குரிய காரணம் விளக்கிக் கூறப்படுகின்றது.[85]

**5.8.5.** திருஞானசம்பந்தரின் சிவபுரப்பதிகப் பாடல்களுக்கு (1:21:1 3) இறைவனே இத்தொழில்களை ஆற்றும் முதல்வன் என்றும், பதவிகளில் இருப்போர் அவன் அருளைத் தாங்கி நின்று ஆற்றுகின்றனர் என்றும் பொருள் கூறுவர்.[86]

**5.8.6.** முழுமுதற் கடவுளே முத்தொழில்களையும் புரிபவன் என்பதை,

*"தோற்றுவித் தளித்துப் பின்னும் துடைத்தருள்*
*தொழில்கள் மூன்றும்*
*போற்றவே உடைய னீசன்'*[87]

என்றும், பிரமன், திருமால் முதலானோர் தம்புண்ணிய விசேடத்தால் முதல்வனுடைய அதிகார சக்தியை அவனுடைய ஏவலால் பெற்று இத்தொழில் ஆற்றுகின்றனர் என்பதை,

*"விரைக்கம லத்தோன் மாலும் ஏவலான் மேவி னோர்கள்*
*புரைத்ததி கார சத்தி புண்ணியம் நண்ண லாலே'*[88]

என்றும் அருணந்தி சிவாசாரியார் சிவஞானசித்தியாரில் கூறுகின்றார். இறைவன் தன் தொழில்களைப் பிரமன், திருமால், உருத்திரன் இவர்களைக் கொண்டு செய்விப்பவன் என்பதை,

*"அயன் அரியும் அவனதுயர் அதிகா ரத்து*
*வந்தமுறை தன்தொழிலே மன்னுவிப்பன் எல்லாம்'*[89]

என்று உமாபதிசிவம் சிவப்பிரகாசத்தில் கூறுகின்றார். இப்பாடல்களில் அயன், அரி இருவர் மட்டும் குறிப்பிடப்பட்டாலும், உருத்திரன் பற்றிய குறிப்பு உள்ளடங்கியது எனக் கருதலாம்.

பிரமன் படைத்தலையும், திருமால் காத்தலையும், உருத்திரன் அழித்தலையும் செய்வதாகக் கூறப்படுவது சைவ உலகியல் மரபு. இதற்கு

*"உரைத்தஇத் தொழில்கள் மூன்றும் மூவருக் குலகம்*
*ஓத'*[90]

என்ற அருணந்தி சிவாசாரியாரின் வாக்கும்,

*"படைப்பன் அயன் அளிப்பன் பங்கயக்கண் மாயன்*
*துடைப்பன் உருத்திரனும்'*[91]

என்ற மனவாசகங்கடந்தார் வாக்கும் சான்றாகும்.

திருமுறைகளிலும், சாத்திர நூல்களிலும் பிரமன், திருமால் இவர்களைப் பற்றிய குறிப்புக்களே இருக்க, உருத்திரன் பற்றிய குறிப்பு

வெளிப்படையாக இல்லாததால் உருத்திரனையும் சிவனையும் ஒன்றெனக் கருதி மயங்குவர். உருத்திரனுக்கு அழித்தல் தொழில் மட்டும் கூறப்படுவது மரபு. சிவனுக்கோ முத்தொழிலும் கூறப்படும். மேலும் சிவன் மும்மூர்த்திகளுள் ஒருவன் அல்லன் என்ற கருத்திற்கு,

*''மூவர் தாந்தொழு முக்கண்மூர்த்தி'' (2 : 213 : 3)*

என்ற திருஞானசம்பந்தர் வாக்கும்,

*''மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்''*[92]

என்ற மாணிக்க வாசகர் வாக்கும் சான்றாகும்.

**5.8.7.** மும்மூர்த்திகள் பற்றிய கருத்தில் முரண்பாடுகள் உள்ளனபோல் தோன்றும் விதத்தில் திருஞானசம்பந்தரின் பாடல் தொடர்கள் அமைந்துள்ளன.

*''படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை''*
*(1 : 128 அடி 4)*

*.''மேவராய விரைமலரோன் செங்கண்மாலீச னென்னும்*
*மூவராய முதலொருவன்''(1 : 51 : 1)*

என்று இறைவனே மும்மூர்த்தி என்கிறார் திருஞானசம்பந்தர்.

*''முந்தினான் மூவருள் முதல்வன் ஆயினான்''*
*(3 : 281 : 5)*

என்ற தொடரால் திருஞானசம்பந்தர் மும்மூர்த்திகளிலும் மேலானவனாக இறைவனைக் கூறுகிறார்.

*''மூவரும்மவ ரென்னவு முதல்வரும்மிவ ரென்னவும்*
*மேவரும் பொருளாயினார்''(2 : 214 : 6)*

என்ற தொடரால் இறைவனே மும்மூர்த்தி என்றும், அவனே மும்மூர்த்திகளின் தலைவன் என்றும் திருஞானசம்பந்தர் கூறுகிறார். இத்தகைய முரண்பாட்டிற்கான காரணமும், மும்மூர்த்தியும் ஒருவனேயானால் அவர்களுள் இருவர் தாம்தாம் தலைவர் எனத்

தருக்கமிட்டு முழுமுதல் இறைவனின் அடிமுடி தேடியதாகக் கூறப்படும் செய்தியும் எங்ஙனம் பொருத்தமுடைத்தென்பதும் சிந்தித்தற்குரியது.

'மும்மூர்த்தி' என்னும் சொல் முழு முதற் கடவுளான இறைவனையும், அவ்வத்தொழில் மட்டில் முதல்வராய் நிற்கும் தலைவர்களான திருமால், பிரமன், உருத்திரன் இவர்களையும் குறிப்பதாய் வரும். இப்பெயர்களுக்குரிய இறைவனது நிலைகள் 'சம்புபட்சம்' என்றும், இப்பெயர்களுடைய தலைவர்களது நிலைகள் 'அணுபட்சம்' என்றும் சொல்லப்படும் என்பார் அருணைவடிவேல் முதலியார்[93]. எனவே திருஞானசம்பந்தர் பாடலில் வரும் 'மும்மூர்த்தி' என்ற சொல்லுக்கு இடத்திற்குத் தக்கவாறு பொருள் கொள்ள வேண்டும்.

அணுபட்சத்தைச் சேர்ந்த திருமால், பிரமன், உருத்திரன் இவர்கள் பிறப்பு இறப்புக்கு உட்படும் சிற்றுயிர்கள் எனச் சைவநூல்களில் கூறப்படும்.

*"நூறு கோடி பிரமர்க ளொந்தினார்*
*ஆறு கோடி நாராயண ரங்ஙனே*
*ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர்*
*ஈறி லிதாவ னீச னொருவனே"*[94]

என்ற திருநாவுக்கரசர் பாடலில் பிரமனுக்கும், நாராயணனுக்கும் (திருமால்) எண்ணிக்கை கூறப்படுவதால் ஒவ்வொரு ஊழிதோறும் அவர்கள் தோன்றியுள்ளனர் என்பதும், அவர்களும் பிறப்பு இறப்பிற்கு உட்பட்டவர்கள் என்பதும் உணர்த்தப்படுகின்றது. மேலும்,

*"பசுப்பல கோடி பிரமன் முதலாய்ப்*
*பசுக்களைக் கட்டிய பாசமூன் றுண்டு"*[95]

என்று திருமூலரும் பிரமன் முதலானவர்கள் பசுவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை உணர்த்துகின்றார். இவ்வாறு பிறப்பு

இறப்புக்கு உட்படும் பசுத்தன்மை வாய்ந்த திருமாலும், பிரமனுமே தமக்குள் சண்டையிட்டுக் கொண்டனர் எனக் கருதலாம்.

எனவே திருஞானசம்பந்தர் பாடல்களில் மும்மூர்த்தி பற்றிக் கூறப்படும் கருத்துக்களில் முரண்பாடுகள் இருப்பனபோல் வெளிப்பார்வைக்குத் தோன்றினாலும் உண்மையில் முரண்பாடுகள் இல்லை எனலாம். மேலும் திருஞானசம்பந்தர் இறைவனே மும்மூர்த்தி என்றும், அவனே மும்மூர்த்திகளின் தலைவன் என்றும் கூறும் கருத்து சிவஞானசித்தியாரில் இறைவனே முத்தொழில்களைச் செய்வ தாகவும், பிரமன், திருமால், உருத்திரன் இவர்களைக் கொண்டு செய்விப்பதாகவும் தத்துவ விளக்கம் கூற ஏதுவாகிறது எனலாம்.

## 5.9. பதியின் இயல்புகள் எதிர்மறைகளில் :

திருஞானசம்பந்தர் இறை இயல்புகளை விளக்கும்போது முரண்பாடான இரு பண்புகளை அவன்மேல் ஏற்றி முரண்தொடையில் பின்வருமாறு கூறுகிறார்.

*"நுண்ணியான் மிகப்பெரியான்" (1 : 61 : 6)*
*"பெரியாய்சிறி யாய்"(2 : 156 : 8)*
*"அரியாயெளி யாய்"(2 : 156 : 8)*
*"தண்ணியான் வெய்யான்"(1 : 61 : 6)*
*"துன்பானை ... இன்பானை"(2 : 147 : 7)*
*"துயரவன் ... துயரகற்றும் கழலவன்"(1 : 110 : 5)*

இருவேறுபட்ட பண்புகள் ஒரு பொருளிடத்தில் எப்படிப் பொருந்தி அமையும் என்பது சிந்தித்தற்குரியது. உபநிடதங்களின் காலந்தொட்டே மெய்ப்பொருட்களின் இயல்புகளை முரண் தொடையில் கூறுவது வழக்கமாய்க் காணப்படுகின்றது.[96]

இறைவன் எத்தகைய நுண்ணிய பொருள்களிலும் அணுவிற்குள்ளும் அணுவாய்க் கலந்து விளங்குவதால் நுண்ணியான் என்றும், இறைவன் உலகிற்கு அப்பால் எல்லாமாயும், அல்லவுமாயும்

இருப்பதால், முடிவிலாற்றல், முற்றுணர்வு, பேரருள் முதலிய பண்புகள் நிறைந்தவனாதலாலும் மிகப்பெரியான் என்றும் கூறுகிறார் எனலாம்.

இறைவனின் பண்பும் தன்மையும் உயிரறிவால் அளந்தறிய முடியாததால் பெரியாய் என்றும், இவ்வண்டங்களும் அதன்கண் உள்ள உயிர்களும் இறைவனது பெருமைக்கு முன் மிகச்சிறியது; ஆனால் அவற்றிலும் நிறைந்தவன் இறைவன் ஆதலால் சிறியாய் என்றும் கூறுகிறார் எனலாம்.

ஆணவம் மிக்கவர்களுக்கு உணர்வதற்கு அரியன். ஆணவம் நீங்கி அன்பினால் அகம் குழையும் அடியவர்களுக்கு உணர்வதற்கு எளியன் என்று கூறப்படுவதால் "அரியாய் எளியாய்" என்கிறார் எனலாம்.

அடியவர்களுக்கு அருள்புரியும் தன்மையால் 'தண்ணியான்' என்றும், அவர்களுடைய வினைகளை எரிக்கும் தன்மையால் 'வெய்யான்' என்றும் கூறுகிறார்.

உயிர்கள் தம் வினைக்கேற்ற பலனை அனுபவிக்கப் பூமியில் பிறந்து துன்புறச் செய்பவனும், அவைகள் வினைப்பயனை அனுபவித்து முடிந்ததும் அவைகளுக்கு முக்தி கொடுத்து இன்பம் அளிப்பவனும் அவனே ஆதலால் 'துன்பானை இன்பானை' என்கிறார் எனலாம்.

இன்பத்தைப் புசிப்பித்தற் பொருட்டுத் துன்பங்களை உயிர்களுக்கு ஊட்டுவிப்பவனும், அவைகளின் துயரத்தை நீக்குகின்ற திருவடியை உடையவனும் அவன் என்ற பொருளில் 'துயரவன் துயரகற்றும் கழலவன்' என்கிறார் எனலாம்.

இவ்வாறு சொற்றொடரில் முரண் இருப்பது போலப் பாடற்பொருளிலும் முரண்பாடு காணப்படுகின்றது. இறைவன் உலகு உயிர் தோற்றத்திற்குக் காரணனாதல் பற்றி ஆதி, நடு, அந்தமானவன் என்கிறார். அவன் பிறப்பு இறப்பு இல்லாதவன். ஆதலால் ஆதி அந்தமிலான் என்கிறார்.

இவ்வாறு திருமுறைகளில் கூறப்படும் இறைவனின் முரண்பட்ட இரு இயல்புகள், சைவசித்தாந்த நூல்களில் இறைவனுக்கே உரிய உண்மையான பண்புகள், உயிர், உலகு சார்பு பற்றி இறைவனுக்குரிய பண்புகள் என இருவகைப்படுத்திக் கூற ஏதுவாகின்றது எனலாம்.

இவ்வாறே முப்பொருட்களையும், சைவசித்தாந்தம் அப்பொருளுக்கே உரிய தனிப்பட்ட இயல்பு (சிறப்பியல்பு - Absolute Characteristic) என்றும், பிற பொருள் சார்பு பற்றி அப்பொருளுக்கு உண்டாகும் இயல்பு பொது இயல்பு (Relative Characteristic) என்றும் இரு பிரிவாக ஆய்வு செய்கின்றது.[97]

## 5.10. பதியின் குணம் :

பதிக்கு எண்குணங்கள் சைவாகமங்களில் கூறப்படும்.[98] எண்குணங்களாவன :

1. தன்வயம் உடைமை
2. தூய உடம்பு
3. இயற்கை உணர்வு
4. முற்றுணர்வு
5. இயல்பாகவே பாசமின்மை
6. பேரருள் உடைமை
7. அளவில் ஆற்றலுடைமை
8. வரம்பில் இன்பம் உடைமை.[99]

### 5.10.1.

*"எண் குணங்களும்"(1 : 131 : 1)*

*"எண்ணம ருங்குணத் தார்" (2 : 205 : 1)*

என்று திருஞானசம்பந்தர் இறைவன் எண் குணங்களை உடையவர் என்கின்றார்.

இறைவன் காமனை எரித்தது (2 : 181 : 5, 3 : 373 : 4, 1 : 5 : 8), நஞ்சுண்டது (2 : 227 : 4, 2 : 231 : 6, 3 : 312 : 10) காலனைக் காய்ந்தது (3 : 274 : 2, 3 : 300 : 3, 3 : 347 : 11) ஆகியவை பற்றித்

திருஞானசம்பந்தர் கூறும் செய்திகள் இறைவனின் தன் வயம் உடைமையை விளக்கும் எனலாம். திருஞானசம்பந்தர் இறைவனை,

*'ஞானத்திரள்'(1 : 69 : 3, 1 : 93 : 3)*

*'ஞானப்பொருள்'(1 : 38 : 3)*

எனக் குறிப்பிடுவது இறைவனின் தூய உடம்பினைக் குறிக்கும். தன்வயத்தனாயும், தூய உடம்பினனாயும் இருக்கும் இறைவன், இயற்கை உணர்வினனாயும், முற்றுணர்வினனாயுமே இருத்தல் கூடும்.

*'நின்மலன்'(3 : 261 : 3, 3 : 279 : 1)*

*'நிமலன்'(3 : 270 : 9, 3 : 287 : 4)*

*'முத்தன்'(2 : 170 : 1, 2 : 218 : 4)*

போன்ற திருஞானசம்பந்தரின் சொற்கள் இறைவன் இயல்பாகவே பாசமில்லாதவன் என்பதை உணர்த்தும்.

'திருஞானசம்பந்தர் 'பேரருளாளர்' (1 : 77 : 3) என்ற சொல்லால் இறைவனின் பேரருள் உடைமையை உணர்த்துகின்றார்.

திரிபுரம் எரித்தது (3 : 271 : 1 - 10, 1 : 11 : 6, 1 : 85 : 1) இராவணனைக் கால் விரலால் அடர்த்தது (1 : 2 : 8, 1 : 4 : 8) முதலிய செய்திகளால் இறைவனின் அளவில் ஆற்றலுடைமையைத் திருஞானசம்பந்தர் உணர்த்துகின்றார். "ஆராத இன்பன்"(2 : 224 : 3, 1 : 113 : 5) என்றும், இறைவன் தன்னைச் சாரும் உயிர்களையெல்லாம் இன்பமடையும்படிச் செய்பவன் (1 : 113 : 5) என்றும் திருஞானசம்பந்தர் கூறுவது இறைவனின் வரம்பில் இன்பம் உடைமையைத் தெரிவிக்கும்.

இறைவனுக்கு எண்குணங்களைக் கூறும் திருஞானசம்பந்தர், சில இடங்களில்

*"குணங்கள் மூன்றாய்"(1 : 132 : 5)*

*"குண மூன்றாய்"(1 : 11 : 2)*

என்று இறைவன் முக்குணமாயுள்ளான் என்கிறார். இங்குக் கூறப்படும் முக்குணங்களாவன சத்து, சித்து, ஆனந்தம் எனலாம்.[100]

**5.10.2.** முதலில் கூறிய எண்குணங்களும் இம்முக்குணங்களுள் அடங்குவது எப்படி எனில், சத்து என்ற சொல், என்றும் மாறுதலில்லாத பொருளைக் குறிக்கும் என்பர்.[101] ஆதலால் தன்வயம் உடைமை, தூய உடம்பு, பாசமின்மை, பேராற்றல் முதலியன சத்தினுள் அடங்கும். சித்தாவது அறிவு வடிவாய் இருத்தலின், இயற்கை உணர்வு, முற்றுணர்வு, அறிவால் உண்டாகும் பேரருள் முதலியன சித்தின்பால் அடங்கும். வரம்பிலின்பம் உடைமை ஆனந்தம் என்பதில் அடங்கும்.

| <u>சத்து</u> | <u>சித்து</u> | <u>ஆனந்தம்</u> |
|---|---|---|
| தன்வயம் உடைமை | இயற்கை உணர்வு | வரம்பில் |
| தூய உடம்பு | முற்றுணர்வு | இன்பம் |
| பாசம் இன்மை | பேரருள் | |
| பேராற்றல் | | |

சுட்டறிவினால் அறியப்படும் பொருள் அசத்து எனப்படும்.[102] அப்படியானால் சுட்டறிவினால் அறியப்படாதது சத்து எனலாம். இறைவனியல்பு உயிர்களின் சுட்டறிவால் (பசு ஞானம், பாச ஞானம்) அறியப்படாத தன்மையது ஆதலால் சத்து ஆகும்.

சிவஞானபோதம் ஆறாம் சூத்திரம் இறைவனைச் சிவசத்து என்கிறது. சிவஞானசித்தியாரில் சிவன் சத்துப் பொருளாகவும், சித்துப் பொருளாகவும் இருப்பது கூறப்படுகின்றது.[103] சிவப்பிரகாசத்தில்,

*"நின்மலமாய் ஏகமாய் நித்த மாகி*
*அலுகிலுயிர்க் குணர்வாகி அசல மாகி*
*அகண்டிதமாய் ஆநந்த உருவாய்"*[104]

என்று பதி இயல்பு கூறும் பாடலில் சத்து, சித்து, ஆனந்தம் என்ற முக்குண இயல்பும் உணர்த்தப்படுகின்றது. 'நித்தமாகி' என்ற சொல் இறைவனின் அழியாத தன்மையான சத்துத் தன்மையை உணர்த்தும். 'அலகிலுயிர்க் குணர்வாகி' என்றதனால் எண்ணிறந்த உயிர்களுக்கு

அறிவாய் விளங்கும் சித்துத் தன்மையை உணர்த்தும். 'ஆனந்த உருவாய்' என்றது ஆனந்தத் தன்மையை உணர்த்தும்.

**5.10.3.** திருஞானசம்பந்தர் மற்றுமோரிடத்தில் "குணமில் குணம்" (2 : 146 : 4) என்று இறைவனைக் குறிப்பிடுகிறார். இறைவன் உயிர்களுக்குரிய சாத்துவிகம், இராசதம், தாமதம் என்று மூன்று குணங்கள் இல்லாதவனாதலால் அவ்வாறு கூறுகிறார் எனலாம். திருமூலர் கூறும் 'முக்குண நிர்க்குணம்'[105] என்பது இதற்குச் சான்றாகும்.

**5.10.4.** சிவப்பிரகாசமும் இறைவனைக் "குணம்குறிக ளின்றி"[106] இருப்பவன் என்கிறது.

## 5.11. பதிக்கும் உலகத்திற்கும் உயிர்களுக்கும் உள்ள அத்துவிதத் தொடர்பு

பதிக்கும் உலகத்திற்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பு 'அத்துவிதம்' என்ற சொல்லால் சைவசித்தாந்தத்தில் குறிப்பிடப் படும்.[107] அத்துவிதம் என்ற சொல் வேற்றுமையின்மை அதாவது இரண்டாகப் பிரிந்து நில்லாமை என்று பொருள்படும்.[108]

இதனை,

> *'ஒன்றாகாமல், இரண்டாகாமல்*
> *ஒன்றுமிரண்டு மின்றாகாமல்'*'[109]

என விரித்துப் பொருள் கூறுவர்.

**5.11.1** சைவசித்தாந்தம் கூறும் அத்துவித விளக்கத்திற்கான அடிப்படை திருஞானசம்பந்தர் தேவாரத்தில் உள்ளது.

இறைவன் உலகு உயிர்களோடு ஒன்றாய், வேறாய், உடனாய் இருக்கின்றான் என்று திருஞானசம்பந்தர் கூறுகின்றார்.

*"பண்ணும்பத மேழும்பல வோசைத் தமிழவையும்*
*உண்ணின்றதொர் சுவையும் முறு தாளத்தொலிபலவும்*
*மண்ணும்புன லுயிரும்வரு காற்றுஞ்சுடர் மூன்றும்*
*விண்ணும்முழு தானானிடம் வீழிம்மிழலையே" (1 :11 :4)*

என்ற பாடலில் திருஞானசம்பந்தர் இறைவன் உலகுயிர்களோடு ஒன்றாய் நிற்றலைக் கூறுகிறார்.

*"உயிருக்குயிரா யங்கங்கே நின்றான்"(1 : 132 : 4)*

என்றதனால் இறைவன் உயிர்களோடு உடனாய் நிற்கும் தன்மையையும் திருஞானசம்பந்தர் உணர்த்துகின்றார். இவ்வாறு இறைவன் உலகு உயிர்களோடு ஒன்றாய், வேறாய் உடனாய் நிற்கும் மூவித இயல்புகளையும் ஒரே பாட்டிலேயும் திருஞானசம்பந்தர் கூறுகிறார்.

*"ஈறாய்முத லொன்றாயிரு பெண்ணாண்குணமூன்றாய்*
*மாறாமறை நான்காய்வரு பூதம்மவையைந்தாய்*
*ஆறார்சுவை யேழாசையொ டெட்டுத்திசைதானாய்*
*வேறாயுட னானிடம் வீழிம்மிழலையே"(1 : 11 : 2)*

என்ற திருவீழிமிழலைப் பதிகப்பாடலில் அவர் எண்ணல் அலங்கார முறையில் இறைவனுடைய பல இயல்புகளைக் கூறி, அவன் உயிர்களோடு ஒன்றாய், வேறாய், உடனாய் நிற்பதையும் கூறுகிறார். இப்பாடல் பல சைவசித்தாந்தக் கருத்துக்களை விளக்குவதற்கு அடிப்படையாகின்றது. அவை :

1. 'ஈறாய்' என்றதனால் உலகத்துயிர்கள் எல்லாம் அவனிடத்து ஒடுங்க, அவனே இறுதிவரை இருக்கின்றான் என்கிறார். இஃது இறைவன் சங்காரகாரணன் என்ற கருத்தை உணர்த்தும்.
2. 'முதல் ஒன்றாய்' என்றது, இறுதியாக நிற்பவனே ஒடுங்கிய உலகம் மீண்டும் தோன்றக் காரணனாய் இருத்தலை உணர்த்தும்.

3. இவ்வாறு 'ஈறாய் முதல் ஒன்றாய்' என்றது. சிவஞானபோதம் முதல் சூத்திரம் கூறும் 'அந்தம் ஆதி' என்பதற்கு ஒப்பாய் உள்ளது.

4. ஆண், பெண் என இரண்டாய் நின்றது உயிர்களோடு ஒன்றாக உள்ள சம்பந்தத்தை உணர்த்தும்.

5. 'குணம் மூன்றாய்' என்றதனால் இறைவனுக்குரிய முக்குணம் உணர்த்தப்படுகிறது.

6. 'மறை நான்காய்' என்றது, இறைவனே நான்கு வேதப் பொருளாகவும் இருப்பவன் என்பதை உணர்த்தும்.

7. ஐம்பூதம், அறுசுவை, ஏழுஓசை, எட்டுத்திசை முதலியனவாக இறைவன் உள்ளான் என்றது, தத்துவங்கள் எல்லாம் அவனிடமிருந்து தோன்றுகின்றன என்ற கருத்தையும், அவன் உலகரூபி என்ற கருத்தையும் உணர்த்தும்.

8. 'தானாய், வேறாய், உடனாய் என்ற தொடர்கள் இறைவன் உலகுயிர்களோடு ஒன்றாய், வேறாய், உடனாய் நிற்கும் தன்மைகளை உணர்த்தும். இது சாத்திர நூல்களில் அபேதம், பேதம், பேதாபேதம் எனக் கூறப்படுகின்றன.

திருஞான சம்பந்தரின் இப்பாடல் கருத்தை அடியொற்றிச் சிவஞானபோதம் இரண்டாம் சூத்திரம் அமைந்துள்ளது. அதிலுள்ள, " அவையே தானேயாய் " என்ற தொடர் 'அவையேயாய்', 'தானேயாய்', ''அவையே தானேயாய்' என விரிக்கப்பட்டு இறைவன் உயிர்களோடு ஒன்றாய், வேறாய், உடனாய் இருத்தல் உணர்த்தப்படுகின்றது. இது அத்துவிதம் எனப்படும்.

***5.11.2*** இக்கருத்தைச் சிவஞானசித்தியாரும் 'உலகெலா மாகி வேறாய் உடனுமாய் '' என்று கூறுகின்றது.[110]

***5.11.3.*** திருஞானசம்பந்தர் இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பை இவ்வாறு மூவகைகளில் கூறுவதன் காரணம் சாத்திர நூல்களில் விளக்கப்படுகின்றது. இறைவன் உயிர்களோடு

கலப்பினால் உடலும் உயிரும் போல அவ்வுயிர்களேயாய், பொருள் தன்மையால் கண்ணொளியும் சூரிய ஒளியும் போல வேறுமாய், உயிருக்கு உயிராதல் தன்மையால் கண்ணொளியும் ஆன்மபோதமும் போல் உடனுமாய் இருக்கின்றான் என்பர்.[111] உண்மை விளக்கம் என்ற சாத்திர நூலும் இக்கருத்தை உவமைகள் மூலம் மூன்று பாடல்களில் விளக்குகிறது.[112]

இறைவனுக்கும் உலகத்து உயிர்களுக்கும் உள்ள தொடர்பு பின்வரும் அட்டவணையில் விளக்கப்படுகின்றது.

| எண். | இறைவன் உலகு உயிர் தொடர்பு | தன்மை | உவமை |
|---|---|---|---|
| 1. | ஒன்றாதல் | கலப்பினால் | உடலுயிர் போல் |
| 2. | வேறாதல் | பொருள் தன்மையால் | கண்ணருக்கன் போல் |
| 3. | உடனாதல் | உயிருக்கு உயிராதல் | கண்ணொளியும் ஆன்ம போதமும் போல் |

இம்மூவகைத் தொடர்பு உயிர்கள் நிலைத்து நிற்க, அறிவைப்பெற, இயங்க உதவுகிறது.

## 5.11.4.

*"பூவினில் வாசம் புனலிற்பொற்புப்*
*புதுவிரைச் சாந்தினி குற்றத்தோடு*
*நாவினிற் பாடனள் ளாறுடைய*
*நம்பெரு மான்"(1 : 7 : 4)*

என்று திருஞானசம்பந்தர் இறைவனின் அத்துவிதக் கலப்புநிலை பற்றிக் கூறுகிறார். இந்த அத்துவித நிலை சாத்திர நூலில்,

*" பண்ணையும் ஓசையும் போலப் பழமதுவும்*
*எண்ணுஞ் சுவையும்போ லெங்குமாம் - அண்ணல்தாள்*
*அத்துவித மாதல் "[113]*

என்று கூறப்படுகின்றது.

## 5.12. பதியின் சிறப்பிலக்கணங்கள் :

**5.12.1.** இறைவனுக்கே உரிய தன்னியல்புகள் சிறப்பிலக்கணங்கள் எனப்படும். இதனை வடமொழியில் சொரூப இலக்கணம் என்பர்.

**5.12.2.** பெரும்பாலும் தம் பதிகப் பாடல்களில் இறைவனின் உருவத் திருமேனியை அதிகம் கூறிய திருஞானசம்பந்தர், திருப்பிரம்மபுரம் பதிகம் ஒன்றில் (2 : 201) உருவ வருணனைகளைக் கூறி அவை இல்லாதவர் போலும் என்று எதிர்மறை ஐயப்பாட்டில் கூறுகிறார்.

*"கபாலந்த் தரித்திலர் போலும்" (2 : 201 : 1)*
*"பிறையுஞ் சடைக்கிலர் போலும்" (2 : 201 : 1)*
*"நஞ்சு மிடற்றிலர் போலும்" (2 : 201 : 4)*
*"கங்கை தரித்திலர் போலும்" (2 : 201 : 4)*
*"தோடு செவிக்கிலர் போலும்" (2 : 201 : 5)*

என்று திருஞானசம்பந்தர் கூறுகிறார்.

இதைப்போல இறைவனுடைய வீரச்செயல்கலையும்,

*"முப்புர மெய்திலர் போலும்" (2 : 201 : 4)*
*"வலிய யானை யுரித்திலர் போலும்"(2 : 201 : 5)*
*"காலனை வீழ்க் கால்கொடு பாய்ந்திலர் போலும்"*
*(2 : 201 : 7)*
*"அரச விலங்கையர் கோனை யன்று மடர்த்திலர்*
*போலும்"(2 : 201 : 8)*

என்று செய்யாதனபோலத் திருஞானசம்பந்தர் கூறுகின்றார்.

உயிர்களுக்கு அருள்புரியும் பொருட்டு இறைவன் உருவம் கொண்டு வீரச் செயல்கள் ஆற்றுவதும் உண்டு. ஆதலால் 'இலர்' என்று மட்டும் திருஞானசம்பந்தர் கூறாமல் 'போலும்' என ஐயப்பாடாக்கியும் கூறுகிறார்.[114]

மேற்கூறிய பதிகத்தில் இறைவனின் சிறப்பிலக்கணம் வெளிப்படையாக உணர்த்தப்பட்டது. இக்கருத்து இன்னும் சில பாடல் தொடர்களில் குறிப்பாக உணர்த்தப்படுகின்றது.

*"இன்னவுரு வின்னநிற மென்றறிவ தேலரிது"*
*(3 : 329 : 4)*

*"எந்தை யாரவ ரெவ்வகையார் கொலோ"*
*(3 : 312 : 3)*

என்ற தொடர்கள் உருவம், அருவம், அருவுருவும் என்ற மூன்றிலும் அடங்காத இறைவனின் சொரூப இலக்கணத்தைக் குறிப்பாக உணர்த்துகின்றன.

இவ்வாறு உருவம், பெயர், குணம், தொழில் ஒன்றுமில்லாத இறைவனின் தன்னியல்பை உயிர்கள் அறிந்து கொள்வது கடினமாதலால்,

*"ஆரறி வாராவர் பெற்றியே" (3 : 312 : 2)*
*"தன்மை யாருமறி வாரிலை"(2 : 142 : 2)*
*"இவர் தன்மை யறிவாரார்"(3 : 370 : 1 - 10)*

என்று திருஞானசம்பந்தர் கூறுகிறார் எனலாம்.

இறைவனின் இருவகை இயல்புகளும் ஒன்றுக்கொன்று முரண்பாடுடையன போல வெளிப்பார்வைக்குத் தோன்றுவதால், அவனை உயிர்கள் தம் அறிவால் ஓர் எல்லைக்கு மேல் புரிந்துகொள்ளல் கடினமாதலால்,

*"ஏதுக்க ளாலு மெடுத்த மொழியாலு மிக்குச்*
*சோதிக்க வேண்டா"(3 : 312 : 5)*

எனத் திருஞானசம்பந்தர் கூறுகிறார் எனலாம்.

**5.12.3.** திருஞானசம்பந்தர் கூறும் இக்கருத்துக்களை அடியொற்றிச் சாத்திர நூல்களும் இறைவன் தன் உண்மை நிலையில்

'குணம் குறிகளில்லாதவன்'[115] என்கின்றன. அருணந்தி சிவாசாரியாரும்,

*"சிவன்அரு உருவும் அல்லன் சித்தினோ டசித்தும் அல்லன்*
*பவமுதல் தொழில்க ளொன்றும் பண்ணிடு வானும் அல்லன்*
*தவமுத லியோக போகம் தரிப்பவ னல்லன் தானே*
*இவைபெற இயைந்து மொன்றும் இயைந்திடா*
*இயல்பினானே"*[116]

என்று சிவஞானசித்தியார் என்ற நூலில் கூறுகிறார். உமாபதி சிவம்,

*"வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்*
*தாக்கா துணர்வரிய தன்மையன்"*[117]

என்றும், திருவதிகை மனவாசகங்கடந்தார்,

*"உரைஉணர்வுக் கெட்டா ஒருவன்"*[118]

என்றும் இறை இயல்புகளைக் கூறுகின்றனர்.

## 5.13. பதியை அறியும் முறை :

### *5.13.1.*

*"உம்ப ராலு முலகின் னவராலும்*
*தம்பெ ருமைய் ளத்தற் கரியான்"(1 : 29 : 5)*

என்று திருஞானசம்பந்தர் கூறுவது, இறைவனை ஆராய்ந்து காண்பது அறிவெல்லைக்கு இயலாதது என்பதை உணர்த்தும்.

இறைவன் உயிர்களின் அறிவால் அறிய முடியாதவன் எனில், அவனை உயிர்கள் உணர்ந்து முக்தி அடைதல் எவ்வாறு நிகழும் என்பது சிந்தித்தற்குரியது. ஞானநெறியில் நின்று தினந்தோறும் அவனை வழிபட அவன் அருள் செய்வான் என்பதை,

*"ஞானம்மிக நின்று தொழ நாளுமருள் செய்யவல*
*நாதன்" (3 : 329 : 3)*

என்கிறார் திருஞானசம்பந்தர்.

இறைவனை ஞானமாகிய மலரைக் கொண்டு அணுகுதல் நன்மையைத் தரும் என்பதை,

*"ஞானமா மலர்கொடு நணுகுதல் நன்மையே"*
*(2 : 284 : 7)*

என்கிறார் திருஞானசம்பந்தர்.

*"ஊனத் திருணீங் கிடவேண்டில்*
*ஞானப் பொருள்கொண் டடிபேணும்(1 : 38 : 3)*

என்று திருஞானசம்பந்தர் இறைவனை அவன் திருவடி ஞானத்தாலேயே உணரமுடியும் என்கிறார்.

**5.13.2.** திருஞானசம்பந்தரின் இக்கருத்தை அடியொற்றி, இறைவன் பாச ஞானத்தாலும், பசு ஞானத்தாலும் அறிய முடியாதவன்[119] என்றும், பதி ஞானத்தாலேயே உணரப்படுபவன்[120] என்றும் சைவசித்தாந்த நூல்களில் கூறப்படுகின்றது.

முடிவுகள் :

1. திருஞானசம்பந்தர் கடவுள் ஒருவர் என்று மட்டும் கூறுகிறார். சாத்திர நூலாசிரியர்கள் கடவுள் என்று ஒருவன் ஏன் இருத்தல் வேண்டும் என்று மெய்ப்பிக் கின்றனர்.
2. ஒன்றாகிய கடவுள் பல பெயர்களில் திருஞானசம்பந்தரால் அழைக்கப்படுகின்றார். சாத்திர நூல்களில் பெரும்பாலும் பெயர் சுட்டப்படாவிடினும், சில இடங்களில் அரன், சிவன், சங்கரன் என்ற பெயர்கள் சுட்டப்படுகின்றன.
3. திருஞானசம்பந்தர் இறைவனைப் பிறப்பும் இறப்பும் இல்லாத நித்தப்பொருள் என்று குறிப்பிடுவது சாத்திர நூல்களில் அநாதி நித்தப்பொருள் எனக் கூற ஏதுவாகிறது எனலாம்.

4. திருஞானசம்பந்தர் இறைவன் எங்கும் நிறைந்தவர் எனக் கூறுவது சாத்திர நூல்களில் உவமானத்தோடு விளக்கிக் கூறப்படுகின்றது.

5. திருஞானசம்பந்தர் இறைவன் உலகிற்கு ஆதி, நடு, அந்தமானவன் என்று கூறும் கருத்து சாத்திர நூல்களில் சங்காரகாரணனான இறைவன் உலகத் தோற்ற காரணனாகி முத்தொழில் புரிவதாகக் கூறப்படுகின்றது.

6. திருஞானசம்பந்தர் இறைவனை உயிர்களின் தலைவன் என்று பாடுகிறார். சைவ சித்தாந்த நூல்கள் முப்பொருட் களுள் பதியே தலைமைப் பொருள் என்பதை உணர்த்து கின்றன.

7. திருஞானசம்பந்தர் இறைவனின் உருவத்தைப் பாடல்கள் தோறும் வருணிக்கிறார். சைவசித்தாந்த நூலாசிரியர்கள் சிலர் இறைவனே தங்கள் ஆசிரியராக வந்து பிறந்துள்ளார் என்று கூறுமிடத்தில் இறைவனின் உருவ வருணனை-யைச் சுட்டுகின்றனர்.

8. திருஞானசம்பந்தர் தேவாரத்தில் கூறப்படும் அர்த்த-நாரீசுவர வடிவம் பற்றிய கருத்து சாத்திர நூல்களில் இறைவனுக்கும் சக்திக்கும் உள்ள தொடர்பு பிரிப்பற்ற தாதான்மிய சம்பந்தமுடையது என்று கூற ஏதுவாகிறது எனலாம்.

9. திருஞானசம்பந்தர் சக்தியைப் பெண்ணாக உருவகித்துப் பாட, சைவ சித்தாந்த நூல்கள் சக்தியை இறைவனின் அருளாக, ஆற்றலாகக் கூறுகின்றன. இறைவன் உருவம் எடுக்கும்போது சக்தியும் உருவம் எடுப்பதாகக் கூறப்படு கின்றது.

10. இறைவன் பல உருவங்களில் தோன்றும் வல்லமை உடையவன் என்பதைத் திருஞானசம்பந்தரும், சைவ-சித்தாந்த நூலாசிரியர்களும் கூறுகின்றனர்.

11. திருஞானசம்பந்தர் இறைவன் உருவத் திருமேனி கொண்டு ஆற்றிய செயல்களைக் கூறுகிறார். சிவஞான சித்தியாரின்

ஆசிரியர் இறைவன் உருவத் திருமேனி எடுப்பதன் காரணங்களைக் கூறுகிறார்.

12. திருஞானசம்பந்தர் கூறும் அம்மையப்பர் வடிவம், அர்த்தநாரீசுவர வடிவம் முதலியன சிவஞானசித்தியாரில் போக வடிவம் எனக் குறிப்பிடப்படுகிறது.

13. திருஞானசம்பந்தரால் இறைவனின் வீரச்செயல்கள் பற்றிக் குறிப்பிடப்படுவது சிவஞானசித்தியாரில் வேக வடிவம் எனக் குறிப்பிடப்படுகிறது.

14. திருஞானசம்பந்தரால் இறைவன் ஆலின்கீழ் அறம் உரைத்த செய்தி கூறப்படுகிறது. அது சிவஞான சித்தியாரில் யோக வடிவம் எனக் குறிப்பிடப்படுகின்றது.

15. சிவஞானசித்தியாரில் கூறப்படும் இறைவன் வடிவமெடுப்பதற்குரிய காரணங்களுக்கும், அவை உணர்த்தும் தத்துவங்களுக்கும் திருஞான சம்பந்தரின் பாடல்களே அடிப்படையாகின்றன.

16. திருஞானசம்பந்தர் இறைவனின் உருவநிலை, அருவநிலை, அருவுருவநிலை கூறுவது, சைவசித்தாந்த நூல்களில் இறைவன் உருவம், அருவம், அருவுருவம் என மூவகை மேனியுடையவன் எனக் கூற ஏதுவாகிறது எனலாம்.

17. இறைவனுக்கு உருவம் கூறப்பட்டாலும் அவன் உலகப் பொருட்களில் ஒருவனாக இல்லாது வேறுபட்டவன் என்ற கருத்தை உணர்த்தும் சிவஞானசித்தியார் பாடலுக்கான கருப்பொருட்கள் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் உள்ளன.

18. திருஞானசம்பந்தர், இறைவனை மும்மூர்த்தி என்றும், அவனே மும்மூர்த்திகளின் தலைவன் என்றும் கூறுவது, சைவசித்தாந்த நூல்களில் இறைவன் முத்தொழில்களைச் செய்வதாகவும், பிரமன், திருமால், உருத்திரன் இவர்களைக் கொண்டு செய்விப்பதாகவும் கூற ஏதுவாகின்றது.

19. சைவசித்தாந்த நூல்களில் இறைவனின் முத்தொழில்கள், ஐந்தொழில்கள் பற்றிக் கூறப்படுவதற்குரிய குறிப்புக்கள்

திருஞானசம்பந்தர் பாடல்களில் காணப்படுகின்றன. சைவசித்தாந்த நூல்கள் இறைவன் தொழிலாற்றுவதன் தத்துவங்களைக் கூறுகின்றன. திருஞானசம்பந்தர் பாடல்களில் அத்தத்துவக் குறிப்புக்கள் இல்லை.

20. சைவசித்தாந்த நோக்கில் பார்க்கும்பொழுது திருஞான சம்பந்தர் பாடல்களில் உள்ள சொல் முரண்களும், பொருள் முரண்களும் உண்மையில் முரண்கள் அல்ல என்பது புலனாகின்றது.

21. திருஞானசம்பந்தர் இறைவனுக்கும் உலகு உயிர்களுக்கும் உள்ள தொடர்புகளாக ஒன்றாதல், வேறாதல், உடனாதல் எனக் கூறுவது, சைவசித்தாந்த நூல்களில் அத்துவிதம் என்பதற்கு விளக்கம் கூற ஏதுவாகிறது எனலாம்.

22. திருஞானசம்பந்தர் இறைவனின் உருவங்களையும் வீரச்செயல்களையும் விளக்குவதும், இறைவனுக்கு உருவமில்லை, அவன் வீரச்செயல்கள் செய்யவில்லை என்று கூறுவதும், சைவசித்தாந்த நூல்களில் இறைவனுக்கு உரிய பொது இயல்புகள், சிறப்பு இயல்புகள் என வகைப்படுத்திக் கூற அடிப்படையாகின்றன.

23. இறைவனை உயிர்கள் தம் அறிவால் அறிந்து கொள்வது கடினம் என்றும், அவனை ஞானத்தாலேயே அறிய முடியும் என்றும் திருஞானசம்பந்தர் கூறுவது, சைவசித்தாந்த நூல்களில் இறைவன் பசு ஞானத்தாலோ, பாச ஞானத்தாலோ அறியப்பட முடியாதவன் என்றும், பதி ஞானத்தாலேயே அறியப்படுபவன் என்றும் கூற ஏதுவாகிறது எனலாம்.

## குறிப்புக்கள்

1. சிவப்பிரகாசம், 13.
2. திருஞான. 1 : 2 : 3, 1 : 3 : 9, 1 : 10 : 1, 1 : 12 : 6, 1 : 13 : 2, 1 : 15 : 1, 1 : 29 : 9, 1 : 30 : 2, 1 : 34 : 4, 1 : 76 : 7,9, 1 : 93 : 9, 2 : 163 : 6, 2 : 198 : 6, 2 : 224 : 6, 2 : 226 : 6, 2 : 252 : 4, 3 : 268 : 8, 3 :290 :1, 9, 11, 3 : 294 : 4, 3 : 301 : 10, 3 : 315 : 9, 3 : 329 : 5, 3 : 363 : 1.
3. மேலது, 1 : 135 : 3, 2 : 142 : 1, 3 : 271 : 5, 3 : 343 : 6.
4. மேலது, 1 : 41 : 6, 1 : 56 : 4, 1 : 68 : 5, 2 : 216 : 6,7, 2 : 249 : 9, 3 : 384 : 9.
5. மேலது 2 : 165 : 1, 2 : 170 : 3.
6. மேலது, 1 : 111 : 1, 2 : 169 : 3, 3 : 377 : 3.
7. சிவஞானபோத உதாரண வெண்பா, 7.
8. சிவஞானசித்தியார் சுபக்கம், 21.
9. மேலது 49.
10. திருஞான. 1 : 11 : 5, 1 : 17 : 8, 1 : 19 : 11, 1 : 20 : 8,11, 1 : 21 :1,8,11, 1 : 41 : 11, 1 : 100 : 8, 1 : 109 : 11, 1 : 111 : 11, 1 : 112 : 11, 1 : 121 : 5, 1 : 124 : 7, 1 : 125 : 2,7, 2 : 144 : 9, 2 : 174 : 1, 2 : 175 : 11, 2 : 215 : 1, 2 : 220 : 1, 2 : 222 : 1, 4, 5, 7-11, 2.: 226 : 3,7, 2:232:1, 8, 2 : 237 : 2, 2 : 251 : 8, 2 : 252 : 7, 2 : 254 : 11, 3 : 261 : 11, 3 : 273 : 11, 3 : 286 : 8, 3:325:12, 3 : 327:1,3,5,8,9,10,11, 3:334:11, 3 : 337 : 2, 3 : 371 : 5, 3 : 378 :2,3.
11. திருஞான. 1 : 26 : 7, 1 : 27 : 1, 3 : 360 : 4.
12. திருஞான. 2 : 179 : 5.
13. மேலது, 2 : 176 : 8, 3 : 266 : 7, 3.324 : 5.

14. மேலது, 1 : 12 : 12, 1 : 109 : 7, 3:336 :10, 3:366:7.

15. மேலது. 1 : 43 : 3, 2 : 207 : 8, 3 : 362 : 6

16. மேலது, 2 : 213 : 9, 3 : 376 : 3.

17. மேலது, 1 : 7 : 11, 1 : 12 : 10, 1 : 16 : 11, 1 : 20 : 8, 1 : 21 : 6, 1 : 90 : 1, 1 : 126 : 8, 1:127: 2, 2 : 160 : 11, 2:169:6,7, 2:170:11, 2:206:1, 2 : 209 : 3, 2:224:1-10, 2:243: 5, 2:245:10, 3:266:1-10, 3:.279 : 10, 3:295:8, 3:296:3,8, 3:297:1-10, 3 : 312 : 1, 3:315:3, 3:325:7,10, 3 : 327 : 6, 3:330:11, 3:332: 6, 3:334:6, 9, 3 : 337 : 6, 3 : 338 : 4, 3:351 :10, 3:368:1, 3:371:2,10, 3:373 :5,8, 3 : 380 : 11.

18. மேலது. 2 : 242 : 7, 3 : 328 : 9, 3:335 :2,3, 3:336:5, 3 : 373 : 6, 9, 10.

19. மேலது, 1 : 58 : 2, 1 :65:8,9, 1 : 109 : 5, 1 :133 : 2, 2:176 : 6, 2:233:11, 2 : 245 : 2, 3 : 307 : 8, 3 : 333:11, 3 : 360, 8, 3 : 382 : 3.

20. மேலது, 3 : 273 : 8, 3 : 327 : 2.

21. மேலது, 1 : 130 : 4, 2 : 238 : 2.

22. (i) திருக்களிற்றுப்படியார், 15.
(ii) சிவஞானபோதம் சூத்., 8, 11, 12.
(iii) சிவஞானபோத உதாரண வெண்பா 33, 54, 59, 63, 66, 77
(iv) சிவஞானசித்தியார் சுபக்கம், 52, 55.

23. (i) திருவுந்தியார் 29.
(ii) திருக்களிற்றுப்படியார், 64, 84, 91.
(iii) சிவஞானபோத உதாரண வெண்பா 31, 35, 39, 53, 60, 61
(iv) சிவஞானசித்தியார் சுபக்கம், பாயிரம் 6.
(v) சிவப்பிரகாசம், 13.

24. திருவருட்பயன், 9.

25. (i) "God is designated in the Siddhanta by such names as Hara and Siva. He is Hara in the sense that he removes the bonds of the soul as also in the sense that in Him the world gets resolved. He is called Siva, because He is the supreme bliss."

- T.M.P. Mahadevan, 'Saiva Siddhanta', History of Philosophy Eastern and Western, P.371.

(ii) *"குறைவிலா மங்கலக் குணத்தன் ஆதலின்*
*நிறைமலம் அநாதியின் நீங்கி நிற்றலின்*
*அறைகுவர் சிவன்என அறிவின் மேலேவர்"*

*- காஞ்சிப் புராணம், திருநெறிக் காரைக்காட்டுப்படலம், 23.*

26. சிந்தனையுரை, 'திருவருட்பயன்' சித்தாந்த சாத்திரம் பதினான்கு மூலமும் உரையும், சைவசித்தாந்த மகா சமாசம், ப. 1048.

27. சிவஞானசித்தியார் சுபக்கம், 115.

28. மேலது, 24.

29. மேலது, 19, 21.

30. திருமந்திரம் 115.

31. திருவருட்பயன், 52.

32. ஏகன்- ஒருவன்; ஏகம் - தான் ஒன்றேயாய் இருப்பது. "வேதங்களில் ஏகம் என்றது ஒன்று எனவே பொருள்படும். அதன் தாற்பரியம் பதிப்பொருள் ஒன்று என்பதே ஆகும்."

*- க.வச்சிரவேல் முதலியார், சைவசித்தாந்தத் திறவு, ப. 19.*

33. திருக்களிற்றுப்படியார், 49.

34. சிவஞானசித்தியார் சுபக்கம், 303.

35. திருவருட்பயன், 1.

36. சிவஞானபோதம், சூத்., 1.

37. (i) சிவஞானசித்தியார் சுபக்கம், 55.

(ii) சிவஞான சுவாமிகள் உரை, 'சிவஞானசித்தியார் சுபக்கம்' சித்தாந்த சாத்திரம் பதினான்கு மூலமும் உரையும், சமாசம், பக்.415-416.

38. M.A. Dorai Arangasamy, The Religion and Philosophy of Thevaram, P.26.

39. சிவப்பிரகாசம், 13.

40. திருவருட்பயன், 6.

41. போற்றிப்பஃறொடை, கண்ணி, 64-69

42. திருவுந்தியார், 1.

43. திருக்களிற்றுப்படியார், 1.

44. அர்த்தம் - பாதி; நாரி - மாது எனப்பொருள்.

- கே.ஆறுமுகநாவலர், இந்துமத இணைப்பு விளக்கம், ப.41.

45. ச.தண்டபாணி தேசிகர் குறிப்புரை, முதல் திருமுறை, ப.388.

46. சிவஞானசித்தியார் சுபக்கம், 69.

47. மேலது.

48. சிவஞானபோதம், சூத்., 2.

49. ப.இராமநாதபிள்ளை (ப.ஆ.), மெய்கண்ட சாத்திரம் பதினான்கு மூலமும் உரையும் (முதற்பகுதி), கழகம், ப.36.

50. திருவருட்பயன், 2.

51. (i) சிந்தனையுரை, 'திருவருட்பயன்', மு.நூல்., ப. 1046.

(ii) நிரம்ப அழகிய தேசிகர் உரை, திருவருட்பயன், ப.9.

(iii) க.சிவபாதசுந்தரம் உரை, திருவருட்பயன், ப.4.

52. சிவஞானசித்தியார் சுபக்கம், 239.

53. மேலது, 82.

54. மயிலை, சீனி.வேங்கடசாமி, சமணமும் தமிழும் (முதற்பகுதி), ப.10.

55. சிவஞானசித்தியார் சுபக்கம், 70.

56. ச.தண்டபாணி தேசிகர் குறிப்புரை, மு.நூல்., ப.143

57. சிவஞானசித்தியார் சுபக்கம், 59.

57அ. மேலது, 65.

58. அ.கந்தசாமிப்பிள்ளை குறிப்புரை, மூன்றாவது திருமுறை, ப. 247.

59. சிவஞானசித்தியார் சுபக்கம், 67.

60. ச.தண்டபாணி தேசிகர் குறிப்புரை, மு.நூல்., ப.524.

61. சிவஞானசித்தியார் சுபக்கம், 70.

62. மேலது.

63. சிவஞானசித்தியார் சுபக்கம், 66.

64. மேலது, 74.

65. சிவஞானசித்தியார் சுபக்கம், 67.

66. மேலது 61.

67. "The organism of ours is the result of our Karma and is the product of Prakriti; God is above Karma and His body can not be of Prakriti. His form is purely spiritual Jnana. Note the significance of the mantra 'Vidya Dehaya Namah' used in the worship. God is considered to have body of Vidya or Jnana."

-K.Vajravel Mudaliar, "The form of the formless",
Lectures on Saiva Siddhanta, P.27.

68. சிவஞானசித்தியார் சுபக்கம், 59.

69. மேலது.

70. சி.அருணைவடிவேல் முதலியார், சித்தாந்த வினாவிடை, பக். 129-130.

71. *"காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்*
*நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாஞ் சிவலிங்கம்"*
*- சேக்கிழார், சாக்கிய நாயனார் புராணம், 8.*

72. சிவஞானசித்தியார் சுபக்கம், 58.

73. திருவருட்பயன் 5.

74. சிவஞானசித்தியார் சுபக்கம், 63.

75. மேலது, 68.

76. மேலது.

77. அட்டமூர்த்தக் கொள்கை திருஞானசம்பந்தர் காலத்திற்கு முன்பே தமிழகத்தில் வழங்கிவந்த சைவக்கொள்கை யாகும்.
*- மணிமேகலை 27:89-95.*

78. சிவஞானசித்தியார் சுபக்கம், 68.

79. மேலது.

80. மேலது.

81. ச.தண்டபாணி தேசிகர் குறிப்புரை, முநூல்., ப.486

82. (i) சிவஞானசித்தியார் சுபக்கம், 57.
(ii) சிவப்பிரகாசம், 18.

83. சிவஞானசித்தியார் சுபக்கம், 53.

84. திருவருட்பயன், 4.

85. (i) சிவஞானசித்தியார் சுபக்கம், 57.
"திருஞானசம்பந்தர் தேவாரமும் சைவசித்தாந்த நூல்களும்" என்னும் இயலில் விளக்கிக் கூறப்பட்டுள்ளது.
(ii) பின்னிணைப்பு எண். 16.

86. ச.தண்டபாணி தேசிகர் குறிப்புரை, மு.நூல்., ப. 107.

87. சிவஞானசித்தியார் சுபக்கம், 53.

88. மேலது, 54.

89. சிவப்பிரகாசம், 17.

90. சிவஞானசித்தியார் சுபக்கம், 54.

91. உண்மை விளக்கம், 8.

92. மாணிக்கவாசகர், திருவாசகம், 'திருப்பள்ளியெழுச்சி', 8.

93. (i) சி.அருணைவடிவேல் முதலியார், மு.நூல்., ப.134.

(ii) சம்பு - சிவன்; இறைவன். அணு - உயிர்கள், பட்சம் - பகுதி. அணுபட்சத்தினரையும் சம்புபட்சத்தினரையும் எவ்வாறு அறியலாம் என்னும் கேள்விக்குப் பிறவி எடுத்த வர்கள் அணுபட்சத்தினர் எனப்படுவர். அவ்வாறின்றி எவையேனும் காரணம் பற்றி வருதல் போதல் தெரியாத வாறு மின்னல்போல் விரைந்து தோன்றிச் சில சொற்கள் வழங்குதல் அல்லது சிலவற்றை இயற்றுதல் இவைகளைச் செய்து விரைய மறைதலோடு நிற்பவர்கள் சம்புபட்சத் தினர் என்றும் அறிந்து கொள்ளப்படுவர்.

- சி. அருணைவடிவேல் முதலியார்,
முப்பொருள் இயல்பு, ப.68.

94. திருநாவுக்கரசர் தேவாரம், 5 : 214 : 3

95. திருமந்திரம், 2406.

96. கடோபநிடதம், II.20.

97. (i) சிவஞானசித்தியார் சுபக்கம், 11.

(ii) கலைக்களஞ்சியம் தொகுதி 5, ப. 239.

(iii) க.வச்சிரவேல் முதலியார், 'சைவம்' சைவமும் வைணவமும், பக்.60-61.

98. சி.அருணைவடிவேல் முதலியார், முப்பொருள் இயல்பு, ப.76.

99. (i) பரிமேலழகர் உரை, திருக்குறள் ப.7.

(ii) சிவஞானசுவாமிகள் உரை, சிவஞானசித்தியார் சுபக்கம், பாயிரம், கழகம், ப.5.

100. பிரமம் சத்து, சித்து, ஆனந்தம் என்பது உபநிடத வழக்காகும்.
- சி.அருணைவடிவேல் முதலியார், மு.நூல்., ப.74.

101. மேலது, ப.75.

102. சிவஞானபோத உதாரண வெண்பா, 34.

103. சிவஞானசித்தியார் சுபக்கம், 244.

104. சிவப்பிரகாசம் 13.

105. திருமந்திரம், 2296.

106. சிவப்பிரகாசம், 13.

107. சிவஞானபோத உதாரண வெண்பா, 8.

108. சுப்பிரமணிய தேசிகர் உரை, 'சிவஞானபோதம்' சித்தாந்த சாத்திரம் பதினான்கு மூலமும் உரையும், சமாசம், ப.33.

109. இருபா இருபஃது, 20.

110. சிவஞானசித்தியார் சுபக்கம், 91.

111. சுப்பிரமணிய தேசிக உரை, 'சிவஞானபோதம்', மு.நூல்., ப.27.

112. உண்மை விளக்கம், 27, 28, 29.

113. சிவஞானபோத உதாரண வெண்பா, 8.

114. முத்து சு.மாணிக்கவாசக முதலியார் உரை, இரண்டாவது திருமுறை, ப. 297.

115. சிவப்பிரகாசம், 13.

116. சிவஞானசித்தியார் சுபக்கம், 90.

117. கொடிக்கவி, 3.

118. உண்மை விளக்கம், 38.

119. ''பாசமா ஞானத் தாலும் படர்பசு ஞானத் தாலும்
ஈசனை உணர வொண்ணா''
*- சிவப்பிரகாசம், 84.*

120. *"ஊனக்கண் பாசம் உணராப் பதியை*
*ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி"*
*- சிவஞானபோதம், சூத்., 9.*

*"பாசஞா னத்தாலும் பசுஞானத் தாலும்*
*பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத் தாலே*
நேசமொடும் உள்ளத்தே நாடி"
- சிவஞானசித்தியார் சுபக்கம், 292.

# 6. பசு இயல் கோட்பாடுகள்

# 6. பசு இயல் கோட்பாடுகள்

## 6.0. முன்னுரை :

பசு என்பது தத்துவக் கலைச்சொல் ஆகும். இது பாசங்களால் பந்திக்கப்பட்ட உயிர்களைக் குறிக்கும்.[1] திருஞானசம்பந்தர் தம் தேவாரத்தில்,

*"விளையாததொர் பரிசில் வரு பசு" (1 : 12 : 3)*

என்று அத்தத்துவக் கலைச்சொல்லைக் கையாள்கிறார். பசு, உயிர், ஆன்மா, முதலிய சொற்கள் ஒரு பொருள் குறிப்பன. எளிதாகப் புரிந்து கொள்ளும் பொருட்டு பசு என்ற தத்துவக் கலைச்சொல் உயிர் என்ற சொல்லாலேயே இவ்வியலில் குறிப்பிடப்படுகின்றது. திருஞானசம்பந்தர் தேவாரத்திலிருந்தும், சைவசித்தாந்த நூல்களிலிருந்தும் அறியப்படும் உயிரியல்புகள் இங்கு ஆய்வு செய்யப்படுகின்றன. உயிர் பற்றித் திருஞானசம்பந்தருக்கும், சைவசித்தாந்த நூலாசிரியர்களுக்கும் உள்ள கருத்து வேறுபாடுகள் இவ்வியலில் சுட்டிக்காட்டப்படுகின்றன.

## 6.1. பசு உண்மை :

**6.1.1.** திருஞானசம்பந்தர் தம் தேவாரத்தில்,

*"ஆருயிர்"(2 : 164 : 1, 2 : 169 : 6, 2 : 185 : 7)*
*"ஆவி"(3 : 363 : 3)*
*"உடல்வரை யின்னுயிர்"(3 : 363 : 1)*
*"ஊனம ரின்னுயிர்"(3 : 365 : 5)*
*"ஊழியூழி வையகத் துயிர்கள்"(3 : 311 : 11)*

என்று உயிர்கள் பற்றிக் குறிப்பிடுகின்றனர்.

**6.1.2.** சிவஞானபோதம் மூன்றாம் சூத்திரத்தில் பசு உண்மை மெய்ப்பிக்கப்படுகின்றது; நான்காம் சூத்திரத்தில் பசுவின் இலக்கணம் கூறப்படுகின்றது.

மெய்கண்ட தேவர், பதி (கடவுள்) உண்மையை மெய்ப்பிப்பதற்கும், பசு (உயிர்) உண்மையை மெய்ப்பிப்பதற்கும் வேறுபாடு உள்ளது. கடவுள் இல்லை என்று கூறும் மதங்களும் இருப்பதால் கடவுள் என்ற ஒருவர் ஏன் இருத்தல் வேண்டும் என்று காரணம் காட்டிப் பதி உண்மை மெய்ப்பிக்கப்படுகின்றது. ஆனால் 'உயிர் என்பது எது' என்னும் ஆராய்ச்சியில் 'இன்னதுதான் உயிர்' எனக் கூறுவதில்தான் மதங்கள் மாறுபடுகின்றன. ஆதலால் மெய்கண்ட தேவர் அம்மாறுபாட்டில் பொருந்தாக் கொள்கைகளை மறுப்பதிலேயே பசு உண்மையைக் கூறுகின்றார்.

"உடம்புதோறு யான் என்னும் தன்னோக்கு உணர்வு வடிவில் உள்ளதே உயிர் அல்லது ஆன்மா எனப்படும்."[2]

## 6.2. பசு அநாதி :

**6.2.1.** உயிர் அநாதி என்பதற்கு உயிர் ஒருவரால் தோற்றுவிக்கப் படாதது என்பது பொருளாகும்.

**6.2.2.** திருஞானசம்பந்தரின்,

*"விளையாததொர் பரிசில்வரும் பசு"(1 : 12 : 3)*

என்ற பாடல் தொடர் உயிர் ஒரு காலத்துத் தோன்றியது எனப்படாமல் அநாதியாக உள்ளது என்னும் பொருளைத் தருவது. எனவே உயிர் அநாதி என்ற கோட்பாடு, திருஞானசம்பந்தருக்கு உடன்பாடு என்பது பெறப்படும்.

**6.2.3.** திருவருட்பயன் என்ற சாத்திரநூல் இறைவன், உயிர், இருள், கன்மம், சுத்த மாயை, அசுத்த மாயை இவை ஆறும் அநாதி[3] எனக் கூறுவதால், உயிரும் அநாதி என்பது உணரப்படும்.

நெஞ்சுவிடுதூது என்னும் சாத்திர நூலில்,

*"............சுடரொளியான்*
*என்றுமுளன் அன்றளவும் யானும் உளன்"*[4]

என்று கூறப்படுகின்றது. பதி அநாதி நித்தப் பொருள். எனவே பசுவும் அநாதி நித்தப் பொருளாகும்.

எல்லா உயிர்களும் அநாதியே தொடுத்துச் சிவனுக்கு உடைமையாகையால், சிவனைப்போல உயிர்களும் அநாதித் தன்மை பெற்றவை என்று திருக்களிற்றுப்படியாரில் கூறப்படுகின்றது.[5]

## 6.3. பசு பாசத்தால் பிணிக்கப்பட்டது :

**6.3.1.** உயிர் பாசத்தால் கட்டப்பட்டிருப்பதால்தான் பசு எனப்படு கின்றது.[6] உயிர்கள் இறைவனை உணரவொட்டாமல் தடை செய்பவை இப்பாசம் ஆகும்.

**6.3.2.** "பாச மறுப்பீர்காள்" (1 ; 91 : 6)

என்று திருஞானசம்பந்தர் கூறுகின்றார். உயிர்கள் பாசத்தால் பிணிக்கப்பட்டிருப்பதால் தானே . அதிலிருந்து விடுவித்துக் கொள் ளுங்கள் என்று திருஞானசம்பந்தர் கூறுகிறார்.

*"பந்த நீங்குமே"(1 : 96 : 7)*

என்ற தொடரில் பந்தம் என்பது மலமாயையால் விளைந்த கட்டினைக் குறிக்கும்.[7] நீங்கும் என்றதனால் முன்பு கட்டப்பட்டிருந்ததும் உணர்த்தப்படுகின்றது.

6.3.3.

*"......... பந்தித்த*
*பாசப் பெருங்கயிற்றால் பல்லுயிரும்"*[8]

என்று போற்றிப்பஃறொடை உயிர்கள் பாசத்தால் பிணிக்கப்பட்டவை என்ற கருத்தை உணர்த்தும்.

## 6.4. பசுக்கள் பல :

**6.4.1.** திருஞானசம்பந்தர் தேவாரத்தில் வரும், "பல்லுயிர்" (1 : 53 : 2, 1 : 63 : 4) என்ற சொற்றொடர் உயிர்கள் பல என்பதை உணர்த்தும்.

**6.4.2.** "எண்ணரி தாய்"[9], "பல்லுயிர்"[10] போன்ற சொற்றொடர்களால் சைவ சித்தாந்த நூல்களும் உயிர்கள் பல் என்பதை உணர்த்துகின்றன.

உமாபதிசிவம் தன் திருவருட்பயனில் உயிர்கள் எண்ணிக்கையில் அடங்காதன என்பதனை, "உயிர்கள் முன்பு பிறந்த நாளுக்கும் இனிமேல் பிறக்கப் போகிற நாளுக்கும் இத்தனையென்று தொகை இல்லாதது போல, இவ்வுலகைத் துறந்து வீடுபேறு அடைந்த வர்களுக்கும், இனிமேல் அடையப் போகிறவர்களுக்கும் அளவில்லை" என்கின்றார்.[11]

தருக்கமுறையிலமைந்துள்ள சைவசித்தாந்த நூல்களில் உயிரின் பன்மை, காரணம் காட்டி நிரூபிக்கப்படுகின்றது.[12]

## 6.5. பசு அறிவுப்பொருள் :

**6.5.1.** உயிர்கள் அறிவுடைப் பொருள்களாகும். எப்படிப்பட்ட அறிவுடையன[13] என்பது திருஞானசம்பந்தர் பாடல்களாலும் சைவசித்தாந்த நூல்களாலும் இங்கு ஆராயப்படுகிறது.

**6.5.2.**

*"......... அவர்க் கறியு மறிவருளி"(1 : 17 : 6)*

என்று திருஞானசம்பந்தர் உயிர்களுக்கு அறிவு இறைவனால் அருளப்படுகின்றது என்கின்றார்.

*"மறவியஞ் சிந்தனை" (2 : 203 : 8)*

*"மறக்கு மனத்தினை" (1 : 116 : 6)*

என்ற திருஞானசம்பந்தரின் பாடல் தொடர்கள் உயிர்களின் மறக்கும் இயல்பை உணர்த்துகின்றன.

**6.5.3.** உயிர்கள் இறைவன் அறிவித்தாலன்றி ஒன்றையும் அறியாது என்பதை,

*"அறிவிக்க அன்றி அறியா உளங்கள்"*[14]

என்று சிவஞானபோதம் கூறுகின்றது. மற்றுமோரிடத்தில் உயிர்கள் இறைவன் உள்நின்று உணர்த்த உணரும் என்பது, "உணர்த்த வுணர்தலின்"[15] என்று கூறப்படுகின்றது.

ஐம்பொறிகளின் உதவியாலேயே உயிர்கள் அறிவினைப் பெறும் என்ற கருத்தை,

*"பொறியின்றி ஒன்றும் புணராத புந்திக் (கு)*
*அறிவென்ற பேர்நன் றற"*[16]

என்று திருவருட்பயன் கூறுகின்றது.

*"காட்டிடும் கரண மொன்றும்*
*இல்லையேற் காணொ ணாதாம்"*[17]

என்று உயிர்கள் கரணங்களின் உதவியின்றி ஒன்றையும் காணாது என்று சிவப்பிரகாசத்தில் கூறப்படுகின்றது.

உயிர்களின் அறிவு பற்றிச் சிவஞானசித்தியாரில் பின்வருமாறு கூறப்படுகின்றது.

*"அறிந்திடும் ஆன்மா வொன்றை ஒன்றினால் அறித லானும்*
*அறிந்தவை மறத்த லானும் அறிவிக்க அறித லானும்*
*அறிந்திடும் தன்னை யுந்தான் அறியாமை யானுந் தானே*
*அறிந்திடும் அறிவன் அன்றாம் அறிவிக்க அறிவ னன்றே"*[18]

சைவசித்தாந்த நூல்களின் மூலம் தெரியவரும் உயிரறிவு பற்றிய செய்திகளாவன :

1. உயிர் அறிவுப் பொருளாகும்.
2. தாமே அறியாது, அறிவிக்க அறியும்.
3. ஒன்றொன்றாக அறிவும்.
4. பொறிகளின் உதவியால் அறியும்.
5. பொருட்களில் அழுந்தி அறியும்.
6. அறிந்தவைகளை மறக்கும் தன்மையுடையது.

இவைகளுள் அறிவிக்க அறிவதும், மறக்கும் தன்மையும் திருஞானசம்பந்தர் பாடல்களில் கூறப்பட்டுள்ளன.

இறைவனும் உயிரும் அறிவுடைப் பொருள்கள் ஆயினும் அவற்றிற்கிடையே பின்வரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.[19]

1. இறைவன் இயற்கையுணர்வும், முற்றுணர்வும் உடையவனாதலால் பேரறிவுடையவன் ஆவான். உயிர்களின் அறிவில் குறைபாடுகள் இருத்தலால் உயிர்கள் சிற்றறிவுடையன ஆகும்.

2. இறைவன் பிறர் அறிவிக்க வேண்டாது தானே அறிவன், உயிர்கள் அறிவிக்க அறியும் தன்மையுடையன.

3. இறைவன் முற்றறிவுடையவன் ஆதலால் ஒன்றைச் சுட்டியறியாது எல்லாவற்றையும் ஒருங்கே அறிவன். உயிர்கள் ஒரு காலத்தில் ஒரு பொருளையே சுட்டியறிவன.

## 6.6. பசு அறிவுக்குப் பதி செய்யும் உபகாரம் :

அறிவிக்க அறியும் தன்மையுடைய உயிர்களுக்கு இறைவன் அறிவுபெறச் செய்யும் உபகாரம் இருவிதமாகப் பகுக்கப்படும். அவை :

1. காட்டும் உபகாரம்
2. காணும் உபகாரம்

### ***6.6.1***. காட்டும் உபகாரம் :

இறைவன் உயிர்களின் அறிவை விளக்கி அவைகளை அறியச் செய்வதே காட்டும் உபகாரம் எனப்படுகின்றது.

### 6.6.1.1.

*"அவர்க் கூறியும் அறிவருளி" (1 : 17 : 6)*

என்ற திருஞானசம்பந்தரின் பாடல் தொடரில் 'அறிவருளி' என்பது காட்டும் உபகாரத்தை உணர்த்தும் எனலாம்.

*"காட்டுவித்தால் ஆரொருவர் காணா தாரே*
*காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே"*[20]

என்ற திருநாவுக்கரசரின் வாக்கும் காட்டும் உபகாரத்தை நன்கு விளக்கும்.

*"அறிவானுந் தானே அறிவிப்பான் தானே*
*அறிவாய் அறிகின்றான் தானே அறிகின்ற*
*மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பார் ஆகாயம்*
*அப்பொருளுந் தானே அவன்"*[12 உ]

என்ற காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதிப் பாடலில் இறைவனின் காணும் உபகாரமும், காட்டும் உபகாரமும் நன்கு விளக்கப்படுகின்றன.

**6.6.1.2.** இக்காட்டும் உபகாரம் சிவஞானபோதத்தில் பல இடத்திலும், சிறப்பாக ஐந்தாம் சூத்திரத்திலும் விளக்கப்படுகிறது.

**6.6.2.** காணும் உபகாரம் :

உயிர்கள் அறியும் போது அறியப்படும் பொருளை இறைவன் தானும் உடன்நின்று அறிவது காணும் உபகாரம் ஆகும்.

**6.6.2.1.**

*"கண்ணாவா ருலகுக்குக் கருத்தானார்"*
*(3 : 322 : 1)*
*"உயிர்க்கெல்லாம் கண்ணானே"(2 : 151 : 3)*

என்ற தொடர்களால் திருஞானசம்பந்தர் இறைவன் திருவருளே கண்ணாக நின்று உயிர்களுக்குக் காணும் உபகாரத்தைச் செய்வதைக் கூறுகிறார் எனலாம்.

**6.6.2.2.** இவ்விருவகை உபகாரத்தையும்,

*"காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போற்*
*காணஉள் ளத்தைக் கண்டு காட்டலின்"*[22]

என்று சிவஞானபோதம் கூறுகின்றது.

இது,

*"............. ஆன்மாக்*
*காட்டக்கண் டிடுந்தன்மை யுடைய கண்ணுக்(கு)*
*ஏயும்உயிர் காட்டிக்கண் டிடுமா போல*
*ஈசனுயிர்க் குக்காட்டிக் கண்டிடுவன்"*[23]

என்றும்,

*"சிவனே யெல்லாம் அறிந்தறி வித்து நிற்பன்"*[24]

என்றும் சிவஞானசித்தியாரில் கூறப்படுகின்றது. இங்கு 'அறிந்து', 'அறிவித்து' என்ற சொற்கள் முறையே 'காணும் உபகாரத்தையும்', 'காட்டும் உபகாரத்தையும்' உணர்த்துகின்றன.

## 6.7. பசுக்களின் பிறவி :

உயிர்கள் என்றும் அநாதியானவை. ஆதலால் அவை இறைவனால் படைக்கப்படவில்லை. உயிர்கள் உலக போகங்களை அனுபவிக்க ஏற்ற உடம்பே இறைவனால் படைக்கப்படுகின்றது. அதுவே பிறப்பு எனப்படும்.

### 6.7.1. பிறப்பு இறைவனால் கொடுக்கப்படல் :

**6.7.1.1.** உயிர்களுக்குப் பிறப்பும், இறப்பும் இறைவனால் அமைகின்றது என்பதை,

"தோற்றமுங் கேடும்வைப் பாருயிர் கட்கெல்லாம்"
*(2 : 267 : 1)*

என்கிறார் திருஞானசம்பந்தர்.

*"பல் லுலகினிலுயிர் வாழ்க்கை*
*கண்டநாதனார்"(2 : 243 : 7)*

என்ற தொடர் பல உலகங்களிலும் உடம்போடு உயிர் வாழ்க்கையை அவ்வுயிர்களின் கன்மத்திற்கு ஏற்ப அருளியவன் இறைவன் என உணர்த்தும் என்பர்.[25]

**6.7.1.2.** சிவஞானபோதம் முதல் சூத்திரம் படைப்பைப் பற்றி அவன், அவள், அது என அவை மூவினைமையின் தோற்றி என்று கூறுவது உயிர்கட்குத் தூல உடம்பு இறைவனால் உண்டாவதை உணர்த்தும். சிவப் பிரகாசமும்,

*"................... யாக்கை*
*அண்ணலரு ளால் நண்ணி"*[26]

என்று உயிர்கள் இறைவன் அருளால் பிறப்பைஅடைவதைக் கூறுகின்றது.

திருஞானசம்பந்தர், உயிர்களுக்குப் பிறப்பு இறைவனால் கொடுக்கப்படுகின்றது என்று மட்டும் கூறுகிறார். சிவஞானசித்தியாரும் இக்கருத்தை உடன்பட்டுக் கூறினும், ஒரு காரியத்திற்கு முதல், துணை, நிமித்தம் என்று மூன்று காரணங்கள் உண்டு என்றும், உயிர்களின் பிறப்பாகிய காரியத்திற்கு இறைவன் நிமித்த காரணன் என்றும் கூறுகின்றது.[27]

**6.7.2.** பிறவிகளின் வகைகள் :

**6.7.2.1.** திருஞானசம்பந்தர்,

*"உரைசேரு மெண்பத்து நான்குநூ*
*றாயிரமாம் யோனி பேத*
*நிரைசேரப் படைத்து"*(1 : 132 : 4)

என்று உயிர்கள் பல்வேறுவகைப் பிறவிகள் அடைவதைக் கூறுகிறார்.

**6.7.2.2.** உயிர்கள் நால்வகைத் தோற்றம், எண்பத்து நான்கு லட்சம் யோனி பேதமாகிய பிறப்பை அடைவதாகச் சிவஞானசித்தியாரில் கூறப்படுகின்றது.[28]

உயிர்கள் நால்வகைத் தோற்றம், எழுவகைப் பிறப்பு, எண்பத்து நான்கு லட்சம் யோனிபேதமாகிய பிறப்பை அடைவதாகச் சிவப்பிரகாசத்தில் கூறப்படுகின்றது.[29]

சிவஞானசித்தியாரிலும், சிவப்பிரகாசத்திலும் திருஞான சம்பந்தர் கூறும் உயிர்களின் யோனிபேதங்கள் வகைப்படுத்திக் கூறப் படுகின்றன.

**6.7.3.** பிறவி வேறுபாட்டிற்குக் காரணம் வினை :

**6.7.3.1.** உயிர்கள் பல்வேறுவகைப் பிறவிகளை அடைவதற்குக் காரணம் வினை ஆகும். ஓர் உயிருக்குக் கிடைக்கும் உடம்பானது அஃது அப்போது அனுபவிக்க வேண்டிய வினைகளுக்குத் தக்கதாய் அமையும்.

**6.7.3.2.**

*"மெய்த்தன்னுறும் வினை"* (1 : 16 : 5)

என்ற திருஞானசம்பந்தரின் தொடர், உடலானது உயிரை அடுத்தற் குக் காரணமான வினை என்பதனை உணர்த்தும்.[30] எனவே உயிர் களின் பிறவிக்கு உயிர்கள் செய்யும் வினை காரணமாகும் என்பது உணர்த்தப்படும்.

*"நோய்புல்கு தோறிரைய நரைவரு நுகருடம்பில்"*
(1 : 118 : 2)

என்ற திருஞானசம்பந்தர் பாடலில் நுகருடம்பு என்றதற்கு வினைப்பயனை அனுபவிக்க எடுத்த உடம்பு எனப் பொருள் கூறலாம். உயிர்கள் உடம்பெடுத்தல் பிறப்பு ஆகும். ஆதலால் வினைப்பயனை

அனுபவிக்க எடுத்த உடம்பு என்றதனால் உயிர்கள் வினைப்பயனை அனுபவிக்கப் பிறக்கின்றன என்பது உணர்த்தப்படுகின்றது.

**6.7.3.3.** உயிர்கள் தாம் செய்த இரு வினைகளினால் இவ்வுலகில் இறைவனருளால் பிறப்பும் இறப்பும் அடைகின்றன என்ற கருத்தைச் சிவஞானபோதம்,

> *"............ இருவினையில்*
> *போக்கு வரவு புரிய ஆணையின்"*[31]

என்று கூறுகின்றது. ஆணை என்ற சொல் சிற்சக்தியைக் குறிக்கும்.[32] 'போக்கு வரவு' என்பது இறத்தலையும், பிறத்தலையும் குறிக்கின்றது.

'இருவினை', 'ஆணை' என்ற சொற்கள் உயிர்களின் பிறப்பிற்கு உயிர்கள் செய்த இருவினைகளும், சிற்சக்தியும் துணைக் காரணங்களாக அமைகின்றன என்பதை உணர்த்துகின்றன.

உயிர்கள் தாங்கள் செய்த நல்வினை தீவினைகளுக்கு ஏற்ற உடலை, இறைவனருளால் அடைகின்றன என்பது,

> *"இருவினையின் தன்மைகளுக் கீடான யாக்கை*
> *அண்ணலரு ளால் நண்ணி"*[33]

என்று சிவப்பிரகாசத்தில் கூறப்படுகின்றது. மேலும்,

> *"............ நாட்டுகின்ற*
> *எப்பிறப்பும் முற்செய் இருவினையால் நிச்சயித்து"*[34]

என்று போற்றிப்பஃறொடையிலும் கூறப்படுகின்றது.

> *"இருவினை இன்ப துன்பத் திவ்வுயிர் பிறந்திறந்து*
> *வருவது போவதாகும்"*[35]

என்று சிவஞானசித்தியாரிலும் கூறப்படுகின்றது.

திருஞானசம்பந்தர் உயிர்கள் இறைவனால் வினையின் காரணமாகப் பிறக்கின்றன என்கிறார். மெய்கண்ட தேவர் உயிர்களின்

பிறப்பிற்கு ஆணையாகிய சிற்சக்தியும், உயிர்கள் செய்த இருவினையும் துணைக்காரணங்களாகும் என்பார்.

**6.7.4.** பிறவி தொடர்ச்சியாய் வருதல் :

**6.7.4.1.** வினையின் காரணமாகப் பிறப்பெடுத்த உயிர்கள் அவ் வினைப்பயனை அனுபவிக்கும் பொழுதே விருப்பு, வெறுப்-புடன் செயலாற்றுகின்றன. அச் செயல்கள் வரும் பிறவிக்கு வினைகளாக அமைகின்றன. அவ்வினை களின் காரணமாக உயிர்கள் மீண்டும் பிறக்கும். இவ்வாறு காரண காரியத் தொடர்ச்சியாய் உயிர்களுக்குப் பிறவி உண்டாகும்.

**6.7.4.2.**

*"தொடர்ந்த நம்மேல் வினை"* (2 : 250 : 7)

என்ற தொடரால் திருஞானசம்பந்தர், வினை தொடர்ச்சியாய் வருதலை உணர்த்துகின்றார்.

தொடர்ந்து வரும் வினையின் காரணமாக உயிர்களுக்குப் பிறவியும் தொடர்ந்து வருதலைத் திருஞானசம்பந்தர்,

*"வட்டின் மாறிவா ழுடம்பினார்"* (2 : 215 : 7)

என்ற தொடரால் குறிப்பாக உணர்த்துகின்றார். 'வட்டின் மாறி வாழ் உடம்பினார்' என்றது உடையை மாற்றுவது போல உடம்பினை மாற்றி வாழும் உயிர்களைக் குறிக்கும் எனவும்; உடம்பில் மாறி வாழ்தலாவது, எடுத்து உடம்பினை விடுத்துப் புதியதோர் உடம்பில் புகுதல் எனவும் பொருள்படும் என்பர்.[36] வட்டு என்பதை வண்டிச்சக்கரம் எனக் கொண்டு வண்டிச்சக்கரம் சுழல்வது போலப் பிறவிச் சுழற்சி உண்டாகும் எனவும் கூறலாம்.

**6.7.4.3.** பிறவித் தொடர்ச்சி பற்றிச் சிவஞானசித்தியாரில், வித்தி லிருந்து மரமும், மரத்திலிருந்து வித்தும் மாறி மாறி உண்டாவது போல,

பிறவியினால் வினையும், வினையினால் பிறவியும் மாறிமாறி உண்டா கின்றன என்று கூறப்படுகின்றது[37]

பிறவி தொடர்ந்து வருதலை மேலே கூறிய உவமானத்தால் விளக்கிய சிவஞானசித்தியாரின் ஆசிரியர், பிறவி தொடர்ந்து வருதல் எப்படி என்பதனையும் மற்றோர் உவமானம் மூலம் கூறுகின்றார். நாம் விளைவிக்கும் விளைபொருட்கள் உணவுப் பொருட்களாக ஆவதோடு மட்டுமல்லாமல், அடுத்த பயிருக்கு வித்தாக அமைவது போல, உயிர்கள் முற்பிறவியில் செய்த வினையின் பயனை, இப்பிறவியில் அனுபவிக்கும் பொழுதே இப்பிறவியில் செய்யும் செயல்கள் வரும் பிறவிக்கு வினைகளாக அமைகின்றன என்கின்றார்.[38]

திருஞானசம்பந்தர் "வட்டின் மாறிவாழ் உடம்பு" என்று கூறுவதுபோலச் சிவஞானபோதத்தில் உயிர்களின் உடம்பு மாறுவது "அரவுதன் தோலுரிவு"[39] என்று கூறப்படுகின்றது.

பிறவி தொடர்ந்து வரும் என்பதற்கான குறிப்பு திருஞானசம்பந்தர் தேவாரத்தில் உள்ளது. ஆனால் எப்படித் தொடர்ந்து வரும் என்பதற்கான குறிப்பு திருஞானசம்பந்தர் தேவாரத்தில் இல்லை; சிவஞானசித்தியாரில்தான் விளக்கப் படுகின்றது.

### 6.7.5. அச்சுமாறிப் பிறத்தல் :

**6.7.5.1.** உயிர்களுக்குக் காரண காரியத் தொடர்ச்சியாய் பிறப்புக்கள் தொடர்ந்து வரும்பொழுது, அவை ஒரு பிறவியில் செய்கின்ற நல்வினை, தீவினைகட்கேற்ப மறுபிறவி அமைகின்றது. எனவே மறுபிறவியில் உயிர்களுடைய தூல உடம்பு மாறலாம். இவ்வாறு தூல உடம்பு மாறுதலே அச்சுமாறிப் பிறத்தல் எனப்படும்.

**6.7.5.2.** *"சிலந்தி செங்கட் சோழ னாகச் செய்தான்"*(2 : 199 : 7)

என்று ஒரு சிலந்தி தான் செய்த சிவ புண்ணியத்தால் மறுபிறப்பில் கோச்செங்கட் சோழனாகப் பிறந்தது என்ற வரலாற்றைத் திருஞானசம்பந்தர் கூறுகிறார்.

**6.7.5.3.** இவ்வரலாறு சிவஞானசித்தியாரிலும் கூறப்படுகின்றது.[40] உயிர்களின் 'யோனியும்', 'அச்சும்' பிறவிதோறும் மாறும்[41] என்று சிவஞானசித்தியாரில் கூறப்படுவதற்கு இவ்வரலாறு ஏதுவாகின்றது எனலாம். உயிர்களுக்குச் 'சூக்கும உடம்பு' ஒன்றுதான். அது மாறு வதில்லை. அவற்றின் 'தூல உடம்பு' தான் அவைகள் செய்த வினைக்கேற்பப் பிறவி தோறும் மாறும்[42] என்று சிவஞானசித்தியாரில் கூறப்படுகின்றது.

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் உயிர்களின் மறுபிறவி மாறி அமையும் என்பதற்கு வெளிப்படையான குறிப்புஇல்லை. அக்கருத்து சிலந்தி கோச்செங்கட் சோழனாகப் பிறந்த வரலாற்றில் உட்குறிப்பாய் அமைந்துள்ளது. உயிர்கள் பிறவியிலிருந்து விடுபட்டு இறைவனடி சேர வேண்டும் என்று மக்களுக்கு உபதேசிப்பதே அவருடைய குறிக்கோள் ஆகும்.

> *"............உம தடிதொழும்*
> *இயலுளார் மறுபிறப் பிலரே"*(3 : 353 : 9)
> *"நாலூர் மயானத்து நம்பான்ற வடிநினைந்து*
> *மாலூருஞ் சிந்தையர்பால் வந்தூரா மறுபிறப்பே"*
> (2 : 182 : 1)

போன்ற திருஞானசம்பந்தரின் பாடல் தொடர்கள் இக்கருத்தை வலியுறுத்தும். மேலும் திருத்தேவூர்ப்பதிகத்தில் (2 : 218) பாடல் இறுதி தோறும் இறைவனின் திருவடியைச் சேர்ந்தவர்களுக்கு அல்லல் இல்லை என்று கூறப்படுகின்றது. ஆகையால் அவர் தம் பாடல்களில் மறுபிறவி மாறி அமையும் என்பது பற்றி அதிகம் கூறவில்லை எனலாம்.

## 6.8. பசுக்கள் பதியின் உடைமை :

**6.8.1.** உயிர்களின் பிறப்பும், உலகப் படைப்பும், இறைவனால் அமைவதால் உயிர்களும், உலகமும் இறைவனின் உடைமை என்று கூறப்படும்.

**6.8.2.**

*"உடையா னெனையா ளுடையெந் தைபிரானே"*
*(1 : 31 : 2)*
*"எமையா ளுடையொண் சுடரானே"(1 : 31 : 5)*
*"என்னையுடையான்"(1 : 74 : 6)*

என்ற திருஞானசம்பந்தர் பாடல் தொடர்கள் உயிர்கள் அவன் உடைமை என்பதை உணர்த்துகின்றன.

**6.8.3.** சைவசித்தாந்த நூல்களில் வரும் "எம்மை உடைமை"[43] "அனாதி சிவனுடைமை"[44] முதலிய தொடர்கள் உயிர்கள் இறைவனின் உடைமை என்ற கருத்தை உணர்த்தும்.

உயிர்கள் இறைவனின் உடைமை என்பதைத் திருஞானசம்பந்தரும் சைவ சித்தாந்த நூலாசிரியர்களும் கூறு கின்றனர்.

## 6.9. பசுக்கள் சார்ந்ததன் வண்ணமாதல் :

**6.9.1.** உயிர்களுக்கு இருவகைச் சார்புகள் அல்லது பற்றுக்கோடுகள் உள்ளன. ஒன்று உலகச்சார்பு; மற்றொன்று கடவுட்சார்பு. இவற்றைச் சாரும் உயிர்கள் அவ்வவற்றின் தன்மையை அடைதல் சார்ந்ததன் வண்ணமாதல் எனப்படும். உலகச் சார்பு உள்ளவரை அது பற்றி வரும் வினைகள் உயிரைத் தொடரும். தொடர்தலின் பிறப்பு இறப்புட்பட்டு உழலும் கட்டுநிலை நீங்காது. இனி

கடவுளை அனுபவமாய் உணர்வதாகிய மெய்யுணர்வால் கடவுட்சார்பு உளதாகும். கடவுட்சார்பு உண்டாகிய பிறகும் ஒருவன் அறிவு புறத்தே சென்று பொருள்களைப் பற்றின் உலகச்சார்பு மீண்டும் மேம்படும். ஆதலால் அது மேம்படாதிருக்கும் பொருட்டு அவன்தான் உணர்ந்த முதற்பொருளோடு ஒன்றி நின்று அதன் குறிப்பின்வழி நின்று ஒழுக வேண்டும். ஒழுகலின் வினைகள் வந்து சாரா; பிறப்பும் இறப்பும் உண்டாகா.[45]

**6.9.2.** திருஞானசம்பந்தரும்,

> *"தலைவனதாணிழல் சார்வோம்" (1 : 40 : 3, 7)*
> *"விரிசடையானடி சேர்வோம்"(1 : 40 : 2)*
> *"தாழ்சடையானடி சார்வோம்"(1 : 40 : 8)*
> *"தலைவனதாளினை சார்வோம்"(1 : 40 : 6)*

போன்ற தொடர்களால் தன்னையும் உளப்படுத்தி இறைவனடி சார்வோம் என்று கூறுவதன் மூலம் உயிர்கள் இறைவனைச் சார வேண்டும் என்பதை உணர்த்துகின்றார்.

உயிர்கள் ஏன் இறைவனைச் சாரவேண்டும் என்பதற்கு விடையிறுப்பது போல,

> *"விளையாததொர் பரிசில்வரு பசுபாசவேதனை யொண்*
> *டளையாயின தவிரவ்வரு டலைவன்னது சார்பாம்"*
> *(1 : 12 : 3)*

என்று திருஞானசம்பந்தர் கூறுகிறார். உயிர்கள் இறைவனை உணரவொட்டாமல் தடுப்பவை மும்மலங்கள் ஆகும். அம்மும்மலங் களும் நீங்க இறைவனைச் சேருவோம் என்பதை இதன் மூலம் உணர்த்துகின்றார்.

> *"செடியாய வுடறீர்ப்பான் தீவினைக்கோர்*
> *மருந்தாவான்"(2 : 179 : 11)*

என்ற திருஞானசம்பந்தர் பாடல் தொடரில் 'உடல் தீர்ப்பான்' என்பது பிறப்பில்லாமல் அருள்புரிதலை உணர்த்தும். 'தீவினைக்கோர் மருந்தாவான்' என்றது வினை நீக்கம் செய்தலை உணர்த்தும்.[46] எனவே கடவுளுடைய சார்பு உயிர்களுக்கு வினை நீக்கம் செய்து பிறப்பு,இறப்பு இல்லாமல் செய்வதைத் திருஞானசம்பந்தர் உணர்த்து கின்றார்.

உயிர்களின் கடவுட்சார்பினால் வினைப்பற்று நீங்கும் என்ற கருத்தைத் திருஞானசம்பந்தர்,

*"செற்றமில் சீரானை திருவாப்ப னூரானைப்*
பற்று மனமுடையார் வினைபற் றறுப்பாரே" **(1 : 88 : 1)**

என்று கூறுகின்றார்.

*"சார்ந்தவர்க் கின்பங்க டழைக்கும் வண்ணம்*
*நேர்ந்தவன்"(1 : 113 : 5)*
*"சங்கர னார் தம்மைப்*
*போலத் தம்மடி யார்க்குமின் பளிப்பவர்"*
*(2 : 238 : 2)*

என்ற தொடர்களால் திருஞானசம்பந்தர் தம்மைச் சாரும் உயிர்களுக்கு இறைவன் இன்பம் கொடுப்பதை உணர்த்துகின்றார்.

*"பிறவியால் வருவன கேடுள" (2 : 215 : 5)*

என்ற தொடரில் 'பிறவி' என்பது உயிர்களுக்கு ஏற்படும் உலகச் சார்பைக் குறிக்கும். எனவே உலகச்சார்பு உயிர்களுக்குத் துன்பம் தருவது உணர்த்தப்படுகிறது.

இவ்வாறு கடவுட்சார்பு உயிர்களுக்கு வினைநீக்கம் செய்து பிறப்பு இறப்பு இல்லாமல் செய்து இன்பம் தருவதாலும், பிறவியினால் உண்டாகிற உலகச்சார்பு துன்பத்தை தருதலாலும், இவ்விருவகைச் சார்புகளுள் கடவுட்சார்பே உயிர்களுக்கு வேண்டுவது என்ற குறிப்பை,

*"சைவனாரவர் சார்வலால் யாதுஞ்சார்விலோ*
*நாங்களே" (2 : 213 : 9)*

என்ற திருஞானசம்பந்தரின் தொடர் உணர்த்துகின்றது எனலாம்.

***6.9.3.*** உயிர்களின் சார்ந்ததன் வண்ணமாந் தன்மை சைவசித்தாந்த நூல்களில் பின்வருமாறு கூறப்படுகின்றது. பதி சத்துப்பொருள் எனப்படும். பாசம் அசத்துப் பொருள் எனப்படும். பசு (உயிர்) சத்தைச் சாரும்பொழுது சத்தாகவும், அசத்தைச் சாரும்பொழுது அசத்தாகவும் மாறும் இயல்புடையது. எனவே உயிர் சதசத்து என்று கூறப் படுகின்றது.[47]

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் சதசத்து என்ற சொல் இல்லை. சைவசித்தாந்த நூல்களில் கூறப்படும் உயிர் சார்ந்ததன் வண்ணமாந் தன்மையுடையது என்ற கருத்திற்குரிய கருப்பொருட்கள் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் உள்ளன.

## 6.10. பசுக்களின் அவத்தைகள் :

***6.10.1.*** உயிர்கள் உலகச்சார்பை விட்டுக் கடவுட்சார்பை அடைதலே அவைகளின் குறிக்கோள் என்பது சைவசித்தாந்தத்தில் கூறப்படும் கருத்தாகும். இவ்வாறு உயிர்கள் கடவுளைச் சேருமுன் அடைகின்ற நிலை வேறுபாடுகள் சைவசித்தாந்தத்தில் அவத்தைகள் என்று கூறப்படும்.

**6.10.1.1.**

*"நனவினும் கனவினும் நம்பாஉன்னை*
*மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்" (3 : 262 : 3)*

*"உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின்*
*ஒண்மல ரடியலால் உரையாதென்நா" (3 : 262 : 9)*

என்று திருஞானசம்பந்தர் தாம் நனவிலும் கனவிலும் இறைவனை மனதால் வழிபட மறக்கவில்லை என்கின்றார். மேலும் உண்ணும் பொழுதும், உறங்கும்பொழுதும் இறைவனுடைய திருவடியையே அல்லாமல் தம்முடைய நா வேறு எதுவும் கூறவில்லை என்று தாம் நனவு, கனவு, உறக்கம் மூன்றிலும் இறைவனைப் பற்றிய சிந்தனையில் இருப்பதை உணர்த்துகின்றார். இவ்வாறு எப்போதும் இறைச் சிந்தனையில் இருப்பது இறைவனை அடைவதற்குரிய நிலையாகும்.

**6.10.1.2.** சைவசித்தாந்த்தில் உயிர்கள் இறைவனை அடைவதற் குரிய நிலைகள் அவத்தைகள் எனப்படுகின்றன. அவை சிவஞான போதத்தில் ஐந்தவத்தைகள் எனக் கூறப்படுகின்றன.[48] சிவஞான சித்தியாரில் அவத்தைகள் இருவகையாகப் பிரிக்கப்பட்டு காரண அவத்தை, காரிய அவத்தை எனப்படுகின்றன. காரண அவத்தை 'கேவலம்', 'சகலம்', 'சுத்தம்' எனப்படும்.[49] காரிய அவத்தை 'நனவு' 'கனவு', 'உறக்கம்', 'பேருறக்கம்', 'உயிர்ப்படங்கல்' எனப்படும்.[50]

கேவலம் என்பது உயிர்களின் பிறப்பிற்கு முந்தின நிலையாகும். சகலம் என்பது உயிர்கள் கருவி கரணங்களோடு கூடிய பிறப்பெடுத்த நிலையாகும். சுத்தம் என்பது உயிர்கள் இறைவனோடு ஒன்றிய நிலையாகும்.[51]

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் உயிர்களின் பிறப்பிற்கு முந்தின நிலை பற்றிய குறிப்பு இல்லை; உயிர்களின் பிறவிநிலை பற்றிக் கூறப்படுகின்றது (1:59:1-10). இதுவே சகலநிலை எனச் சைவ சித்தாந்தத்தில் கூறப்படுகின்றது.

திருக்கழுமலப் பதிப்பகத்தில்,

*"..................மெய்ப் பரம்பொருள்*
*சேர்வார்தாமே தானாகச் செயுமவன்"(1 : 126 : 7)*

என்ற தொடரில் தம்மைச் சாரும் சிவஞானிகளைச் சிவமாகச் செய்பவன் என்று கூறும் கருத்து உயிர்கள் சிவனோடு ஒன்றிய சுத்த நிலையைக் குறிப்பாக உணர்த்துகின்றது எனலாம்.

திருஞானசம்பந்தர் அவத்தைகள் எனக் குறிப்பிடவில்லை. அவருடைய பாடல்கள் அனுபவநிலையைக் கூறுவனவாதலால் நனவு, கனவு, உறக்கம், மூன்றிலும் இறைவனைத் தாம் மறவாதிருப்பதாகக் கூறுகிறார். இம்மூன்றுடன் பேருறக்கமும் உயிர்ப்படங்கலும் சேர்க்கப் பட்டுச் சைவசித்தாந்த நூல்களில் காரிய அவத்தைகளாகக் கூறப்படு கின்றன. சைவசித்தாந்த நூல்கள், அனுபவத்திலிருந்து இலக்கணம் கூறுபவையாதலால், உயிர்களின் அனுபவ நிலைகளை அவத்தைகள் என இலக்கணமாகக் கூறுகின்றன.

***6.10.2.*** உயிர்களின் நிலைகளை இரண்டு வகையாகக் கூறுவதும் உண்டு. அவை பெத்தநிலை, முத்திநிலை எனப்படும்.

**6.10.2.1.**

*"ஒடுங்கும் பிணிபிறவி கேடென்றிவை*
*யுடைத்தாய வாழ்க்கை"(1 : 59 : 1)*
*"சாநாளும் வாழ்நாளுந் தோற்றமிவை.*
*சலிப்பாய வாழ்க்கை"(1 : 59 : 3)*
*"நோயும் பிணியு மருந்துயரமு*
*நுகருடைய வாழ்க்கை"(1 : 59 : 9)*

என்று திருஞானசம்பந்தர் உயிர்களின் பிறப்புநிலை பற்றிக் கூறுகிறார்.

துன்பம் தருவதாகிய இறப்பு பிறப்பு என்பவற்றின் தொடர்பு நீங்க, நீங்குதலில்லாத பேரின்பமாயுள்ள சிறந்த மேல்நிலை அடைய விரும்புவீர்களாயின், தூங்கானை மாடத்து இறைவனைத் தொழுங்கள் என்கிறார் திருஞானசம்பந்தர்.

*"பிணிநீர சாதல் பிறத்தலிவை*
*பிரியப்பிரியாத பேரின்பத்தோ*
*டணிநீர மேலுல கமெய்தலுறில்*
*தூங்கானை மாடந் தொழுமின்களே" (1 : 59 : 2)*

என்ற இப்பாடலால் உயிர்களானவை துன்பம் நிறைந்த பிறப்பு நிலை, பேரின்பமயமான வீட்டுநிலை என இருநிலைகளை அனுபவிக்கும் என்பது உணர்த்தப்படுகின்றது.

**6.10.2.2.** இவ்விரு நிலைகளும் பந்தம், வீடு என்ற சொற்களால் சிவஞானசித்தியாரில் குறிப்பிடப்படுகின்றது.[52]

**6.10.2.3.** உயிர்களின் உள்ளத்தே உடனாக நிற்கும் இறைவன் உயிர்களால் உணரப்படாமல் மறைந்து நிற்கும் தன்மையை,

*''உள்ள மெல்லா முள்கிநின்றாங்கே யுடனாடும்*
*கள்ளம் வல்லான்''(1 : 103 : 6)*

என்று திருஞானசம்பந்தர் கூறுகின்றார்.

*''வையமுன்னேவந்து நல்காய் வலிவலமே யவனே''*
*(1 : 50 : 4)*

என்று திருஞானசம்பந்தர் வலிவலம் இறைவனை உலக மக்கள் அறிந்துய்ய வேண்டி வெளிப்படத் தோன்றுமாறு வேண்டுகின்றார். எனவே இறைவன் உயிர்கள் அறியாமல் மறைந்துநிற்றலும், உயிர்கள் உணர வெளிப்படத் தோன்றுதலும் உண்டு என்பது திருஞான சம்பந்தர் பாடல்கள் மூலம் உணர்த்தப்படுகின்றது.

**6.10.2.4.** இது பெத்த நிலையில் உயிர்களின் பின்னே இறைவன் மறைந்து நின்று அருள் செய்கின்றான்[53] என்றும், முத்தி நிலையில் உயிர்களின் முன்னே வெளிப்பட நின்று அருள் புரிகின்றான்[54] என்றும் சைவசித்தாந்த நூலில் கூறப்படுகின்றது. இறைவன் மறைந்து நின்று உதவும் தன்மை திரோதான சக்தி என்றும், வெளிப்பட நின்று உதவும் தன்மை அருள்சக்தி என்றும் கூறப்படுகின்றது.[55] திரோதான சக்தி, உயிர்கள் வினைப்போகத்தை அனுபவித்துக் கன்மம் கழிய உதவுகின்றது. அருட்சக்தி வினைப்பாகம் அனுபவித்து முடிந்த உயிர்களை இறைவன் தன் திருவடியில் சேர்க்கும் அனுக்கிரகமாகும்.[56]

திருஞானசம்பந்தர் இறைவன் மறைந்து நிற்றலையும், வெளிப்படத் தோன்றுதலையும் கூறுகிறார். அதற்கான காரணங்கள் அவர் பாடல்களில் கூறப்படவில்லை. சைவசித்தாந்த நூல்களில் அதன் தத்துவம் உணர்த்தப்படுகின்றது.

## 6.11. பசுக்களும் திருஅருளும் :

### 6.11.1. பசுக்கள் திருவருளை உணராமை :

உயிர்கள் பாசத்தில் அகப்பட்டு அதனால் வரும் துன்பத்தை உணராமல் சிற்றின்பத்தில் மூழ்கியிருப்பதையும், இறைவனின் திருவருளாகிய பேரின்பத்தை உணராமல் இருப்பதையும் திருவாரூர்த் திருப்பதிகப் பாடல் ஒன்றில் திருஞானசம்பந்தர் கூறுகின்றார்.

*"செடிகொ ணோயாக்கை யைம்பாம்பின் வாய்த் தேரைவாய்ச் சிறுபறவை*
*கடிகொள்பூந் தேன்சுவைத் தின்புற லாமென்று கருதி னாயே*
*முடிகளால் வானவர் முன்பணிந் தன்பரா யேத்து முக்கண்*
*அடிகளா ரூர்தொழு துய்யலா மையல்கொண் டஞ்ச னெஞ்ச"*
*(2 : 215 : 6)*

பாம்பின் வாயில் தேரை, தேரையின் வாயில் சிறுபறவை, அச்சிறு பறவையோ அருகிலுள்ள பூவிலுள்ள தேனைக் குடித்து இன்புற முயல்கின்றது. தேனைச் சுவைத்துக் கொண்டிருக்கும் சிறு பறவைக்கும், அதை உண்ணும் தேரைக்கும், தேரையை விழுங்கப் போகும் பாம்பிற்கும் அவ்வுணவால் எய்தும் இன்பம் தெரிகின்றதே ஒழியத் தனக்கு நேரப்போகிற துன்பம் தெரியவில்லை. அதுபோல உயிர்கள் பாசத்தில் அகப்பட்டு இப்பிறவியால் வரும் பெருந்துன்பத்தை உணராது, சிற்றின்பத்திலேயே மூழ்கி உள்ளன என்று முன் இரண்டு அடிகளில் கூறுகிறார். பாடலின் பின் இரண்டு அடிகளில் இந்நிலையை நெஞ்சிற்கு அறிவுறுத்தி, நிலைத்த பொருளான இறைவனைத் தொழுது உய்ய வேண்டும் என்று நெஞ்சிற்கு உபதேசம் செய்கிறார்.

இப்பாடலின் மூலம் திருஞானசம்பந்தர் பின்வரும் கருத்துக்களை விளக்குகிறார் எனலாம்.

1. யாக்கை நிலையாமை
2. உயிர்கள் பிறவித் துன்பத்தை அறியாமை
3. உயிர்கள் சிற்றின்பத்தைச் சார்ந்திருத்தல்
4. உயிர்கள் பேரின்பத்தை உணராமை

திருக்கோடிகா பதிகத்தில்,

> *"முன்னைநீர்செய் பாவத்தான் மூர்த்திபாதஞ் சிந்தியா*
> *தின்னநீரி டும்பையின் மூழ்கிறீர்" (2 : 235 : 5)*

என்ற பாடல் தொடரால், உயிர்கள் இறைவனைப் பற்றிச் சிந்தியாமைக்கு அவை முற்பிறப்பில் செய்த பாவம் காரணமாகும் என்று திருஞானசம்பந்தர் கூறுகிறார்.

> *"சிந்தையினாலுந் தெரிவரிதாகி" (1 : 100 : 9)*
> *"தன்மை யாருமறி வாரிலை"(2 : 142 : 2)*

ஆகிய தொடர்கள் உயிர்கள் இறைவனை அறியமுடியாத தன்மையை உணர்த்துகின்றன.

திருஞானசம்பந்தர் திருவெழுகூற்றிருக்கையில் இறைவனுடைய இயல்புகளை விளக்கிக் கூறி இறுதியாக

> *"அனைய தன்மையை யாதலி னின்னை*
> *நினைய வல்லவ ரில்லைநீ னிலத்தே"*
> *(1 : 128 : அடிகள் 46-47)*

என முடிக்கின்றார்.

இது சிவனருள் பெருக்கம் சிந்தை மொழிக்குக் கட்டுப்படாத பேரளவினதாதலின் உயிர்கள் இறைவனை உணரமுடியவில்லை என்ற கருத்தை உணர்த்துகின்றது. மேற்கூறிய திருஞானசம்பந்தரின் கருத்துக்களைத் தொகுத்து நுணுக்கமாக ஆராயும் பொழுது,

உயிர்கள் திருவருளை உணராமைக்குப் பின்வரும் காரணங்களைக் கூறலாம்;

1. உயிர்கள் பாசத்தில் சிக்கியிருத்தல் (2 : 215 : 6)
2. உயிர்கள் முற்பிறவியில் செய்த பாவம்(2 : 235 : 5)
3. சிவனருள் சிந்தை மொழிக்கு அகப்படாத தன்மையாய் இருத்தல்(1 : 100 : 9, 2 : 142 : 2, 1 : 128)

**6.11.1.2.** உயிர்கள் பாசத்தில் சிக்கியுள்ள காரணத்தால் திருவருளை உணர முடியவில்லை என்ற கருத்தை உமாபதிசிவமும் தம் திருவருட்பயனில் அழகிய உவமை மூலம் விளக்குகிறார். தூய பாற்கடலில் வாழும் மீன்கள் தமக்கு ஆதாரமாகிய பாற்கடலின் இனிய பாலைப் பருகி மகிழ நினையாமல், தம்மைப் பற்றிய பிறப்பின் பயிற்சியால் அழுக்குடைய சிறிய பிராணிகளையே தமக்கு உணவாகத் தேடும். அதுபோல இறைவனது திருவருள் எங்கும் பரவி உயிர்களுக்கு ஆதாரமாய் விளங்கும். ஆனால் உயிர்கள் அத்திருவருளை அறிந்து இன்புறாமல், உலக நுகர்ச்சிகளில் அழுந்தித் துன்புறுகின்றன என்கிறார்.[57] உறியில் பாலிருக்கின்ற பாண்டத்தின்மேல் ஏறி அமர்ந்துள்ள பூனை, எதிரே கூரையில் ஒரு எலி ஒடுவதைக் கண்ட பொழுது பாண்டத்திலுள்ள இனிய பாலைப் பருகி மகிழ எண்ணாமல், அவ்வெலியைத் தின்ன விரும்பித் தாவுகின்றது. அதுபோலத் திருவருள் இடமாக வாழும் உயிர்களும் அதனால் வரும் இன்பத்தைப் பருகி மகிழ எண்ணாமல் ஐம்பொறிகளால் ஈர்க்கப்பட்டு உலக இன்பத்தை விரும்புகின்றன என்கிறார் உமாபதிசிவம்[58] ஐம்பொறிகளும் தம்மைச் செயல்படுத்தும் உயிரினை அறியாதது போல,[59] நாம் பூமியின் மேல் இருந்து கொண்டே ஆதாரமாய் உள்ள பூமியை மறந்து எச்செயலையும் ஆற்றுவது போல,[60] உயிர்கள் தம்மைச் செயல்படுத்தும் திருவருளை அறியாதனவாய் உள்ளன என்கிறார் உமாபதிசிவம்.

உயிர்கள் திருவருளை உணராமைக்கு மூன்று காரணங்கள் திருஞானசம்பந்தர் பாடல்கள் வாயிலாகக் காட்டப்பட்டன. சைவ-சித்தாந்த நூல்களில் பாசமே காரணமாகக் கூறப்படுகின்றது. பாசத்திலும் ஆணவமே முக்கியமான காரணமாகச் சொல்லப்படுகின்றது.[61]

### *6.11.2.* பசுக்கள் திருவருளை உணர்தல் :

### 6.11.2.1.

*"உற்றவர் தாமுணர் வெய்தி" (1 : 5 : 9)*

என்ற திருஞானசம்பந்தரின் பாடல் தொடர் மலபரிபாகம் உற்ற (ஆணவமல வலிமையிலிருந்து விடுபட்ட) உயிர்கள் இறைவன் திருவருளை உணரும் மெய்ஞ்ஞானம் பெறுவர் என்பதை விளக்கும் .[62]

*"என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே*
*விருங்கடல்வையத்து*
*முன்னைநீபுரி நல்வினைப் பயனிடை*
*முழுமணித்தரளங்கள்*
*மன்னு காவிரி சூழ்திருவலஞ்சுழி*
*வாணனைவாயாரப்*
*பன்னியாதரித் தேத்தியும் பாடியும்*
*வழிபடுமதனாலே"(2 : 242 : 1)*

என்ற பாடலில் திருஞானசம்பந்தர் உயிர்கள் இறைவனை ஏத்திப் பாடி வழிபடுவது அவை முற்பிறவியில் செய்த நல்வினைப் பயனால் ஏற்பட்ட புண்ணியமே என்பதை உணர்த்துகின்றார்.

*"தவத் தார்க்கருளாயே" (2 : 189 : 3, 4, 9)*

என்ற தொடரால் தவமுடையார்க்கு இறைவன் அருள்செய்வது திருஞானசம்பந்தர் தேவாரத்தில் உணர்த்தப்படுகின்றது.

*"துஞ்சவருவாருந் தொழுவிப்பாரும் வழுவிப்போய்*
*நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப்பார்"(1 : 45 : 1)*

என்ற பாடலடிகளில் திருஞானசம்பந்தர் தொழுவார் என்றும், நினைவார் என்றும் கூறாமல், தொழுவிப்பார், நினைவிப்பார் எனக் கூறியதனால், இறைவனே உயிர்கள் தன்னை உணரும்படிச் செய்வான் என்ற கருத்து உணர்த்தப்படுகின்றது.

*"நஞ்சுண்டகண்டர் நெஞ்சிடமாக*
*நண்ணுவர் நம்மைநயந்து"(1 : 44 : 3)*

என்ற தொடரால் உயிர்களை எளிவந்த கருணையால் இறைவன் அணுகுவான் என்று திருஞானசம்பந்தர் கூறுகிறார். உயிர்கள் தற்போதமிழந்து நம்மை நண்ணாட்டும் ஆட்கொள்வோம் என்றிராது, சென்று பயன்படும் கால்போலத் தாமே வலியவந்து அணுகுவர்[63] என்றதனால் சிவனருளே உயிர்களுக்கு இறங்கி வந்து அருள் புரிதலைக் கூறுகிறார். இதே கருத்து மற்றுமோரிடத்தில்,

*"...............பாடிநின் றாடுவார்*
*அழையா மேயரு ணல்குமே"(1 : 54 : 5)*

என்று திருஞானசம்பந்தர் பாடி ஆடும் அடியார்களுக்கு அவர்கள் அழையாமலே இறைவன் வந்து அருள்புரிதலைக் கூறுகிறார்.

உயிர்கள் திருவருளை உணரப் பின்வரும் காரணங்கள் துணை செய்கின்றன என்பது மேற்கூறிய திருஞானசம்பந்தர் பாடல்கள் வாயிலாகத் தெரியவருகின்றன.

1. உயிர்கள் பாசத்திலிருந்து விடுபடல் வேண்டும். (1 : 5 : 9)
2. உயிர்கள் தவம் புண்ணியம் செய்ய வேண்டும் (2 : 242 : 1)
3. சிவனருளே உயிர்களுக்கு இறங்கி வந்து அருள்புரிதல் வேண்டும். (1 : 45 : 1, 1 : 44 : 3, 1 : 54 : 5)

**6.11.2.2.** திருஞானசம்பந்தர் கூறும் இக்கருத்துக்கள் சைவசித்தாந்த நூல்களிலும் காணப்படுகின்றன.

*"....... பாசம் ஒருவத்*
*தண்நிழ லாம்பதி'*[64]

என்ற தொடர் உயிர்களிடத்திலுள்ள பாசம் விடுபடத் திருவருள் பதிதலை உணர்த்துகின்றது.

*"ஈட்டிய தவத் தினாலே இறைஅரு ளுருவாய்வந்து'*[65]

என்று சிவப்பிரகாசத்திலும்,

*"தம்முதல் குருவுமாய்த் தவத்தினிலுணர்த்த'*[66]

என்று சிவஞானபோதத்திலும் உயிர்கள் செய்த தவத்தினால் இறைவன் குருவாக வந்து அருள்புரிவது கூறப்படுகின்றது.

அறிவுக் கெட்டா நிலையில் இருக்கும் இறைவன் உயிர்களுக்கு அருளும் நோக்கால் தானே இறங்கி வந்து அருள்புரிதல் திருவருட்பயன் அருளுருநிலை அதிகாரத்தில் விளக்கமாகக் கூறப்படுகின்றது.[67]

**6.11.3.** பதி பசுக்களுக்கு அருள்புரியும் காலம் :

**6.11.3.1.** திருஞானசம்பந்தர் உயிர்கள் பக்குவம் அடையும் காலத்து அவைகளுக்கு அருளை உணர்த்துவான் இறைவன் என்பதை,

*"பருவத்தில்வந்து பயனுற்றபண்ப" (2 : 224 : 2)*

என்று தென்திருமுல்லைவாயில் பதிகத்தில் கூறுகின்றார்.

*".........கனிந்தவ ரைக்கலந் தாட்கொள்ளும்*
*முனிதனை"(2 : 150 : 3)*

*"........... கனிந்தவ ரைக்கலந் தாளாக ஆர்த்தானை"*
*(2 : 150 : 4)*

என்ற தொடர்களால் திருஞானசம்பந்தர் இறைவன் அருளைப் பெறுதற்குரிய பக்குவமாய்க் கனிந்த உயிர்களை இறைவன் ஆட்கொண்டருள்வன் என்கின்றார்.

திருஞானசம்பந்தர் உயிர்களின் பக்குவநிலை என்பது யாது என்பதை விளக்கவில்லை.

**6.11.3.2.** சைவசித்தாந்த நூல்கள் உயிர்களின் பக்குவநிலையைப் பின்வருமாறு உணர்த்துகின்றன. உயிர்களிடத்து இருவினை ஒப்பு ஏற்படும்பொழுது திருவருள் பதியும் என்பதைச் சிவஞானசித்தியார்,

*"இருவினைச் செயல்க ளொப்பின் ஈசன்தன்*
*சக்திதோய"*[68]

என்று கூறுகின்றது. இருவினை ஒப்பு என்பது நல்வினை தீவினைகளினால் ஏற்படும் இன்ப துன்பங்களைச் சமமாகப் பாவித்தல் ஆகும்.

உயிர்களிடத்து அநாதியே பற்றி வந்த ஆணவமலம் பரிபாகம் அடையும் பொழுது உயிர்கள் அருள் பெறும் என்று சிவப்பிரகாசத்தில் கூறப்படுகின்றது.[69] ஆணவமலம் பரிபாகம் அடைதல் என்பது, உயிர்கள் இறைவனை உணரவொட்டாமல் தடுக்கும் அதனது சக்தி குன்றிப்போதல் என்பதாம்.

திருஞானசம்பந்தர் கூறும் உயிர்களின் பக்குவநிலை சைவசித்தாந்த நூல்களில் இருவினை ஒப்பு, மலபரிபாகம் என்று கூறப்படுகின்றது.

***6.11.4.*** பசுக்கள் அருள் பெறும் முறை :

**6.11.4.1.** பக்குவமடையும் உயிர்களுக்கு இறைவன் அருள் செய்யும் முறை ஒரே வகையானதன்று. பல்வேறு வகையானதாகச் சைவ நூல்களில் பேசப்படுகின்றன. இறைவன் உயிர்களுக்கு ஞானம் தருவதை இருவிதமாகப் பகுக்கலாம்.

1. தானே உயிர்களுக்கு ஞானம் நல்குதல்

2. தனது அருள் பெற்ற அருளாளர் வழி ஞானம் நல்குதல்

சமயச்சாரியார்கள் நால்வரும் இறைவனால் நேராக ஞானம் பெற்றவர்கள் என்று வரலாற்றில் கூறப்படுகின்றது. சந்தானா சிரியர்கள் நால்வரும் அவரவர் அருளாசிரியரால் ஞானம் பெற்றவர்கள் எனக் கூறப்படுவர்.

இறைவன் தானே ஞானம் தருவதும் பலவகையாக நிகழ்கின்றது என்பதற்குச் சமயாச்சாரியார்களின் வாழ்க்கை வரலாறுகள் எடுத்துக்காட்டுக்களாகின்றன. திருஞானசம்பந்தருக்கு இறைவன் இறைவியோடு தோன்றி ஞானப்பால் கொடுத்து ஞானம் வழங்கியதாகக் கூறப்படுகின்றது.[70] திருநாவுக்கரசருக்குச் சூலை-நோய் கொடுத்துப் பின் அதனை நீக்கி ஞானம் வழங்கியதாகச் சேக்கிழார் கூறுகின்றார்.[71] இறைவன் மாணிக்கவாசகருக்குக் குருவாக எழுந்தருளி வந்து உபதேசம் செய்யும் முறையில் ஞானம் வழங்கியதாகத் திருவாசகத்திலிருந்து தெரியவருகின்றது.[72]

**6.11.4.2.** திருஞானசம்பந்தர் பாடல்கள் வாயிலாக இறைவன் உயிர்களைப் பின்வரும் முறையில் ஆட்கொண்டருள்வது உணர்த்தப் படுகின்றது.

*"..........பழந்தொண்ட ருள்ளுருக*
*ஆவியு ணின்றருள் செய்யவல்ல வழகர்"*
(3 : 361 : 10)

என்ற திருஞானசம்பந்தரின் பாடல் தொடரில் இறைவன் உயிர்களின் உள்நின்று அருள் செய்து ஆட்கொள்வது உணர்த்தப்படுகின்றது.

*"ஆணும் பெண்ணுமா யடியார்க் கருணல்கி"*
(1 : 84 : 5)

"......... மங்கை யொருபாகமாக
வருள்காரணங்கள் வருவான்" (2 : 223 : 3)

என்ற திருஞானசம்பந்தரின் பாடல் தொடர்கள் இறைவன் சக்தியுடன் தெய்வவடிவில் தோன்றி அருள்செய்தலை உணர்த்துகின்றன.

"அன்றாலின் கீழிருந்தங் கறம்புரிந்த வருளாளர்"(3 : 323 : 4)

என்று இறைவன் ஆலமரத்தினடியில் குருவாக அமர்ந்து அறம் உரைத்த அருட்செய்தி திருஞானசம்பந்தரால் கூறப்படுகின்றது.

இறைவன் உயிர்களுக்கு வெவ்வேறு விதமாக அருள்புரிதலை,

*"ஆட்பா லவர்க்கருளும் வண்ணமு மாதி மாண்பும்*
*கேட்பான் புகிலள வில்லை கிளக்க வேண்டா"*
(3 : 312 : 4)

என்ற திருஞானசம்பந்தரின் பாடல் தொடர் உணர்த்துகின்றது.

**6.11.4.3.** திருஞானசம்பந்தரின் இக்கருத்துக்களை அடியொற்றிச் சைவசித்தாந்த நூல்களிலும் இறைவன் உயிர்களுக்கு ஞானம் நல்குவது மூவகையாகக் கூறப்படுகின்றது[73] அவை பின்வருமாறு :

1. உயிர்களின் உள்நின்று உணர்த்துதல்
2. தெய்வவடிவில் முன்தோன்றி ஞானம் வழங்குதல்
3. குருவாக வந்து ஞானம் வழங்குதல்

இவ்வாறு இறைவன் உயிர்களை வெவ்வேறு விதமாக ஆட்கொள்ளக் காரணம், உயிர்களின் தகுதி பற்றியே ஆகும். இங்கு தகுதி என்பது உயிர்கள் பாசத்தால் பிணிக்கப்பட்டுள்ள வேறுபாட்டினைக் குறிக்கும். இவ்வேறுபாடு காரணமாக உயிர்கள் 'விஞ்ஞானகலர்', 'பிரளயாகலர்', 'சகலர்' எனச் சைவசித்தாந்த நூல்களில் மூவகையாகக் குறிப்பிடப்படுகின்றன.[74] திருஞான சம்பந்தர் இங்ஙனம் உயிர்களை வகைப்படுத்திக் குறிப்பிடவில்லை. ஆனால் சைவசித்தாந்த நூலாசிரியர்கள் உயிர்களை இவ்வாறு வகைப்படுத்துவதற்கு, நீதியே உருவான இறைவன் உயிர்களை

வெவ்வேறு விதமாக ஆட்கொள்வதாகத் திருஞானசம்பந்தர் கூறுவதும் காரணமாகும் எனலாம்.

இறைவன் உயிர்களை ஆட்செய்யும் முறை பற்றிய அட்டவணை திருஞான சம்பந்தரின் பாடலை அடியொற்றி அடியில் தரப்படுகின்றது.

| எண் | இறைவன் அருள் செய்யும் முறை | இடம் | அருள் செய்யும் முறையைக் குறிக்கும் திருஞான சம்பந்தரின் பாடல் எண் |
|---|---|---|---|
| 1 | உள்நின்று அருளுதல் | தன்மை | 3:361:10 |
| 2 | தெய்வ வடிவில் தோன்றி அருளல் | முன்னிலை | 1:84:5, 2:223:3 |
| 3 | மானிடனாய்க் குருவடிவில் தோன்றி அருளல் | படர்க்கை | 3:323:4 |

முடிவுகள் :

உயிர்களின் இயல்புகள் பற்றிய கோட்பாடுகளை திருஞானசம்பந்தர் தேவாரத்திலும் சைவசித்தாந்த நூல்களிலும் ஒப்பிட்டுக் காண்கின்றபோது பின்வரும் முடிவுகள் உணரப்படு கின்றன.

1. பசு என்பது பாசத்தால் பந்திக்கப்பட்ட உயிர்களைக் குறிக்கும் தத்துவக் கலைச்சொல் ஆகும். திருஞானசம்பந்தர் தேவாரத்தில் இத் தத்துவக் கலைச்சொல் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. திருஞானசம்பந்தர் உயிர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். சிவஞானபோதமும் சிவஞானசித்தியாரும் உயிர் என்பது எது என்ற பிற மதங்களின் மாறுபட்ட பொருந்தாக் கொள்கைகளை மறுப்பதன் மூலம் உயிர் உண்மையை மெய்ப்பிக்கின்றன.

3. உயிர் அநாதி என்ற கோட்பாடு திருஞானசம்பந்தருக்கும் சைவ சித்தாந்த நூலாசிரியர்களுக்கும் உடன்பாடாகும். ஆனால் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் அநாதி என்ற சொல் இல்லை. 'விளையாததொர் பரிசில் வரும் பசு' என்ற சொற்றொடர் உயிரின் அநாதித் தன்மையை உணர்த்துகின்றது எனலாம்.

4. உயிர்கள் பாசத்திலிருந்து விடுபட வேண்டும், இறைவனை வழிபடுவதனால் உயிர்களின் பந்தம் நீங்கும் என்பதன் மூலம் உயிர்கள் பாசத்தால் பிணிக்கப்பட்டுள்ளன என்ற கோட்பாட்டினைத் திருஞான சம்பந்தர் உணர்த்துகின்றார்.

5. உயிர்கள் பல என்பதனைத் திருஞானசம்பந்தரும், சைவசித்தாந்த நூலாசிரியர்களும் கூறுகின்றனர். ஆனால் சைவ சித்தாந்த நூலாசிரியர்கள், உயிர்கள்தோறும் இன்ப, துன்ப நுகர்ச்சி வேறுபாடும், அறிவு வேறுபாடும் இருப்பதைக் காரணம் காட்டி உயிர்கள் பல என்பதனை மெய்ப்பிக்கின்றனர்.

6. திருஞானசம்பந்தர் உயிர்கள் அறிவிக்க அறியும் தன்மை யுடையன; மறக்கும் தன்மையுடையன என்று உயிரறிவு பற்றிக் குறிப்பிடுகின்றார். சைவசித்தாந்த நூல்கள் உயிர்களைப் பற்றி, உயிர்கள் அறிவுப் பொருள்களாகும், ஆனால் தாமே அறியாமல் அறிவிக்க அறியும் தன்மையுடையன; ஒவ்வொன்றாக அறியும், பொறிகளின் உதவியாலேயே அறிகின்றன. பொருட்களில் அழுந்தி அறிகின்றன; அறிந்தவைகளை மறக்கின்றன என்று கூறுகின்றன.

7. திருஞானசம்பந்தர், இறைவன் உயிர்களுக்குக் கண்ணாக விளங்குவதையும், உயிர்களுக்கு அறிவு கொடுப்பதையும் கூறு கின்றார். இது சைவசித்தாந்தத்தில் இறைவன் உயிர்கள் அறியும்போது அறியப்படும் பொருளைத் தானும் உடன்நின்று அறிகின்ற காணும் உபகாரத்தையும், உயிர்களின் அறிவை விளக்கி அவைகளை அறியச் செய்யும் காட்டும் உபகாரத்தையும் செய்வதாகக் கூறப்படுகின்றது.

8.உயிர்களுக்குப் பிறப்பு இறைவனால் கொடுக்கப்படுகின்றது என்று திருஞானசம்பந்தர் கூறும் கருத்து சைவசித்தாந்த நூல்களில் உயிர்களின் பிறப்பிற்கு இறைவன் நிமித்த காரணன் என்று கூறப்படுகின்றது.

9. திருஞானசம்பந்தர் கூறும் உயிர்களின் எண்பத்து நான்கு லட்சம் யோனிபேதம் பிறப்பு, சிவஞானசித்தியாரில் நால்வகைத் தோற்றமாகவும், சிவப்பிரகாசத்தில் நால்வகைத் தோற்றம் எழுவகைப் பிறப்பாகவும் வகைப்படுத்திக் கூறப்படுகின்றது. இதனால் உயிர்களின் பல்வேறு வகைப் பிறவிகள் உணர்த்தப்படுகின்றன.

10. உயிர்களின் பல்வேறு வகைப் பிறப்பிற்கு உயிர்களின் வினை காரணம் என்று திருஞானசம்பந்தர் கூறுகின்றார். உயிர்களின் பிறப்பிற்கு உயிர்கள் செய்த இருவினைகளும், சிற்சக்தியும் துணைக் காரணங்களாகின்றன என்பது சைவ சித்தாந்தக் கோட்பாடாகும்.

11. உயிர்களுக்குப் பிறவி தொடர்ந்து வரும் என்பதற்கான குறிப்பு திருஞானசம்பந்தர் பாடலில் உள்ளது. ஆனால் திருஞான சம்பந்தர் உயிர்களுக்குப் பிறவித் தொடர்ச்சி உண்டாவது எப்படி என விளக்கவில்லை. சிவஞானசித்தியாரில் பிறவி எப்படித் தொடர் கின்றது என்பது விளக்கப்படுகின்றது.

12. திருஞானசம்பந்தர், சிலந்தி கோச்செங்கட் சோழனாகப் பிறந்ததாகக் கூறும் வரலாறு, சிவஞானசித்தியாரில் உயிர்களின் யோனியும் அச்சும் மாறும் என்று கூறுவதற்கு எடுத்துக்காட்டாய் அமைகின்றது எனலாம்.

13. திருஞானசம்பந்தர், உயிர்களின் மறுபிறவி மாறி அமையும் என்பதை வலியுறுத்திக் கூறுவதைவிட, இறைவழிபாட்டால் உயிர் களுக்கு மறுபிறப்பு உண்டாகாது என்ற கருத்தையே அதிகம் வலியுறுத்துகின்றார். இதற்கு அவர் காலச்சூழலே காரணமாகும் எனலாம். மேலும் அருளாளர்கள் இறைவனிடம் வேண்டுவது பிறவாமையே ஆகும்.

14. உயிர்கள் இறைவனின் உடைமைப் பொருள் என்பது திருஞானசம்பந்தருக்கும் சைவசித்தாந்த நூலாசிரியர்களுக்கும் உடன்பாடாகும்.

15. திருஞானசம்பந்தர், உயிர்கள் பிறப்பினால் ஏற்படும் உலகச்சார்பினால் துன்பம் அடைதலையுமம், பேரின்ப வடிவான இறைவனை அடைதலால் இன்பம் பெறுதலையும் கூறுவது, உயிர்கள் சார்ந்ததன் வண்ணமாந் தன்மையுடையது என்ற சைவசித்தாந்தக் கோட்பாட்டிற்கு ஏதுவாகின்றது.

16. திருஞானசம்பந்தர், உயிர்களின் அவத்தைகள் பற்றிக் குறிப்பிடவில்லை. ஆனால் சைவசித்தாந்த நூல்களில் கூறப்படும் உயிர்களின் சகலாவத்தை, சுத்த அவத்தை இவற்றிற்குத் திருஞானசம்பந்தர் கூறும் உயிர்களின் பிறப்புநிலை, முக்திநிலை பற்றிய கருத்துக்கள் அடிப்படை ஆகின்றன எனலாம். திருஞான சம்பந்தர் தாம் நனவிலும், கனவிலும், உறக்கத்திலும் இறைவனை வழிபட மறவாதிருப்பதாகக் கூறுவது சைவசித்தாந்த நூல்களில் காரிய அவத்தைகள் பற்றிக் குறிப்பிடக் கருப்பொருளாகின்றன எனலாம்.

17. திருஞானசம்பந்தர், இறைவன் உயிர்கள் உணராவண்ணம் மறைந்து நிற்றலையும், உணரும் வண்ணம் வெளிப்படத் தோன்று தலையும் கூறுகின்றார். இது சைவசித்தாந்த நூல்களில் முறையே திரோதான சக்தி என்றும், அருட்சக்தி என்றும் கூறப்படு கின்றது. திரோதானசக்தி உயிர்கள் வினைப்போகத்தை அனுபவித்துக் கன்மம் கழிய உதவுகின்றது. அருட்சக்தி வினைப்போகம் அனுப்வித்து முடிந்த உயிர்களை இறைவன் தன் திருவடியில் சேர்க்கும் அனுக்கிரகமாகும்.

18. உயிர்கள் பாசத்தில் சிக்கியிருத்தலாலும், முற்பிறவியில் செய்த பாவத்தாலும், சிவனருள் சிந்தை மொழிக்கு அகப்படாத தன்மையில் இருத்தலாலும் திருவருளை உணரமுடியவில்லை என்று திருஞானசம்பந்தர் பாடல்களால் உய்த்துணரப்படுகின்றது. சைவ சித்தாந்த நூல்களில் உயிர்கள் திருவருளை உணராமைக்குப்

பாசத்தில் ஒன்றான ஆணவமே முக்கியமான காரணமாகக் கூறப்படுகின்றது.

19. உயிர்கள் பாசத்திலிருந்து விடுபடுதலும், தவம், புண்ணியம் செய்தலும், சிவனருளே உயிர்களிடத்து இறங்கி வந்து அருள்புரிதலும் திருவருளை உணரத் துணை செய்வன என்று திருஞானசம்பந்தர் உணர்த்தும் கருத்துக்கள் சைவசித்தாந்த நூல்களிலும் கூறப்படுகின்றன.

20. பக்குவம் அடைந்த உயிர்களை இறைவன் ஆட்கொள்வான் என்று திருஞானசம்பந்தர் கூறும் கருத்து, இருவினை ஒப்பு, மலபரிபாகம் அடைந்த உயிர்களிடத்து சத்திநிபாதம் பதியும் என்று சைவசித்தாந்த நூல்களில் கூறப்படுகின்றது.

21. இறைவன் உயிர்களுக்கு உள்நின்றும், தெய்வ வடிவில் முன்தோன்றியும், குருவாக வந்தும் ஞானம் வழங்குவதாகச் சைவ சித்தாந்த நூல்களில் கூறப்படும் கருத்துக்கள் திருஞானசம்பந்தர் பாடல்களிலும் காணப்படுகின்றன.

22. இறைவன் உயிர்களை இவ்வாறு மூவகையாக வந்து ஆட்கொள்வதற்கு உயிர்கள் மூவகைப்படுவதே காரணம் என்று சைவசித்தாந்த நூல்களில் கூறப்படுகின்றது. இதற்கான குறிப்புக்கள் திருஞானசம்பந்தர் பாடலில் இல்லை. சைவ சித்தாந்த நூல்களில் கூறப்படும் பெரும்பான்மையான உயிரியல் கோட்பாட்டிற்குத் திருஞானசம்பந்தர் பாடல்கள் அடிப்படையாக அமைந்துள்ளன. ஒருசில வேறுபாடுகள் காணப்படுவதற்குக் காரணம் திருஞானசம்பந்தர் பாடல்கள் அவரது அனுபவ நிலையைக் கூறுவன. சைவசித்தாந்த நூல்கள் அந்த அனுபவ நிலைக்கான இலக்கணம் கூறுவன.

## குறிப்புக்கள்

1. "பசு - பாசக்கட்டுடையவர்; பச் - பந்தித்தல்;
உ - செயப்படுபொருள் விகுதி. உயிர்கள் அநாதியே.
பாசக்கட்டுடையர்தலால் பசுக்கள் என்று சொல்லப்படும்."
- ச. குமாரசுவாமிக் குருக்கள், முப்பொருள் விளக்கம், ப.43.

2. க.வச்சிரவேல் முதலியார், சிவஞானபாடியத் திறவு, ப. 62.

3. திருவருட்பயன், 52.

4. நெஞ்சுவிடுதூது, கண்ணி 8.

5. (i) "அனாதி சிவனுடைமை யால்எவையும் ஆங்கே
அனாதியெனப் பெற்ற அணுவை"
- திருக்களிற்றுப்படியார், 43.
(ii) ச.குமாரசுவாமிக் குருக்கள், மு.நூல்., ப. 43.

6. சி.அருணைவடிவேல் முதலியார், முப்பொருள் இயல்பு, ப.50.

7. ச.தண்டபாணி தேசிகர் குறிப்புரை, முதல் திருமுறை, ப.419.

8. போற்றிப்பஃறொடை, கண்ணி 22.

9. சிவப்பிரகாசம், 19.

10. போற்றிப்பஃறொடை, கண்ணி 5.

11. "பிறந்தநாள் மேலும் பிறக்கும் நாள் போலும்
*துறந்தோர் துறப்போர் தொகை*"
- திருவருட்பயன், 11.

12. "உயிர்கள்தோறும் இன்ப துன்ப நுகர்ச்சி வேறுபாடும், அறிவு வேறுபாடும் காணப்படுவதால் உயிர்கள் பலவாகும்".
- சிவநெறிப்பிரகாசம், 44,45.
- மேற்கோள் ச.கங்காதரன், சைவ சித்தாந்த அடிப்படைக் கொள்கைகள் ப.89.

13. "The Siddhantin says that intelligence are of two kinds. One kind (indeed of this class, there is only one intelligence viz., the Lord) capable of knowing things independently and another kind (of this class are the numerous finite souls) capable of knowing only in dependence on that with which it is associated."

- V.A. Devasenapathi, Saiva Siddhanta, P.216.

14. சிவஞானபோத உதாரண வெண்பா, 48.

15. (i) சிவஞானபோதம், சூத்., 3

(ii) "Atman means Pervasive, eternal intelligence and the Vedas and Agamas declare the soul to be Pervasive."

- V.A.Devasenapathi, Saiva Siddhanta, P.216.

16. திருவருட்பயன், 15.

17. சிவப்பிரகாசம், 68.

18. சிவஞானசித்தியார் சுபக்கம், 233.

19. சி.அருணைவடிவேல் முதலியார், மு.நூல்., ப.52.

20. திருநாவுக்கரசர் தேவாரம், 6:308:3.

21. காரைக்காலம்மையார், அற்புதத் திருவந்தாதி, 20.

22. சிவஞானபோதம், சூத்., 11.

23. சிவஞானசித்தியார் சுபக்கம், 310.

24. மேலது, 231.

25. முத்து சு.மாணிக்கவாசக முதலியார் குறிப்புரை, இரண்டாவது திருமுறை, ப.504.

26. சிவப்பிரகாசம், 19.

27. சிவஞானசித்தியார் சுபக்கம், 38.

28. மேலது, 179.

29. (i) சிவப்பிரகாசம், 47.

(ii) நால்வகைத் தோற்றமாவன :

*1. அண்டசம் - முட்டையில் தோன்றுவன*
*2. சுவதேசம் - வேர்வையில் தோன்றுவன*
*3. உற்பிச்சம் - வித்திற்பிறப்பன.*
*4. சராயுசம் - கருவிற்பிறப்பன.*

எழுவகைப் பிறப்புக்களும் யோனி பேதங்களும்

*1. தேவர் - பதினொரு லட்ச பேதம்*
*2. மனிதர் - ஒன்பது லட்ச பேதம்*
*3. விலங்கு - பத்து லட்ச பேதம்*
*4. பறவை - பத்து லட்ச பேதம்*
*5. ஊர்வன - பதினைந்து லட்ச பேதம்*
*6. நீர்வாழ்வன - பத்து லட்ச பேதம்*
*7. தாவரம் - பத்தொன்பது லட்ச பேதம்.*

- சிவப்பிரகாசர் உரை, 'சிவப்பிரகாசம்', சித்தாந்த சாத்திரம் பதினான்கு மூலமும் உரையும், சமாசம், ப.877.

30. ச.தண்டபாணி தேசிகர் குறிப்புரை, மு.நூல்., ப.86.

31. சிவஞானபோதம், சூத்., 2.

32. சுப்பிரமணிய தேசிகர் உரை, 'சிவஞானபோதம்', சித்தாந்த சாத்திரம் பதினான்கு மூலமும்உரையும், சமாசம், ப.27.

33. சிவப்பிரகாசம், 19.

34. போற்றிப்பஃறொடை, கண்ணி 14.

35. சிவஞானசித்தியார் சுபக்கம், 94.

36. க.மாணிக்கவாசக முதலியார் குறிப்புரை, மு.நூல்., ப.375.

37. சிவஞானசித்தியார் சுபக்கம், 100.

38. (i) மேலது 102.

(ii) உயிர்களுக்கு வினையின் காரணமாகப் பிறவித் தொடர்ச்சி உண்டாவதே சைவசித்தாந்த நூல்களில் கூறப்பட்டுள்ளன. உயிர்களின் முதல் பிறவி பற்றிக் குறிப்பிடப்படவில்லை. உயிர்கள் கருவி கரணங்கள் உதவியால் வினையைச் செய்கின்றன. கருவி கரணங்களுடன் கூடிய முதல் பிறவி உயிர்க்கு எதனால் உண்டாகின்றது? செம்பிற் களிம்புபோல் உயிர்களை அநாதியே பற்றியுள்ள ஆணவமலம் பரிபாகம் அடைய என்றால் முதல் பிறவி எல்லா உயிர்களுக்கும் ஒன்றுபோல் அமைகின்றனவா அல்லது வேறுபாட்டுடன் அமை கின்றனவா? வேறுபாட்டுடன் என்றால் அதற்குக் காரணம் என்ன என்பது சிந்தித்தற்குரியதாய் உள்ளது.

உயிர்கள் அநாதியாக ஆணவமலத்தில் கட்டுண்டு கேவலநிலையில் உள்ளன. கேவலநிலையில் உள்ள உயிர்களுக்கு இறைவன் முதற்கண் சூக்குமதேகத்தைக் கொடுக்கின்றான். அதில் வேறுபாடுகள் இல்லை. சூக்கும தேகத்தினால் சிறிது அறிவும் இச்சையும் விளங்கப்பெற்ற உயிர்கள் தங்களைக் கட்டியுள்ள ஆணவ மலத்தின் வன்மை, மென்மைகட்கு ஏற்ப நல்லனவும், தீயனவும் ஆகிய செயல்களை அறிந்தும் இச்சித்தும் செய்ய முயலும் அந்த முயற்சியே அவைகளுக்கு வினையாய் அமையும். அவ்வினைக்கு ஏற்பத் தூலதேகத்தை இறைவன் அவைகளுக்குக் கட்டுவிப்பான். பின்னர்க் காரணகாரியத் தொடர்ச்சியாய் பிறப்புக்கள் தொடர்ந்து நிகழும்.''

*- சி.அருணைவடிவேல் முதலியார், சித்தாந்த வினாவிடை, பக்.263-265*

''மூலகன்மம் என்பது ஒன்று உண்டு என்று கொள்ளாவிடில் மாயையில் கிடந்த உயிர்கள் முதன்முதலாக உடல் எடுக்குங்கால் பல்வேறு வகைப்பட்ட பிறப்புக்களாக அமைவதற்குக் காரணம் வேறு இல்லை.''

- ம.பெரியசாமிப்பிள்ளை, சித்தாந்தப் பொன்மொழி, ப.9.

"கன்மமு மூலங் காட்டிக் காமிய மலமாய் நிற்கும்" (சிவஞானசித்தியார் சுபக்கம், 129) என்ற சிவஞான-சித்தியாரின் தொடருக்கு மூலகன்மம் காரியமாய்ப் பரிணத்தன்றிப் பயன் தாராமையின், ஏனைய போல வேறு வைத்தெண்ணப்படாததாயிற்று என்பர்."

- சிவஞானசுவாமிகள் உரை, 'சிவஞானசித்தியார் சுபக்கம்', சித்தாந்த சாத்திரம் பதினான்கு மூலமும் உரையும், சமாசம், ப.462.

எனவே மூலகன்மமே முதல் பிறவி வேறுபாட்டிற்குக் காரணம் எனலாம்.

39. சிவஞானபோத உதாரண வெண்பா, 14.

40. சிவஞானசித்தியார் சுபக்கம், 134.

41. மேலது, 133, 135, 136.

42. மேலது, 137, 138, 139.

43. சிவஞானபோதம் அவையடக்கச் செய்யுள்.

44. திருக்களிற்றுப்படியார், 43.

45. *"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு" (திருக்குறள், 350)*
*"சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்*
*சார்தரா சார்தரு நோய்"(திருக்குறள், 359) என்னும்*
*குறள் கருத்துக்கள் இதனோடு தொடர்புடையனவாகும்.*

- க.வச்சிரவேல் முதலியார், திருக்குறளின் உட்கிடை சைவசித்தாந்தம், பக். 71-72.

46. முத்து. க. மாணிக்கவாசக முதலியார் குறிப்புரை, மு.நூல்., ப.195.

47. (i) சிவஞானபோதம், சூத்., 7.
(ii) சுப்பிரமணிய தேசிகர் உரை, 'சிவஞானபோதம்', மு.நூல்., ப.115
(iii) சிவஞானசித்தியார் சுபக்கம், 250.

48. சிவஞானபோதம், சூத்., 4.

49. சிவஞானசித்தியார் சுபக்கம், 227.

50. (i) மேலது, 223.

(ii) பின்னிணைப்பு எண் 17.

51. (i) சிவஞானசித்தியார் சுபக்கம், 227.

52. (ii) சிவஞானசுவாமிகள் உரை, 'சிவஞானசித்தியார் சுபக்கம்', மு.நூல்., பக். 513-514.

(iii) "In passing from one to the other of these stages, the soul is said to pass from 'irul' or darkness in the Kevala avastha to 'marul' or confusion in the skala avastha, and from thence to arul or grace in the suddha avastha."

- V.Paranjothi, Saiva Siddhanta, P.81.

52. சிவஞானசித்தியார் சுபக்கம், 64.

53. இருபா இருபஃது, 18.

54. மேலது.

55. சிவப்பிரகாசம், 48.

56. (i) மேலது, 18.

(ii)சிவப்பிரகாசர் உரை, 'சிவப்பிரகாசம்' சித்தாந்த சாத்திரம் பதினான்கு மூலமும் உரையும், சமாசம், ப.774.

57. திருவருட்பயன், 34.

58. மேலது, 39.

59. மேலது 35.

60. மேலது, 36.

61. (i) "அறியாமை ஆணவம்"

*- உண்மை விளக்கம், 22.*

(ii) சிவப்பிரகாசம், 32.

62. ச.தண்டபாணி தேசிகர் குறிப்புரை, மு.நூல்., ப.34.

63: மேலது, ப.210.

64. சிவஞானபோதம், சூத்., 9.

65. சிவப்பிரகாசம், 68.

66. சிவஞானபோதம், சூத்., 8

67. திருவருட்பயன், 41-50.

68. சிவஞானசித்தியார் சுபக்கம், 230

69. சிவப்பிரகாசம், 19.

70. சேக்கிழார், திருஞானசம்பந்தர் புராணம், 67,68.

71. சேக்கிழார், திருநாவுக்கரசர் புராணம், 48, 49.

72. "அருபரத் தொருவன் அவனியில் வந்து
*குருபர னாகி அருளிய பெருமையை"*
*மாணிக்கவாசகர், திருவாசகம், 'போற்றித் திருஅகவல்' வரி 75-76.*

73. (i) சிவஞானபோத உதாரண வெண்பா, 47.
(ii) சிவஞானசித்தியார் சுபக்கம், 254.
(iii) போற்றிப்பஃறொடை, கண்ணி 50-53.

74. மேலது.

# 7. பாச இயல் கோட்பாடுகள்

# 7.பாச இயல் கோட்பாடுகள்

## 7.0. முன்னுரை :

பாசம் என்பது வடமொழிச் சொல்லாகும். இதற்குக் கட்டுவது என்பது பொருளாகும்.[1] உயிர்கள் இறைவனை உணரவொட்டாமல் அவைகளைக் கட்டியுள்ள பொருட்கள் ஆணவம், கன்மம், மாயை என்று சைவசித்தாந்தத்தில் குறிப்பிடப்படும். எனவே இம்மூன்றும் பாசம் எனப்படும். இப்பாசம் உயிர்கள் இறைவனை உணராவண்ணம் தடுப்பதால் தடை என்ற சொல்லாலும், அவை உயிர்களின் குற்றமாகக் கருதப்படுவதால் அழுக்கு என்னும் பொருள்படும் மலம் என்ற சொல்லாலும் குறிப்பிடப்படும். பாசத்தைக் குறிக்கும் மற்றொரு தத்துவக் கலைச்சொல் தளை என்பதாகும். தளை என்பது குற்றவாளிகளைச் செயற்படாமல் அடக்கி வைத்ததற்கு அவர்களது கையிலும் காலிலும் பூட்டப்படும் விலங்கிற்குப் பெயர் ஆகும். இத்தளை என்ற பெயரால் பாசம் குறிக்கப்படுவதால் இது உயிர்களைச் செயற்படவொட்டாது அடக்கி வைத்திருப்பது என்பது தெளிவாகும்.[2] பாசம், மலம், தளை, தடை என்பன ஒரு பொருள் குறிப்பன. இவ்வியலில் திருஞானசம்பந்தர் பாடல்கள் மூலம் தெரியவரும் பாச இயல் கருத்துக்கள், பின்வந்த சைவசித்தாந்த நூல்களில் பாச இயல்கோட்பாடுகளாக எவ்வாறு விளக்கம் பெறுகின்றன என்று ஆய்வு செய்யப்படுகின்றன.

## 7.1. பாச உண்மை :

### 7.1.1.

> *"பாச மறுப்பீர்காள்"*(1 :91 :6)
> "பாசமான களைவார்"(2 :216 :7)
> "சிந்தை யான்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
> பந்த பாச மறுக்கவல் லார்களே"(3 :307 :11)

என்று திருஞானசம்பந்தர் தம் பாடல்களில் பாசம் நீக்குதலைப் பற்றிக் குறிப்பிடுவதால், பாசம் என்ற ஒன்று உண்டு என்ற உண்மை உணர்த்தப்படுகின்றது.

**7.1.2.** சிவஞானபோதம் இரண்டாம் சூத்திரம் பாச உண்மையை உணர்த்துவது என்பர். ஆனால் மெய்கண்ட தேவர் அதனை நேரே உணர்த்தாமல் உயிர்கள் மீளப் பிறத்தலை உணர்த்துமுகத்தான் உணர்த்துகின்றார்[3]. இரண்டாம் சூத்திரத்தில் இருவினை பற்றிய குறிப்பு மட்டுமே வெளிப்படையாக உள்ளது. ஆனால் இரண்டாம் சூத்திரத்தை விளக்கும் உதாரண வெண்பாவில் மாயை, மலம், கன்மம்என்னும் மும்மலங்களும் அநாதியே உள்ளனவாம் என்று கூறப்படுகின்றது.[4] முதற் சூத்திரம் பதி உண்மை உணர்த்துவதாலும், மூன்றாவது சூத்திரம் பசு உண்மை உணர்த்துவதாலும், இரண்டாம் சூத்திர உதாரண வெண்பாவில் வல்லி (மாயை), மல, கன்மம் என மும்மலமும் ஒருங்கே உணர்த்தப் பெறுவதாலும், இரண்டாம் சூத்திரம் பாச உண்மையை உணர்த்துவதாகக் கருதப்படுகின்றது.[5]

உயிர்களின் இருவினைக்கு ஆணவம் காரணம் என்பது சைவசித்தாந்தக் கருத்து. எனவே இரண்டாம் சூத்திரத்தில் ஆணவம் பற்றிய குறிப்பு மறைமுகமாக உள்ளது எனலாம். மேலும் அச்சூத்திரத்திலுள்ள 'போக்கு' என்ற சொல் இறப்பையும், 'வரவு' என்ற சொல் பிறப்பையும் குறிக்கும். உயிர்களின் வினைநுகர்ச்சிக்கேற்ப உடல் கருவி முதலியவற்றைக் கூட்டுவதால் பிறப்பும், நீக்குவதால் இறப்பும் உண்டாகின்றது. உடல் கருவி என்பன மாயையின் காரியம். எனவே மாயை பற்றிய குறிப்பும் அச்சூத்திரத்தில் உள்ளடங்கியுள்ளது. எனவே இரண்டாம் சூத்திரம் பாச உண்மையை உணர்த்துவதாகக் கருதலாம்.

**7.1.3.**

"*பாச வினைபோமே*"(1 :93 :4)

"*பாசவல்வினை*"(2 : 161 :3)

என்ற திருஞானசம்பந்தரின் பாடல் தொடர்களில் பாசம் என்ற சொல் வினைக்கு அடைமொழியாகி வருகின்றது. சேக்கிழாரும் இரு வினையையே பாசம் என்று குறிப்பிடுகிறார் என்பதை, "இருவினைப் பாசம்"[6] என்ற தொடர் உணர்த்தும்,

**7.1.4.** பாச உண்மையை உணர்த்துவதாகக் கருதப்படுகின்ற சிவஞானபோதம் இரண்டாம் சூத்திரத்தில், "இரு வினையில் போக்குவரவு புரிய" என்ற குறிப்பும் இங்குச் சிந்தித்தற்குரியது. எனவே பாசம் என்ற சொல் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களைக் குறித்தாலும் சிறப்பாக இருவினையையே குறிக்கின்றது எனலாம்.

## 7.2. பாசம் அநாதி :

பதியும், பசுவும் எவ்வாறு அநாதியோ அதைப்போலப் பாசமும் அநாதி[7] என்பது சைவசித்தாந்தக் கோட்பாடாகும்.

**7.2.1.**

> *"விளையாததொர் பரிசில்வரு பசுபாசவேதனையொண்*
> *டளையாயின"*(1 : 12 : 3)

என்ற திருஞானசம்பந்தர் பாடல் தொடரில் மூவகைப் பாசத்திற்கும் அடைமொழியான 'விளையாததொர் பரிசில் வரு' என்ற தொடர் புதிதாகத் தோன்றாத தன்மையில், அதாவது அநாதி என்ற பொருளைத் தரும்.[8]

**7.2.2.** சைவசித்தாந்த நூல்களிலும் இம்மும்மலம் அநாதி என்று கூறப்படுகின்றது. நெல் தோன்றியபொழுது அதனிடத்து உமியும் தோன்றிற்று. செம்பு உண்டானபோதே அதனிடத்துக் களிம்பும் உண்டா யிற்று. அதுபோல உயிர்களுக்கு ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும் அநாதியே உள்ளன.

*"நெல்லிற் குமியும் நிகழ்செம்பி னிற்களிம்பும்*
*சொல்லிற் புதிதன்று தொன்மையே வல்லி*
*மலகன்மம் அன்றுளவாம்"*

என்பது சிவஞானபோத உதாரண வெண்பா ஆகும்.[9] வல்லி என்னு சொல் மாயையைக் குறிக்கும். மாயை இறைவனுக்குப் பரிக்கிரக சக்தியாகலின் (வைப்புசக்தி) வல்லி எனப்பட்டது.[10] "ஈண்டுக் காட்டப்படும் உமி மாயைக்கும், களிம்பு ஆணவ மலத்திற்கும் உவமை" என்பார் ஔவை. துரைசாமிப்பிள்ளை.[11] அப்படியானால் கன்மமலத் திற்குரிய உவமை கூறப்படாததாகின்றது.

மும்மலங்களும் நெல்லிலுள்ள முளை, தவிடு, உமி இவற்றிற்கு ஒப்பிட்டுத் திருமந்திரத்திலும், சிவஞானசித்தியாரிலும், சிவப்பிரகாசத் திலும் கூறப்படுகின்றது.

*"ஆணவ மாயையுங் கன்மமு மாமலங்*
*காணு முளைக்குத் தவிடுமி யான்மாவும்"*

என்று திருமூலரும்,[12]

*"மும்மலம் நெல்லி னுக்கு முளையொடு தவிடு*
*மிப்போல்"*

என்று அருணந்தி சிவாசாரியாரும்,[13]

*"............உயிருண்டாவே*
*உளதுமலம் மலமுளதாய் ஒழிந்த வெல்லாம்*
*நெல்லின்முளை தவிடுமிபோல் அநாதி யாக*
*நிறுத்திடுவர் இதுசைவம் நிகழ்த்து மாறே"*

என்று உமாபதிசிவமும் கூறுகின்றனர்.[14] நெல்லிலிருந்து தோன்றும் முளையைப் போன்றது கன்மமலம். அரிசியைப் பொருந்தி நிற்கும் தவிடு போன்றது மாயாமலம். உமியைப் போன்றது ஆணவமலம்.[15]

## 7.3. பாச வகை :

சைவ சித்தாந்த நூல்களில் பாசம் மூன்றாகவும், ஐந்தாகவும் கூறப்படும்.

**7.3.1.** "மலமாயின தானறுமே" (2 : 175 : 6) எனத் திருஞான சம்பந்தர் பன்மையில் வழங்கியதால் மலம் ஒன்றுக்கு மேற்பட்டது என்பது புலனாகும்.

> *"விளையாததொர் பரிசில்வரு பசுபாசவேதனையொண்*
> *டளையாயின"*(1 : 12 : 3)

என்ற திருஞானசம்பந்தரின் பாடல் தொடர் மூவகை மலங்களை உணர்த்துவதாகக் கூறலாம். அவை,

1. பசு வேதனை
2. பாச வேதனை
3. ஒண்தளை

இவற்றுள் 'பசுவேதனை' என்றது உயிரைத் தொடர்ந்து வரும் பசுத்துவம் எனப்படும் ஆணவமலத் துன்பத்தைக் குறிக்கின்றது.

'பாசவேதனை' என்றது நல்வினை, தீவினையினால் உண்டாகும் துன்பத்தைக் குறிக்கின்றது. 'ஒண்தளை' என்பது உயிர் களுக்குச் சிறிது அறிவு விளக்கத்தைத் தருவதாய் உயிரைத் தளைத் துள்ள மாயையைக் குறிக்கின்றது என்பர்.[16]

**7.3.2.** சைவசித்தாந்த நூல்களில் வரும் திரிமலம்[17], மும்மலம்,[18] திரிமலத்தார்[19] முதலிய சொற்றொடர்கள் மலம் மூவகைப்படும் என்பதை உணர்த்துகின்றன,

**7.3.3.** திருஞானசம்பந்தர் பாடல்களில் ஆணவம், கன்மம், மாயை என்ற சொற்றொடர்கள் காணப்படாவிடினும் அவற்றைக் குறிக்கும்

கருத்தமைந்த வேறு சொற்றொடர்கள் அமைந்திருப்பதால் மலங்கள் மூன்று என்பது திருஞானசம்பந்தருக்கும் உடன்பாடு என்பது புலனாகின்றது.

இம்மூவகை மலங்களும் சடப்பொருள்களாதலால் தாமே தொழிற்படா. இவைகளைத் தொழிற்படுத்துவது இறைவனுடைய சக்தியாகும். அது திரோதானம் எனப்படும். மாயையின் காரியம் மாயேயம் எனப்படும். மூவகை மலங்களுடன் திரோதானத்தையும், மாயேயத்தையும் சேர்த்து மலங்கள் ஐந்து என்று கூறுவதும் உண்டு[20]

## 7.4. ஆணவம் :

### *7.4.1.* விளக்கம் :

ஆணவம் என்ற சொல்லிற்கு அணுத்தன்மையைச் செய்வது என்பது பொருளாகும். இயற்கையில் விரிவுடையதாகிய உயிரின் அறிவை மிகச்சுருங்கியதாகச் செய்வது ஆணவமலம் என அறியப்படும்.[21] எனவே சைவசித்தாந்த நூல்களில் உயிர்அணு என்ற சொல்லால் குறிப்பிடப்படுகின்றது.[22]

**7.4.1.1.** திருஞானசம்பந்தர் பாடலில் ஆணவமானது பசுத்துவம் என்ற சொல்லால் குறிப்பிடப்படுகின்றது.[23]

"*மலனொடுமாசு மில்லவர்*" (1 : 42 : 4)
"மலனாய தீர்த்து"(1 : 119 : 6)
"உலகில் இழுகுமலம்"(3 : 325 : 12)

என்று திருஞானசம்பந்தர் தம் பாடல்களில் குறிப்பிடும் மலம் என்ற சொல் ஆணவத்தைக் குறிக்கின்றது எனலாம்.

**7.4.1.2** சைவ சித்தாந்த நூல்கள் பொதுவாக மலம் மூன்று என்று கூறினாலும் அவற்றுள் மலம் என்ற சொல் சிறப்பாக ஆணவத்தைக் குறிக்கும் பொருளிலேயே அமைந்துள்ளது.

*"வல்லிமல கன்மம்"*[24]

*"மலம்மாயை கன்மம் மாயே யம்திரோ தாயி"*[25]

என்ற தொடர்கள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

## 7.4.2. ஆணவமல உண்மை :

திருஞானசம்பந்தர் பாடல்களில் ஆணவமல உண்மை மெய்ப்பிக்கப்படவில்லை. சைவசித்தாந்த நூல்களில் ஆணவம் மெய்ப்பிக்கப்படுகின்றது. உயிர்களின் அறிவுநிலை சில நேரம் வெளிப்பட்டும், மற்றைய நேரங்களில் அடைபட்டும் கிடத்தல் ஒரு புறக் காரியத்தினாலேயே ஆகும். அதுவே ஆணவம் எனப்படும் என்பர்.[26]

'இன்பத்திற்குக் காரணம் அறிவும், துன்பத்திற்குக் காரணம் அறியாமையும்' என்பது ஒரு மாற்றமுடியாத உண்மை.[27] உயிர்களின் அறியாமைக்கு ஆணவம் காரணம் என்று சைவசித்தாந்த நூலில் கூறப்படுகின்றது.[28] எனவே உயிர்களின் துன்பத்திற்கு ஆணவம் காரணம் என உய்த்துணரப்படும்.

"இருள் இன்றேல் துன்பென்"[29] என்கின்றார் உமாபதிசிவம். இவ்வாறு ஆணவமல உண்மை சைவசித்தாந்தத்தில் மெய்ப்பிக்கப் படுகின்றது.

ஆணவம் என்ற ஒன்று உண்டு எனக் கொள்ளாவிடில் உயிர்களிட்த்து மாயையும், கன்மமும் பொருந்தக் காரணம் கூற முடியாது என்று சிவப்பிரகாசத்தில் கூறப்படுகின்றது.[30]

ஆணவமலம் தன்னுடைய இருப்பைக் காட்டாததால் அதன் உண்மையை நிருபிப்பது அரிதாக உள்ளது. திருவருளால் அல்லாமல் ஆணவமலம் ஒன்று உண்டு என்ற உண்மையை உணர்தல் அரிது என்று உமாபதிசிவம் கூறுகின்றார்.[31]

## 7.4.3. ஆணவம் மூலமலம் :

அறிவிற்குத் தடையாய் உள்ளது ஆணவம். இதுவே முதல் தடை ஆனதால் மூலமலம் எனப்படும்.[32] உயிர்களுக்கு உடம்பு கிடைத்தற்கு வினை காரணமாகும். வினை உண்டாவதற்கு ஆணவமலம் காரணமாகும். எனவே உயிர்களுக்குரிய உடம்பு, வினை, ஆணவம் என்ற மூன்று பந்தங்களுள் ஆணவமே முதல் பந்தம் என்பது உய்த்துணரப்படும். எனவே அது மூலமலமாகும் எனப்படும். "ஆணவம் உயிரோடு உடன் தோன்றிய காரணத்தால் சகசமலம் என்றும் கூறப்படும்."[33]

### 7.4.3.1.

*"நாம மிசையவெப்போ துமேத்தும்*
*மூலமூண்ட நீற்றர்வாயான் மேயதுமு துகுன்றே"* (1:53:9)

என்ற திருஞானசம்பந்தரின் பாடல் தொடரில் 'மூலமூண்ட நீற்றர்' என்பதற்கு மூலமாகிய ஆணவத்தின் வலிகெடுத்த திருநீற்றினை யுடைய அடியவர்கள் எனப் பொருள் கூறுவர்.[34]

### 7.4.3.2.

*"மோகமிக உயிர்கள்தொறும் உடனாய் நிற்கும்*
*மூலஆ ணவம் ஒன்று"*[35]
*"........... செம்பினுறு களிம்பேய்ந்த நித்த*
*மூலமல மாய் அறிவு முழுதினையும் மறைக்கும்"*[36]

என்ற சிவப்பிரகாசத் தொடர்கள் ஆணவம் மூலமலம் என்ற உண்மையை உணர்த்துகின்றன.

## 7.4.4. ஆணவம் இருள் :

ஆணவம், உயிரின் அறிவு, இச்சை, தொழில்களைத் தடுப்பதால் இஃது இருள் எனவும் கூறப்படும்.

**7.4.4.1.**

*"ஊனத் திருணீங் கிடவேண்டில்"* (1 :38 :3)

என்ற திருஞானசம்பந்தரின் பாடல் தொடரில் இருள் என்ற சொல் ஆணவத்தைக் குறிக்கின்றது எனலாம்.

**7.4.4.2.** திருவருட்பயனில் மூன்றாவது அதிகாரம் இருள்மலநிலை எனப்படுகின்றது.

*"ஏகன் அநேகன் இருள்கருமம் மாயையிரண்*
*டாகஇவை ஆறாதி யில்"*[37]

என்ற திருவருட்பயனில் ஆணவமலமானது இருள் என்ற சொல்லால் குறிப்பிடப்படுகின்றது.

**7.4.4.3.** திருஞானசம்பந்தரும், சைவசித்தாந்த நூலாசிரியர்களும் ஆணவத்தை இருள் என்று குறிப்பிட்டாலும், திருஞானசம்பந்தர் பாடல்களால் ஆணவம் ஏன் இருள் எனப்படுகின்றது என்பதை அறியமுடியவில்லை. சைவ சித்தாந்த நூற்கருத்தால் ஆணவம் இருள் எனப்படுவதன் காரணம் அறியமுடிகின்றது.

**7.4.4.4.**

*"அருளை மலம்உயிர்கள் சாராமல் மறைக்கும்"*[38]

என்று சிவப்பிரகாசமும்,

*"................................. ஞானத்தின்*
*கண்ணை மறைத்த கடியதொழி லாணவத்தால்"*[39]

என்று போற்றிப்பஃறொடையும், உயிர்கள் திருவருளை உணராவண்ணம் ஆணவம் மறைக்கின்றது என்று கூறுகின்றன. ஆணவத்தின் இந்த மறைத்தல் சக்தி காரணமாகவே அஃது இருள் எனப்படுகின்றது.

**7.4.5.** ஆணவம் உயிரின் குற்றம் :

ஆணவமலமானது அநாதியே உயிரைத் தொடர்ந்து வந்தாலும் அஃது உயிரின் குணமாகக் கருதப்படாது குற்றம் என்றே கருதப்படும்.

**7.4.5.1.**

*"ஊனத் திருள்"*(1 : 38 : 3) *என்ற*

திருஞானசம்பந்தர் பாடல் தொடரில் இருளாகிய ஆணவம் ஊனம் என்ற அடைமொழி சேர்த்துக் கூறப்படுகின்றது. ஆணவத்தை 'ஊனத்திருள்' என்று கூறும் திருஞானசம்பந்தர் இதனால் உண்டாகும் துன்பச் செயல்களாகிய வினைவகைகளை 'ஊனத்திரள்' என்கின்றார்.

*"ஞானத்திரளாய் நின்றபெருமா னல்லவடியார்மேல்*
*ஊனத்திரளை நீக்குமதுவு முண்மைப் பொருள்*
*போலும்"*(1 : 69 : 3)

என்பது திருஞானசம்பந்தர் வாக்கு. ஊனம் என்பது குறைபாட்டை - குற்றத்தைக் குறிக்கும். குறைபாடாவது சிவத்தோடொன்றிச் சிவமாகும் ஆன்மாவை மறைத்து அணுவாக்கும் குறைபாடாகும்.[40]

**7.4.5.2.** ஆணவம் ஆன்மாவின் குணமல்ல, குற்றமே என்பதை உமாபதிசிவம் பின்வருமாறு விளக்குகின்றார். ஒரு பொருளின் குணம் பொருளைவிட்டு நீங்காது, குற்றமே நீங்கும். ஆணவம் ஆன்மாவின் குணமாயின் ஆணவ மலத்தைப் போக்கத் தக்க திருவருள் உண்டான காலத்தில் ஆன்மாவும் கூடக் கெட்டுப்போகும். அவ்வாறு ஆன்மா கெட்டுப்போகாமல் நிற்பதால் ஆணவம் ஆன்மாவின் குற்றம் என்கிறார்.[41]

## 7.5. கன்மம் :

ஆணவமலச் சேர்க்கையால் உயிர்கள் செய்யும் வினைகளின் தொகுப்பே கன்மமலம் எனப்படும்.[42] திருஞானசம்பந்தர் தேவாரத்தில்

கன்மமலமானது வினை என்ற சொல்லாலேயே குறிப்பிடப்படுகின்றது. கன்மம்,வினை, தொழில் முதலியன ஒரு பொருள் குறிப்பன. ஆணவத்தை நீக்குதற் பொருட்டுக் கன்மமலமும், மாயா மலமும் உயிர்களைச் செயற்கையாக இடையே வந்து பற்றுவனவாதலால் 'ஆகந்துக மலம்' எனப்படும்.[43] கன்மமும் மாயையும் உயிரை இடையே வந்து பற்றியவை என்று கூறுவது, முன்பு மூவகை மலங்களும் அநாதி என்று கூறியதோடு முரணாகாதோவென்பது சிந்தித்தற்குரியது. கன்மம், மாயை இவற்றின் இருப்பே அநாதியானது. அவை ஆன்மாவின்கண் பற்றியது, அநாதியென்று கூறியதாகாது.[44] காரண கன்மமும், காரணமாயையும் அநாதி. ஆகந்துக மலம் என்பது காரிய கன்மத்தையும், காரியமாயையும் குறிக்கும் எனலாம்.

### 7.5.1. கன்மமல உண்மை :

பொதுவாக எல்லா மதங்களும் வினை உண்மையை ஒப்புக் கொள்கின்றன. திருஞானசம்பந்தர் காலத்தில் சிறந்தோங்கிய பௌத்தமும், சமணமும் வினைக் கொள்கைக்கு முக்கியத்துவம் தருவனவே ஆகும்.

**7.5.1.1.** திருஞானசம்பந்தர்,

"*முன்னைவினை*"(3 :329 :4)
"தொல்வினை"(1 :1 :11, 1 : 100 :8-10, 1 :102 :10,. 3:304 :11, 3 ::361 :11, 3 :379 :11, 3 :381 :11)
"இவ்வினை"(1 :116 :1)
"நல்வினை"(1 :177 :3, 2 : 207 :11)
"தீவினை"(2 :207 :11)
"மேல்வினை"(2 :212 :11, 2:241 :1, 2 :250 :7, : 3: 268 :2, 3 :281 :5)

என்று வினைகளைக் குறிப்பிடுகின்றார்.

**7.5.1.2.** சைவசித்தாந்த நூல்களில் கன்மமல உண்மை பின்வரும் காரணங்களால் மெய்ப்பிக்கப்படுகின்றது.

1. உயிர்கள் அடையும் உடம்பு வேறுபாடு[45]
2. உயிர்கள் உடம்பில் தங்கியிருக்கும் காலவேறுபாடு.[46]
3. உயிர்கள் அனுபவிக்கும் நுகர்ச்சி வேறுபாடு.[47]

**7.5.2.** கன்மத்தின் நிலைகள் :

கன்மம், செய்யப்படும் காலத்து 'ஆகாமியம்' என்றும், செய்த பின்னர்ப் பயன்தரும் அளவும் தோன்றாது நுண்ணிய நிலையில் இருக்குங்காலத்து 'சஞ்சிதம்' என்றும், காலம் வந்தபோது பயன்தரும் நிலையில் 'பிராரத்தம்' என்றும் சொல்லப்படும்.[48] "ஆகாமியம், 'எதிர்வினை, வருவினை, மேல்வினை' என்னும் பெயர்களாலும் சொல்லப்படும். சஞ்சிதம், 'அபூர்வம், பழவினை, தொல்வினை, கிடைவினை என்றும் சொல்லப்படும். பிராரத்தம் 'ஊழ்வினை, நுகர்வினை' என்றும் சொல்லப்படும்."[49]

**7.5.2.1.** திருஞானசம்பந்தர் பாடல்களில் வினையின் இம்மூவகை நிலைகட்கான குறிப்புக்கள் காணப்படுகின்றன.

*"முந்தி நின்ற வினைக ளவைபோகச்*
*சிந்தி நெஞ்சே சிவனார் திருப்புன்கூர்"* (1 : 27 : 1)

என்ற பாடல் தொடரில் 'முந்தி நின்ற வினைகள்' என்பதற்கு நுகர்ச்சிக்குரியனவாகப் பரிபக்குவப்பட்டு நிற்கும் ஆகாமிய சஞ்சித வினைகள் எனப் பொருள்கூறுவர்.[50]

*"அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லும்"*
(1 : 116 : 1)

என்ற தொடரில் நாம் முன்முன் பிறவிகளில் ஈட்டிய தீவினைகட்கு ஏற்ப இப்பிறவியில் பிராரத்தம் வந்தூட்ட இத்துன்பம் அனுபவிக்கிறோம் என்று சொல்லும் அடியார்கள் எனப் பொருள் கூறுவர்.[51] இதில்

அவ்வினை என்பது சஞ்சிதத்தையும், இவ்வினை என்பது பிராரத்தத்தையும் குறிக்கும் எனலாம்.

*"பண்புநள்ளா றேத்துபாடல் பத்துமி வைவல்லார்*
*உண்புநீங்கி வானவரோ டுலகிலு றைவாரே"* (1 :49 :11)

என்று திருஞானசம்பந்தர் பாடல் தொடரில் 'உண்பு நீங்கி' என்பதற்கு 'இப்பிறவியில் உண்பதற்காக அளிக்கப் பெற்ற பிராரத்த சேடமும் நீங்கி' எனப்பொருள் கூறுவர்[52]

*"நுத்தம் மேல்வினையோட வீடுசெய்*
*எந்தை யாயஎம் மீசன் தானே"*(3 : 263 :5)

என்ற திருஞானசம்பந்தர் பாடல் தொடரில் 'மேல்வினை' என்பது, காலப் பொருளில் முன்பிறப்புக்களில் ஈட்டி எஞ்சிய சஞ்சித வினையையும், இடப்பொருளில் இனி ஈட்டும் வினையாகிய ஆகாமிய வினையையும் குறிக்கும் என்பர்.[53]

*"மேல்வினை வீடுமே"* (3 :268 :2)

என்பதற்கு 'முன்னை வினைகளாகிய சஞ்சிதமும், இப்பிறப்பில் ஈட்டப்படுகின்ற, இனி ஈட்டப்படுவதாகிய ஆகாமிய வினையும் ஒருங்கே மாயும் என்பதாம்' என்பர்[54]

**7.5.2.2.** சைவ சித்தாந்த நூல்களிலும் வினையின் மூவித நிலைகள் கூறப்படுகின்றன.

*"முந்தநுக ருந்துபயன் அந்தமுற வந்த*
*வினையும்எதிர் வினையும்முடி வினைஉதவு பயனால்"*[55]

என்ற சிவப்பிரகாசத் தொடரில் 'முந்து நுகருந்து பயன்' என்ற சொற்றொடர் முற்பிறவியிலே புசிக்கச் செய்து ஏறிய சஞ்சிதத்தையும், 'அந்தமுற வந்த வினை' என்ற சொற்றொடர் இப்பொழுது வந்த உடலிலே கட்டுப்பட்ட பிராரத்த கன்மத்தையும், 'எதிர்வினையும்' என்ற சொல் இப்பொழுது ஏறுகிற ஆகாமியத்தையும் குறிக்கும் என உரை கூறுவர்.[56]

திருவருட்பயனும் 'ஏன்ற வினை' என்ற சொல்லால் பிராரத்த வினையையும், 'ஏறும் வினை' என்ற சொல்லால் ஆகாமிய வினையையும் குறிக்கும்.[57]

**7.5.2.3.** ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என்ற பெயர்கள் திருஞானசம்பந்தர் பாடல்களிலும், மெய்கண்ட சாத்திர நூல்களின் பாடல்களிலும் இல்லை என்றாலும் அவற்றுக்கான குறிப்புக்கள் பாடல்களில் உள்ளன. ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என்பன வெவ்வேறானவை அல்ல. ஆகாமியமே சஞ்சிதமாகிப் பின் பிராரத்தமாய் வரும். விதை முளைக்கப் போடுதலை ஒத்த செயலுக்கு ஆகாமிய வினையை ஒப்பிடலாம். சஞ்சித வினைக்கு முளைக்கப் போட்ட விதை முளைக்கும் பக்குவம் வரும்வரை பூமிக்கடியில் அழுந்தி நிற்கும் நிலையை உவமையாகக் கூறலாம். முளைக்கப் போட்ட விதைகளில் சில முளைத்து வருதலைப் பிராரத்த வினைக்கு உவமையாகக் கூறலாம்.

பயிர்வினைஞனொருவன் தன் முயற்சியால் விளைந்த தானியத்தைச் சேர்ப்பித்திருக்கும் நெற்களஞ்சியம் போலும் சஞ்சிதம். பிராரத்தம் என்பது களஞ்சியத்திலிருந்து தானியத்தை எடுத்து அனுபவித்தல் போன்றது. ஆகாமியம் என்றது களஞ்சியத்தினின்றும் எடுத்தனுபவித்து வருங்கால் மறுபடியும் களஞ்சியம் குறையாவண்ணம் விளைவித்துப் பூர்த்திப் பண்ணிக் கொள்வது போலும் என்பர்.[58]

| எண் | கன்மத்தின் மூவகைகள் | நிலைகள் | பொருள் விளக்கம் | திருஞான சம்பந்தர் தேவாரத்தில் வரும் பெயர் | உவமை |
|---|---|---|---|---|---|
| 1. | ஆகாமியம் | தூல நிலை | நல்வினை, தீவினை | மேல்வினை, ஏறுவினை, | விதையை முளைக்கப் போடுதல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | சஞ்சிதம் | சூக்கும நிலை | புண்ணியம், பாவம் | தொல் வினை, முந்தி நின்ற வினை, அவ்வினை முன்னை வினை. | விதை முளைக்கும் வரை பூமிக்கடியில் அழுந்தி நிற்றல் |
| 3. | பிராரத்தம் | பயன் தரும் நிலை | இன்பம், துன்பம் | இவ்வினை ஊழ்வினை உண்பு | விதை முளைத்து வருதல் |

### 7.5.3. ஆகாமியவினை செய்யப்படும் முறை :

ஆகாமியவினை மனம், வாக்கு, காயம் என்ற மூன்றாலும் செய்யப்படும்.

**7.5.3.1.** திருஞானசம்பந்தர் பாடலிலும் இதற்கான குறிப்பு உள்ளது.

*''உரையினில்வந்தபாவ முணர் நோய்களும்ம*
*செயறீங்கு குற்றமுலகில்*
*வரையினிலாமை செய்த வவைதீரும்வண்ண*
*மிகவேத்திநித்த நினைமின்''*(2 : 222 : 1)

என்ற திருஞானசம்பந்தரின் திருநாரையூர் திருப்பதிகப் பாடலில் வினை செய்யப்படும் விதம் விளக்கப்படுகின்றது. 'உரையினில் வந்தபாவம்' என்றது வாக்கால் செய்ய்ப்படும் தீவினைகளைக் குறிக்கும். 'உணர் நோய்கள்' என்றது நினைப்பால் உண்டாகும் தீவினைகளைக் குறிக்கும். 'செயல்தீங்குகுற்றம்' என்றது காயத்தால் செய்யப்படும் தீவினைகளைக் குறிக்கும். இப்பாடல் தொடர் தீவினையானது வாக்கு, மனம், காயம் என்ற மூன்றாலும் செய்யப்படுதலை உணர்த்துகின்றது.

**7.5.3.2.** தீவினை மட்டும் அல்லாமல் நல்வினையும் இவ்வாறே செய்யப்படும். இக்கருத்து,

*"இதமகி தங்கள் என்ப திகல்மன வாக்குக் காயத்(து)*
*இதமுயிர்க் குறுதி செய்தல் அகிதமற் றதுசெய்*
*யாமை"*[59]

என்ற சிவஞானசித்தியாரில் கூறப்படுகின்றது.



கன்மமலத்தின் இயல்பு கூறும் சிவப்பிரகாசச் செய்யுளும்,

*"எண்ணிவரு மனவாச கன்மத்தா லியற்றும்*
*இயல்பினதாய்"*[60]

என்று கன்மம் மூவகையாகச் செய்யப்படுதலைக் கூறுகின்றது.

*"இருவினை யென்ப தென்னைகொல் அருளிய*
*மனமே காயம் வாக்கெனும் மூன்றின்*
*இதமே யகித மெனுமிவை யாயில்"*[61]

என்று இருபா இருபஃதிலும் கூறப்படுகின்றது.

| வினை செய்யப்படும் விதம் | | குறிக்கும் திருஞான சம்பந்தரின் பாடல் தொடர் | திருஞான சம்பந்தரின் பதிக எண்ணும் பாடல் எண்ணும் | சாத்திர நூலும் பாடல் எண்ணும் |
|---|---|---|---|---|
| 1. | வாக்கு | "உரையினில் வந்த பாவம்" | *2 : 222 : 1* | சிவஞானசித்தியார் சுபக்கம், 103 |
| 2. | மனம் | "உணர் நோய்கள்" | *2 : 222 : 1* | சிவப்பிரகாசம், 28 |
| 3. | காயம் | "செயல்தீங்கு குற்றம்" | *2 : 222 : 1* | இருபா இருபஃது, 14 |

### 7.5.4. வினைதரும் பயன் :

வினைதரும் பயன் சாதி, ஆயுள், போகம் என மூன்றாகும். சாதி என்பது படைப்பு ஒருவகையாகக் காணப்படாது பறவை, விலங்கு, மக்கள், தாவரம் முதலாகப் பல்வேறு வகையாகக் காணப்படுவதையே சிறப்பாகக் குறிக்கின்றது. ஆயுள் என்பது வாழ்நாள், நீண்ட வாழ்நாள், குறுகிய வாழ்நாள் என்பனவும் வினையின் பயனே. 'போகம்' என்பது ஒவ்வோர் உயிரும் அனுபவிக்கும் இன்ப துன்பங்கள். இவையும் வினையின் பயனே.[62]

**7.5.4.1.** உயிர்கள் எண்பத்து நான்கு லட்சத்து நூறாயிர யோனிபேதம் உடைய பிறப்பை அடைகின்றன. (1 : 132 : 4) என்று திருஞானசம்பந்தர் கூறுவது, வினையின் பயனான சாதியைக் குறிக் கின்றது எனலாம்.

*"..........யாரறிவார்*
*சாநாளும் வாழ்நாளும்"*(2 : 177 : 3)

என்று திருஞானசம்பந்தர் கூறுவது·உயிர்கள் வெவ்வேறு கால அளவு வாழ்நாள் உடையவை என்ற கருத்தைக் குறிப்பாக உணர்த்துகின்றது. திருஞான சம்பந்தர் தம் பாடல்களில் உயிர்கள் பிறவியால் அடையும் துன்பத்தையும் (1 : 72 : 11, 2 : 79 : 5), இறைவனை வணங்குவதால் அடையும் இன்பத்தையும் (3 : 287 : 10) குறிப்பிடுவது உயிர்கள் இன்ப துன்ப நுகர்ச்சி அடைபவை என்பதை உணர்த்தும்.

மற்றுமோரிடத்தில்

*"போகமு மின்பமு மாகி"* (2 : 205 : 5)

என்கிறார் திருஞானசம்பந்தர். இது உயிர்கள் பெத்தத்தில் போகம் அடைவதால் எய்தும் சிற்றின்பத்தையும், முக்தியில் சிவபோகம் அடைவதால் எய்தும் சிவானந்தத்தையும் குறிக்கும் எனலாம். முன்னது வினைப்பயனால் வருவது. பின்னது வினை நீக்கத்தால் வருவது.

**7.5.4.2.** உமாபதிசிவம் தம் சிவப்பிரகாச நூலில் வினைப்பயனை,

*"கன்மநெறி திரிவிதம்நற் சாதிஆயுப்போகக்*
*கடனதென வருமூன்றும்"*[63]

என்று கூறுகின்றார். அருணந்தி சிவாசாரியார் பேறு, இழவு, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு என ஆறினை வினைப்பலன்களாகக் கூறுகிறார்.[63அ]

**7.5.4.3.** திருஞானசம்பந்தர் பாடல்களில் உயிர்கள் அடையும் வினப்பயன்கள் பற்றிக் குறிப்பாகக் கூறப்பட்டுள்ளன. ஆனால் சைவசித்தாந்த நூலில் கூறப்படுவதுபோல் தொகைப்படுத்திக் கூறப்படவில்லை.

**7.5.5.** **வினைப்பயன் வரும் வாயில்கள் :**

வினைப்பயன் என்று சொல்லப்படும் பிராரத்தமானது உயிர்களுக்கு மூன்று வழிகளில் வரும் என்று சைவ சித்தாந்த நூல்களில் கூறப்படுகின்றது. அவை ஆதி ஆத்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம் எனப்படும்.[64]

**7.5.5.1.** இறைவனால் சேர்ப்பிக்கப்பட்ட வினைப்பலனை அனுபவிக்கும் உயிர்கள் தீவினையால் பலவிதத் துன்பங்களை அனுபவிக்கும். இடர் வந்தாலும், தளர்ந்தாலும், நோய் தொடர்ந்தாலும் இறைவனுடைய திருவடிகளையே வணங்குவேன் என்ற பொருளில் திருஞானசம்பந்தர்,

*"இடரினும் தளரினும் எனதுறுநோய்*
*தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்"* (3 : 262 : 1)

என்கின்றார். இதில் இடர், தளர், நோய் தொடர்தல் முதலியன உயிர்கள் அடையும் மூவகைத் துன்பங்களை உணர்த்துகின்றன. "இடர்" என்றது பிறர்தர வரும் இடையூறைக் குறிக்கும். மழை, காற்று, இடி, வெப்பம், கால வேறுபாடு, பூகம்பம் முதலியவற்றால் வரும் இடர்கள் ஆகும். இது

சித்தாந்த நூல்களில் ஆதிபௌதிகம் எனக் கூறப்படுகின்றது. 'தளர்' என்றது இளமை மாறி முதுமை நேரும்போது தளர்வினால் உண்டாகும் துன்பத்தைக் குறிக்கும். நரை, திரை, மூப்பு சாக்காடு முதலியன ஆதிதைவிகம் எனப்படும். 'நோய் தொடர்தல்' என்றது வினையினால் மெய்யிலும், மனத்திலும் வரும் துன்பத்தைக் குறிக்கும். இது ஆதிஆத்மிகம் எனப்படும். இவ்வாறு "மனிதருக்கு வரும் துன்பங்கள் மூன்றுவகை. அவற்றை வடமொழியில் தாபத்திரயம் என்பர்."[65]

**7.5.5.2.** சிவப்பிரகாசம் என்ற நூலில் கன்மபலன்,

*"தன்மைதரு தெய்விகமுற் பௌதிகம்ஆன் மிகமாம்*
*தகையிலுறும்"*[66]

*என்று கூறப்படுகின்றது.*

திருஞானசம்பந்தர் கன்மபலன் வரும் வாயில்கள் இவை எனக் கூறவில்லை. ஆனால் திருஞானசம்பந்தரின் மேற்கூறிய பாடல் தொடரில் சிவப்பிரகாசத்தில் கூறப்படும் இக்கருத்து உட்குறிப்பாய் அமைந்துள்ளது எனலாம்.

**7.5.5.3.** ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவு உண்டு. உயிர்கள் தாம் செய்த வினையின் செயலால் உண்டான விளைவின் பயனை அனுபவித்தே தீரும். வினைப்பயன் பற்றிய கொள்கையில் சமண பௌத்தத்திற்கும், சைவத்திற்கும் ஒரு வேறுபாடு உண்டு. சமணமும், பௌத்தமும் வினைப்பலனானது செய்த உயிர்களைத்தாமே சென்றடையும் என்ற கொள்கை உடையவை.[67] சைவசித்தாந்தத்தில் வினைப்பயன் இறைவனால் சேர்ப்பிக்கப்படும் என்று கூறப்படும்.

**7.5.5.4.** இவ்வுயரிய கொள்கையினை மேற்கொண்ட தேவார ஆசிரியர்கள் அங்ஙனம் வினைப்பயனை ஊட்டும் இறைவன் உயிர்களுக்குத் தீவினைப் பயனை அருத்தும்போதும், நோயாளர் களின் பிணி நீக்கக் கருதிய மருத்துவன் அதனை நீக்கற்குரிய கைக்கும் மருந்தினை வெல்லக்கட்டி முதலிய இனிய பொருளோடும்

சேர்த்துத் தருதல் போல, உயிர்கள் நுகர்தற்குரிய தீவினைப்பயனை இனிமை யைத் தரும் நன்மையோடு கூட்டி அருத்துதலோடு பாவங்கள் தீர்தர நல்வினையையும் தந்தருளுவன் எனக் கூறுவர். இது,

*"இனியனவல்லவற்றை யினிதாகநல்கு*
*மிறைவன்"*(2 : 219 : 5)

"பாவங்கடீர்தர நல்வினை நல்கி"(1 : 42 : 2)

என்பன முதலாகவரும் திருஞானசம்பந்தர் தேவார அடிகளால் நன்கு பெறப்படும்[68]. மேலும் திருஞானசம்பந்தரின் பாடல்கள் பல, இறைவழிபாடு உயிர்களின் வினைகளை நீக்குதலைப் பெரிதும் கூறுகின்றன. இறைவழிபாடு வினைநீக்கும் என்று திருஞான சம்பந்தர் கூறுவதும் வினைப்பயனைச் சேர்ப்பிப்பவன் இறைவன் என்ற கருத்தை மறைமுகமாக உணர்த்துகின்றது எனலாம். ஏனெனில் சேர்ப்பிப்பவன்தானே நீக்குதலும் செய்ய வேண்டும். ஆனால் திருஞானசம்பந்தர் பாடல்களை நுட்பமாக ஆராயும்பொழுது வினைப்பயனைச் சேர்ப்பிப்பவன் இறைவன் என்ற கருத்தை விட, இறைவழிபாட்டால் வினைநீக்கம் பெறலாம் என்ற கருத்தே அதிகம் வலியுறுத்தப்படுவது தெரியவருகின்றது. இதற்கு அவருடைய காலச்சூழல் காரணம் ஆகலாம். இவருடைய காலம் சமண பௌத்த ஆதிக்கத்தால் மக்கள் ஊழ்வினையில் அதிக நம்பிக்கை கொண்டிருந்த காலமாகும். பசி வந்தது என்று சொல்லிக் கொண்டிராமல் உழைத்துண்டு பசியைப் போக்குவது உலகியல்பு. நோய் வந்தது என்று நொந்து கொண்டிராமல் மருத்துவமனை சென்று கண்டு மருந்துண்டு நோயினைப் போக்குவது உலக இயல்பு. இதுபோல துன்பத்திற்குக் காரணம் ஊழ்வினை என்று வாளா இருக்காமல், இறைவனை வழிபட்டு அவ்வூழ்வினையை அகற்ற வேண்டும் என்று அறிவுறுத்தவும், கடவுள் கொள்கையை வலியுறுத்தவும் வினைநீக்கம் பற்றி அதிகம் திருஞானசம்பந்தர் கூறுகிறார் எனலாம்.

**7.5.5.5.** வினைப்பயனைச் சேர்ப்பிப்பவன் இறைவன் என்னும் கருத்து,

*"யோனிக்கெல்லாம் இறைவனா ணையினால் இன்பத் துன்பங்கள் இயைவதாகும்"*[69]

என்று சிவஞானசித்தியாரில் கூறப்படுகின்றது. மற்றுமோரிடத்திலும் அருணந்தி சிவாசாரியார் வினைப்பயன்களை மருத்துவனும், வேந்தனும் போல முதல்வனே அவ்வுயிர்க்குக் தனதாணையாற் கூட்டுவன். அவ்வாறன்றிச் சடமாகிய அவை தாமே மறுமைக்கண் வந்து கூடமாட்டா என்கிறார்.[70]

## 7.6. மாயை :

மும்மலங்களுள் மூன்றாவதாகக் கூறப்படுவது மாயை ஆகும் "மாயை என்று அழைக்கப்படுவதே அதன் தொழில் முறையால்தான்; மாய் - அழித்தல், ஐ - ஆக்குவித்தல். உலகம் தோன்றுவதும் அழிவதும் ஆகிய மாற்றங்கள் மாயையின் தொழிலே என்பதாம்."[71]

***7.6.1.*** சைவ சித்தாந்தத்தில் மாயை முக்கியமாகப் பேசப்படுவது போல வேதாந்தத்திலும் மாயை முக்கியமானதாகப் பேசப்படுகின்றது. வேதாந்திகளுக்கு மாயாவாதிகள் என்று ஒரு பெயரும் வழங்கு கின்றது. சைவ சித்தாந்திகள் பேசும் மாயைக்கும், வேதாந்திகள் பேசும் மாயைக்கும் வேறுபாடுகள் உண்டு.

1. வேதாந்தத்திலே மாயை, அறியாமை என்ற கருத்திலேயே பெரிதும் வழங்குகின்றது. சைவசித்தாந்தத்தில் சடவுலகுக்குக் காரணமான ஒரு சடப்பொருளே மாயையாகும்.
2. வேதாந்திகட்கு மாயை, உளதோ இலதோ என விவரிக்க முடியாத ஒரு அநிர்வசனீயப் பொருள். ஆனால் சைவ சித்தாந்திகட்கு மாயை உளது என அறுதியீட்டுக் கூறக்கூடிய ஓர் உள்பொருள் ஆகும்.[72]

**7.6.2.** விளக்கம் :

மாயையானது காரிய நிலையில் பருப்பொருளாக விரிந்து தோன்றும்; காரண நிலையில் நுண்பொருளாக ஒடுங்கும். ஒடுங்கிய உலகு உயிர்களை இறைவன் மீண்டும் புனர் உற்பவம் செய்வான். பிரபஞ்சத்தின் இத்தோற்ற ஒடுக்கு முறையைத் திருஞானசம்பந்தர்,

*"விரிந்தனைகுவிந்தனை விழுங்குயிருமிழ்ந்தனை"*
(2 : 166 : 3)

என்ற தொடரால் உணர்த்துகின்றார் எனலாம்.

திருஞானசம்பந்தர் திருமறைக்காட்டுத் திருப்பதிகம் ஒன்றில் (1 :22 :7)இந்த ஐம்பூதங்களில் நிலம் நீரில் ஒடுங்க, நீர் எரியில் ஒடுங்க, எரி வளியில் ஒடுங்க, வளி ஆகாயத்தில் ஒடுங்க, அப்போது மாலயன் இருவரும் அழிய அவர்கள் எலும்பை அணிந்து தான் ஒருவனே தலைவன் என உணர்த்தித் திரிபவன் மறைவனநாதனாகிய இறைவன் என்று பிரபஞ்ச ஒடுக்கமுறை பற்றிக் கூறுகிறார்.[73]

திருஞானசம்பந்தரின் திருத்தூங்கானைமாடப் பதிக முதல் பாடலில் வரும்,

*"ஒடுங்கும் பிணிபிறவி கேடென்றிவை*
*யுடைத்தாய வாழ்க்கை"*(1 : 59 : 1)

என்ற தொடரில், 'ஒடுங்கும்' என்றதற்கு நிலையானதுபோல் தோன்றி விரிந்து பின் ஒடுங்கும் இயல்பு உடையது உலக வாழ்க்கை எனப் பொருள் கூறுவர். "வித்தினின்று முளைத்து. மரமாகிப் பின்னரும் வித்தினுள் ஒடுங்குதல் போன்ற நிலைமை குறித்து ஒடுங்கும் என்றார்" என உரை கூறுவார் அனலையூர்கிழார் யாழ் ஏ. ஆறுமுகனார்.[74]

"துயரிலங்கும்முல கிற்பலவூழிக டோன்றும்பொழுதெல்லாம்"
(1 :1 :8)

என்ற திருஞானசம்பந்தரின் பாடல் தொடர் உலகம் பலமுறை அழிந்து தோன்றும் குறிப்பை உணர்த்தும்.

**7.6.2.1.** திருஞானசம்பந்தரின் இக்கருத்துக்களை அடியொற்றியே சைவசித்தாந்தம் கூறும் மாயையின் விளக்கம் அமைந்துள்ளது. உலகில் பலவகையாகக் காணப்படும் பொருள்களாய்ப்பரிணமிக்கக் கூடிய பலவகைச் சக்திகளின் தொகுதியே மாயை எனப்படும். இம்மாயையின் காரியமே தநு, கரண, புவன, போகம் ஆகும்.[75] 'தநு' என்றது பரு உடம்பையும், 'கரணம்' என்றது அந்தக் கரணம், மனம் முதலிய உட்கருவிகளையும், 'புவனம்' என்றது அவ்வுடம்புகள் இயங்குவதற்கு அமைந்த இடமான உலகத்தையும், 'போகம்' என்றது உயிர்கள் தம் தநு கரணங்களைக் கொண்டு இன்ப துன்பங்களை நுகரும் நுகர்ச்சிப் பொருட்களையும் குறிக்கும்.[76]மாயையை நித்தப்பொருள், அருவப்பொருள். உலகத்திற்கு வித்துப்பொருள், அசித்துப்பொருள் என அருணந்தி சிவாசாரியார் கூறுகின்றார்.[77]

**7.6.3.** மாயை உண்மை :

இன்ப துன்பமாகிய வினைப்பயன்கள் மாயா காரியங்களினிடமாகவே உயிர்களுக்கு வருகின்றன. சைவ சித்தாந்தத்தில் வினையுண்மை பெறப்படவே அதற்குப் பற்றுக் கோடாகிய மாயை உண்மையும் பெறப்படும்.[78]

**7.6.4.** மாயை உயிர்களுக்குச் செய்யும் உதவி :

மாயையின் காரியம், கருவி கரணங்கள் ஆகும். கருவி கரணங்களால் உயிர்கள் அறிவு விளக்கமே பெறும். எனவே மாயை உயிர்களின் அறிவு விளக்கத்திற்கு உதவும் என்பது உணர்த்தப்படுகின்றது.

**7.6.4.1.** திருஞானசம்பந்தரின் "விளையாததொர் பரிசில் வரு" (1 : 12 : 3) என்ற பாடல் தொடரில் ஒண்மை (புத்திக்கூர்மை)யைக் குறிக்கும் 'ஒண்' என்பது உயிரைப் பற்றிய தளைகளுள் ஒன்றாய மாயைக்கு அடைமொழியாக வந்துள்ளது.[79]

**7.6.4.2.** மாயை உயிர்களுக்கு விழைவு, அறிவு, தொழில்களை எழுப்பும் என்று அருணந்தி சிவாசாரியார் கூறுகின்றார்.[80] சூரிய ஒளி வரும்வரை விளக்கொளி உதவுவதுபோல உயிர்களின்கண் திருவருள் பதியும்வரை மாயை உதவிபுரியும் என்று திருவருட்பயனில் கூறப்படுகின்றது.[81] குருடர்க்குக் கொடுக்கப்படும் கோல் போல உயிர்களிடம் மாயை கூட்டப்படுகிறது என்று போற்றிப்பஃறொடையில் கூறப்படுகின்றது.[82] மாயையின் காரியமான தநு, கரணங்களின் துணையின்றி உயிர் ஒன்றையும் அறியாதாதலால் மாயையை விளக்காக உருவகிக்கிறார் மெய்கண்டார்.[82அ] அறிவு விளக்கத்திற்குத் துணை செய்யும் மாயையைப் பற்றி அருணந்தி சிவாசாரியார்,

" *வைத்த தோர் மலமாய் மாயை*
*மயக்கமும் செய்யும் அன்றே* "[82ஆ]

என்று கூறுகின்றாரே என ஐயம் எழ்லாம். மயக்கமும் செய்யும் என உம்மை கொடுத்து ஓதியது மயக்குதல், மாயையின் இயற்கைத் தன்மை அன்று. ஆணவத்தோடு கூடி நிற்கும் செயற்கையாம் என்பதை உணர்த்தும். மாயை மயக்கம் செய்யும் என்று கூறுவார் கூற்றை மறுக்க அவ்வாறு கூறுகிறார் எனலாம்.

**7.6.4.3.** திருஞானசம்பந்தர் மாயை உயிர் அறிவுக்கு விளக்கம் செய்யும் என்று வெளிப்படையாக கூறவில்லை. 'ஒண்தளை' என அவர் மாயையைக் குறிப்பிடுவதால் இக்கருத்து உட்குறிப்பாக அமைந் துள்ளது.

## 7.7. பாசநீக்கம் :

உயிர்கள் இறைவனை அடையவொட்டாமல் தடுக்கும் பாசம் உயிர்களிடமிருந்து நீங்குதலே பாச நீக்கம் என்ற சொல்லால் குறிப்பிடப்படுகின்றது.

### 7.7.1. ஆணவமல நீக்கம் :

*"ஊனத் திருணீங் கிடவேண்டில்*
*ஞானப் பொருள்கொண் டடிபேணும்"*(1 : 38 : 3)

என்று உயிர்களுக்குக் குற்றமாக உள்ள அக இருள் (ஆணவம்) நீங்க ஞானப்பொருளாக விளங்கும் பெருமானை மனத்தில் இடையறாது தியானித்து அவனுடைய திருவடிகளைப் போற்ற வேண்டும் என்று திருஞானசம்பந்தர் ஆணவமலம் நீங்கும் முறை பற்றிக் கூறுகின்றார்.

### 7.7.2. வினைநீக்கம் :

வினை இடையறாது சங்கிலித் தொடர்போல் முடிவின்றி வந்துகொண்டே இருந்தால் உயிர்கள் வினைத் தொடர்பிலிருந்து நீங்குவது எப்படி என்பது சிந்தித்தற்குரியது. உயிர்கள் தாம் அனுபவிக்கிற இன்ப துன்பங்கட்குத் தம்மையோ பிறரையோ காரணர்களாக நினைத்தால் அதனால் தாம் என்ற அகந்தையும், பிறர்பால் விருப்பும் வெறுப்பும் உண்டாகி, அந்த உணர்வின் தூண்டு தலால் புதிய வினைகளைச் செய்யும். அவ்வாறின்றித் தாம் அனுபவிக்கின்ற இன்ப துன்பங்கள் வினைப்பயன் என நினைத்து, விருப்பு வெறுப்பின்றி ஏற்றுக் கொண்டால், பிராரத்தம் உயிரைத் தாக்காது உடல் அளவாய்க் கழியும். அத்தகைய மனப்பக்குவம் உயிர்களுக்கு அமைய இறைவன் நம்பிக்கையும், இறைவழிபாடுமே துணை செய்யும்.

திருஞானசம்பந்தரின் திருவாப்பனூர்ப்பதிகம் (1:88) முழுவதும் ஒவ்வொரு பாடலின் இறுதியும் 'வினைப்பற்றறுப்பாரே' என முடிகின்றது. திருநீலகண்டப் பதிகத்தில் (1 : 116) பாடல்கள் "தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்" என முடிவதால் அது வினை நீக்கும் பதிகம் என வழங்கப்படுகின்றது. வினைநீக்கம் பற்றிக் குறிப்பிடும் திருஞானசம்பந்தர் நல்ல பொருத்தமான பொருள்தரும் சொற்களைப் பயன்படுத்துகிறார். திருவாரூர்த் திருப்பதிகத்தில்,

*"உய்ய லுறுவீர்காள், ஐய னாரூரைக்*
*கையி னாற்றொழ, நையும் வினைதானே"* (1 :91 :4)

என்கின்றார். 'வினை தானேநையும்'என்றது தொழுதவனிடம் இருப்புக் கொள்ள இடமின்மையால் வல்வினைகள் மெலிந்துபோம் என்பதாம். வினை உண்டாலன்றிக் கழியாதாகலின் நையும் என்றார்.[83]

*"விண்டு வினைபோமே"* (1 :91 :5)
"வினை, விண்டு போகுமே"(1 :96 :10)
"விள்ளும் வினைதானே"(1 :91 :9)

என்ற தொடர்கள் வினை பயன்தரும் தன்மை நீங்குதலை உணர்த்தும். நெல்வாய் விண்டால் நெல்லிற்கு முளைக்கும் தன்மை கிடையாது. அதுபோல வினை விண்டால் வினைக்கு முளைக்கும் தன்மை அழியும்.[84]

*"தொகுவான் கழலேத்தத் தொடரா வினைதானே"*
(1 :89 :6)

என்று வினைத் தொடர்ச்சி நீங்குதலைத் திருஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார்.

*"சிந்தித் தெழவல்லார் தீரா வினைதீர்க்கும்"*
(1 :85 :3)

என்ற தொடர் இறைவன் திருவருளால் அன்றி வேறொன்றாலும் வினை நீங்காது என்ற குறிப்பை உணர்த்தும்.

*"வினை நில்லாவே"*(2 : 150 :2, 7)
"வினை மாய்ந்தறுமே"(2 :160 :1)
"வினை தேய்ந்தறுமே"(2 :160 :3)
"சுருங்க எம் தொல்வினையே"(3 :259 :1)

என்ற தொடர்கள் வினைநீக்கத்தை வலியுறுத்துகின்றன. இறைவன் உயிர்களின் வினையைத் தீர்க்கும் முறையை,

*"செய்யமேனிவெளி யபொடிப்பூசுவர் சேரும்மடியார்மேல் பையநின்றவினை பாற்றுவர்"*(1 :2 :5)

என்கிறார் திருஞானசம்பந்தர். அடியார்மேல் நின்ற வினையைப் பையப்பாற்றுவார் என்பது இதன் பொருளாகும். (பைய - மெதுவாக) நோயை விரைந்து நீக்கினால் அதனால் விளையும் தீமை பெரிதாகி நோயின் கடுமையும், மருத்துவன் உழைப்பும் அறியப்படாதவாறு போல, வினையை விரைந்து நீக்கினால் விளையும் கேடுகள் பலவாகுமாதலால் பையப்பாற்றுவார் என்கிறார்.[85]

உயிர்கள் வினைப்பயனைத் தப்பாது அனுபவிக்கும் என்பதும், இறைவழிபாட்டால் வினைநீக்கம் பெறும் என்பதும் முரணாகாவா என்பது சிந்தித்தற்குரியது. "கொலையில் கொடியாரை வேந்தன் ஒறுத்தல் அரசியல் பொதுவிதி. ஆயினும் தாம் செய்த குற்றம் உணர்ந்து வருந்தித் திருந்திய உள்ளத்தினருக்கு வேந்தன் ஒறுத்தலாகிய தண்டனையைக் குறைத்தலும், முழுவதும் விலக்களித்தலும் அரசியல் சிறப்பு விதியாகும். பொதுவும் சிறப்புமாகிய இவ்விதிமுறைகள் எல்லா நாடுகளிலும் எல்லாக் காலங்களிலும் உலகியல் நடைமுறைகளில் தொடர்ந்து இருந்து வருதல் காணலாம். அதுபோலவே உலக முதல்வனாகிய இறைவனது அருளாட்சியிலும், உயிர்கள் செய்த வினைகளுக்குரிய பயன்களைச் செய்த உயிர்களே தப்பாமல் நுகர்தற்குரிய பொதுவிதியும், தம் பிழைக்கு இரங்கி மனம் திருந்தித் தன்முனைப்பற்று இறைவனது அருள் வழி நிற்பாரை ஊழ்வினைப்பயன் தாக்காதவாறு ஆதரித்து உய்வித்தலாகிய சிறப்பு விதியும் தொடர்ந்து நிலைபெறுதல் முறையாகும்."[86]

எனவே கடவுளை வழிபடுவதால் முன்னை வினையும், பின்னை வினையும் கழியும்.[87] இம்மை வினையின் தாக்குதல் குறையும். தாங்கும் ஆற்றல் பெருகும் எனலாம். எடுத்த தேகம் உள்ளளவும் பிராரத்த வினை புசித்துத் தொலையும். நடுவே ஆகாமியம் தோன்றினால் சிவஞானம் சுட்டுப் பொசுக்கும் என்று திருவருட்பயனில் கூறப்படுகின்றது.[88]

**7.7.3.** மாயை நீக்கம் :

"ஆன்மாவின் இயற்கைக் குணங்கள் அநாதி தொட்டே ஆணவமலவயமாய் நிற்றலின், அவ்வாணவத்தை அதனின்றும் கழிப்பித்தற் பொருட்டே மாயாதேகமும் மாயாவுலகமும் அதற்கு வந்து வாய்த்தன."[89] எனவே உயிர்களைப் பற்றியுள்ள ஆணவமும், கன்மமும் நீங்கினால் மாயை தானே நீங்கும்.

*"எட்டுக்கொண் டார்தம்மைத் தொட்டுக்கொண்டே*
*நின்றார்*
*விட்டா ருலகமென் றுந்தீபற"*[90]

என்று திருவுந்தியார் செய்யுளில் 'விட்டார் உலகம்' என்றது மாயை நீக்கத்தைக் குறிப்பிடுகிறது எனலாம். மும்மலங்களும் இறைவழிபாட்டால் நீங்குதலை,

*"அவனே தானே ஆகிய அந்நெறி*
*ஏக னாகி இறைபணி நிற்க*
*மலமாயை தன்னொடு வல்வினை யின்றே"*[91]

என்று சிவஞானபோதம் கூறுகின்றது.

திருஞானசம்பந்தர் பாடல்களில் மும்மலநீக்கம் பற்றிய செய்தியில் வினைநீக்கமே அதிகம் கூறப்படுகின்றது.

முடிவுகள் :

1. பாசம், மலம், தளை முதலியன ஒரு பொருள் குறிப்பன. திருஞானசம்பந்தர் தேவாரத்தில் இம்மூன்று சொற்களுமே கையாளப்பட்டுள்ளன.
2. சைவ சித்தாந்தத்தில் பாசம் என்ற சொல் பொதுவாக ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களைக் குறித்தாலும், திருஞானசம்பந்தர் பாடலில் பாசம் என்ற சொல் கன்மத்தைக் குறிக்கும் பொருளில் வந்துள்ளது. பாச உண்மையைக் கூறுவதாகக் கருதப்படுகின்ற சிவஞான-

போத இரண்டாம் சூத்திரத்திலும் இருவினைப் பற்றிய குறிப்பே வெளிப்படையாக உள்ளது.

3. திருஞானசம்பந்தர் பாடலில் வரும் 'விளையாததொர் பரிசில் வரு' என்ற தொடர் திருஞானசம்பந்தருக்கும் பாசம் அநாதி என்பது உடன்பாடு என்பதை உணர்த்தும்.

4. சைவசித்தாந்தத்தில் மலங்கள் மூவகையாகவும், ஐவகையாகவும் கூறப்படும். திருஞானசம்பந்தர் இவ்வாறு தொகைப்படுத்திக் கூறாவிட்டாலும் அவருக்கும் மலம் ஒன்றுக்கு மேற்பட்டது என்பது உடன்பாடு எனப் புலனாகின்றது. மலம் மூவகை என்பதற்கான குறிப்பும் அவர் பாடலில் அமைந்துள்ளது.

5. மலம் என்ற சொல் பொதுவாக மூவகை மலங்களைக் குறித்தாலும் திருஞானசம்பந்தர் பாடலிலும், சைவசித்தாந்த நூல்களிலும் ஆணவத்தைக் குறிக்கும் பொருளிலேயே வந்துள்ளது எனலாம்.

6. ஆணவம் மூலமலம் எனத் திருஞானசம்பந்தர் பாடல்களிலும், சைவசித்தாந்த நூல்களிலும் கூறப்படுகின்றது.

7. திருஞானசம்பந்தரும், சைவசித்தாந்த நூலாசிரியர்களும் ஆணவத்தை இருள் என்ற சொல்லால் குறிப்பிடுகின்றனர்.

8. திருஞானசம்பந்தர் ஆணவத்தை ஊனம் என்ற அடைமொழி சேர்த்துக் கூறுகின்றார். சைவ சித்தாந்த நூல்களும் ஆணவத்தை உயிரின் குற்றமாகக் கூறுகின்றன.

9. திருஞானசம்பந்தர் பாடல்களிலும், சைவசித்தாந்த நூல்களிலும் கூறப்படும் கன்மம் பற்றிய கருத்துக்களை உரையாசிரியர்கள் செயற்படும் முறையால் கன்மம் மூவகைப்படும் என விளக்குவர். ஆனால் கன்மத்தின் மூவித நிலைகளைக் குறிக்கின்ற ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என்ற வடமொழிச் சொற்கள் அவர்களுடைய பாடல்களில் காணப்படவில்லை.

10. கன்மமானது மனம், வாக்கு, காயம் என்ற மூன்றாலும் செய்யப்படும் என்பது சைவசித்தாந்தக் கோட்பாடாகும். இதற்கான குறிப்பு திருஞானசம்பந்தர் பாடலிலும் உள்ளது.

11. திருஞானசம்பந்தர் உயிர்கள் எண்பத்து நான்கு லட்ச யோனிபேதத்துடன் பிறப்பதாகக் கூறுகின்றார்; உயிர்கள் அடையும் இன்ப துன்பங்கள் பற்றியும் கூறுகின்றார். உமாபதிசிவம் உயிர்கள் அடைகின்ற பிறவி வேறுபாடு, வாழ்நாள் வேறுபாடு, நுகர்ச்சி வேறுபாடு ஆகியவற்றுக்கு வினையே காரணம் என விளக்கி, வினைப்பயனானது சாதி, ஆயுள், போகம் என மூன்றாகும் எனக் கூறுகின்றார். அருணந்தி சிவாசாரியார் பேறு, இழிவு, பிணி, மூப்பு, சாக்காடு என்று ஆறினைக் கூறுகிறார்.

12. திருஞானசம்பந்தர் துன்பத்தை இடர், தளர், நோய் என மூவிதச் சொற்களால் குறிப்பிடுகின்றார். சிவப்பிரகாச நூலில் கன்மபலன் வரும் வாயில்கள் ஆதி தெய்வீகம், ஆதி பௌதீகம், ஆதியான்மிகம் என மூன்றாகக் கூறப்படு-கின்றன.

13. உயிர்களுக்கு வினைப்பயனைச் சேர்ப்பிப்பவன் இறைவன் என்ற கருத்து திருஞானசம்பந்தருக்கு உடன்பாடு என்றாலும், அதுபற்றிய குறிப்பு அவர் பாடல்களில் வெளிப்படையாக இல்லாமல் மறைமுகமாக உள்ளது. உயிர்களுக்கு வினைப்பயன் இறைவனால் சேர்ப்பிக்கப் படும் என்பது சைவசித்தாந்தத்தின் முக்கியக் கோட் பாடாகும்.

14. திருஞானசம்பந்தர் இறைவன் உயிர்களுக்கு வினைப்-பயனைச் சேர்ப்பிப்பான் என்ற கருத்தை விட, உயிர்கள் இறைவழிபாட்டால் வினையிலிருந்து விடுதலை பெறும் என்ற கருத்தையே அதிகம் வற்புறுத்திக் கூறுகிறார். அவருடைய காலத்திலுள்ள பௌத்த, சமண ஆதிக்கத்தால் வினைக்கொள்கையில் அதிக நம்பிக்கை கொண்டிருந்த மக்களிடையே கடவுள் நம்பிக்கையை ஊட்டுவதற்காக அவ்வாறு கூறுகிறார் எனலாம்.

15. உயிர்கள் வினைப்பயனைத் தப்பாது அனுபவிக்கும் என்பதும், இறைவழிபாட்டால் வினைநீக்கம் பெறும் என்பதும் முரணாகா என ஆராய்ந்து கூறப்பட்டது.

## குறிப்புக்கள்

1. சி.அருணைவடிவேல் முதலியார், முப்பொருள் இயல்பு, ப.4.
2. மேலது, ப.5.
3. மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகள், சிவஞானபோத விளக்கம், ப.41.
4. சிவஞானபோத உதாரண வெண்பா, 12.
5. மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகள், மு.நூல்., ப.42.
6. சேக்கிழார், திருநாவுக்கரசு நாயனார் புராணம், 129.
7. (i) திருவருட்பயன், 52.
   (ii) திருமந்திரம், 115.
8. க.வெள்ளைவாரணன், பன்னிருதிருமுறை வரலாறு - முதற்பகுதி, ப.674
9. சிவஞானபோத உதாரண வெண்பா, 12.
10. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, சிவஞானபோத மூலமும் சிற்றுரையும் ப.60.
11. மேலது, ப.59.
12. திருமந்திரம், 2192.
13. சிவஞானசித்தியார் சுபக்கம்,176.
14. சிவப்பிரகாசம், 25.
15. சிவஞானசுவாமிகள் உரை, 'சிவஞானசித்தியார் சுபக்கம்', சித்தாந்த சாத்திரம் பதினான்கு மூலமும் உரையும், சமாசம், ப.486.
16. க.வெள்ளைவாரணன், மு.நூல்., பக்.674-675.
17. சிவஞானசித்தியார் சுபக்கம், 230.

18. மேலது, 176.

19. திருவருட்பயன், 12.

20. (i) சிவஞானசித்தியார் சுபக்கம், 176, 177, 178.

    (ii) சிவப்பிரகாசம், 32.

21. சி.அருணைவடிவேல் முதலியார், மு.நூல்., ப.12.

22. (i) திருக்களிற்றுப்படியார், 43.

    (ii) சிவஞானசித்தியார் சுபக்கம், 169.

23. க.வெள்ளைவாரணன், மு.நூல்., ப.674.

24. சிவஞானபோத உதாரண வெண்பா, 12.

25. சிவஞானசித்தியார் சுபக்கம், 178.

26. "If we find the soul's intelligence manifest sometimes and not at other times, if we find it parviscient, these conditions must be due to an external factor; and that factor is anava."

    - V.A. Devasenapathy, Saiva Siddhanta, P.187.

27. ச.கங்காதரன், சைவசித்தாந்த அடிப்படைக் கொள்கைகள், ப.103.

28. "அறியாமை ஆணவம்"

    - *உண்மை விளக்கம், 22.*

29. திருவருட்பயன், 27.

30. சிவப்பிரகாசம், 35.

31. "மலத்தால்
    உன்னரிய திருவருளை ஒழியமலம் உளதென்(று)
    உணர்வரிது"

    - *சிவப்பிரகாசம், 36.*

32. சி.அருணைவடிவேல் முதலியார், மு.நூல்., ப.9.

33. சி.அருணைவடிவேல் முதலியார், சித்தாந்த வினா விடை, ப.57.

34. ச.தண்டபாணி தேசிகர் குறிப்புரை, முதல் திருமுறை, ப. 251.
35. சிவப்பிரகாசம், 32.
36. மேலது, 20.
37. திருவருட்பயன், 52.
38. சிவப்பிரகாசம், 37.
39. போற்றிப்பஃறொடை கண்ணி 10.
40. ச.தண்டபாணிதேசிகர் குறிப்புரை, மு.நூல்.,ப.179
41. திருவருட்பயன், 27.
42. மறைமலையடிகள், சிவஞானபோத ஆராய்ச்சி, ப.30.
43. (i) மேலது ப.25.
    (ii) ஆகந்துகம் - இடையில் வந்தது.
    *- சி.அருணைவடிவேல் முதலியார், சித்தாந்த வினாவிடை, ப.57.*
44. மறைமலையடிகள் மு.நூல்., ப.25.
45. சிவப்பிரகாசம், 19.
46. சிவஞானசுத்தியார் சுபக்கம், 99.
47. (i) மேலது.
    (ii) சிவஞானயோகிகள், சிவஞானபோதமும் சிவஞான பாடியமும், பக்.131-132.
48. சி.அருணைவடிவேல் முதலியார், மு.நூல்., ப.58.
49. மேலது , ப.254.
50. ச.தண்டபாணிதேசிகர் குறிப்புரை, மு.நூல்.,ப.136.
51. மேலது, ப. 492.
52. மேலது, ப.235.
53. அ.கந்தசாமிப்பிள்ளை குறிப்புரை, மூன்றாவது திருமுறை, ப.30.

54. மேலது, ப.51.

55. சிவப்பிரகாசம், 48.

56. சிவப்பிரகர்சர் உரை, 'சிவப்பிரகாசம்' சித்தாந்த சாத்திரம் பதினான்கு மூலமும் உரையும், சமாசம், ப.879.

57. (i) திருவருட்பயன், 98.

(ii) சிந்தனையுரை, 'திருவருட்பயன்' சித்தாந்த சாத்திரம் பதினான்கு மூலமும் உரையும், சமாசம், ப.1075.

58. அ.முத்துவடிவேல் முதலியார் (ப.ஆ.), "சித்தாந்தக் கட்டளை" 32-கட்டளைகள் சேர்ந்த கட்டளைத் திரட்டு, ப.50.

59. சிவஞானசித்தியார் சுபக்கம், 103.

60. சிவப்பிரகாசம், 28.

61. இருபாஇருபஃது, 14.

62. சி.அருணைவடிவேல் முதலியார், மு.நூல்., பக்.254-255.

63. சிவப்பிரகாசம், 29.

63அ. சிவஞானசித்தியார் சுபக்கம், 99.

64. சிவஞானயோகிகள், சிவஞானபோதமும் சிவஞான பாடியமும், ப.132.

65. கி.வா.ஜகந்நாதன், சிற்றம்பலம், ப.13.

66. சிவப்பிரகாசம், 29.

67. கி.லஷ்மணன், இந்திய தத்துவஞானம், பக்.109, 136.

68. வெள்ளைவாரணம், "தேவார ஆசிரியர்கள் மேற்கொண் டொழுகிய சமயக் கொள்கை" கரந்தைத் தமிழ்ச்சங்க வெள்ளிவிழா வெளியீடு, ப.3036.

69. சிவஞானசித்தியார் சுபக்கம், 120.

70. மேலது, 94.

71. முத்துராமன், சைவசித்தாந்தம், பக்.46-47.

72. கி.லஷ்மணன், இந்திய தத்துவஞானம், ப.402.

73. ச.தண்டபாணி தேசிகர் குறிப்புரை, மு.நூல்.,,பக்.115-116.

74. யாழ் ஏ.ஆறுமுகனார் (தொ.ஆ.) தேவாரத் திரட்டு, ப.55.

75. சிவஞானசித்தியார் சுபக்கம், 143.

76. ச.கங்காதரன், மு.நூல்., ப.134.

77. சிவஞானசித்தியார் சுபக்கம், 143.

78. சிவஞானயோகிகள், மு.நூல்., ப.136.

79. க.வெள்ளைவாரணன், மு.நூல்., பக்.675 -676.

80. சிவஞானசித்தியார் சுபக்கம், 171.

81. திருவருட்பயன், 30.

82. போற்றிப்பஃறொடை, கண்ணி 11.

82அ. சிவஞானபோத உதாரண வெண்பா, 27.

82ஆ. சிவஞானசித்தியார் சுபக்கம், 143.

83. ச.தண்டபாணி தேசிகர் குறிப்புரை, மு.நூல்.,,ப.405.

84. மேலது, ப.419

85. மேலது,ப.14.

86. ப.வெள்ளைவாரணன், 'வினாவிடை', குமரகுருபரன், தொகுதி 2, பகுதி 11, நாள் : 17-8-80,,ப.36.

87. திருமந்திரம், 2611.

88. திருவருட்பயன், 98.

89. மறைமலையடிகள், மு.நூல்., ப.51.

90. திருவுந்தியார்,24.

91. சிவஞானபோதம், சூத்., 10.

# 8. சாதனமும் பயனும்

# 8. சாதனமும்பயனும்

## 8.0. முன்னுரை :

உயிர்கள் தம்மைக் கட்டியுள்ள பாசத்திலிருந்து நீங்கி, பதியினைச் சென்றடைதலையே குறிக்கோளாகக் கொண்டிருத்தல் வேண்டும். "உயிர்கள் இறைவன் திருவருளை இருமுறைகளில் அடையலாம். ஒன்று தன்திறத்தால் சென்று அடைவது. மற்றொன்று அவன் கொடுக்க நாம் பெறுவது. உயிர்கள் இயற்கைக் குறைபாடு கொண்டவைகள்; ஆகையால் பயிற்சித் திறத்தால் சென்றடைய உரிமை உடையனவேயொழிய, கொடுக்க ஏற்றுக் கொள்ளும் தகுதி பெற்றவை அல்ல. திறத்தால் சென்றடைதல் அறப்பயிற்சி முறை. அவனே கொடுக்க ஏற்றுக் கொள்ளுதல் அருள்முறை."[1] அருள்முறை முற்செய் தவத்தாலேயே நிகழும். அறப்பயிற்சி முறை எல்லா உயிர்களும் முயற்சி செய்து இறைவனைச் சென்றடைதற்குரிய சாதனம் எனப்படும். அச்சாதனம் பற்றியும், பயன் பற்றியும் திருஞான சம்பந்தர் கூறும் கருத்துக்களும், சாத்திர நூல்கள் கூறும் கருத்துக்களும் இவ்வியலில் ஆய்வு செய்யப்படுகின்றன. மேலும் அச்சாதன நெறியில் நின்று வீடுபேறு அடைதற்குரிய பக்குவநிலையில் உள்ள சீவன்முத்தர்களின் இயல்புகளும் இவ்வியலில் கூறப்படு கின்றன

## 8.1. சாதனங்கள் :

சைவ சமயத்தில் உயிர்கள் முயற்சியால் இறைவன் திருவருளை அடையும் வழிகள் சாதனங்கள் எனப்படும். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்காகும்.[2] உயிர்கள் இச்சாதன நெறிகளில் நிற்பதால் அவை அடையும் நன்மைகள் பயன் எனப்படும்.

திருஞானசம்பந்தர் சாதனங்களை நால்வகையாகப் பாகுபடுத்திக் கூறாவிட்டாலும், சிவஞானசித்தியாரில் கூறப்படும் மேற்காட்டிய நால்வகைப் பாகுபாட்டிற்கான அடிப்படைக் கருத்துக்கள் திருஞானசம்பந்தர் பாடல்களில் காணப்படுகின்றன.

## 8.1.1. சரியை :

இறைவனின் உருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் புறவழிபாடு சரியை எனப்படும்.[3] புறத்திலுள்ள ஒரு வடிவத்தை இறைவனின் வடிவமாக எண்ணி வழிபாடு செய்தலால் புறவழிபாடு எனப்படுகிறது எனலாம். மேலும் வழிபாட்டிற்குத் தேவையான வைகளை உடலளவில் புறத்தே செய்வதால் புறவழிபாடு எனப்படு கிறது என்றும் கூறலாம். இஃது இறைவனை ஓர் உருவத்தில் வழிபடு வதால் உருவ வழிபாடு என்றும் கூறலாம். இது தாசமார்க்கம் என்றும் கூறப்படும்.[4]

## 8.1.1.1.

"கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றதும் "

(1 : 116 : 1) என்ற தொடரில் திருஞானசம்பந்தர் 'கைவினை' என்ற சொல்லால் இறைவனுக்குச் செய்யும் புறத்தொழிலைக் குறிப்பிடு-கின்றார்.

*"காவினை யிட்டுங் குளம்பல தொட்டுங் கனிமனத்தால்*
*ஏவினை யாலெயின் மூன்றெரித் தீரென் றிருபொழுதும்*
*பூவினைக் கொய்து மலரடி போற்றுது நாமடியோம்"* (1 : 116 : 2)

என்று திருஞானசம்பந்தர் இறை வழிபாட்டிற்காகச் சோலைகள் அமைத்தலையும், குளம் தோண்டுவதையும், பூவெடுத்துக் கட்டி அணிவித்து இறைவனுடைய மலர் போன்ற திருவடிகளைப் போற்று தலையும் குறிப்பிடுகின்றார்.

*"மைய லின்றிமலர் கொய்துவ ணங்கிட"*(3 : 304 : 5)

என்று திருஞானசம்பந்தர் இறைவனை வணங்க மலர் கொய்யும் செயலைக் குறிப்பிடுகின்றார்.

*"அலகினால் வீசிநீர்கொண்டடிமேலல ரிட்டுமுட்டா*
*துலகினா ரேத்தநின்றா னுறையும்மிட மொற்றியூரே"* (3 : 315 : 5)

என்ற தொடரால் திருக்கோயிலை அலகிடுதல், நீர் கொண்டு கழுவுதல் போன்ற தொண்டுகளை அவர் குறிப்பிடுகின்றார்.

*“துண்ணென விரும்புசரி யைத்தொழிலர்*
*தோணிபுரமாமே”*(3 : 339 : 7)

என்ற திருஞானசம்பந்தரின் பாடல் தொடரில் சரியைத் தொழில் செய்பவர் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது.

**8.1.1.2.** திருஞானசம்பந்தர் கூறும் இக்கருத்துக்களை அடியொற்றி அருணந்தி சிவாசாரியார் சிவஞானசித்தியாரில் சரியைக்குரிய இலக்கணமாகத் திருக்கோயிலைத் திருஅலகிடுதல், திருமெழுக்கிடுதல், பூக்கொய்து தொடுத்தல், திருவிளக்கிடுதல், நந்தவனம் வைத்தல் முதலியவற்றைக் கூறுகின்றார்.[5]

**8.1.1.3.** ஆசான்மூர்த்தியும் அடியார்களும் கூட இறைவனின் உருவத்திருமேனிகளே. அவர்களை வழிபடுவதும் சரியைத் தொண்டுகளே. பழங்கோயில்களைப் புதுப்பித்தல், நித்திய நைமித்திக வழிபாடுகளைச் செய்வித்தல், அவற்றிற்கு வேண்டப்படும் குடம், கலசம், தூபம், தீபம் ஆகியவற்றை ஆக்கித் தருதல், சிவபுராணங்களையும், அடியவரது வரலாறுகளையும் கேட்டல், தீர்த்த யாத்திரை, தல யாத்திரை செய்தல் முதலியனவும் சரியைத் தொண்டுகளே.[6]

## *8.1.2.* கிரியை :

இறைவனின் அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யப்படும் புறவழிபாடும், அகவழிபாடும் கிரியை எனப்படும்.[7] சரியையாளரின் அறிவின் பக்குவ நிலை வளர, அவர்கள் புறத்தில் திருவுருக் கொண்டுள்ள இறைவன் உயிர்களின் உள்ளத்திலும் எழுந்தருளியுள்ளான் என்ற எண்ணம் ஏற்பட்டு அவனை அகத்திலும் புறத்திலும் வழிபடுகிறார்கள். எனவே இவ்வழிபாடு அகப்புற வழிபாடு எனப் பெயர் பெறும். இது மனம் ஈடுபட்டுச் செய்யும் வழிபாடாகும். இது

அருவுருவ வழிபாடு என்றும் பெயர்பெறும். வேள்வித்தீயில் இறைவனை வழிபடுவதும் கிரியையே ஆகும் என்பர்.[8] கிரியை நெறியைச் சத்புத்திரமார்க்கம் என்பர்.[9]

**8.1.2.1.**

*"வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்*
*போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே"*
(2 : 179 : 5)

என்ற பாடல் தொடரால் திருஞானசம்பந்தர் சிவலிங்கத் திருவுருமாகிய அருவுருவ வழிபாட்டினைக் குறிப்பிடுகின்றார்.

*"நித்த லுந்நிய மஞ்செய்து நீர்வலந் தூவிச்*
*சித்த மொன்றவல் லார்க்கரு ளுஞ்சிவன்"* (2 : 174 : 1)

என்ற தொடரில் 'நியமம்' என்றதனால் தின நியமமாகக் கொண்டொழுகும் வழிபாடுகளையும், 'நீர் வலந்தூவி' என்றதனால் புறப்பூசையையும், 'சித்தம் ஒன்ற வல்லார்' என்றதனால் அகப்பூசையையும் குறிப்பிடுகின்றார்.

*"........... அத்த னாரூரைப்*
*பத்தி மலர்தூவ முத்தி யாகுமே"*(1 : 91 : 1)

என்ற தொடரில் பக்தியையே மலராகத் தூவி வழிபடுதலைத் திருஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார்.

*"புந்தியினான் மறைவழியே புற்பரப்பி*
*நெய்சமிதை கையில் கொண்டு*
*வெந்தழலின் வேட்டுலகின் மிகவளிப்போர்"*
(1 : 132 : 9)

என்று திருஞானசம்பந்தர் வேள்வித்தீ வளர்த்துச் செய்யும் வழிபாட்டினையும் குறிப்பிடுகின்றார்.

*"நறைமலிதருமள றொடுமுகைநகுமலர்*
*புகைமிகுவளரொளி*
*நிறைபுனல்கொடுதனை நினைவொடு நியதமும்*
*வழிபடுமடியவர்"*(1 : 21 : 4)

என்ற திருஞானசம்பந்தர் பாடலில் முகை, மலர், புகை, ஒளி, புனல் இவற்றால் செய்யப்படும் புறவழிபாடு கூறப்படுகின்றது; 'நினைவொடு' என்றதனால் அகவழிபாடும் குறிப்பிடப் படுகின்றது.

**8.1.2.2.** திருஞானசம்பந்தரின் மேற்கூறிய கருத்துக்கள் அனைத்தையும் அடியொற்றியதாக "வழிபாட்டிற்கு வேண்டிய திருமஞ்சனப்பொருள்கள், பூக்கள், பச்சிலைகள், நறும்புகைப் பொருள்கள், திருவிளக்கு, அமுது முதலியவற்றைத் திரட்டிக் கொண்டு, பூதசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தி என்னும் ஐந்து சுத்திகளைச் செய்து இறைவனுடைய அருவுருவத் திருமேனியைப் பக்தியால் வழிபடுதல் கிரியை" எனச் சிவஞான சித்தியாரில் கூறப்படுகின்றது.[10]

**8.1.3.** யோகம் :

இறைவனின் அருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் அகவழிபாடு யோகம் எனப்படும்.[11] அகவழிபாடானது மனத்தளவில் மட்டும் செய்யப்படுவது. யோகநெறி சகமார்க்கம் என்றும் கூறப்படும்.[12]

**8.1.3.1.** யோகத்தில் எட்டுப் படிநிலைகள் உண்டு. அவை இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன.[13] இதனால் அ்து அட்டாங்கயோகம் எனப்படும். இந்த அட்டாங்கயோகம் பற்றித் திருஞானசம்பந்தர் காலத்திற்கு முற்பட்ட திருமூலர் தம் திருமந்திரத்தில் கூறியுள்ளார்.[14] திருஞானசம்பந்தர் இவ்வாறு யோகத்தை எட்டுப் படிநிலைகளில் விளக்கிக் கூறவில்லை. அதிலுள்ள கருத்துக்களில் சில மட்டுமே இவரது பாடல்களில்

காணப்படுகின்றன. சிவஞானசித்தியாரில் அட்டாங்கயோகம் என்ற சொல் குறிப்பிடப்படுகின்றது.[15]

**8.1.3.2.** திருஞானசம்பந்தர்,

*"சினமலியறுபகை மிகுபொறிசிதைதரு*
*வகைவளிநிறுவிய*
*மனனுணர்வொடுமலர் மிசையெழுதருபொரு*
*ணியதமுமுணர்பவர்"*(1 : 21 : 5)

*"பத்திப்பேர் வித்திட்டே பரந்தவைம் புலன்கள்வாய்ப்*
*பாலே போகா மேகாவாப் பகையறும் வகைநினையா*
*முத்திக்கே விக்கத்தே முடிக்குமுக் குணங்கள்வாய்*
*மூடாவூடா நாலந்தக் கரணமு மொருநெறியாய்ச்*
*சித்திக்கே யுய்த்திட்டுத் திகழ்ந்தமெய்ப் பரம்பொருள்*
*சேர்வார்"*(1 : 126 : 7)

என்ற பாடல்களில் ஐம்புலன்ஒடுக்கத்துடன் பிராணாயாமம் செய்யும் யோக வழிபாட்டினைக் குறிக்கின்றார் . எனலாம். 'வளி நிறுவிய', 'நாலந்தக்கரணமும் ஒரு நெறி' என்ற சொற்றொடர்கள் பிராணா யாமத்தைக் குறிக்கும் எனலாம்.

திருஞானசம்பந்தர் திருஎழுகூற்றிருக்கையில்,

*"இருவளி யொடுங்கிய வானோர்*
*ஏத்த நின்றனை"*(1 : 128 : அடி 18-19)

என்று கூறும் தொடருக்குப் பிராணன், அபானன் என்கின்ற இரண்டு வாயுவையும் மூலதாரத்திலே ஒடுக்கிக் கொண்டு ஏகாக்ர சித்தரா யிருந்துள்ள தேவர்கள் ஏத்த நின்றனை எனப்பொருள் கூறுவர்.[16]

**8.1.3.3.** யோகவழிபாடு பற்றிய விளக்கம் சிவஞானசித்தியாரில் கூறப்படுகின்றது.[17]

**8.1.3.4.** திருஞானசம்பந்தருக்கு யோகமார்க்கம் கூறும் பிராணாயாமம் பற்றித் தெரிந்துள்ளது.[18] ஆனால் அதுபற்றி அவர் அதிகம் விளக்காததன்காரணம் சிந்தித்திற்குரியது. துறவறத்தை வலியுறுத்தும் பௌத்த, சமண ஆதிக்கம் மிக்க தம் காலத்தில், மக்களைத் தம் பக்கம் கவர, இல்லறத்திலிருந்து கடைப்பிடிக்கக் கூடிய எளிமையான வழிபாட்டு முறைகளையே அவர் அதிகம் கூறுகிறார் எனலாம்.

### 8.1.4. ஞானம் :

"புறத்தொழில் அகத்தொழில் இரண்டுமின்றி அறிவுத்தொழில் மாத்திரையான அம்மூன்று திருமேனிக்கும் மேலாய் அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப் பிழம்பாய் நிறைந்து நிற்கின்ற சிவபிரானிடத்திற் செய்யும் வழிபாடு ஞானமெனப்படும்"[19] என்பர். "உருவம், அருவுருவம், அருவம்' என்னும் மூன்றையும் கடந்து அறிவே வடிவாய் விளங்கும் இறைவனது உண்மை இயல்பை அறிந்து அன்பு செய்யும் அறிவு வழிபாடே ஞானம்"[20] என்பர். இந்நெறி சன்மார்க்கம் என்றும் கூறப்படும்.[21]

**8.1.4.1.** திருஞானசம்பந்தர்,

*"ஞான விளக்கினை யேற்றி நன்புலத்*
*தேனை வழிதிறந் தேத்து வார்"*(3 : 280 : 3)

*"........... உயர் பாதமே*
*ஞான மாகநின் றேத்தவல் லார்வினை நாசமே"*
(2 : 146 : 5)

என்ற தொடர்களால் ஞான வழிபாட்டினைக் குறிப்பிடுகின்றார்.

*"நுண்ணறி வால்வழி பாடுசெய்யுங் காலுடை யான்"*
(1 : 5 : 4)

என்ற தொடரில் திருஞானசம்பந்தர் அறிவு வழிபாட்டினைக் குறிப்பிடுவதால் இதுவும் ஞானநெறியை உணர்த்துகின்றது எனலாம்.

**8.1.4.2.** ஞானநெறி பற்றி அருணந்தி சிவாசாரியார் விளக்கிக் கூறுகிறார். புராணங்கள், வேதங்கள், சாத்திரங்கள், சமயங்கள் கூறும் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் பற்றிய கருத்துக்களைக் கேட்டு, தெளிந்து, சிந்தித்து நிட்டைகூடலே ஞானம் என்கின்றார் அவர்.[22]

**8.1.4.3.** திருஞானசம்பந்தர் ஞானம் பற்றிக் குறிப்பிடுகிறாரே தவிர அதனை விளக்கிக் கூறவில்லை. அருணந்தி சிவாசாரியார் குறிப்பிடும் நால்வகை நெறிகளும் திருஞானசம்பந்தருக்கு உடன்பாடு என்றாலும், சரியை, கிரியை வழிபாடுகளே அவருடைய பாடல்களில் அதிகம் காணப்படுகின்றன எனலாம்.

**8.1.4.4** பின்வரும் அட்டவணை நால்வகை நெறிகளையும், அவைகளைக் கூறும் திருஞானசம்பந்தரின் சில பதிக எண், பாடல் எண் ஆகியவற்றையும்/ சிவஞானசித்தியாரின் பாடல் எண்ணையும் காட்டும்.

| | நெறிகள் | திருஞானசம்பந்தரின் பதிக எண் பாடல் எண் | சிவஞானசித்தியார் பாடல் எண் |
|---|---|---|---|
| 1. | சரியை | 3 : 295 : 4, 3 : 339 : 7 | சுபக்கம், 271 |
| 2. | கிரியை | 1:.21 : 4, 2 : 174 : 1, 2 : 179 : 5 | சுபக்கம், 272 |
| 3. | யோகம் | 1 : 21 : 5, 1 : 126 : 7 | சுபக்கம், 273 |
| 4. | ஞானம் | 1 : 21 : 6, 1 : 5 : 4 | சுபக்கம், 274 |

**8.1.5.** இந்நால்வகை நெறிகளையும், கடைப்பிடித்து ஒழுகுவோர் முறையே சாலோகம், சாமீபம், சாரூபம் ஆகிய பத முத்திகளையும், சாயுச்சியமாகிய பர முத்தியையும் அடைவர் என நூல்கள் கூறும்.[23] சாலோகம் என்பது இறைவன் உலகினை அடைதல்; சாமீபம் என்பது இறைவன் அருகு இருத்தல்; சாரூபம் என்பது இறைவன் உருவினைப்

பெறுதல்; சாயுச்சியம் என்பது இறைவனை அடைந்து அவனோடு இரண்டறக் கலத்தல் என்பர்.[24]

**8.1.6.** அருணந்தி சிவாசாரியார் கூறும் இக்கருத்து திருஞானசம்பந்தருக்கும் உடன்பாடாகும் என்று கருதுமாறு அவருடைய பாடல்களில் சொற்றொடர்கள் சில வெளிப்படையாகவும், சில குறிப்பாகவும் அமைந்துள்ளன.

*"கொன்றையான்றொழி லேபரவிநின் றேத்தினால்*
*இடையிலார்சிவ லோகமெய்துதற் கீதுகாரணங்*
*காண்மினே"*(3 : 295 : 4)

என்ற திருஞானசம்பந்தர் பாடலில் கொன்றை மாலை அணிந்த இறைவனுக்குத் தொண்டு செய்து பரவி ஏத்துதல் 'சிவலோகம்' அடைதற்குக் காரணமாகக் கூறப்படுகின்றது. திருஞானசம்பந்தரின் இக்கருத்திற்கு ஒப்பாக,

*"இச் சரியைசெய்வோர் ஈசனுல கிருப்பர்"*[25]

என்று அருணந்தி சிவாசாரியார் கூறுகிறார்.

சாலோகமானது சரியைத் தொண்டின் பலனாகக் கூறப்படுவதால், மேற்கூறிய திருஞானசம்பந்தரின் பாடலில் (3:295:4) 'கொன்றையான் தொழில்' என்பது சரியையினைக் குறிப்பதாகக் கூறுவர்.[26]

**8.1.7.** திருஞானசம்பந்தரின் 'நறைமலிதரு' எனத் தொடங்கும் பாடலில் (1 : 21 : 4) வரும் 'குறைவிலபதமணை தர அருள் குணமுடை இறை' என்ற தொடர் சாமீபபதவியைக் குறிப்பதாகக் கூறுவர்.[27]

அருணந்தி சிவாசாரியாரும்,

*"இக் கிரியையினை இயற்று வோர்கள்*
*நின்மலன்தன் அருகிருப்பர் நினையுங் காலே"*[28]

என்கின்றார்.

**8.1.8.** திருஞானசம்பந்தர் பாடலில் வரும் 'தனது எழில் உருவது கொடு பரன்'(1 : 21 : 5) என்ற தொடரும், 'சேர்வார்தாமே தானாகச் செயுமவன்' .(1 : 126 : 7) என்ற தொடரும் சைவசித்தாந்தத்தில் குறிப்பிடப்படும் சாரூப பதமுத்தியைக் குறிக்கின்றது எனலாம்.

அருணந்தி சிவாசாரியாரும்,

*".......... யோக முற்றும்*
*உழத்தல்உழந் தவர்சிவன்தன் உருவத்தைப் பெறுவர்"*[29]

என்று யோக வழிபாட்டின் பயனைக் கூறுகின்றார்.

**8.1.9.** "சுருதிகள் பலநல" (1 : 21 : 6) எனத் தொடங்கும் பாடலில் ஞானிகள் வழிபாடு குறிக்கப்பட்டது என்றும், எனவே அப்பாடலில் வரும் "தனது அடி அடைவகை நினையான்" என்ற தொடர் ஞானிகள் அடையும் சிவசாயுச்சிய பதவியைக் குறிக்கின்றது என்றும் கூறுவர்.[30] சிவசாயுச்சியம் என்பது சிவனோடு இரண்டறக் கலத்தலாகும். அது சித்தாந்தத்தில் பரமுக்தி எனப்படும். இச் சித்தாந்த முக்தியை, "சிவனடியைச் சேருமுத்தி"[31] என்று அருணந்தி சிவாசாரியார் குறிப்பிடுகின்றார். எனவே திருஞானசம்பந்தரின் மேற்கூறிய தொடர் சிவசாயுச்சியம் எனப்படும் பரமுக்தியைக் குறிக்கும் எனலாம்.

*"........ஞானப்*
*பெருமையுடை யோர்சிவனைப் பெறுவர் தானே'*[32]

என்று ஞானத்தின் பயன் அருணந்தி சிவாசாரியாரால் கூறப்படு கின்றது.

**8.1.10.**

*"அடிஞா னம்வல்லா ரடிசேர் வார்களே"*(1 : 87 : 11)

என்ற தொடரால் திருஞானசம்பந்தர் இறைவனடியைச் சேர்ப்பிப்பது ஞானம் என்பதனை உணர்த்துகின்றார். இதனையே.

"............மேலான ஞானத்தால் அரனை
அருச்சிப்பர் வீடெய்த அறிந்தோ ரெல்லாம்"[33]

என்று அருணந்தி சிவாசாரியாரும், முக்தியை அடைவதற்கு நேர்வாயில் ஞானம் ஒன்றே, சாயை, கிரியை, யோகம் மூன்றும் ஞானத்தை அடைதற்குரிய வழிகள் ஆகும்[34] என்று உமாபதிசிவமும் கூறுகின்றனர்.சைவ நூல்களில் வழிபாடானது இவ்வாறு உருவ வழிபாடு, அருவுருவ வழிபாடு, அருவ வழிபாடு, அறிவு வழிபாடு எனப் பாகுபடுத்தப்பட்டு விளக்கப்படுவதற்கு உயிர்களின் அறிவின் பக்குவநிலைகளில் வேறுபாடு காணப்படுவதால் எனலாம். உயிர்கள் ஆரம்பநிலையில் உருவ வழிபாட்டினை மேற்கொண்டு படிப்படியாக அறிவு வழிபாட்டினைச் செய்யும் எனக் கருதலாம். எனவே பிற்காலத்தில் வந்த தாயுமானவர் இந்நெறிகளை அரும்பு, மலர், காய், கனிக்கு ஒப்பிட[35] ஏதுவாயிற்று எனலாம்.

***8.1.11.*** "சாத்திரங்கள், படிப்படியாக வளர்ச்சியடைந்து ஆன்மாக்கள் முக்தி அடைவதை இவ்வாறு விளக்கினாலும், கருவிலே திருவுடையராகத் தோன்றிய ஞானிகள் சிலர், சிவபுண்ணிய மிகுதியால் நேராகவே இறையருள் பெற்றுய்ந்துள்ளார்கள். உய்ய முடியும் என்பதும் சாத்திரத்திற்குடன்பாடே."[36] பக்குவ ஆன்மாக்களுக்கு இறைவன் ஒரு பிறவியிலேயே முக்தியளிப்பான் எனச் சிவஞானசித்தியாரில் கூறப்பட்டுள்ளது.[37]

## 8.2. திரிகரண வழிபாடு :

திருஞானசம்பந்தர் பாடல்கள் மூலம் வழிபாடுகள் பற்றிப் பொதுவான செய்திகள் பல தெரியவருகின்றன. அவற்றுள் திரிகரண வழிபாடு என்பது மனம், வாக்கு,காயம் என்ற மூன்றுகாரணங்களால் செய்யப்படும் வழிபாடாகும்.

### 8.2.1. நினைப்பு வழிபாடு :

*"மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்"*(3 : 262 : 3)
"உள்ளமே கோயிலா உள்ளும்என் உள்ளமே" (3 :284 :6)

என்று திருஞானசம்பந்தர் மனத்தால் செய்யப்படும் வழிபாட்டினைக் குறிப்பிடுகின்றார்.

### 8.2.2. வாக்கு வழிபாடு :

*"துன்னுமிமையோர்க டுதிசெய்துமுன் வணங்கும்"*
(2 : 136 : 1)
"தொழிலான் மிகுதொண் டர்கடோத் திரஞ்சொல்ல"
(1 : 30 : 8)

முதலிய தொடர்களால் திருஞானசம்பந்தர் வாக்கால்செய்யும் வழிபாட்டினைக் குறிப்பிடுகின்றார்.

### 8.2.3. மெய் (காய) வழிபாடு :

திருஞானசம்பந்தர்,

*"......ஆமாத்தூ ரம்மானைக்*
*காணாத கண்ணெல்லாங் காணாத கண்களே"*
(2 : 180 : 4)

*"..........ஆமாத்தூ ரம்மானைக்*
*கேளாச் செவியெல்லாங் கேளாச் சேவிகளே"*
(2 : 180 : 8)

*".........சாய்க்காட்டெம் பெருமாற்கே*
*பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப*
*நாநாளு நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே"*
(2 : 177 : 3)

"கட்டலர்த்த மலர்தூ விக்கைதொழுமின்" (2 : 177 : 4)

என்று கண், செவி, தலை, கை ஆகியவற்றை இறைவனை வழிபடுமாறு சொல்வது மெய்யால் செய்யும் வழிபாட்டினை உணர்த்தும்.

**8.2.4.** திருஞானசம்பந்தரின் இக்கருத்துக்கள் அருணந்தி சிவாசாரியார்,

*"மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காயம்*
*ஆனிடத் தைந்து மாடும் அரன்பணிக் காக வன்றோ"*[38]

என்று கூறுவதற்கு அடிப்படையாய் அமைகின்றன. எனலாம்.

## 8.3. அடியார் வழிபாடு :

**8.3.1.** அடியவர்கள் திருவேடம் சிவவேடத்தை எதிரொலிப்பது. எனவே அடியவர் வேடத்தில் சிவசொரூபத்தைக் கண்டு வழிபடு வதையே அடியார் வழிபாடாகக் கூறுவர்.

**8.3.2.** அடியவர்கள் சிவசொரூபமானவர்கள் என்பதைத் திருஞானசம்பந்தரும் கூறுகிறார் (3:267:4). இப்பாடலில் திருஞானசம்பந்தர் அடியார் வேட அடையாளமாகக் கண்டிகையையும் (உருத்திராக்கம்), குண்டலத்தையும் கூறுகின்றார். மற்றும் சில இடங்களில்,

*"வெந்தவெண் ணீறணி வார்"* (1 :4 :5)
"......பூசுவெண்பொடி மேவிய
மிக்கவர்வழி பாடுசெய் விளநகர்"(2 : 214 :2)
"துன்னவாடையொன் றுடுத்துத் தூயவெண் ணீற்றின
ராகி
உன்னி நைபவர்"(2 :226 :4)

*"......அடியார்*
*வேடமொளி யானபொடி பூசியிசை*
*மேவுதிரு வேதிகுடியே"*(3 : 336 : 4)

என்று திருநீறு அணிதலை அடியார் வேடமாக அவர் குறிப்பிடுகின்றார்.

இறைவழிபாட்டைப் போலவே அடியார் வழிபாட்டையும் திருஞான சம்பந்தர் கூறுகின்றார். அடியவர்களைப் பேணி வழிபடல் வேண்டும் என்ற கருத்தை,

*"தொண்டர் தொண்டரைத் தொழுதடி பணிமின்க*
*டுநெறி யெளிதாமே"*(2 : 240 : 10)

என்கின்றார்.

அடியார் வழிபாட்டினைக் குலச்சிறையார் செயலில் வைத்து,

*"கணங்களாய் வரினுந் தமியராய் வரினு*
*மடியவர் தங்களைக் கண்டால்*
*குணங்கொடு பணியுங் குலச்சிறை"*(3 : 378 : 4)
*"நாவணங் கியல்பா மஞ்செழுத் தோதி*
*நல்லவராய் நல்வியல் பாகும்*
*கோவணம் பூசி சாதனங் கண்டாற்*
*றொழுதெழு குலச்சிறை"*(3 : 378 : 8)

என்று கூறுகின்றார் திருஞானசம்பந்தர்.

அடியார்களுக்கு அமுது படைத்துத் தொண்டு செய்தலைத்திருமயிலாப்பூர்ப் பதிகத்தில்,

*"........உருத்திர பல்கணத்தார்க்*
*கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்"*
(2 : 183 : 1)

என்று திருஞானசம்பந்தர் கூறுகின்றார்.

அடியவரோடு உறவு கொள்வதால் நம்வினை நீங்குகின்றன என்பதைத் திருஞானசம்பந்தர்,

*"விளங்குநான்மறை வல்லவேதியர்*
*மல்குசீர்வளர் மிழலையானடி*
*உளங்கொள்வார்தமை யுளங்கொள்வார்வினை*
*யொல்லை யாசறுமே"*(3 : 369 : 2)

"விண்டொழிந்தன நம்முடைவல்வினை
............ தொண்டரோ டினிதிருந்தமையாலே" (2 : 242 : 2)

என்கின்றார்.

எப்பொழுதும் அடியவர்களுடைய தொடர்பு வேண்டும் என்பதை,

*"வலஞ்சுழி மன்னியவர்*
*தொண்டொடு கூடித் துதைந்துநின்ற*
*தொடர்பைத் தொடர்வோமே"*(3 : 364 : 6)

என்று திருஞானசம்பந்தர் கூறுகின்றார்.

**8.3.3.** இவ்வாறு திருஞானசம்பந்தர் அடியார் வேடம், வழிபாடு, தொடர்பு, பயன் ஆகியன பற்றிக் கூறும் செய்திகள் சிவஞானபோதத்தில்,

*"அன்பரொடு மரீஇ*
*மாலற நேயமும் மலிந்தவர் வேடமும்*
*ஆலயந் தானும் அரனெனத் தொழுமே"*[39]

என்று கூற அடிப்படையாகின்றது எனலாம். அருணந்தி சிவா சாரியாரும்,

*"அங்கவர்தந் திருவேடம் ஆலயங்க ளெல்லாம்*
*அரனெனவே தொழுதிறைஞ்சி ஆடிப்பாடி"*[40]

என்று கூறுகின்றார்.

**8.3.4.** திருஞானசம்பந்தரும் சாத்திர நூலாசிரியர்களும் அடியார் வழிபாட்டினை வலியுறுத்துவது சிந்திக்கத்தக்கது.

*"காதலால்நினை வார்தம கத்தன்"* (3 : 373 : 3)

"............ இறைஞ்சுவார்
சிந்தை யுள்ளே கோயிலாகத் திகழ்வான்" (2 : 200 : 2)

என்று திருஞானசம்பந்தர் இறைவன் அன்பினால் வழிபடும் அடியவர்கள் உள்ளத்தைக் கோயிலாகக் கொண்டு அமர்ந்திருப்ப தாகக் கூறும் கருத்து அடியார் வழிபாடு செய்யப்படும் காரணத்தை உணர்த்தும். இது காணப்படாத கடவுளைக் காணும் பொருளால் வழிபடும் உபாயமாகும். உயிர் அறிவால் அறியப்பட முடியாத பரம்பொருள் தன்னை அறிதற்பொருட்டு, திருநீறு, கண்டிகை முதலிய திருவேடமாகிய தனது வடிவத்தைத் தன்னன்பர்க்கு அளித்து, யாங்கணும் உயிர்க்குயிராய் அறிவினை விளக்கி அருளால் கலத்தலால் திருவேடமும் சிவனுருவே ஆகும் என்பர் அருணந்தி சிவாசாரியார்.[41] எனவே இவர்கள் 'பராவு சிவர்'[42] எனப்படுவர். திருமூலர் இவர்களை 'நடமாடுங் கோயில்'[43] என்பார். மேலும் உயிர்கள் சார்ந்ததன் வண்ணாய் இயல்புடையன ஆகையால், இறைவன்பால் மெய்யன்பு பூண்டவர்களோடு கலந்து வாழ்வதால் உயிர்களிடம் மெய்யன்பு வளரப்பெறும் என்பதை உணர்த்த அடியார் வழிபாடு சைவ நூல்களில் வலியுறுத்தப்படுகின்றது எனலாம்.

## 8.4. ஆலய வழிபாடு :

"உடம்பு நயப்படுதற்கு உணவும், மனம் நயப்படுதற்குக் கல்வியும் வேண்டப்படுதல் போல, உயிர் நயப்படுவதற்கு கடவுள் வழிபாடு வேண்டப்படும்."[44] கடவுளை வீட்டில் வைத்தும் வழிபடலாம்; ஆலயம் சென்றும் வழிபடலாம். திருஞானசம்பந்தர் பாடல்கள் அனைத்துமே அவர் தலங்கள் தோறும் சென்று அத்தலத்திலுள்ள ஆலயத்தின் இறைவனைப் பாடிய பாடல்களாகும். பூம்பாவையை உயிர்பெறச் செய்யப் பாடிய பதிகமாகக் கருதப்படுகின்ற திருமயிலாப்பூர்ப் பதிகத்தில் (2 : 183) பாடல்தோறும் ஆலயத்தில்

நடைபெறுகிற திருவிழா பற்றிக் குறிப்பிடுகின்றார் திருஞானசம்பந்தர். உயிர்கள் அடையும் வாழ்க்கைத் துன்பங்களைக் கூறித் துன்பம் நீங்கத் 'தூங்கானை மாடத்து இறைவனைத் தொழுங்கள்' என்று ஒரு பதிகம் முழுவதும் (1 :56) திருஞானசம்பந்தர் கூறுகின்றார். இவ்வாறு ஆலய வழிபாடு பற்றித் திருஞானசம்பந்தர் கூறுவது மெய்கண்ட தேவர்,

*"ஆலயந் தானும் அரனெனத் தொழுமே"*[45]

என்று கூற அடிப்படையாகிறது எனலாம்.

## 8.5. திருவைந்தெழுத்து :

வழிபாட்டின்பொழுது திருவைந்தெழுத்து ஓதுவதும் இறைவனை அடைவதற்குரிய சாதனங்களுள் ஒன்றாகும். திருவைந்தெழுத்து என்பது 'நமசிவய' என்பதாகும். இது பஞ்சாக்கர மந்திரம் என்று சொல்லப்படும். இம்மந்திரம் பற்றி வேதகாலந்தொட்டே சைவ நூல்களில் கூறப்பட்டு வந்துள்ளது.[46] தேவாரம் பாடிய மூவருமே திருவைந்தெழுத்தின் சிறப்பை விளக்கத் தனிப்பதிகமே பாடியுள்ளனர். திருஞானசம்பந்தர் தேவாரத்தில் இரண்டு பதிகங்கள் திருவைந்தெழுத்தின் சிறப்பை விளக்குகின்றன. அவை :

1. பஞ்சாக்கரத் திருப்பதிகம் (3 : 280)
2. நமச்சிவாயத்திருப்பதிகம் (3.307)

முன்னது, பாடல் இறுதிதோறும் 'அஞ்செழுத்துமே' என முடிவதால் பஞ்சாக்கரத் திருப்பதிகம் எனப் பெயர் பெற்றது. பின்னது, பாடல் இறுதிதோறும் 'நமச்சிவாயவே' என முடிவதால் நமச்சிவாயத் திருப்பதிகம் எனப்படடது.

### 8.5.1. ஓதும் முறை : (கணிக்கும் முறை)

*"காதலாகி கசிந்துகண் ணீர்மல்கி*
*ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது"* (3 : 307 : 1)

என்று திருஞானசம்பந்தர் திருவைந்தெழுத்தை மனம், மெய், மொழி இம்மூன்றும் ஒன்றுசேர ஓத வேண்டும் என்கின்றார். மற்றுமோரிடத்தில்,

*"நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்நினைந்*
*தக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவர்"* (3 :307 :3)

என்று திருவைந்தெழுத்தை ஓதும் முறையைக் கூறுகிறார்.

திருஞானசம்பந்தர் ஐந்தெழுத்திற்கும் பொருள் கூறவில்லை. சாத்திர நூல்கள் தத்துவ விளக்கம் கூறுவனவாதலால் ஐந்தெழுத்திலுள்ள ஒவ்வோர் எழுத்தும் ஒரு பொருளைக் குறியீடாகக் குறிப்பன என்று கூறும். ஐந்தெழுத்தில் நகரம் திரோதானத்தையும், மகரம் மலத்தையும், சிகரம் சிவத்தையும், வகரம் அருளையும், யகரம் ஆன்மாவையும் குறிக்கும் என்பர்[47] திருஞானசம்பந்தரின் நோக்கம் மக்களிடையே பக்தி உணர்ச்சியைப் பரப்ப வேண்டும் என்பதாதலால் திருவைந்தெழுத்தை ஓதும் முறையைப் பொதுவாகக் கூறுகிறார். ஆனால் சைவசித்தாந்த நூல்களுள் ஐந்தெழுத்திற்கும் தத்துவப்பொருள் கூறப்படுவதால் திரோதானத்தைக் குறிக்கும் நகரத்தை முதலாகக் கொண்டு ஓதக்கூடாது என்றும், இறைவனைக் குறிக்கும் சிகரத்தை முதலாக வைத்து ஓத வேண்டும் என்றும் அந்நூல்கள் கூறுகின்றன.[48]

### 8.5.2. ஓதலின் பயன்கள் :

*"இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்*
*அம்மையி னுந்துணை அஞ்செ ழுத்துமே"*(3 : 280 :6)

முற்பிறப்பில் செய்த வினை இப்பிறப்பில் துன்பம் தரும்போது தாங்கும் தன்மையையும், மறுபிறப்பிற்குத் துணையையும் அருளுவது ஐந்தெழுத்தாகும் என்று திருஞானசம்பந்தர் கூறுகின்றார்.

ஐந்தெழுத்தை ஓதுவார்க்குத் துன்பம் இல்லை என்பதனை,

"........... இடர்
ஆன கெடுப்பன அஞ்செ ழுத்துமே"(3 : 280 :3)
"அல்லல் கெடுப்பன அஞ்செ ழுத்துமே"(3 : 280 :4)

என்று திருஞானசம்பந்தர் கூறுகின்றார்.

திருவைந்தெழுத்தை ஓதுவார்க்கு வினை நீங்கிச் செல்வம் பெருகும் என்பதனை,

"சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால்
நந்தி நாமம் நமச்சி வாயவே"(3 :307 : 6)

என்ற தொடரால் திருஞானசம்பந்தர் உணர்த்துகின்றார்.

திருவைந்தெழுத்தானது சிவமுக்தியைத் தரும் (3 : 280 : 4) என்று திருஞானசம்பந்தர் கூறுகிறார்.

இவ்வாறு திருஞானசம்பந்தர் திருவைந்தெத்தை ஓதுதலினால் உண்டாகும் பயன்களை விளக்கிக் கூறுவது பின்வந்த சைவசித்தாந்த நூல்களில் திருவைந்தெழுத்தை ஓதுவது இறைவனை அடைவதற் குரிய சாதனங்களுள் ஒன்றாகக் கூற ஏதுவாகிறது எனலாம்.

## 8.6. வழிபாட்டின் பயன்கள் :

***8.6.1.*** திருஞானசம்பந்தர் வழிபாட்டின் பயன்களாகத் துன்பம் நீங்கும் (1 :3 :8, 2 : 147 :2), நோய் அடையா (1:10:6), பாவம் நீங்கும் (1 : 23 : 4), வினை நீங்கும் (1 :19 :9; 1 :106 : 10), மறுபிறப்பு இல்லை (1 : 8 : 5, 2 : 182 : 1), வீடுபேறு அடைவர் (2 : 204 : 1) என்று கூறுகின்றார். இவற்றுள் வீடுபேற்றைத் தவிர ஏனையவை பாச நீக்கத்துள் அடங்கும். முன்பு கூறப்பட்ட சரியை, கிரியை, யோகம், ஞானம் இவற்றின் பயனான சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்பனவும் முக்தி நிலைகளைக் குறிப்பனவே.

**8.6.2.** திருஞானசம்பந்தர் வழிபாட்டின் பயன்களாக விரித்துக் கூறும் கருத்துக்கள் அனைத்தையும், சைவசித்தாந்த நூல்கள் பாசநீக்கம், வீடுபேறு என்ற இரண்டில் அடக்கிக் கூறும்.

*"ஏக னாகி இறைபணி நிற்க*
*மலமாயை தன்னொடு வல்வினை யின்றே"*[49]

என்று மெய்கண்ட தேவர் இறைவழிபாட்டினால் பாச நீக்கம் ஏற்படுதலைக் கூறுகின்றார். சிவஞானபோதம் பதினொன்றாம் சூத்திரம் வீடுபேறு கூறுவது என்பர்.

**8.6.3.** சைவசித்தாந்த நூல்களில் பாசநீக்கம் தனியாகவும், வீடுபேறு தனியாகவும் கூறப்படுதலால், பாசநீக்கம் மட்டுமே சித்தாந்த முக்தி அன்று என்பது தெளிவாகும். இதனை முக்தியைக் குறிக்கும் வீடுபேறு என்ற சொல்லே விளக்கும். வீடுபேறு என்ற சொல் விடுதல், பெறுதல் என்ற இரண்டு சொற்களை முதனிலையாகக் கொண்டது. விடுதல் என்பது பாசத்தை விடுதலைக் குறிக்கும். பெறுதல் என்பது இறை இன்பத்தைப் பெறுதலைக் குறிக்கும்.[50] சைவசித்தாந்தம் கூறும் இக்கருத்துத் திருஞானசம்பந்தருக்கும் உடன்பாடாகும் எனக் கருதுமாறு அவருடைய பாடல் தொடருக்குப் பொருள் கூறுவர்.

*"..........வலிதாயம்*
*உய்யும்வண்ணந்நினை மின்னினைந்தால்வினை*
*தீருந்நலமாமே"*(1 :3 :3)

என்ற திருஞானசம்பந்தரின் பாடல் தொடருக்கு, "வினை நீங்குத லொன்றுமே இன்பம் என்பது சித்தாந்த முத்தியன்றாதலின் வினைதீரும் என்பதோடமையாது நலமாமே என்று மேலும் கூறினார்."[51] என விளக்கம் கூறுவார் தண்டபாணி தேசிகர். 'வினை தீரும்' என்றது பாச நீக்கத்தையும், 'நலம்' என்றது இன்பம் தரும் வீடுபேற்றினையும் குறிக்கும்.

*"ஊழின்மலி வினைபோயிட வுயர்வானடைவாரே"*
(1 :11 :11)

என்ற திருஞானசம்பந்தரின் பாடல் தொடரில் 'வினை போயிட'என்றது பாசநீக்கத்தையும் 'உயர்வானடைவர்' என்றது வீடுபேற்றினையும் குறிக்கின்றது.

**8.6.4.** திருஞானசம்பந்தர் தேவாரத்தில் வரும் வீடு (1:33:11,3:294:3), பேறு (1 :91 :4) சிவகதி (11 : 9 : 11, 1 : 66 : 11, 3 : 271 : 11,) முக்தி (1 : 91 : 1)முதலியன ஒரு பொருள் குறிப்பன. திருஞான சம்பந்தர் தேவாரத்தில் காணலாகும்

*"அடிசேர் வார்களே"*(1 :87 : 11)

என்ற தொடர் உயிர்கள் அடையும் முக்தியைக் குறிக்கின்றது.

இக்கருத்து உயிர் இறைவனடி சேர்தல் முக்தி எனச் சிவஞானசித்தியாரில் கூறப்படுகின்றது.[52] இதுவே மும்மலமும் நீங்க உயிர் இறைவன் திருவருளோடு கலத்தல் முக்தி என்று சிவப்பிரகாசத் திலும் விளக்கப்படுகின்றது.[53]

**8.6.5.** திருஞானசம்பந்தர்,

*"சங்கர னார் தம்மைப்*
*போலத் தம்மடி யார்க்குமின் பளிப்பவர்"*(2 :238 : 2)

என்ற தொடரால் சிவபோகமாகிய முக்தியின் பொழுது உயிர்கள் அடையும் இன்பத்தினை உணர்த்துகின்றார் எனலாம்.

இதனை முக்தி நிலையில் முக்தி இன்பத்தை நுகர்ந்து கொண்டிருப்பது உயிராகும். அதற்கு இடையீடின்றி அவ்வின்பத்தை வழங்கிவருவது இறைவன் என்று உண்மை விளக்க ஆசிரியரும் கூறுகின்றார்.[54] திருவருட்பயனில் இன்புறுநிலை என்னும் அதிகாரத்தில் உயிர் இறைவனால் அடையும் இன்பம் விளக்கப்படு கின்றது.[55]

## 8.7. சீவன்முத்தர் :

ஞானம் பெற்றோர், உடம்பு நீங்கியபின் பெறுதற்குரிய பேரின்பத்தை உடம்புடன் கூடியிருக்கும் நிலையிலேயே பெறுவது 'சீவன்முத்தி' எனப்படும்.[56] அந்நிலையைப் பெற்றவர்கள் 'சீவன்முத்தர்கள்' எனப்படுவர். வடமொழிச் சொல்லாகிய சீவன் முத்தரையே தமிழில் "அணைந்தோர்" என்று கூறுவர். திருஞான சம்பந்தர் தேவாரத்தில் சீவன்முத்தர், அணைந்தோர் என்ற சொற்றொடர்கள் காணப்படாவிடினும், அவர் அடியார் இயல்புகளாகக் கூறும் சில பண்புகள் சைவ சித்தாந்த நூல்களில் அணைந்தோர் இயல்புகளாகக் கூறப்படும் பண்புகளுக்கு ஒப்பாக உள்ளன.

**8.7.1.** திருஞானசம்பந்தர்,

*"சிவன்சேவடிக்கே செலுஞ் சிந்தையார்"* (2 : 252 : 7)

என்றுஅடியவர்களைக் குறிப்பிடுகின்றார்.

அடியவர்க்ள் இறைவனுடைய பெருமையை அல்லாமல் வேறுஎதையும் தம் செவிகளால் கேளார் என்பதைத் திருஞான சம்பந்தர்,

*"........ செவித் துளைகளால்*
*யாவுங்கேளா ரவன்பெருமை யல்லா லடியார்"* (2 :251 :4)

என்று கூறுகின்றார்.

இக்கருத்து நிட்டை கூடினவர் சிவனையன்றி வேறொன்றையும் அறியார் என்று திருவருட்பயனில் கூறப்படுகின்றது.[57] "சீவன்முத்தர் சிவமேகண் டிருப்பர்" என்று சிவஞானசித்தியாரிலும்[58] சீவன் முத்தர்கள் மெய்ப்பொருளுணர்ச்சி தவிர ஏனையவை ஒழிந்தவர் என்று சிவப்பிரகாசத்திலும்[59] கூறப்படுகின்றது.

**8.7.2.** திருஞானசம்பந்தர்,

*"புலன்களைச் செற்றுப் பொறியை நீக்கிப்*
*புந்தியி லுந்நினைச் சிந்தை செய்யும்*
*அலங்க னல்லார்"*(1 :7 :8)

*"..........புல்னைந்துஞ்*
*செற்றவர்"*(2 :165 :10)

"துறவியெனு முள்ளமுடையார்கள்"(3 : 331 :7)

"..............உமை யேத்துவார்
புலன்களை முனிவது பொருளே"(3 : 356 :8)

என்ற தொடர்களால் சிவஞானியர்கள் புலனடக்கம் மிக்கவர் என்பதைப் புலப்படுத்துகிறார்.

திருவருட்பயன் என்ற சைவசித்தாந்த நூலிலும் அணைந்தோர் ஐம்புலன் அடக்கம் மிக்கவர் எனக் கூறப்படுகின்றது.[60]

**8.7.3.** திருஞானசம்பந்தர் சிவனடியார்களுக்குச் சுவர்க்கங்களும் ஒரு பொருட்டல்ல என்பதை,

*"............ கொன்றைத்*
*தொங்கலா னடியார்க்குச் சுவர்க்கங்கள்*
*பொருளலவே"*(2 :177 :7)

என்று கூறுகின்றார்.

உமாபதிசிவம், அணைந்தோர் மறுமையிலுள்ள சுவர்க்க இன்பத்தை இம்மையிலேயே அனுபவிப்பர் என்கின்றார்.[61]

**8.7.4.** திருஞானசம்பந்தர்,

*"அச்சம்மிலர் பாவம்மிலர் கேடும்மிலரடியார்"*(1 :18 :2)

என்கின்றார். அச்சம், பாவம், கேடு முதலியன வினையின் காரணமாக உண்டாவன; இவை அடியார்களுக்கு இல்லை என்று கூறுவதனால்

அவர்களுக்கு வினை இல்லை என்பது குறிப்பால் உணர்த்தப் படுகின்றது. இதற்கு ஒப்பாக அணைந்தோர்க்கு,

*"மும்மை தரும்வினைகள் மூளாவாம்"*

என்ற திருவருட்பயனில் கூறப்படுகின்றது.[62]

சைவசித்தாந்த நூல்களில் கூறப்படும் 'அணைந்தோர்' இயல்புகளுக்குத் திருஞானசம்பந்தர் கூறும் அடியார் இயல்புகள் அடிப்படையாகின்றன எனலாம்.

முடிவுகள் :

1. உயிர்கள் தம் திறத்தால் இறைவனைச் சென்றடையும் அறப்பயிற்சி முறையே சாதனம் எனலாம்.
2. திருஞானசம்பந்தர் பாடல்களில் கூறப்படும் வழிபாட்டின் வகைகள், சிவஞானசித்தியாரில் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப் பாகுபாடு செய்ய அடிப்படையாகத் திகழ்கின்றன எனலாம்.
3. இந்நால்வகை நெறிகளில் நிற்போர் செய்யும் வழிபாட்டு முறைகளையும் வழிபடுவோர் பெறும் பயன்களையும் திருஞானசம்பந்தர் தம் தேவாரத்தில் பல பாடல்களில் விளக்குகிறார்.
4. திருஞானசம்பந்தர் புல பாடல்களில் விளக்கும் வழிபாட்டு முறைகளை அருணந்தி சிவாசாரியார் தனித்தனியே ஒவ்வொரு நெறியையும் ஒவ்வொரு பாடல் மூலம் விளக்குகிறார்.
5. திருஞானசம்பந்தர் அடியவர் வழிபாடும், ஆலய வழிபாடும் பற்றிக் கூறும் கருத்துக்கள் சிவஞானபோதம் பன்னிரண்டாம் சூத்திரக் கருத்திற்கு அடிப்படையாய் அமைகின்றது எனலாம்.
6. திருஞானசம்பந்தர் மனம், வாக்கு, காயம் இவற்றால் இறைவனை வழிபடுமாறு கூறும் பல கருத்துக்களின் செறிவாக அருணந்தி சிவாசாரியார் மனிதப்பிறவி மனம்,

வாக்கு, காயம் என்ற மூன்றாலும் இறைவனுக்குப் பணி செய்ய அமைந்துள்ளது என்கின்றார்.

7. திருஞானசம்பந்தர் தம்கால மக்களை வழிபாட்டில் ஈடுபடும்படி செய்யவே வழிபாடு பற்றிப் பல பாடல்களில் வலியுறுத்துகிறார் எனலாம்.

8. திருவைந்தெழுத்தின் சிறப்பைத் திருஞானசம்பந்தர் நமச்சிவாயத் திருப்பதிகம், பஞ்சாக்கரத் திருப்பதிகம் என்ற இரு திருப்பதிகங்களில் விளக்கிக் கூறுகின்றார்.

9. திருஞானசம்பந்தர் பாடல்களில் ஐந்தெழுத்திற்குப் பொருள் கூறப்படவில்லை. சைவசித்தாந்த நூல்கள் தத்துவ விளக்கம் கூறும் நூல்களாதலால் ஐந்தெழுத்திற்கும் பொருள் கூறுகின்றன.

10. திருஞானசம்பந்தர் பக்தி நெறியை விளக்க வந்தவர். எனவே திருவைந்தெழுத்தை மனம், மெய், வாக்கு ஆகியவற்றால் பக்தியுடன் ஓதும் முறை பற்றி மட்டுமே கூறுகிறார். சைவசித்தாந்த நூல்கள் திரோதானத்தைக் குறிக்கும் நகரத்தை முதலாகக் கொண்டு ஓதக்கூடாது என்றும், இறைவனைக் குறிக்கும் சிகரத்தை முதலாகக் கொண்டு ஓத வேண்டும் என்றும் கூறுகின்றன.

11. திருஞானசம்பந்தர் ஐந்தெழுத்தை ஓதுதலால் உண்டாகும் பயன்களை விளக்கிக் கூறுவது, சைவசித்தாந்த நூல்களில் ஐந்தெழுத்து ஓதுவது இறைவனை அடையும் சாதனமாகக் கூற ஏதுவாகிறது எனலாம்.

12. திருஞானசம்பந்தர் பல பாடல்களில் இறை வழிபாட்டால் உண்டாகும் பயன்கள் இவை என விரித்துக் கூறுவதைச் சைவசித்தாந்த நூல்கள் சாதனத்தின் பயன் பாசநீக்கமும் வீடுபேறும் என்று சுருக்கிக் கூறுகின்றன.

13. பாசநீக்கம் மட்டுமே இன்பம் என்பது சித்தாந்த முத்தியன்றாதலின், பாசநீக்கம், வீடு பேறு என்ற இரண்டையும் தனித்தனியே சைவ சித்தாந்த நூல்கள் கூறுகின்றன. சைவசித்தாந்த நூல்கள் கூறும் இக்கருத்திற்கு

உடன்பாடாகவே திருஞானசம்பந்தரின் பாடல்கள் அமைந்துள்ளன எனலாம்.

14. திருஞானசம்பந்தர் கூறும் அடியார் இயல்புகள் சில, சைவ சித்தாந்த நூல்களில் கூறப்படும் அணைந்தோர் இயல்புகளுக்கு அடிப்படையாகின்றன எனலாம்.

## குறிப்புக்கள்

1. வை.இரத்தினசபாபதி, திருமுறைத் தெளிவே சிவஞானபோதம், பக்.103-104.
2. சிவஞானசித்தியார் சுபக்கம், 270.
3. (i) சி.அருணைவடிவேல் முதலியார், சித்தாந்த வினா விடை, ப.61.

   (ii) சிவஞான சுவாமிகள் உரை, 'சிவஞானசித்தியார் சுபக்கம்' சித்தாந்த சாத்திரம் மூலமும் உரையும், சமாசம், ப.545
4. சிவஞானசித்தியார் சுபக்கம், 270.
5. *''தாதமார்க் கம்சாற்றிற் சங்கரன்தன்கோயில்*
   *தலம் அலகிட் டிலகுதிரு மெழுக்கும் சாத்திப்*
   *போதுகளுங் கொய்துபூந் தார்மாலை கண்ணி*
   *புனிதற்குப் பலசமைத்துப் புகழ்ந்து பாடித்*
   *தீதில்திரு விளக்கிட்டுத் திருநந்த வனமும்*
   *செய்துதிரு வேடங்கண் டால்அடியேன் செய்வ(து)*
   *யாதுபணி யீரென்று பணிந்தவர்தம் பணியும்*
   *இயற்றுவதிச் சரியை செய்வோர் ஈசனுல கிருப்பர்''*

   *- சிவஞானசித்தியார் சுபக்கம், 271.*
6. சி.அருணைவடிவேல் முதலியார், மு.நூல்., ப.333.
7. (i) க.வெள்ளைவாரணன், பன்னிருதிருமுறை வரலாறு - முதற்பகுதி ப.654.

(ii) சிவஞான சுவாமிகள் உரை 'சிவஞானசித்தியார் சுபக்கம்', மு.நூல்., ப.545.

8. சி.அருணைவடிவேல் முதலியார், மு.நூல்., ப.62.

9. சிவஞானசித்தியார் சுபக்கம், 270.

10. மேலது, 272.

11. (i) சி.அருணைவடிவேல் முதலியார், மு.நூல்., ப.62.

(ii) க.வெள்ளைவாரணன், மு.நூல்., ப.656.

(iii) சிவஞான சுவாமிகள் உரை, 'சிவஞானசித்தியார் சுபக்கம்' மு.நூல்., ப.545.

12. சிவஞானசித்தியார் சுபக்கம், 270.

13. (i) திருமந்திரம், 552.

(ii) இயமம் - துறவொழுக்கத்திற்கு மாறானவற்றைச் சிறிதும் பற்றாது விடுதல்

நியமம் - துறவொழுக்கத்தை மேற்கொண்டு அதில் தப்பாது நிற்றல்

ஆசனம் - பதுமம், கூர்மம், மச்சம் முதலாகப் பெயர் பெற்ற ஆசனங்களில் இருக்கப் பழகுதல்

பிராணாயாமம் - மூச்சுக்காற்றினை வலநாடி, இடநாடிகளில் செல்லாமல் தடுத்து, நடுநாடியாகிய சுழுமுனை நாடியில் செலுத்துதல்

பிரத்தியாகாரம் - பிராணாயாம முறையால் மனத்தைப் பொறிகளின் வழி ஓடாது அடக்குதல்

தாரணை - மனத்தைக்குறித்த பொருளில் நிறுத்தும் வன்மை

தியானம் - இறைவனது ஒளிவடிவாகிய அருவத் திருமேனியில் மனத்தை இருத்துதல்

*சமாதி - தியானத்திலே தன்னை மறந்து அழுந்தி இருத்தல்*

*- சி.அருணைவடிவேல் முதலியார், மு.நூல்., ப.62.*

14. திருமந்திரம், 553-631.
15. சிவஞானசித்தியார் சுபக்கம், 273.
16. ச.தண்டபாணி தேசிகர் குறிப்புரை, முதல் திருமுறை, ப.550.
17. சிவஞானசித்தியார் சுபக்கம், 273.
18. "He (Saint Gnanasampandar) knew the yoga Marga by which the aspirant after Mukti controlled the two Vayus (Prana and Apana) and got control over the Ida and Pingala Nadis",

    *-C.V. Narayana Ayyar, Origin and early history of Saivism in South India, P.351*
19. சிவஞானசுவாமிகள் உரை, 'சிவஞானசித்தியார் சுபக்கம்' மு.நூல்., ப.546
20. சி.அருணைவடிவேல் முதலியார், மு.நூல்., ப.63.
21. சிவஞானசித்தியார் சுபக்கம், 270.
22. மேலது, 274-276.
23. (i) மேலது, 270.

    (ii) பின்னிணைப்பு எண் 15.
24. (i) க.வெள்ளைவாரணன், பன்னிரு திருமுறை வரலாறு முதற்பகுதி, ப.658.

    (ii) பதமுத்தி உலகம் சென்று எங்கும் தடையற இயங்கும் உரிமையைப் பெற்றிருத்தலே 'சாலோகம்' என்னும் முக்திநிலையாம். ஒருவர் இல்லத்தில் பணிபுரியும் அகம்படிமைத் தொண்டர் அவ்வில்லம் முழுவதும் தடையறச் செல்லும் உரிமை போன்ற இவ்வுரிமையைத் தருவது சரியைத் தொண்டு. அதுபற்றியே அது, 'தாசமார்க்கம் -

அடிமைநெறி' எனப்படுகின்றது. மேற்கூறிய முக்தி உலகங்களில் பணியாளர் போல அகல நில்லாது, மைந்தர் போல அவ்வப் புவன பதிகளை அருகணைந்து நிற்கும் உரிமையைப் பெற்றிருத்தலே 'சாமீபம்' என்னும் முக்திநிலையாம். இவ்வுரிமையைத் தருவது கிரியைத் தொண்டு அதனால் அது, 'சத்புத்திரமார்க்கம் - மகன்மை நெறி' எனப்படுகின்றது. மேற்கூறிய புவனபதிகளை அருகணைந்து நிற்றலோடு அமையாது அவர்களோடு ஒத்த உருவம், பெயர் முதலியவற்றை உடையராய்த் தோழர் போல நெருங்கி அளவளாவும் உரிமையைப் பெற்றிருத்தலே 'சாரூபம்' என்னும் முக்திநிலையாம். இவ்வுரிமையைத் தருவது யோகம். அதனால் அது 'சகமார்க்கம் - தோழமைநெறி' எனப்படுகின்றது. அவ்வப் புவனபதிகளோடு ஒத்த உருவம் முதலியவற்றைப் பெற்றிருத்தலோடு அமையாது அவர்கள் ஆணையின்வழி அவர்கள் போலவே அவரது அதிகாரங்களைப் பெற்றிருத்தலே அபர சாயுச்ச பதசாயுச்சங்களாம். சாயுச்சத்தைத் தருவது ஞானமே. இதுவே பெரும்பேறாகலின் இதனைத் தரும் ஞானம், 'சன்மார்க்கம்-நன்னெறி' எனப்படுகின்றது.

*- சி. அருணைவடிவேல் முதலியார், மு.நூல்., பக்.377-378.*

25. சிவஞானசித்தியார் சுபக்கம், 271.
26. கே.எம்.வெங்கட்டராமையா, 'பன்னிரு திருமுறைச் சிறப்பு', ஞானசம்பந்தம், மலர் 7, இதழ் 3, பிப்ரவரி 1948, ப.42.
27. மேலது, ப.43.
28. சிவஞானசித்தியார் சுபக்கம், 272.
29. மேலது, 273.
30. கே.எம்.வெங்கட்டராமையா, மு.நூல்., ப.44.
31. சிவஞானசித்தியார் சுபக்கம், 264.

32. மேலது, 274.

33. மேலது, 277.

34. (i) சிவப்பிரகாசம், 10.

(ii) போற்றிப்பஃறொடை, கண்ணி 79.

35. "விரும்புஞ் சரியைமுதன் மெய்ஞ்ஞான நான்கு
மரும்புமலர் காய்கனிபோ லன்றோ ? பராபரமே"

*- தாயுமானவர், பராபரக் கண்ணி, 157.*

36. ப.அருணாசலம், சைவசமயம், ப.41.

37. சிவஞானசித்தியார் சுபக்கம், 268.

38. மேலது, 182.

39. சிவஞானபோதம், சூத்., 12.

40. சிவஞானசித்தியார் சுபக்கம், 322.

41. (i) மேலது, 324.

(ii) சுப்பிரமணிய சுவாமிகள் பதவுரை, சிவஞானசித்தியார், கழகம், ப.326.

42. சிவஞானசித்தியார் சுபக்கம், 287.

43. திருமந்திரம், 1857.

44. க.சிவபாதசுந்தரம், சைவசமய சாரம், ப.9.

45. சிவஞானபோதம், சூத்., 12.

46. யசுர் வேதத்தில் நடுக்காண்டத்தில் நடுசாகையில் 'நமசிவாய சிவதராய' என்று 'கூறப்பட்டுள்ளது.

*- செந்திநாதையர், தேவாரம் வேதசாரம், ப.97.*

47. (i) உண்மை விளக்கம், 40, 41.

(ii) திருவருட்பயன், 82.

48. (i) உண்மை விளக்கம் 41.

(ii) திருவருட்பயன், 87.

49. சிவஞானபோதம், சூத்., 10.

50. சி.அருணைவடிவேல் முதலியார், மு.நூல்., ப.65.

51. ச.தண்டபாணி தேசிகர் குறிப்புரை, முதல் திருமுறை, ப.19.

52. சிவஞானசித்தியார் சுபக்கம், 264.

53. சிவப்பிரகாசம், 50.

54. உண்மை விளக்கம், 51.

55. திருவருட்பயன், 71-80

56. சி.அருணைவடிவேல் முதலியார், மு.நூல்., ப.380.

57. (i) திருவருட்பயன் 93.

(ii) திருவருட்பயன் சிந்தனையுரை, சித்தாந்த சாத்திரம் மூலமும் உரையும், சமாசம், ப.1073.

58. சிவஞானசித்தியார் சுபக்கம், 311.

59. சிவப்பிரகாசம், 94.

60. திருவருட்பயன், 94.

61. மேலது, 99.

62. மேலது.

# 9. திருஞானசம்பந்தர் தேவாரமும் சைவ சித்தாந்த நூல்களும்

9.0. முன்னுரை

9.1. திருஞானசம்பந்தர் தேவாரமும் திருவுந்தியாரும்

9.2. திருஞானசம்பந்தர் தேவாரமும் திருக்களிற்றுப்படியாரும்

9.3. திருஞானசம்பந்தர் தேவாரமும் சிவஞானபோதமும்

9.4. திருஞானசம்பந்தர் தேவாரமும் சிவஞானசித்தியாரும்

9.5. திருஞானசம்பந்தர் தேவாரமும் இருபா இருபஃதும்

9.6. திருஞானசம்பந்தர் தேவாரமும் உண்மை வீளக்கமும்

9.7. திருஞானசம்பந்தர் தேவாரமும் சிவப்பிரகாசமும்

9.8. திருஞானசம்பந்தர் தேவாரமும் திருவருட்பயனும்

9.9. திருஞானசம்பந்தர் தேவாரமும் வினாவெண்பாவும்

9.10. திருஞானசம்பந்தர் தேவாரமும் போற்றிப்பஃறொடையும்

9.11. திருஞானசம்பந்தர் தேவாரமும் உண்மை நெறி விளக்கமும்

9.12. திருஞானசம்பந்தர் தேவாரமும் கொடிக்கவியும்

9.13. திருஞானசம்பந்தர் தேவாரமும் நெஞ்சுவிடு தூதும்

9.14 திருஞானசம்பந்தர் தேவாரமும் சங்கற்ப நிராகரணமும்

முடிவுகள்

# 9. திருஞானசம்பந்தர் தேவாரமும் சைவசித்தாந்த நூல்களும்

## 9.0. முன்னுரை :

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் அமைந்த பல சொற்றொடர்கள் சைவசித்தாந்த நூல்களில் பரவலாகக் காணப்படு கின்றன. இவ்வியலில் திருஞானசம்பந்தர் தேவாரத்திற்கும், சைவசித்தாந்த நூல்கட்கும் உள்ள சொற்றொடர் ஒப்புமை, சைவ சித்தாந்த நூல் வரிசையில் எடுத்துக்காட்டப்படுகின்றன. மேலும் இதற்கு முன்னுள்ள இயல்களில் திருஞானசம்பந்தர் தேவாரம் சைவசித்தாந்தக் கோட்பாடுகள் பலவற்றிற்கு அடிப்படையாய் அமைகின்ற பான்மை ஆய்வு செய்யப்பட்டன. இவ்வியலில் திருஞான சம்பந்தரால் கூறப்படாமல், சைவசித்தாந்த நூலாசிரியர்களால்மட்டும் கூறப்படும் சித்தாந்த உண்மைகள் சில சைவசித்தாந்த நூல் வரிசையாகக் கூறப்படுகின்றன.

## 9.1. திருஞானசம்பந்தர் தேவாரமும் திருவுந்தியாரும் :

இறைவனை இன்ன வடிவம், இன்ன நிறம் என்று உயிர்கள் தம் ஆன்ம போதத்தினால் அறியமுடியாது என்ற கருத்தைத் திருஞான சம்பந்தர்,

*"இன்னவுரு வின்னநிற மென்றறிவ தேலரிது"* (3:329:4)

என்று கூறுகின்றார். இது ஏகதேசக் காட்சியால் சுட்டியறியப்படும் ஏகதேசப் பொருள்போல்அதற்கு (இறைவற்கு) என்ன அடையாளத்தை யான் சொல்வேன். அதற்கு ஒரு அடையாளமும் இல்லை. நமதறிவால் ஒரு காலமும் அறிவதற்கு அது எளிய பொருளன்று என்று திருவுந்தி யாரில் கூறப்படுகின்றது.[1]

*"இங்ங னிருந்ததென் றெவ்வண்ணஞ் சொல்லுகேன்*
*அங்ங னிருந்ததென் றுந்தீபற*
*அறியும் அறிவதன் றுந்தீபற"*[2]

என்பது திருவுந்தியார் பாடலாகும்.

இறைவன் மனம், காயம், வாக்கு இம்மூன்றிலும் இருப்பதைக் கூற வரும் திருஞானசம்பந்தர்,

*"சிந்தை யிடையார் தலையின் மிசையார்*
*செஞ்சொல்லார்"*(2 : 196 : 1)

என்று கூறுவது போல,

*"சிந்தையி லுள்ளுமென் சென்னியி லுஞ்சேர*
*வந்தவர்"*[3]

என்று திருவுந்தியார் ஆசிரியர் கூறுகின்றார்.

அடியவர்கள் உள்ளம் உருகி வழிபட இறைவன் உடனிருப்பான் என்பதைத் திருஞானசம்பந்தர்,

*"உள்ளமுருகி லுடனாவார்"* (2 : 247 : 3)

என்கிறார். இது உள்ளம் உருகினாற்றான் இறைவன் உடனிற்பது விளங்கும். அல்லாத இடத்து அவரைத் தெளிந்தறிதல் இயலாது என்ற பொருளில்,

*"உள்ள முருகி யுடனாவர் அல்லது*
*தெள்ள அரியரென் றுந்தீபற"*[4]

என்று திருவுந்தியாரில் கூறப்படுகின்றது.

இறைவனுடைய பாதத்தையே பற்றுக்கோடாகப் பற்றி நிற்பவர்களைப் பாவம் பற்றாது என்பதனை,

*"முற்றா வெண்டிங்கண் முதல்வன் பாதமே*
*பற்றா நின்றாரைப் பற்றா பாவமே"*(1 :: 80 : 1)

என்று திருஞானசம்பந்தர் கூறுகிறார். இக்கருத்து,

> *"பற்றை யறுப்பதோர் பற்றினைப் பற்றில்அப்*
> *பற்றை யறுப்பரென் றுந்தீபற"*[5]

என்று திருவுந்தியாரில் கூறப்படுகின்றது.

திருஞானசம்பந்தர் கூறும் அருவ அகவழிபாடு சைவசித்தாந்த நூல்களில் யோகம் என்று கூறப்படுகின்றது. திருவுந்தியாரில் யோக வழிபாடானது ஆதாரயோகம், நிராதார யோகம் என்று இரு வகைப்படுத்திக் கூறப்படுகின்றது[6].

## 9.2. திருஞானசம்பந்தர் தேவாரமும் திருக்களிற்றுப்படியாரும் :

இறைவன் மனம், காயம், வாக்கு இம்மூன்றிலும் இருப்பதைத் திருஞானசம்பந்தர்,

> *"சிந்தை யிடையார் தலையின் மிசையார்*
> *செஞ்சொல்லார்"*(2 : 196 : 1)

என்று கூறுவது போல

> *"சிந்தையிலும் என்றன் சிரத்தினிலும் சேரும்வண்ணம்*
> *வந்தவனை"*[7]

என்று திருக்களிற்றுப்படியார் ஆசிரியர் கூறுகின்றார்.

திருஞானசம்பந்தர் இறைவன், "உள்ளமுருகி லுடனாவார்" (2 : 247 : 3) என்று கூறுவது போல, "உள்ளம் உருகவந் துன்னடனாம்"[8] என்று திருக்களிற்றுப்படியாரில் கூறப்படுகின்றது.

இறைவன் திணைப்பாகுபாட்டையும், பால்பாகுபாட்டையும் கடந்தவன் என்ற பொருளில்,

> *"பெண்ணாணலியாகும்"*( :9 :3)

என்று திருஞானசம்பந்தர் கூறுவது போல,

*"ஆணாகிப் பெண்ணாய் அலியாகி நின்றானும்"*[9]

என்று திருக்களிற்றுப்படியாரில் கூறப்படுகின்றது.

இறைவன் எல்லாம் ஆனவர் என்ற பொருளில்

*"எல்லாமா மெம்பெரு மான்"* (2 : 152 : 9)

என்று திருஞானசம்பந்தர் கூறுவதற்கு ஒப்பாகத் திருக்களிற்றுப்-படியாரிலும்,

*"எல்லாமாய் நிறுகு மிவன்"*[10]

என்று கூறப்படுகின்றது.

அன்பினால் நினைப்பவர் உள்ளத்தில் அமர்பவன் இறைவன் என்ற கருத்தை,

*"காதலால்நினை வார்தம கத்தனே"* (3 : 373 : 3)
"விரும்பி வழிபட்டால்
ஆவியுள் நீங்கல னாதிமூர்த்தி" (3 : 363 : 3)

என்று திருஞானசம்பந்தர் கூறுவது போலத் திருக்களிற்றுப்படியார் ஆசிரியரும்,

*"ஆரேனும் அன்பு செயின் அங்கே தலைப்படுங்காண்*
*ஆரேனுங் காணா அரன்"*[11]

என்று கூறுகிறார்.

உலகு, உயிர் இவை இறைவனிடத்திலிருந்து தோன்றி அவனிடத்தே ஒடுங்குதலைத் திருஞானசம்பந்தர்,

*"விரிந்தனை குவிந்தனை விழுங்குயிருமிழ்ந்தனை"*
(2 : 166 : 3)

என்று கூறுகிறார். இதற்கு ஒப்பாக,

"*விரிந்தும் குவிந்தும் விழுங்குவார்கள்*"[12]

என்ற திருக்களிற்றுப்படியார் பாடல் தொடர் அமைந்துள்ளது.

இறைவன் உயிர்களோடு ஒன்றாய், வேறாய், உடனாய் நிற்கும் கருத்தைத் திருஞானசம்பந்தர் விளக்கும் முறையில் அமைந்த,

"*ஈறாய்முத லொன்றாயிரு பெண்ணாண்குணமூன்றாய்*
*மாறாமறை நான்காய்வரு பூதம்மவையைந்தாய்*
*ஆறார்சுவை யேழோசையொ டெட்டுத்திசைதானாய்*
*வேறாயுட னானானிடம் வீழிம்மிழலையே*" ((1 : 11 : 2)

என்ற திருவீழிமிழலைப் பதிகப் பாடலுக்கு ஒப்பாக,

"*ஈறாகி அங்கே முதலொன்றாய் ஈங்கிரண்டாய்*
*மாறாத எண்வகையாய் மற்றவற்றின் வேறாய்*
*உடனாய் இருக்கும் உருவுடைமை யென்றுங்*
*கடனாயிருக்கின்றான் காண்*"[13]

என்று திருக்களிற்றுப்படியார் பாடல் அமைந்துள்ளது.

திருக்களிற்றுப்படியாரில் 'சிவதன்மம்' (இறைவனுக்குச் செய்யும் தொண்டு) வல்வினை, மெல்வினை எனப் பாகுபடுத்தப்பட்டுள்ளது.[14] திருஞானசம்பந்தர் இவ்வாறு பாகு படுத்திக் கூறவில்லை. திருக்களிற்றுப்படியாரில் கூறப்படும் இப்பாகு பாட்டிற்கான காரணம் சிந்தித்தற்குரியது. திருக்களிற்றுப் படியாரில் பெரிய புராணத்தில் கூறப்படும் நாயன்மார்கள் பலர் போற்றப்படு கின்றனர். அந்நாயன்மார்களுள் சிலர் இறைவனுக்குச் செய்த தொண்டுகள் மக்களால் பின்பற்றுவதற்கு அரியவை. அவை வல்வினை எனலாம். சில தொண்டுகள் மக்களால் பின்பற்றுவதற்கு எளியவை. அவை மெல்வினை எனலாம். பெரியபுராணத்தில் கூறப்படும் நாயன்மார்களின் வரலாறுகளே திருக்களிற்றுப்படியாரில் சிவதன்மத்தை வல்வினை, மெல்வினை எனப் பாகுபாடு செய்ய அடிப்படையாயிற்று எனலாம். இதனைத் திருக்களிற்றுப்படியார் ஆசிரியர் வல்வினைக்கு உதாரணமாகச் சிறுத் தொண்ட நாயனார்,

சண்டேசுவரர், அரிவாட்டாயநாயனார் இவர்களைக் கூறுவதிலிருந்து உணரலாம்.[15]

திருஞானசம்பந்தர் இறைவன் ஞானசிரியனாக வந்து அருமறை உரைத்த செய்தியைக் கூறுகிறார். (3 : 324 :5, 1 :100 :2, 3 : 278 : 2). ஆனால் ஞானசிரியனின் அவசியத்தை வலியுறுத்திக் கூறவில்லை. திருக்களிற்றுப்படியாரில் ஞானாசிரியனின் அவசியம் வற்புறுத்தப்படுகின்றது.[16]

## 9.3. திருஞானசம்பந்தர் தேவாரமும் சிவஞான போதமும் :

கல்லாலின் நிழலில் இருக்கும் தெய்வமாகிய சிவம் அல்லாத பிறிதொரு தெய்வத்தை மெய்யுணர்ந்த ஞானிகள் பொருளாகக் கொள்ளார். ஆகையால் நாங்களும் அவற்றைப் பொருட்படுத்தோம் என்று,

> *"கல்லானிழல், அல்லாத்தேவை*
> *நல்லார்பேணார், அல்லோ நாமே"*(3 :298 :1)

என்று திருஞானசம்பந்தர் கூறுகிறார். இதற்கு ஒப்பாக,

> *"கல்லால் நிழன்மலை*
> *வில்லா ரருளிய*
> *பொல்லா ரிணைமலர்*
> *நல்லார் புனைவரே"*

என்று சிவஞானபோதக் கடவுள் வாழ்த்து அமைந்துள்ளது.

திருஞானசம்பந்தர் இறைவனை,

> *"அந்தமுமாதியு மாகியவண்ணல்"* (1 :39 : 1)
> "அந்தமாதி"(1 :73.:9)

என்று கூறுவது போலச் சிவஞானபோதமும்,

*"அந்தம் ஆதி என்மனார் புலவர்"*[17]

என்று கூறுகின்றது.

ஐம்புலன்களும் தத்தம் பொறிகளை விட்டு வழிமாறி அறிவிழந்து வருந்தும் காலத்து அஞ்சேல் என்று அபயம் தந்தருள் பவன் இறைவன் என்பதைத் திருஞானசம்பந்தர்,

*"புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி*
*யறிவழிந்திட் டைம்மேலுந்தி*
*அலமந்த போதாக வஞ்சேலென்*
*றருள்செய்வா னமருங்கோயில்"*(1 : 130 : 1)

என்ற பாடல் தொடரால் குறிப்பிடுகின்றார். இதற்கு ஒப்பாக ஐம்பொறிகளின் வயப்பட்டு மயங்கித் திரியும் உயிர்களுக்கு அவை முற்பிறவிகளில் செய்த தவத்தால் இறைவன் குருவாக வந்து ஆட்செய்தலை,

*"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்*
*தம்முதல் குருவுமாய்த் தவத்தினிலுணர்த்தவிட்டு"*[18]

என்று சிவஞானபோதம் கூறுகின்றது.

திருஞானசம்பந்தர் ஐந்து பதிகங்களில் (2 :220 : 11, 2 : 221 : 11, 3 :273 : 11, 3 :336 :11, 3 :376 :11) "ஆணை" என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். அவர் சக்தியின் சிவஞானப்பால் உண்டு பாடும் ஆற்றல் பெற்றுத் தம் திருவாக்கை ஆணை என்கிறார். மெய்கண்ட தேவர் சக்தியையே "ஆணை" என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார்.[19]

உயிர்கள் இறைவனை நினையவொட்டாமல் உடம்பிலுள்ள ஐம்பொறிகள் அவைகளை உலகியலை நோக்கி இழுக்கின்றன என்று கூறவரும் திருஞானசம்பந்தர், உடம்பினைக் குறிப்பிடும்போது, "மாய காயம்" என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார்.

*"ஆயமாய காயந்தன்னு ளைவர்நின்றொன்*
*றலொட்டார்"*(1 :50 :7)

என்பது திருஞானசம்பந்தர் வாக்காகும். மெய்கண்ட தேவரும் உடம்பினை "மாயா இயந்திர தனு" என்ற சொற்றொடரால் குறிப்பிடுகின்றார்.[20]

சிவஞானபோதத்தில் உயிர்கள் இறைவனை அடையும் நிலைகள் அவத்தைகள் எனக் குறிப்பிடப்படுகின்றன.[21] திருஞான சம்பந்தர் அவத்தைகள் பற்றிக் கூறவில்லை.

## 9.4. திருஞானசம்பந்தர் தேவாரமும் சிவஞான சித்தியாரும் :

இறைவன் எங்கும் நிறைந்து நிற்றலை,

*"எங்குமாகி நின்றான்"*(2 : 142 :6)
"எங்குமாய் இருப்பார்"(3 :370 :7)

என்று திருஞானசம்பந்தரும்,

*"எங்குமுளன் இறைவன்'*[22]

என்று அருணந்தி சிவாசாரியாரும் கூறுகின்றனர்.

*"எல்லாமா மெம்பெரு மான்"* (2 : 152 :9)

என்ற திருஞானசம்பந்தரின் வாக்கிற்கு ஒப்பாக,

*"ஒருவனே யெல்லா மாகி'*[23]

என்ற சிவஞானசித்தியார் தொடர் அமைந்துள்ளது.

இறைவன் உலகிற்கு உயிராய் நிற்றலை,

*"உலகுக் குயிராய் நின்றான்"* (3 :306 :6)

என்ற திருஞானசம்பந்தரின் தொடரும்,

*"உலகினுக் குயிரு மாகி'*[24]

என்ற சிவஞானசித்தியாரின் தொடரும் உணர்த்துகின்றன.

ஒருவனாகிய இறைவன் பல வேடங்களில் காட்சி தருவதைத் திருஞானசம்பந்தர்,

*"ஒன்றும்பலவு மாயவேடத் தொருவர்"* (1 :68 :5)

"வேடம் பலபல காட்டும் விகிர்தனம் வேத முதல்வன்" (2 :204 :10)

"பலபல வேடமாகும் பரனாரிபாகன்"(2 :221 :9)

என்று கூறுகிறார். இவ்வாறு மாறுபட்ட பல வடிவங்களை இறைவன் கொண்டு நிற்றலைச் சிவஞானசித்தியார் ஆசிரியர்,

*"ஒன்றொடொன் றொவ்வா வேடம் ஒருவனே தரித்துக் கொண்டு'*[25] *என்று கூறுகின்றார்.*

இறைவன் உலகப் பொருள்களோடு ஒன்றாய், வேறாய் உடனாய் இருத்தலைத் திருஞானசம்பந்தர்,

*"..........தானாய்*
*வேறாயுடனானானிடம்"*(1 :11 :2)

என்கிறார். இதற்கு ஒப்பாக,

*"உலகெலா மாகி வேறாய் உடனுமாய்'*[26]

என்ற சிவஞானசித்தியார் தொடர் அமைந்துள்ளது.

இறைவன் இப்படிப்பட்ட தன்மையுடையவன் என்று கூற இயலாதது என்பதை,

*"எந்தை யாரவ ரெவ்வகையார் கொலோ"*(3 :312 :3)

என்று திருஞானசம்பந்தர் கூறுகின்றார். இதற்கு ஒப்புமையுடையதாக,

*"எந்தைதான் இன்ன னென்றும் இன்னதா மின்ன தாகி*
*வந்திடா னென்றுஞ் சொல்ல வழக்கொடு மாற்ற*
*மின்றே'*[27]

என்ற சிவஞானசித்தியார் தொடர் அமைந்துள்ளது.

இறைவனே உயிர்களைத் தன்னைத் தொழும்படிச் செய்விப்பவன் என்பதைத் திருஞானசம்பந்தர்,

*"தொழுவிப்பார்"*(1 : 45 : 1)

என்று கூறுவது போலச் சிவஞானசித்தியாரில்,

*"வணங்க வைப்பவன்"*[28]

என்று கூறப்படுகின்றது. திருஞானசம்பந்தர்,

*"சேர்வார்தாமே தானாகச் செயுமவன்"* (1 : 126 : 7)

என்று கூறுவது போல,

*"...தனையடைந்தார் தம்மைத்*
*தானாக்கி"*[29]

என்று சிவஞானசித்தியாரின் ஆசிரியர் அருணந்தி சிவாசாரியார் கூறுகின்றார்.

இறைவன் திருவடி ஞானத்தால் உயிர்கள் இறைவனை அடையும் என்பதைத் திருஞானசம்பந்தர்,

*"அடிஞா னம்வல்லா ரடிசேர் வார்களே"* (1 : 87 : 11)

என்கிறார். இது,

*"சிவனைஅவன் திருவடிஞா னத்தாற் சேர"*[30]

என்று சிவஞானசித்தியாரில் கூறப்படுகிறது.

திருஞானசம்பந்தர் குறிப்பிடும் "ஆணை" (2 : 220 : 11, 2 : 221 : 11, 3 : 273 : 11, 3 : 336 : 11, 3 : 376 : 11) என்ற சொல் சிவஞானசித்தியாரிலும் கையாளப்பட்டுள்ளன.[31]

திருஞானசம்பந்தர் பாடலில் வரும் 'பராவு சிவர்' (3 : 325 : 6) என்ற சொற்றொடர் சிவஞானசித்தியாரிலும்[32] எடுத்தாளப்பட்டுள்ளது.

திருஞானசம்பந்தர் இறைவன் செய்யும் தொழில்கள் பற்றிக் குறிப்பிடுகின்றார். ஆனால் இறைவன் அத்தொழில் ஆற்றுவதற்குரிய தத்துவத்தை விளக்கிக் கூறவில்லை. சிவஞானசித்தியாரில் இறைவன் ஐந்தொழில் ஆற்றுவதன் தத்துவம் விளக்கப்படுகின்றது.[33] உயிர்களின் ஆணவமலம் பரிபாகம் அடையப் படைத்தலும், கன்மமலம் கழியும் வரை நுகர்ச்சியில் நிலைநிறுத்த மறைத்தலும், உயிர்களுக்கு அருள்புரியும் பொருட்டு அருளல் தொழிலும் நடைபெறுகின்றன என்று சிவஞானசித்தியாரில் கூறப்படுகின்றது.[34] இந்த ஐந்தொழில்களையும் இறைவன் உயிர்களிடம் கொண்ட கருணையில் செய்கின்றான் என்பர்.[35]

திருஞானசம்பந்தர் சிவத்தையும் சக்தியையும் ஆணும் பெண்ணுமாகப் பாடுகின்றார். சிவஞானசித்தியாரிலும் அவ்வாறு கூறப்படுகின்றது.[36] மேலும் சிவத்திலிருந்து சக்தி தோன்றுவதாகவும், சக்தியிலிருந்து சிவம் தோன்றுவதாகவும் தத்துவங்கள் தோன்றும் முறையில் கூறப்படுகின்றது.[37]

திருஞானசம்பந்தர் சக்தியை வகைப்படுத்திக் கூறவில்லை. சிவஞானசித்தியாரில் சக்தி, இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி என மூன்றாக வகைப்படுத்திக் கூறப்படுகின்றது.[38]

திருஞானசம்பந்தர் அவத்தைகள் பற்றி வெளிப்படையான விளக்கம் கூறவில்லை. சிவஞானசித்தியாரில் அவத்தைகளின் வகைகள்,[39] அப்பொழுது தொழிற்படும் கருவிகள்[40] பற்றிக் கூறப்படுகின்றன. மேலும் காரண அவத்தைகளில் உயிரின் இயல்புகள் பற்றியும் விளக்கப்படுகின்றன.[41]

திருஞானசம்பந்தர் உயிர்களை வகைப்படுத்திக் கூறவில்லை. சிவஞான சித்தியாரில் உயிர்கள் ‘விஞ்ஞானகலர்’, ‘பிரளயா கலர்’, ‘சகலர்’, என வகைப்படுத்திக் கூறப்படுகின்றன.[42] ஆணவ மலம் மட்டும் உடைய உயிர்கள் விஞ்ஞானகலர் எனப்படுவர். ஆணவம், கன்மம் என்ற இரு மலம் உடைய உயிர்கள் பிரளயாகலர் எனப்படுவர். ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலமுடைய உயிர்கள் சகலர் எனப்படுவர்.[43]

"படைப்புக்காலம் முதல் ஊழிக்காலம் வரை தன் தன்மை மாறாது நிலைத்து உள்ள பொருள்கள் தத்துவங்கள் எனப்படும்" என்பர்.[44] இத்தத்துவங்கள் வகைப்படுத்தப்பட்டோ, விளக்கியோ திருஞானசம்பந்தர் தேவாரத்தில் கூறப்படவில்லை.

*"ஒன்றொன்றொடொன்று மொருநான்கொடைந்து*
*மிருமூன்றொடேழுமுடனாய்"*(2 : 224 : 4)

என்ற திருஞானசம்பந்தர் பாடல் தொடரில் தத்துவங்கள் இருபத்தைந்து சுட்டப்படுகின்றன.[45] சிவஞானசித்தியாரில் முப்பத்தாறு தத்துவங்கள் விளக்கிக் கூறப்படுகின்றன.[46] இவற்றுள் முதல் இருபத்து நான்கு தத்துவங்கள் அசுத்த தத்துவங்கள் என்றும், அடுத்த ஏழு தத்துவங்கள் சுத்தாசுத்த தத்துவங்கள் என்றும், அதற்கடுத்த ஐந்து தத்துவங்கள் சுத்த தத்துவங்கள் என்றும் சிவஞானசித்தியாரில் கூறப்படுகின்றன.[47]

திருஞானசம்பந்தர் ஞானம் பற்றிக் குறிப்பிடுகின்றார். ஆனால் அதனை விரித்துக் கூறவில்லை. சிவஞானசித்தியாரில் ஞானமானது ஞானநூல்களைக் கேட்டல், அதன்பின் சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் என நான்காக விரித்துக் கூறப்படுகின்றது.[48] மேலும் 'பாசஞானம்', 'பசுஞானம்', 'பதிஞானம்' பற்றிச் சிவஞானசித்தியாரில் கூறப்பட்டுள்ளது.[49] மேலும் பாச நீக்கத்தின் பொருட்டுச் சகலருக்குச் செய்யப்படும் தீக்கைகளின் வகைகள் பற்றிச் சிவஞானசித்தியாரில் கூறப்பட்டுள்ளது.[50] திருஞானசம்பந்தர் இவைக்ளைக் கூறவில்லை.

## 9.5. திருஞானசம்பந்தர் தேவாரமும் இருபா இருபஃதும் :

இறைவனைத் திருஞானசம்பந்தர்,

*"பெரியாய்சிறி யாய்"*(2 : 156 : 8)
"பெருமையொடு சிறுமையுமாம்"(2 : 184 : 3)

என்று கூறுவது போல இருபா இருபஃதிலும்,

*"பெரியதிற் பெருமையுஞ் சிறியதிற் சிறுமையும்"*[51]

என்று கூறப்படுகின்றது.

அகப்பற்றும் புறப்பற்றும் நீங்கின அன்பர்களுக்குச் சிவன் நல்ல துணைவன் என்பதை,

*"..................யற்றவர்க*
*ணற்றுணைவ"*(3 : 326 : 2)

என்று திருஞானசம்பந்தர் கூறுகிறார்.

உற்றார், பெற்றார் முதலாயினார்பால் எழும் அகப்பற்றும், புறப்பொருள்களின் மாட்டு எழும் புறப்பற்றும் அற்றவர்க்கு இறைவன் வேறாதல் அற்றவன் என்பர்.[52] இதனை,

*"அற்றவர்க் கற்ற சிவன்"* (3 : 378 : 2)

என்று திருஞானசம்பந்தர் கூறுவதற்கொப்பாக,

*"அற்றவர்க் கற்றவன்"*[53]

என்ற இருபா இருபஃது தொடர் அமைந்துள்ளது.

திருஞானசம்பந்தரின் திருப்பாசுரத்தில் நான்காம் பாடல் தொடக்கத்தில் வரும், "ஆட்பா லவர்க்கருள்" (3 : 312 : 4) என்ற சொற்றொடர் இருபா இருபஃது என்ற சாத்திர நூலில்[54] மேற்கோளாக எடுத்தாளப்பட்டுள்ளது.

திருஞானசம்பந்தருக்கு மும்மலக் கோட்பாடு உடன்பாடாயினும், மும்மலங்களின் காரியங்கள் அவர் பாடலில் விளக்கிக் கூறப்படவில்லை. இருபா இருபஃது என்ற சாத்திர நூலில் உயிர்களிடத்துள்ள சில இயல்புகட்கு ஆணவம், கன்மம், மாயை இவை காரணமாகும் என விளக்கிக் கூறப்பட்டுள்ளது.[55]

## 9.6. திருஞானசம்பந்தர் தேவாரமும் உண்மை விளக்கமும் :

திருவைந்தெழுத்தே வேதமாகும்[56] என்ற பொருளில்,

*"வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது"*(3 : 307 : 1)

என்று நமச்சிவாயத் திருப்பதிகத்திலும்,

*"மந்திர நான்மறை யாகி"* (3 : 280 : 2)

என்று பஞ்சாக்கரத் திருப்பதிகத்திலும் திருஞானசம்பந்தர் கூறுகின்றார். இதனை அடியொற்றி மனவாசகங்கடந்தார் உண்மை விளக்க நூலில்,

*"அஞ்செழுத்தே ஆகமும் அண்ணல் அருமறையும்"*[57]

என்று கூறுகின்றார்.

ஐந்தெழுத்தும் இறைவன் திருநடனத்தைக் குறிக்கும் என்பதை,

*"......மன்னு மாநடம்*
*ஆடிஉ கப்பன அஞ்செழுத்துமே"*(3 : 280 : 7)

என்று திருஞானசம்பந்தர் கூறுவது போல,

*"சிவாயநம வென்னுந் திருவெழுத்தஞ் சாலே*
*அவாயமற நின்றாடு வான்"*[58]

என்று உண்மை விளக்க ஆசிரியரும் கூறுகின்றார்.

திருஞானசம்பந்தர் முப்பத்தாறு தத்துவங்களை விளக்கிக் கூறவில்லை. உண்மை விளக்க நூலில் முப்பத்தாறு தத்துவங்கள் விளக்கப்படுகின்றன.[59] மேலும் அவை ஆன்ம தத்துவங்கள், வித்தியா தத்துவங்கள், சுத்த தத்துவங்கள் என மூவகைப்படுத்திக் கூறப்படுகின்றன.[60]

திருஞானசம்பந்தர் திருவைந்தெழுத்திற்குப் பொருள் கூறவில்லை. உண்மை விளக்கத்தில் ஐந்தெழுத்திற்கும் பொருள் கூறப்படுகின்றது.[61] திருவைந்தெழுத்து இறைவன் திருமேனியைக் குறிப்பதாக உண்மை விளக்கத்தில் கூறப்படுகின்றது.[62] திருஞான சம்பந்தர் அதை விளக்கிக் கூறவில்லை.

திருஞானசம்பந்தர் திருவைந்தெழுத்தை ஓதுவதினால் உண்டாகும் பயன்களை விளக்கிக் கூறுவதையும், மந்திரம் என்பது மறைபொருள் உணர்த்துவது[63] என்ற கருத்தையும் இணைத்து எண்ணிய சிந்தனையின் விளைவே ஐந்தெழுத்திற்குத் தத்துவ விளக்கம் தரும் முயற்சியாயிற்று எனலாம்.

திருஞானசம்பந்தர் முக்தி பற்றிப் பொதுவாகக் கூறுகின்றார். உண்மை விளக்கத்தில், முக்தி இன்பத்தை நுகர்ந்து கொண்டிருப்பது உயிராகும், அதற்கு இடையீடின்றி அவ்வின்பத்தை வழங்கி வருவது சிவமாகும்; அவ்வின்பத்தை இயைத்து நிற்பது மலமாகும் என்று முக்தியில் முப்பொருள்களின் நிலைமை விளக்கப்படுகின்றது.[64]

## 9.7. திருஞானசம்பந்தர் தேவாரமும் சிவப்பிரகாசமும்:

இறைவன் உயிர்களின் உயிருக்குயிராய் நிற்றலை,

> *"..........வுயிர்கட்கு முயிரா*
> *யுளன்"*(3 :377 :3)

என்றும்,

> *"உயிர்க்குயிரா யங்கங்கே நின்றான்"*(1 :132 :4)

என்றும் திருஞானசம்பந்தர் கூறுவது போல,

> *"உயிர்க்குயிராய் நிற்ற லானும்"*[65]

என்று சிவப்பிரகாசம் இறை இயல்பைக் கூறுகின்றது.

தன்னைத் தொழும் அடியவர்கள் நினைக்கும் உருவத்தில் இறைவன் தோன்றுபவன் என்பதை,

*"நினைவோர் வேடமாம் ஆதி"* (1 : 28 : 10)

என்று திருஞானசம்பந்தர் கூறுவதற்கு ஒப்பாக,

*"நினைந்தஉரு நிமலன்"*[66]

என்று சிவப்பிரகாச ஆசிரியர் உமாபதிசிவமும் கூறுகின்றார்.

*"கழலிணை*

*தாளையே பரவுந் தவத் தார்க்கருளாயே"*(2 : 189 : 3)

"சாய்ந்தடிபரவுந் தவத் தார்க்கருளாயே" (2 : 189 : 4)

என்ற தொடர்களால் திருஞானசம்பந்தர் தவம் உடையவர்களுக்கு இறைவன் அருள் புரிதலைக் கூறுகிறார்.

*"ஈட்டிய தவத்தி னாலே இறைஅரு ளுருவாய் வந்து"*[67]

என்று சிவப்பிரகாசத்தில் கூறப்படுகின்றது.

திருஞானசம்பந்தர் இறைவன் ஐந்தொழில் ஆற்றுவதன் காரணத்தை விளக்கவில்லை; சிவப்பிரகாசத்தில் இறைவன் ஐந்தொழில் ஆற்றுவதன் தத்துவம் விளக்கப்படுகின்றது.[68]

திருஞானசம்பந்தர் உயிரின் அவத்தைகள் பற்றி விளக்கிக் கூறவில்லை. சிவப்பிரகாசத்தில் மூவகை அவத்தைகளில் உயிரின் இயல்புகள் யாவை என விளக்கிக் கூறப்பட்டுள்ளன.[69]

திருஞானசம்பந்தர் மூவகை உயிர்கள் பற்றிக் கூறவில்லை. சிவப்பிரகாசத்தில் மூவகை உயிர்கள் பற்றியும், அவற்றிற்கு அருளும் முறை பற்றியும் கூறப்பட்டுள்ளது.[70] மேலும் மாயேய மலமாவது கலையாதி மண்ணந்தமாயுள்ள தத்துவங்களாகத் தோன்றி நின்று ஒடுங்கும் தன்மைத்தாகிய மாயாகாரியம் எனக் கூறுவர் என்று சிவப்பிரகாசத்தில் கூறுமிடத்தில்[71] தத்துவங்கள் பற்றிய குறிப்பும்

அமைந்துள்ளது. திருஞானசம்பந்தர் தத்துவங்களை விளக்கிக் கூறவில்லை.

திருஞானசம்பந்தர் ஐந்தெழுத்திற்கும் பொருள் கூறவில்லை. சிவப்பிரகாசத்தில் ஐந்தெழுத்திற்கும் பொருள் கூறப்படுகின்றது.[72]

திருஞானசம்பந்தர் ஞானம் பற்றிப் பொதுவாகக் குறிப்பிடுகின்றார். சிவப்பிரகாசத்தில் ஞானமானது ஞானத்தில் ஞானம், ஞானத்தில் யோகம், ஞானத்தில் கிரியை, ஞானத்தில் சரியை என விளக்கப்படுகின்றது.[73]

## 9.8. திருஞானசம்பந்தர் தேவாரமும் திருவருட்பயனும்:

திருஞான சம்பந்தர் இறைவனை அகர எழுத்திற்கு ஒப்பிட்டு, " அகர முதலானை யணியாப்ப னூரானை " (1 : 88 : 5) என்று கூறுகின்றார். இதை அடியொற்றி உமாபதிசிவமும் தம் திருவருட் பயனில்,

*"அகர உயிர்போல் அறிவாகி எங்கும்*
*நீகரில் இறை நிற்கும் நிறைந்து"*[74]

என்கிறார்.

*"நுண்ணியான் மிகப்பெரியான்"* (1 :61 :6)

என்று திருஞானசம்பந்தர் இறைவனின் நுண்மையினையும், பெருமை யையும் கூறுகின்றார்.

*"பரப்புறுபுகழ்ப் பெருமை யாளன்"* (2 :165 :8)

என்று திருஞானசம்பந்தர் இறைவனின் பெருமையையும்,

"பேராளன்"(2 : 184 : 3)
"பேரருளாளர்"(1 :77 :3, 3 :315 :3)

என்று இறைவனின் பேரருள் தன்மையையும்,

*"அருமையில் அளப்பரி தாயவனே"* (2 : 261 : 5)

என்று இறைவனின் அருமையையும்,

*"...... தன்னொப் பிலாத்*
*தூயவன்"*(1 : 113 : 2)
தன்னேர் பிறரில் லானை"(2 : 198 : 3)

என்று இறைவனின் ஒப்பில்லாத தன்மையையும் கூறுகின்றார். திருஞானசம்பந்தர் கூறுகிற இறைவனின் நுண்மை, பெருமை, பேரருள்தன்மை, அருமை, ஒப்பில்லாத தன்மை இவை அனைத்தையும் உள்ளடக்கி உமாபதிசிவம் ஒரே குறள் வெண்பாவில்,

*"பெருமைக்கும் நுண்மைக்கும் பேர்அருட்கும் பேற்றின்*
*அருமைக்கும் ஒப்பின்மை யான்"*[75]

என்கின்றார்.

இறைவன் தன்னைச்சாரும் அடியவர்கட்கு இன்பங்கள் தருவதை,

*"தன்னடைந்தார்க் கின்பங்க டருவானை"* (2 : 176 : 11)
"சார்ந்தவர்க் கின்பங்க டழைக்கும் வுண்ணம்
நேர்ந்தவ"(1 : 113 : 5)

என்று திருஞானசம்பந்தர் கூறுகிறார். இறைவனைத் தொழுதேத்தும் அடியவர்கட்கு அவன் அருகில் விளங்குவதை,

*"தொழுதேத்த நணியான்"*(1 : 85 : 5)

என்றும், அடியாரல்லாதவர்கட்கு அவன் எப்பொழுதும் காண்டற்கு அரியவனாய் விளங்குதலை,

*"என்றுமரி யானயல வர்க்கு"*(3 : 337 : 1)

என்றும் திருஞானசம்பந்தர் கூறுகின்றார். இறைவன் அன்பர்க்கு எளியவன், அல்லாதவர்களுக்கு அரியவன் என்ற பொருளில்,

*"அண்ணலன்புசெய் வாரவர்க்கெளியவ*
*ரரியவரல்லார்க்கு"*(3 : 244 : 6)

என்று திருஞானசம்பந்தர் கூறுகிறார். திருஞானசம்பந்தரின் இக்கருத்துக்களை உள்ளடக்கியதாக,

*"நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்*
*சலமிலன் பேர்சங் கரன்"*[76]

என்ற திருவருட்பயன் குறள் அமைந்துள்ளது.

திருப்பரிதிநியமம் பதிகப்பயன் பாடலில் தம் பாடல்களால் இறைவனைப் புகழ்ந்து பாடி வணங்கும் அடியவர்கள் பிறப்பு நீங்கித் துன்பம் அடையார்கள் என்பதில் ஐயம் சிறிதும் இல்லை என்ற பொருளில்,

*"ஐயுற வில்லை பிறப்பறுத்தல்*
*அவலம் அடையாவே"*(3 : 362 : 11)

என்று திருஞானசம்பந்தர் கூறுகின்றார். இதற்கு ஒப்பாக இறைவன் பிறவிப் பிணியைத் தீர்க்கும் மருத்துவனாக விளங்குவதில் ஐயம் சிறிதும் இல்லை என்ற பொருளில்,

*"உன்னுமுள தையம் இலதுணர்வாய் ஓவாது*
*மன்னுபவம் தீர்க்கும் மருந்து"*[77]

என்று உமாபதிசிவம் கூறுகின்றார்.

திருஞானசம்பந்தர் ஐந்தெழுத்திற்கும் பொருள் கூறவில்லை. திருவருட் பயனில் ஐந்தெழுத்திற்கும் பொருளும், ஓங்காரம் எனப்படும் பிரணவ மந்திரமும் ஐந்தெழுத்தே என்றும் கூறப்படுகின்றது.[78]

## 9.9. திருஞானசம்பந்தர் தேவாரமும் வினாவெண்பாவும் :

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் இறைவனை நோக்கியும், அடியவர்களை நோக்கியும் இறைவனது இயல்பினைக் குறித்து வினவும் முறையில் சில பதிகங்கள் அமைந்துள்ளன. (1 :4, 1 :6, 1 :7, 2:137-140) அப்பதிகங்கள் வினாவுரை எனக் குறிக்கப் பெற்றுள்ளன.

*''கருத்தனைப்பொழில் சூழுங்கண்டியூர்*
*வீரட்டத்துறை கள்வனை*
*அருத்த னைத்திறம் அடியவர்பால்மிகக்*
*கேட்டுகந்த வினாவுரை''*(3 : 296 : 11)

என்ற திருஞானசம்பந்தரின் பாடல் தொடரால் வினாவுரை என்ற பெயர் திருஞான சம்பந்தராலேயே இடப்பெற்றது எனக் கருதலாம்.

வினா வெண்பா என்ற சா்த்திர நூலில் வினாக்கள் மட்டும் எழுப்பப்பட்டு விடை பிற சாத்திர நூல்களிலிருந்து உய்த்துணரும்படி அமைந்துள்ளன.

## 9.10. திருஞானசம்பந்தர் தேவாரமும் போற்றிப்பஃறொடையும் :

திருஞானசம்பந்தர் இறைவனின் உருவ வருணனையைக் கூறுவது போலப் போற்றிப்பஃறொடையிலும்[79] இறைவனின் உருவ வருணனை கூறப்படுகின்றது.

திருஞானசம்பந்தர் இறைவனை 'என் உள்ளம் கவர் கள்வன்' (1 : 1 : 1) என்று கூறியதற்கொப்பாக,

*''உள்ளம்என்றும் நீங்கா தொளித்திருந்து தோன்றிநிற்குங்*
*கள்ளம்''*[80]

என்ற போற்றிப்பஃறொடைத் தொடர் அமைந்துள்ளது.

திருஞானசம்பந்தர் மூவகை உயிர்கள் பற்றிக் கூறவில்லை. போற்றிப்பஃறொடையில் மூவகை உயிர்கள் பற்றியும், அவைகளுக்கு இறைவன் அருள் செய்யும் முறை பற்றியும் கூறப்படுகின்றன.[81]

## 9.11. திருஞானசம்பந்தர் தேவாரமும் உண்மைநெறி விளக்கமும் :

திருஞானசம்பந்தர்,

*"சேர்வார்தாமே தானாகச் செயுமவன்"*(1 : 126 : 7)

என்று கூறுவதற்கு ஒப்பாக உண்மை நெறி விளக்க ஆசிரியர்,

*"தனக்கென ஓர் செயலற்றுத் தான்அதுவாய் நிற்கில்*
*.....பேதமற நின்றுஇவனைத் தானாக்கி விடுவன்"*[82]

என்று கூறுகின்றார்.

உண்மை நெறிவிளக்கம், உயிர்கள் ஞானம் பெறுதலைப் பத்துப் படிநிலைகளில் வைத்துத் தசகாரியம் என்ற தலைப்பில் விளக்குகின்றது.[83] திருஞானசம்பந்தர் இவ்வாறு வகைப்படுத்தி விளக்கவில்லை.

## 9.12. திருஞானசம்பந்தர் தேவாரமும் கொடிக்கவியும் :

இறைவன் உணர்தற்கு அரியவன் என்பதைத் தெரிவிக்கும்,

*"உணர்கில்லாப் பெருமான்"* (1 : 87 : 10)
"உணர்வரியான்"(1 : 42 : 9)

என்ற திருஞானசம்பந்தரின் பாடல் தொடருக்கு ஒப்பாக,

*"வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்*
*தாக்கா துணர்வரிய தன்மையன்"*[84]

என்ற கொடிக்கவித் தொடர் அமைந்துள்ளது.

திருஞானசம்பந்தர் திருமயிலாப்பூர் பதிகத்தில் (2 : 183), ஆலயத்தில் நடைபெறுகின்ற திருவிழாக்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். ஆனால் கொடியேற்றத்தைப் பற்றி வெளிப் படையாகக் கூறவில்லை. கொடிக்கவி என்னும் சாத்திர நூல் தில்லையில் கொடியேறாமல் தடைபட்ட பொழுது உமாபதிசிவம் வந்து கொடியேறும் பொருட்டுப் பாடிய நூலாதலால் கொடியேற்றுதலின் தத்துவம் அந்நூலில் விளக்கப்படுகின்றது.

கொடிக்கவி என்னும் சைவசித்தாந்த நூலில் திருவைந்தெழுத்தானது அஞ்செழுத்து, எட்டெழுத்து, ஆறெழுத்து, நாலெழுத்து, பிஞ்செழுத்து, பெருவெழுத்து, பேசும் எழுத்து, பேசா எழுத்து என்று கூறப்படுகின்றது.[85] இதில் ஐந்தெழுத்து என்பது சிவாயநம என்பதையும், எட்டெழுத்து என்பது ஓம் ஆம் ஔம் சிவாயநம என்பதையும், ஆறெழுத்து என்பது ஓம் நமச்சிவாய என்பதையும், நாலெழுத்து என்பது ஓம் சிவாய என்பதையும், பிஞ்செழுத்து, பேசும் எழுத்து என்பன வகரமாகிய அருளையும், பெருவெழுத்தும், பேசா எழுத்தும் சிகரமாகிய சிவத்தையும் குறிக்கும் என்பர்.[86] திருஞானசம்பந்தர் இதனைக் கூறவில்லை.

## 9.13. திருஞானசம்பந்தர் தேவாரமும் நெஞ்சுவிடுதூதும் :

இறைவனின் இயல்புகள்,

*"அரியாயெளி யாய்", "பெரியாய்சிறி யாய்"* (2 : 156 : 8)

எனத் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் எதிர்மறைச் சொற்களால் விளக்கப்படுவது போல நெஞ்சுவிடு தூதிலும்,

*"அரியான் எளியான்", "பெரியான் சிறியான்"*[87]

என விளக்கப்படுகின்றது.

திருஞானசம்பந்தர் அடியவர்கட்கு நாளும் கோளும் தீங்கு செய்யா என்ற பொருளில் 'வேயுறு தோளிபங்கன்' எனத் தொடங்கும்

பதிகம் (2:221) பாடியுள்ளார். அது கோளறு பதிகம் என்று கூறப்படும். அப்பதிகக் கருத்தை அடியொற்றியது போல,

> *"........இருபொழுதும்*
> *நாள்இருபத் தேழும் நவக்கிரக மும் நலியுங்*
> *கோள் இதுவென் றெண்ணிக் குறிப்பரோ"*[88]

என்று இறையடியார்கள் இரவும், பகலும் இருபத்தேழு நட்சத்திரமும் நவக்கிரகமும் கோள்களினாலே வரப்பட்ட நலந்தீங்குகளென்று நினையார் என நெஞ்சுவிடு தூதில் கூறப்படுகின்றது. திருஞான சம்பந்தர் இறைவனுக்குத் தசாங்கம் கூறவில்லை. தசாங்கம் என்பது ஓர் அரசர்க்கு இருப்பனவாகிய பத்து உறுப்புக்களாகும். அவை மலை, ஆறு, நாடு , ஊர், தார், குதிரை, யானை, கொடி, முரசு, ஆணை என்பனவாம்.[89] அரசர்க்குரிய இவ்வுறுப்புக்களை இறைவனுக்கும் ஏற்றிக் கூறுவதும் உண்டு. நெஞ்சுவிடு தூதில் தசாங்கம் பற்றிக் கூறப்படுகின்றது.[90]

## 9.14 திருஞானசம்பந்தர் தேவாரமும் சங்கற்ப நிராகரணமும் :

> *"சார்ந்தவர்க் கின்பங்க டழைக்கும் வண்ணம்*
> *நேர்ந்தவன்"*(1 : 113 : 5)

என்ற திருஞானசம்பந்தரின் பாடல் தொடருக்கு ஒப்பாக,

> *"சலம்இல னாகிச் சார்ந்தவர்க் கென்றும்*
> *நலம்மிக நல்கும் ந்ாதன்"*[91]

என்றும்,

> *"........கடவுளைச்*
> *சேர்ந்தவர்க் கின்பம் வாய்த்திடும்"*[92]

என்றும் சங்கற்ப நிராகரணத்தில் கூறப்பட்டுள்ளது.

> *"சேர்வார்தாமே தானாகச் செயுமவன்"*(1 : 126 : 7)

என்ற திருஞானசம்பந்தரின் தொடரை அடியொற்றியதாகத்

*"தாமே தானாகச் செய்தனன்"*[93]

என்ற சங்கற்ப நிராகரணத் தொடர் அமைந்துள்ளது.

முடிவுகள் :

1. திருஞானசம்பந்தர் தேவாரத்திற்கும் சைவசித்தாந்த நூல்கட்கும் இடையே காணப்படும் சொற்றொடர் ஒப்புமை விளக்கம் சைவசித்தாந்த நூலாசிரியர்கள் திருஞான சம்பந்தர் தேவாரத்தை மூலமாகக் கொண்டிருந்ததைப் புலப்படுத்தும்.
2. திருஞானசம்பந்தர் தேவாரத்தில் இறைவன் ஐந்தொழில் ஆற்றுவதன் தத்துவம், மூவகை உயிர்கள், உயிர்களின் அவத்தைகள், அப்பொழுது உயிர்களின் இயல்புகள், முப்பத்தாறு தத்துவங்கள், தசகாரியம், ஐந்தெழுத்திற்கு பொருள் கூறல் போன்ற சில தத்துவ விளக்கங்களே காணப்படவில்லை.
3. சில தத்துவ விளக்கங்கள் கூறப்படாமைக்குக் காரணம் திருஞானசம்பந்தரின் பாடல்கள் அவரது அனுபவ நிலையை விளக்குவனவாய் உள்ளமையே ஆகும்.
4. திருஞானசம்பந்தரால் கூறப்படாமல் சைவசித்தாந்த நூலாசிரியர்கள் சிலரால் கூறப்படும் தத்துவ விளக்கங் களிலிருந்து, செம்மைப்படுத்தப்பட்ட சைவ சமயக் கருத்துக்களே சைவசித்தாந்தக் கோட்பாடுகளாகும் எனத் தெரிய வருகின்றது.

## குறிப்புக்கள்

1. முத்துக்குமாரத் தம்பிரான் (தொ.ஆ.), திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் உரை, ப.8.
2. திருவுந்தியார், 4.
3. மேலது, 44.
4. மேலது, 7.
5. மேலது, 15.
6. மேலது, 8.
7. திருக்களிற்றுப்படியார், 100.
8. மேலது, 14.
9. மேலது, 88.
10. மேலது, 45.
11. மேலது, 15.
12. மேலது, 67.
13. மேலது, 86.
14. மேலது, 16.
15. மேலது, 18, 19, 20.
16. மேலது, 6.
17. சிவஞானபோதம், சூத்., 1.
18. மேலது, சூத்., 8.
19. மேலது, சூத்., 2.
20. மேலது, சூத்.,, 3.
21. மேலது, சூத்., 4.
22. சிவஞானசித்தியார் சுபக்கம், 303.
23. மேலது, 47.
24. மேலது, 68.

25. மேலது, 71.

26. மேலது, 91.

27. மேலது, 64.

28. மேலது, 287.

29. மேலது, 307.

30. மேலது, 295.

31. மேலது, 121.

32. மேலது, 287.

33. பின்னிணைப்பு எண். 16.

34. சிவஞானசித்தியார் சுபக்கம், 57.

35. (i) மேலது.

(ii) "The Siddhantin is definitee in his view that for all his power, Siva is love and love, Siva. It is because of His Love, that He engages in the five fold activity of creation, maintenance etc."

- V.A. Devasenapathy, of Human Bondage and Divine Grace, P.27.

36. சிவஞானசித்தியார் சுபக்கம், 89, 167.

37. மேலது, 167.

38. மேலது, 83.

39. மேலது, 222-227.

40. (i) மேலது, 223.

(ii) பின்னிணைப்பு எண் 17.

41. சிவஞானசித்தியார் சுபக்கம், 228-230.

42. மேலது, 254.

43. மேலது.

44. க.வச்சிரவேல் முதலியார், 'சைவம்', சைவமும் வைணவமும், ப.71.

45. தத்துவம் இருபத்தைந்தும் இவ்வாறு (1 +1 +1 +4 +5 +6 +7) தொகுத்து உரைக்கப்பட்டன என்பர்.

*- முத்து.சு.மாணிக்கவாசக முதலியார், குறிப்புரை, இரண்டாவது திருமுறை, ப.420.*

46. (i) சிவஞானசித்தியார் சுபக்கம், 144-159.
(ii) பின்னிணைப்பு எண் 18.

47. (i) சிவஞானசித்தியார் சுபக்கம், 160.
(ii) பின்னிணைப்பு எண் 19.

48. சிவஞானசித்தியார் சுபக்கம், 276.

49. மேலது, 293-295.

50. தீக்கையானது செய்து வைக்கும் முறையில் நயனதீக்கை, பரிசதீக்கை, வாசகதீக்கை, மானசதீக்கை, சாத்திரதீக்கை, யோகதீக்கை, ஔத்திரித்தீக்கை என ஏழு வகைப்படும்.

*- சிவஞானசித்தியார் சுபக்கம், 255.*

செய்யப்படுவோரின் அகவளர்ச்சி அடிப்படையில் சமயதீக்கை, விசேடதீக்கை, நிர்வாணதீக்கை, ஆசாரிய அபிஷேகம் என நான்கு வகைப்படும்.

*- மேலது, 257.*

51. இருபா இருபஃது 6.

52. கா.சுப்பிரமணிய பிள்ளை, மெய்கண்ட நூல்கள் உரைநடை, ப.195.

53. இருபா இருபஃது, 20.

54. மேலது, 2.

55. மேலது, 4.

56. ஐந்தெழுத்து என்பது 'நமசிவாய' என்பதாகும். இதனைச் 'சிவயநம' என்றும் சொல்வதும் உண்டு. திருவைந் தெழுத்துக்களில் சிகரம் சிவனையும், வகரம் அருளையும், யகரம் உயிரையும், நகரம் திரோதானத்தையும், மகரம் மலத்தையும் குறிக்கும் என்பர் (உண்மை விளக்கம், 41). இவற்றுள் வகரமாகிய அருள் சிவத்துள் அடங்கும். திரோதானம் மலங்களுள் ஒன்றாகக் கூறப்படுவதால் மலத்துள் அடங்கும். இறைவனின் மறைப்பாற்றலான திரோதானம் உயிர்களின் பக்குவ காலத்தில் அருளாக வெளிப்படுதலால் திரோதானம் அருளிலும் அடங்கும். எனவே எஞ்சி நிற்பது சிவம், உயிர், மலம் எனப்படும் முப்பொருள்களாகும். வேதங்கள் கூறும் பொருட்கள் இம்முப்பொருட்களில் அடங்குமாதலால் திருவைந் தெழுத்தே வேதமாகும் என்கின்றனர் எனலாம்.

57. உண்மை விளக்கம், 44.

58. மேலது 31.

59. (i) மேலது, 4-21

(ii) பின்னிணைப்பு எண் 18.

60. (i) உண்மை விளக்கம், 17-20

(ii) பின்னிணைப்பு எண் 19.

61. சி - சிவன்

வ - அருள்

ய - உயிர்

ந - திரோதானம்

ம - மலம்

*"சிவன்அருள் ஆவி திரோதம் மலம்ஐந்தும்*
*அவன் எழுத்து அஞ்சின் அடைவாம்"*

*- உண்மை விளக்கம், 41.*

62. நகரம் - திருவடியையும்,
மகரம் - வயிற்றையும்,
சிகரம் - தோள்களையும்,
வகரம் - திருமுகத்தையும்,
யகரம் - திருமுடியையும் குறிக்கும் என்பர்.

*- உண்மை விளக்கம், 32.*

மேலும்,

சிகரம் - துடியுடை கரத்தையும்,
வகரம் - நன்றாக வீசிய கரத்தையும்,
யகரம் - அஞ்சேல் எனக் காட்டும் கரத்தையும்,
நகரம் - நெருப்பேந்திய கரத்தையும்,
மகரம் - முயலகன் பொருந்திய திருவடியையும் குறிக்கும்.

*- மேலது, 33.*

63. *"நிறைமொழி மாந்தர் ஆணையின் கிளந்த*
*மறைமொழி தானே மந்திரம் என்ப"*

*- தொல். 1434.*

64. உண்மை விளக்கம், 50.

65. சிவப்பிரகாசம், 15.

66. மேலது.

67. மேலது 68.

68. (i) சிவப்பிரகாசம், 18.
(ii) பின்னிணைப்பு எண். 16.

69. சிவப்பிரகாசம், 33, 37, 48.

70. மேலது, 8.

71. மேலது 14, 15.

72. மேலது 91.

73. மேலது, 95-98

74. திருவருட்பயன், 1.

75. திருவருட்பயன், 3.

76. மேலது, 7.

77. மேலது, 10.

78. (i) திருவருட்பயன் 82.

(ii) கு.சுந்தரமூர்த்தி (உ.ஆ.), திருவருட்பயன், ப.52.

79. போற்றிப்பஃறொடை, கண்ணி 63-68.

80. மேலது, கண்ணி 84.

81. மேலது, கண்ணி 60-62

82. உண்மைநெறி விளக்கம், 6.

83. பின்னிணைப்பு எண். 10.

84. கொடிக்கவி, 3.

85. மேலது,4.

86. (i)பழைய உரை, 'கொடிக்கவி', சித்தாந்த சாத்திரம் மூலமும் உரையும், சமாசம், பக். 1110-1111.

(ii) "சிவத்தை உணர்தற்குத் திருவருள் காரணமாய் இருத்தலின் அத்திருவருட்சக்தியின் குறியீடாக விளங்கும் வகரத்தைப் 'பிஞ்செழுத்து' என்றார். அதனால் அடையதக்கதும், அதனினூஉங்கு அடையத்தக்க தொன்றும் இல்லாததுமான சிவபரம் பொருளைக் குறிக்கும் குறியீடான சிகரத்தை 'மேலைப்பெருவெழுத்து' என்றார். திருவருள் சிவத்தோடு உயிரைக் கூட்டுதலால் அதனைப் 'பேசும் எழுத்து' என்றார். தான் எவற்றினும் தொடக்குண்ணாததும், தன்னின் மேலாக எதுவும் இல்லாததுமாக விளங்கும் பரம்பொருள் சிவமாதலின் அதனைப் பேசா எழுத்து என்றார்",

- *கு. சுந்தரமூர்த்தி (ப.ஆ.), கொடிக்கவியும், வினா வெண்பாவும், ப.4.*

87. நெஞ்சுவிடுதூது, கண்ணி 5.

88. மேலது, கண்ணி 126

89. வெண்பாப் பாட்டியல், செய்யுளியல், நூற்பா 19

90. நெஞ்சுவிடு தூது, கண்ணி 39-129.

91. சங்கற்ப நிராகரணம், 'ஈசுவர அவிகாரவாதி சங்கற்பம்' வரி 60-61.

92. மேலது, 'ஈசுவர அவிகாரவாதி நிராகரணம்', வரி 38-39.

93. மேலது, 'நிமித்தகாரண பரிணாமவாதி சங்கற்பம்', வரி 73.

# 10. முடிவுரை

இவ்வாய்வேட்டின் இயல்களில் கூறப்பட்ட முடிவுகள் இங்குத் தொகுத்துத் தரப்படுகின்றன. மேலும் இவ்வாய்வினால் ஏற்பட்ட பயனும், மேலும் எவ்வித ஆய்வுகள் செய்ய இது வழிகாட்டும் என்பதும் இங்குக் கூறப்படுகின்றன.

திருஞானசம்பந்தரின் இயற்பெயர் எந்நூலிலும் குறிப்பிடப் படவில்லை. மூன்று வயதிலேயே இறைவியால் ஞானப்பால் கொடுத்து ஆட்கொள்ளப்பட்டுத் திருஞானசம்பந்தர் என்ற காரணச் சிறப்புப் பெயர் பெற்றதால் அவருடைய இயற்பெயர் நாளடைவில் தெரிய வராமல் மறைந்தது எனலாம்.

திருஞானசம்பந்தரின் வாழ்க்கை வரலாறே பல சைவசித்தாந்த உண்மைகளை விளக்குவதற்கு ஓர் இலக்கியம் போல் அமைந்துள்ளது. திருஞானசம்பந்தரை இறைவன் ஆட்கொண்டதாகக் கூறப்படும் நிகழ்ச்சி, இறைவனே உயிர்களுக்கு இறங்கி வந்து அருள்புரியும் பண்பை உணர்த்தும். இறைவி, திருஞானசம்பந்தருக்கு மகன் என்ற முறையில் ஞானப்பால் கொடுத்து ஆட்கொண்டதாகக் கூறப்படுவதே அவர் மகன் வழியை (சத்புத்திரமார்க்கம்) விளக்க வந்த குரவர் எனப் பிற்காலத்தில் கூறக் காரணமாய் அமைகின்றது எனலாம்.

இறைவன் தன் அடியவர்கட்குத் தேவையானவற்றை அவர்கள் வேண்டாமலேயே கொடுப்பவன் என்ற கருத்து, இறைவன் திருஞானசம்பந்தருக்கு ஆற்றியதாகக் கூறப்படும் அற்புதங்களினால் உணர்த்தப்படுகின்றது.

இறைவன் தன் அடியவர்கள் வேண்டுவனவற்றை தன்னால் ஆட்கொளப்பட்டவர்கள் மூலம் நிறைவேற்றுவதும் உண்டு என்பதைத் திருஞானசம்பந்தர் பிறருக்கு இறையருளால் ஆற்றியதாகக் கூறப்படும் அற்புதங்கள் உணர்த்தும்.

திருக்களிற்றுப்படியாரில் கூறப்படும் முத்தருடைய போதம், பெத்தருடைய போதம் போல் அல்ல என்ற கருத்திற்கும், இறைவன்

தான் செய்யும் தன்மைகளைத் தன் அன்பர்களுக்கு ஆக்கிடுவன் என்ற கருத்திற்கும் திருஞானசம்பந்தர் போன்ற நாயன்மார்கள் வாழ்வில் நடைபெற்றதாகக் கூறப்படும் அற்புத நிகழ்ச்சிகளே அடிப்படையாய் அமைகின்றன எனலாம்.

திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசரின் திருவேடத்தைத் தூரத்தே கண்டபொழுதே வணங்கியதும், பல தலங்களிலுள்ள கோயில்களை வழிபட்டதும், மாலற நோயம் மலிந்தவர் வேடத்தையும், ஆலயத்தையும் அரன் எனத் தொழுதல் வேண்டும் என்ற சைவசித்தாந்தக் கோட்பாட்டினை உணர்த்தும்.

திருஞானசம்பந்தர் தம் காலத்தில் வாழ்ந்த அடியவர்களுடன் கொண்ட நட்பானது சீவன் முத்தர்கட்கும் அடியார் கூட்டுறவு அவசியம் என்ற சைவசித்தாந்தம் கோட்பாட்டினை உணர்த்துகின்றது.

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் ஒவ்வொரு பதிகத்திலும் எட்டு, ஒன்பது, பத்தாம் பாடலிலும், பதிக இறுதிப்பாடலிலும் காணப்படும் செய்திகளில் ஓர் ஒழுங்குமுறை காணப்படுகின்றது. சில தத்துவக் கோட்பாடுகளை மக்கள் மனத்தில் நன்கு பதிய வைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் திருஞானசம்பந்தர் இத்தகைய ஓர் ஒழுங்குமுறையைத் தம் பதிகத்தில் கையாண்டிருக்க வேண்டும்.

இராவணன் கைலையை அப்புறப்படுத்த முயன்று அதனால் சிவனால் அம்மலையின்கீழ் நசுக்கப்பட்டான். இராவண்னின் இச்செயல் அவனது ஆணவத்தின் விளைவாகும். இதனால் உயிர்கள் அடையும் துன்பத்திற்கு ஆணவமே காரணம் என்பது உணர்த்தப்படுகின்றது.

திருமாலும் பிரமனும் தன்னுடைய அடியையும் முடியையும் காணமுடியாமல் இறைவன் சோதிவடிவாய் நின்றதாகக் கூறப்படும் செய்தி, உருவம் உடைய இறைவன் உருவத்தை கடந்த நிலையிலும் இருக்கின்றான் என்ற சைவசித்தாந்தக் கோட்பாட்டினை உணர்த்து கின்றது. மேலும் உயிர்கள் பாசஞானத்தாலோ, பசுஞானத்தாலோ இறைவனைக் காண முடியாது; பதிஞானத்தாலேயே காணமுடியும்

என்ற சைவசித்தாந்தக் கோட்பாடும் இதனால் உணர்த்தப் படுகின்றது. இச்செய்தி சில முக்கிய சைவ சித்தாந்தக் கோட் பாட்டினை விளக்குவதற்கு அடிப்படையாக அமைவதால் சைவ சித்தாந்த நூலாசிரியர்கள் சிலராலும் இந்நிகழ்ச்சி சுட்டிக் கூறப்படு கின்றன எனலாம்.

கடவுள் நம்பிக்கையற்ற புறச்சமயத்தாரின் கூட்டுறவை விலக்க வேண்டும் என்று திருஞானசம்பந்தர் தம்கால மக்களுக்கு அறிவுறுத்துவது உயிர்கள் பதிஞானம் பெற்றாலும் வீடுபேறு அடையும் வரையில் பண்டைய வாசனாமலம் தாக்காதிருக்க வேண்டுமானால் அடியவர்களுடனேயே கூட்டுறவு கொள்ள வேண்டும் என்ற சைவசித்தாந்தக் கோட்பாட்டினை உணர்த்துகின்றது. பதிக இறுதிப் பாடல் ஆலயத்திலுள்ள இறைவனை வணங்கிப் போற்றுவதால் வினை நீங்கி வீடுபேறு அடையலாம் என்பதனைக் கூறுகின்றது.

திருஞானசம்பந்தரின் பதிக இறுதி நான்கு பாடல்களின் கருத்துக்கள் சிவஞானபோதம் பன்னிரண்டாம் சூத்திரத்திற்கு விளக்கவுரையாக அமைந்துள்ளது.

சைவசித்தாந்த சாத்திர நூல்களில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் மட்டும் கூறப்படாமல், பிற சமய வாதமும், நிராகரிப்பும் காணப்படுவதற்குத் திருஞானசம்பந்தர் சிவனையே முழுமுதற் கடவுளாகப் பாடும் தம் நூலில் புறச்சமயம் பற்றிக் கூறியிருப்பது வழிகாட்டியாக உள்ளது எனலாம்.

சைவசித்தாந்த நூல்கள் பதினான்கு என்று கூறுவது மதுரைநாயகம் பிள்ளையின் காலத்தை ஒட்டி ஏற்பட்ட வழக்கெனக் கருதலாம். மெய்கண்ட சாத்திரங்களில் காலத்தால் முற்பட்டது திருவுந்தியார் ஆகும். ஆனால் சாத்திர நூல்களின் தொகுப்பில் மூன்றாவதாக அமைந்துள்ள சிவஞானபோதமே முதல் நூலாகக் கூறப்படுகின்றது. ஏனென்றால் திருவுந்தியாரில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் முழுமையாகக் கூறப்படவில்லை. ஆனால் சிவஞான-போதம் முப்பொருளின் உண்மையையும், இலக்கணத்தையும் கூறும்

பொதுப்பகுதியையும், வீட்டிற்குரிய ஞானநெறியையும், அந்நெறியில் நின்றார் பெறும் பயனையும் கூறும் சிறப்புப்பகுதியையும் உடைய முழுமுதல் நூலானதால் தகுதி பற்றி முதல் நூலாகக் கூறப்படுகின்றது. மேலும் அதன் ஆசிரியரான மெய்கண்ட தேவர், அகச்சந்தான ஆசிரியர்களுள் ஒருவரான பரஞ்சோதி முனிவரிடமிருந்து நேரடியான ஞானம் பெற்றவர் எனக் கருதப்படுவதும், ஏனைய புறச்சந்தான ஆசிரியர்களுள் இவரே தலைமை வாய்ந்தவராயிருப்பதும் காரணமாக அமையும்.

திருஞானசம்பந்தர் காட்சி அளவையால் கடவுளைக் கண்டு பதி ஒன்று உண்டு என்ற உண்மையைக் கூறுகின்றார். சைவசித்தாந்த நூல்கள் தருக்க நூல்களாதலால் அவற்றுள் கடவுள் இல்லை என்று கூறும் பிற மதங்களின் கொள்கைகள் காரண காரியங்களோடு மறுக்கப்பட்டுப் பதி உண்மை உரையளவையால் மெய்ப்பிக்கப் பட்டுள்ளது.

திருஞானசம்பந்தர் கடவுளைப் பல பெயர்களால் அழைக்கின்றார். சைவசித்தாந்த நூல்கள் தத்துவ ஆய்வு காரணமாகப் பெரும்பாலும் இறைவனைப் பெயர் சுட்டிக் கூறவில்லை. இறைவன் உயிர்களின் வினைகளை நீக்குவதால் அரன் என்ற பெயராலும், மலத்திலிருந்து நீங்கியவனாதலாலும், மங்கலக் குணத்தனாதலாலும் சிவன் என்றும், உயிர்களுக்கு சுகத்தைச் செய்வதால் சங்கரன் என்றும் சைவசித்தாந்த நூல்களில் சில இடங்களில் சுட்டப்படுகின்றான்.

திருஞானசம்பந்தர் கூறும் பதி இயல்புகளே மெய்கண்ட சாத்திர நூல்களில் பதி இயல் கோட்பாடுகளாக வளர்ந்துள்ளன எனலாம். திருஞானசம்பந்தர் இறைவனைப் பிறப்பும் இறப்பும் இல்லாதவன் என்று கூறுவது சைவசித்தாந்த நூல்களில் பதி அநாதி என்று கூற ஏதுவாகிறது எனலாம்.

திருஞானசம்பந்தர் இறைவனை உலகிற்கு ஆதி, நடு, அந்தமானவன் என்கின்றார். இக்கருத்து சைவசித்தாந்த நூல்களில்

சங்காரகாரணனான இறைவன் உலகத் தோற்றக்காரணனாகி, முத்தொழில் புரிவதாகக் கூறப்படுகின்றது.

இறைவன் உயிர்களின் தலைவன் என்று திருஞானசம்பந்தர் தேவாரத்தில் போற்றப்படுவது, சைவசித்தாந்த நூல்களில் முப் பொருட்களுள் பதியே தலைமைப் பொருள் என்று கூறப்படுகிறது.

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் கூறப்படும் அர்த்தநாரீசுவர வடிவம் பற்றிய கருத்து சைவசித்தாந்த நூல்களில் இறைவனுக்கும் சக்திக்கும் உள்ள தொடர்பு பிரிப்பற்ற தாதான்மிய சம்பந்தமுடையது என்று கூற ஏதுவாகிறது எனலாம்.

திருஞானசம்பந்தர் சக்தியைப் பெண்ணாக உருவகித்துப் பாடுகின்றார். சைவசித்தாந்த நூல்களில் சக்தி இறைவனின் அருளாக, ஆற்றலாகக் கூறப்பட்டாலும், இறைவன் உருவம் எடுக்கும்போது சக்தியும் பெண்ணுருவம் எடுப்பதாகச் சிவஞான சித்தியாரில் கூறப்படுகின்றது. இல்லறத்திலிருந்து வீடுபேறு அடைய முடியாது என்ற கொள்கை கொண்ட, பெண்மையைத் தாழ்த்திப் பேசும் சமணர்கள் மிகுந்த காலத்தில் இல்லறத்திலிருந்து வீடுபேறு அடையலாம் என்பதை உணர்த்தவும், பெண்மையை உயர்த்திக் காட்டவும் திருஞானசம்பந்தர் இறைவனை ஆணும் பெண்ணுமாகப் பாடியிருக்கலாம். மேலும் இறைவன் அம்மையப்பர் வடிவில் தோன்றி ஞானப்பால் கொடுத்துத் திருஞானசம்பந்தரை ஆட்கொண்டதாகக் கூறப்படும் நிகழ்ச்சியும் ஒரு காரணமாகலாம்.

திருஞானசம்பந்தரும் சைவசித்தரந்த நூலாசிரியர்களும் இறைவன் பல உருவங்களில் தோன்றும் வல்லமையுடையவன் என்று கூறுகின்றனர்.

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் இறைவன் உருவத் திருமேனி கொண்டு ஆற்றியதாகக் கூறப்படும் செயல்களே. சைவ சித்தாந்த நூல்களில் இறைவன் உருவத் திருமேனி எடுப்பதன் காரணங்களைக் கூற ஏதுவாகின்றன எனலாம்.

சிவஞானசித்தியாரில் கூறப்படும் இறைவனின் போகவடிவம், வேக வடிவம், யோக வடிவம் என்ற பாகுபாட்டிற்குத் திருஞான சம்பந்தரின் பாடல்களே கருப்பொருளாகின்றன.

திருஞானசம்பந்தர் இறைவனின் உருவம் பற்றியும், அருவம் பற்றியும் கூறுகின்றார். அருவுருவம் பற்றி வெளிப்படையாகக் குறிப்பிடாவிடினும், அவர் இறைவன் சோதி வடிவமானவன் என்று கூறும் கருத்து அருவுருவ நிலையைக் குறிக்கும். எனவே சைவ சித்தாந்த நூல்களில் இறைவன் உருவம், அருவம், அருவுருவம் என மூவகை மேனியுடையவன் எனக் கூறப்படுவதற்குத் திருஞான சம்பந்தர் பாடல்கள் அடிப்படையாகின்றன எனலாம்.

இறைவனுக்கு உருவம் கூறப்பட்டாலும் அவன் உலகப் பொருட்களில் ஒருவனாக இல்லாது வேறுபட்டவன் என்ற கருத்தை உணர்த்தும் சிவஞானசித்தியார் பாடலுக்கான கருப்பொருட்கள் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் உள்ளன.

திருஞானசம்பந்தர் இறைவனை மும்மூர்த்தி என்றும், மும்மூர்த்திகளின் தலைவன் என்றும் கூறுவது சைவசித்தாந்த நூல்களில் இறைவனே முத்தொழில்கள் . புரிவதாகவும், பிரமன், திருமால், உருத்திரன் இவர்களைக் கொண்டு அத்தொழில்களைச் செய்விப்பதாகவும் கூற அடிப்படையாகின்றது.

தம் பாடல்களில் பல இடங்களில் இறைவனின் உருவத்தையும், அவன் ஆற்றிய வீரச்செயல்களையும் விளக்கும் திருஞானசம்பந்தர், சில இடங்களில் இறைவன் அத்தகைய உருவமுடையவன் அல்லன் என்றும், வீரச்செயல்களைச் செய்யவில்லை என்றும் கூறுவது சைவசித்தாந்த நூல்களில் இறை இயல்புகளைப் பொது இயல்புகள், சிறப்பியல்புகள் எனப் பாகுபடுத்தக் காரணமாகின்றது எனலாம்.

திருஞானசம்பந்தர் இறைவனுக்கு உலகத்தோடும், உயிர்களோடும் உள்ள தொடர்புகளாக ஒன்றாதல், வேறாதல், உடனாதல் எனக் கூறுவது சைவசித்தாந்த நூல்களில் அத்துவிதம் என்பதற்கு விளக்கம் கூற ஏதுவாகிறது எனலாம்.

திருஞானசம்பந்தர் இறைவனின் பண்புகள் உயிர்களால் புரிந்து கொள்ள முடியாதவை என்றும், உயிர்கள் ஞானத்தின் துணை கொண்டு இறைவனை அணுக வேண்டும் என்றும் கூறுகின்றார். இது சைவ சித்தாந்த நூல்களுள் இறைவன் உயிர்களின் பசு ஞானத்தாலோ, பாசஞானத்தாலோ அறியப்பட முடியாதவன், பதி ஞானத்தாலேயே உணரப்படுபவன் என்று கூறும் கருத்திற்கு அடிப்படையாகும்.

சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்களுக்குரிய தத்துவக் கலைச்சொற்களான பதி, பசு, பாசம் என்பன திருஞானசம்பந்தர் தேவாரத்திலும் காணப்படுகின்றன. சைவசித்தாந்த நூல்கள் இம்முப் பொருள்களும் அநாதி என்று கூறுகின்றன. திருஞான சம்பந்தர் தேவாரத்தில் அநாதி என்ற சொல் காணப்படாவிடினும் அதற்குரிய கருத்துக்கள் அமைந்துள்ளன.

உயிர் அநாதி; உயிர்கள் பல; உயிர்கள் பாசத்தால் பிணிக்கப்பட்டவை; உயிர்கள் பல பிறவிகளை எடுக்கின்றன. உயிர்கள் இறைவனின் உடைமை; உயிர்கள் வெவ்வேறுவிதமாக இறைவனால் ஆட்கொள்ளப்படுகின்றன, முதலாத் கருத்துக்களைத் திருஞான சம்பந்தரும், சைவசித்தாந்த நூலாசிரியர்களும் கூறுகின்றனர்.

திருஞானசம்பந்தர், 'உயிர்கள் அறிவிக்க அறியும் தன்மையுடையன; மறக்கும் தன்மையுடையன; என்று உயிரறிவு பற்றிக் குறிப்பிடுகின்றார். இதனைச் செம்மைபடுத்தி, 'உயிர்கள் அறிவுப் பொருள்களாகும், ஆனால் தாமே அறியாமல் அறிவிக்க அறியும் தன்மையுடையன; ஒவ்வொன்றாக அறிகின்றன; பொறிகளின் உதவியால் அறிகின்றன; பொருட்களில் அழுந்தி அறிகின்றன; அறிந்தவைகளை மறக்கின்றன என்று சைவசித்தாந்த நூலாசிரியர்கள் விரிவாகக் கூறுகின்றனர்.

திருஞானசம்பந்தர் இறைவன் உயிர்களுக்குக் கண்ணாக விளங்குவதையும், உயிர்களுக்கு அறிவு கொடுப்பதையும் கூறுகின்றார். இது சைவசித்தாந்தத்தில் இறைவன் உயிர்கள்

அறியும்பொழுது அறியப்படு பொருளைத் தானும் உடன் நின்று அறிகின்ற காணும் உபகாரத்தையும், உயிர்களின் அறிவை விளக்கி அவைகளை அறியச் செய்யும் காட்டும் உபகாரத்தையும் செய்வதாகக் கூறப்படுகின்றது.

திருஞானசம்பந்தர் உயிர்களுக்கு பிறப்பு இறைவனால் கொடுக்கப்படுகின்றது என்றும், அவ்வாறு உயிர்கள் பிறப்பதற்கு அவைகளின் வினைகளே காரணமாகும் என்றும் கூறு கின்றார்.சைவசித்தாந்த நூலாசிரியர்கள் உயிர்களின் பிறப்பிற்கு இறைவன் நிமித்த காரணன் ஆவான் என்றும், உயிர்கள் செய்த வினைகளும், சிற்சக்தியும் துணைக்காரணங்களாகும் என்றும் கூறுகின்றனர்.

உயிர்களுக்குப் பிறவி தொடர்ந்துவரும் என்பது திருஞானசம்பந்தர்பாடலில் குறிப்பாய் அமைந்துள்ளது. மேலும் பிறவிதொடர்ந்து வருவது எப்படி என அதில் விளக்கப்படவில்லை. சிவஞானசித்தியாரில் பிறவிஎப்படித் தொடர்கிறது என்பது விளக்கப்படுகின்றது.

உயிர்களின் யோனியும் அச்சும் பிறவிதோறும் மாறும் என்று சிவஞானசித்தியாரில் கூறப்படும் கருத்திற்குத் திருஞானசம்பந்தர் சிலந்தி கோச்செங்கட் சோழனாகப் பிறந்ததாகக் கூறும் வரலாறு எடுத்துக்காட்டாய் அமைகின்றது எனலாம்.

திருஞானசம்பந்தர் உயிர்களின் மறுபிறவி மாறி அமையும் என்பதை வலியுறுத்திக் கூறுவதைவிட, இறைவழிபாட்டால் உயிர்களுக்கு மறுபிறப்பு உண்டாகாது என்ற கருத்தையே அதிகம் வலியுறுத்துகின்றார். இதற்கு அவர் காலச்சூழலே காரணமாகும் எனலாம்.

திருஞானசம்பந்தர் உயிர்கள் பிறப்பினால் ஏற்படும் உலகச்சார்பினால் துன்பம் அடைதலையும், பேரின்ப வடிவான இறைவனை அடைதலால் இன்பம் பெறுதலையும் கூறுவது, உயிர்கள்

சார்ந்ததன் வண்ணமாந் தன்மையுடையது என்ற சைவசித்தாந்தக் கோட்பாட்டிற்கு ஏதுவாகின்றது.

திருஞானசம்பந்தர் இறைவன் உயிர்கள் உணராவண்ணம் மறைந்து நிற்பதாகவும், உணரும் வண்ணம் வெளிப்படத் தோன்றுவதாகவும் கூறுவது, சைவசித்தாந்த நூல்களில் முறையே இறைவனின் திரோதான சக்தி என்றும், அருட்சக்தி என்றும் கூறப்படுகின்றன.

மேலும் திருஞானசம்பந்தர் உயிரியல்புகள் பற்றிக் கூறும் சில குறிப்புக்கள் சைவசித்தாந்த நூல்களில் செம்மைப்படுத்தப்பட்டுக் கோட்பாடுகளாக அமைகின்றன. எடுத்துக்காட்டாக, பக்குவம் அடைந்த உயிர்களை இறைவன் ஆட்கொள்வான் என்று திருஞானசம்பந்தர் கூறுகிறார். ஆனால் பக்குவம் என்றால் என்ன என்பதை விளக்கவில்லை. இதனை இருவினைஒப்பும், மலபரிபாகமும் அடைந்த உயிர்களிடத்து இறைவனது திருவருள் பதியும் என்று சைவசித்தாந்த நூலாசிரியர்கள் கூறுகின்றனர்.

இறைவன் உயிர்களைப் பலவாறு ஆட்கொள்வதாகத் திருஞானசம்பந்தர் கூறும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு, சைவசித்தாந்த நூலாசிரியர்கள் நீதியே வடிவான இறைவன் உயிர்களை வெவ்வேறு விதமாக ஆட்கொள்வதற்குரிய காரணம் யாது எனச் சிந்தித்து, உயிர்களைத்தகுதியின் அடிப்படையில் மூவகைப் படுத்துகின்றனர். இங்குத்தகுதி என்பது உயிர்கள் மலங்களால் பிணிக்கப்பட்டுள்ள வேறுபாட்டினைக் குறிக்கும்.

பாசம், மலம், தளை போன்ற தத்துவக் கலைச்சொற்கள் திருஞானசம்பந்தர் தேவாரத்திலும் காணப்படுகின்றன. பாசம் அநாதி என்பதையும், ஆணவம் - மூலமலம் - இருள் - உயிரின் குற்றம் என்பன போன்ற பாச இயல் கருத்துக்களைத் திருஞானசம்பந்தரும், சைவசித்தாந்த நூலாசிரியர்களும் கூறியுள்ளனர்.

மலம் என்ற சொல் பொதுவாக மூவகை மலங்களைக் குறித்தாலும், சிறப்பாக ஆணவத்தைக் குறிக்கும் பொருளிலேயே

திருஞானசம்பந்தர் தேவாரத்திலும், சைவசித்தாந்த நூல்களிலும் காணப்படுகின்றன.

பாசம் என்ற சொல் பொதுவாக ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களைக் குறித்தாலும், திருஞானசம்பந்தர் பாடல்களில் பாசம் என்ற சொல் கன்மத்தைக் குறிக்கும் பொருளில் அமைந்துள்ளது.

உயிர்களுக்கு வினைப்பயனைச் சேர்ப்பிப்பவன் இறைவன் என்பது முக்கியமான சைவசித்தாந்தக் கோட்பாடாகும். திருஞானசம்பந்தர் இறைவன் உயிர்களுக்கு வினைப்பயனைச் சேர்ப்பிப்பான் என்ற கருத்தை விட, உயிர்கள் இறைவழிபாட்டால் வினையிலிருந்து விடுதலை பெறும் என்ற கருத்தையே அதிகம் வலியுறுத்திக் கூறுகிறார். ஏனென்றால் அவருடைய காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த பௌத்த, சமண சமயங்கள், வினைப் பயனானது உயிர்களைத் தாமே சென்றடையும்; சேர்ப்பிக்க ஒருவன் வேண்டாம்; உயிர்கள் வினைப்பயனைத் தப்பாது அனுபவிக்கும் என்ற கொள்கையுடையவை. எனவே அக்கால மக்களிடையே இறை நம்பிக்கையை ஊட்டுவதற்காக, வினைக்கொள்கையை இறைக் கொள்கையுடன் இணைத்துக் கூறுகிறார் எனலாம்.

உயிர்கள் வினைப்பயனை அனுபவிக்கும்; இறைவழிபாட்டால் வினைநீக்கம் பெறும்; என்ற முரண்பட்ட இரு கருத்துக்களை இணைத்துச் சிந்தித்தன் விளைவே பிற்காலச் சைவசித்தாந்த நூல்களில் வினைகளை மூவகை நிலைப்படுத்திக் கூறக் காரணமாகின்றது எனலாம்.

திருஞானசம்பந்தர் பாடல்களில் கூறப்படும் வழிபாட்டின் வகைகள், சிவஞானசித்தியாரில் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப் பாகுபாடு செய்ய அடிப்படையாகத் திகழ்கின்றன எனலாம். இந்நெறிகளில் நிற்போர் செய்யும் வழிபாட்டு முறைகளாகவும், வழி படுவோர் பெறும் பயன்களாகவும் திருஞானசம்பந்தர் கூறும் கருத்துக்களை அப்படியே மாற்றமின்றி அருணந்தி சிவாசாரியார் தம் சிவஞானசித்தியாரில் கூறுகின்றார்.

திருஞானசம்பந்தர் அடியார்வேடம், அடியவரை வழிபடுதல், அவர்களுடன் தொடர்பு கொள்ளல், அத்தொடர்பினால் பெறும் பயன்கள், ஆலயம் சென்று வழிபடுதல் ஆகியவை பற்றிக் கூறும் கருத்துக்களே, சைவசித்தாந்த நூல்களில் அடியார் வழிபாட்டையும், ஆலய வழிபாட்டையும் வலியுறுத்திக் கூற ஏதுவாகிறது எனலாம்.

திருஞானசம்பந்தர் ஐந்தெழுத்தை ஓதுதலால் உண்டாகும் பயன்களை விளக்கி கூறுவது, சைவசித்தாந்த நூல்களில் ஐந்தெழுத்தை ஓதுவது இறைவனை அடையும் சாதனமாகக் கூற ஏதுவாகிறது எனலாம்.

ஐந்தெழுத்தை ஓதுதலின் பயன்களையும், மந்திரம் என்பது மறைபொருள் உணர்த்துவது என்ற கருத்தையும் இணைத்துச் சிந்தித்ததன் விளைவேசைவ சித்தாந்த நூல்களில் ஐந்தெழுத்திற்கும் பொருள் கூறும் முயற்சியாயிற்று எனலாம்.

திருஞானசம்பந்தர் தேவாரத்திலுள்ள சொற்றொடர்களுக்கும், சைவ சித்தாந்த நூல்களிலுள்ள சொற்றொடர்களுக்கும் ஒப்புமை காணப்படுகின்றன. இதுவும் சைவ சித்தாந்த நூலாசிரியர்கள் திருஞானசம்பந்தர் தேவாரத்தை மூலநூல்களுள் ஒன்றாகக் கொண்டிருந்ததைப் புலப்படுத்தும்.

திருஞானசம்பந்தரால் கூறப்படாத சித்தாந்த உண்மைகள் மிகச்சிலவே.

இவ்வாய்வினால் ஏற்படும் பயன்கள் பின்வருமாறு :

1. மெய்கண்ட சாத்திரங்களில் கூறப்படும் சைவசித்தாந்தக் கோட்பாடுகள் பலவற்றுக்கும் திருஞானசம்பந்தரின் கருத்துக்கள் அடிப்படையாக உள்ளன என்பது தக்க சான்றுகளுடன் விரிவாக இவ்வாய்வில் காட்டப் பட்டுள்ளது. எனவே சைவசித்தாந்தத்திற்குரிய மூல நூல்களுள் திருஞானசம்பந்தர் தேவாரமும் ஒன்றாகும் என இவ்வாய்வினால் அறிந்து கொள்ள முடிகின்றது.

2. சைவ சித்தாந்தக் கோட்பாடுகள் என்பன மெய்கண்ட சாத்திரங்கள் தோன்றிய காலத்தில்தான் உருவானவை அல்ல. அதற்கும் காலத்தால் முற்பட்ட பழமைவாய்ந்தவை என்பது இவ்வாய்வினால் தெரியவருகின்றது.

3. திருஞானசம்பந்தரால் கூறப்படாமல் சைவசித்தாந்த நூலாசிரியர்களால் மட்டும் கூறப்படும் சில சித்தாந்த விளக்கங்களினால், செம்மைப்படுத்தப்பட்ட சைவ சமயக் கருத்துக்களே சைவசித்தாந்தக் கோட்பாடுகளாகும் எனப் புலனாகின்றது.

4. சைவசித்தாந்தத்திற்குரிய மூலநூலாகத் திருஞான சம்பந்தர் தேவாரம் காட்டப்பட்டதால், இத்தத்துவநெறி தமிழர்கள் கண்ட நெறி என கூறலாம்.

மேலும் இவ்வாய்வு இதுபோல ஏனைய திருமுறைகளையும் சைவசித்தாந்த நூல்களோடு ஒப்பீட்டாய்வு செய்ய வழிகாட்டும்

சைவசித்தாந்தக் கருத்துக்களை வேதாகமக் கருத்துக் களோடும், ஏனைய மதக் கொள்கைகளுடனும், மேலைநாட்டுத் தத்துவக் கருத்துக்களுடனும், வடமொழியிலுள்ள சைவசித்தாந்த நூல்களுடனும் ஒப்பீட்டாய்வுகள் செய்யலாம்.

## பின்னிணைப்பு எண் 1

## இறைவன் திருஞானசம்பந்தருக்கு அருளிய அற்புதங்கள்

| எண் | அற்புதங்கள் | நிகழ்ந்த இடம் | பாடிய பதிகத் தொடக்கம் | திருமுறை: பதிக எண் | அற்புதம் நிகழ்ந்ததற்கான சான்றுகள் |
|---|---|---|---|---|---|
| 1. | ஞானப்பால் கொடுத்தது | திருப்பிரம்ம-புரம் | "தோடுடை செவியன்" | 1:1 | திருஞானசம்பந்தர் தேவாரம், *3:282:2*<br>திருஞானசம்பந்தர் புராணம், *67,68*<br>ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, *13,16,73*<br>ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம், *9*<br>ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை, வரி *5-7*<br>ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்-கோவை, *4* |
| 2. | பொற்றாளம் கொடுத்தது. | திருக்கோலக்-கா | "மடையில் வாளை" | 1:23 | திருஞானசம்பந்தர் புராணம், *103*<br>ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி *34, 40, 82*<br>ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை, *4,19*<br>ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம், *9*<br>ஆளுடையபிள்ளையார் திருவுலாமாலை, கண்ணி;*82*<br>ஆளுடையபிள்ளையார் திருத்தொகை, வரி. *22*<br>சுந்தரர் தேவாரம், *7:62:8*<br>திருக்களிற்றுப்படியார், *70* |

| எண் | அற்புதங்கள் | நிகழ்ந்த இடம் | பாடிய பதிகத் தொடக்கம் | திருமுறை: பதிக எண் | அற்புதம் நிகழ்ந்ததற்கான சான்றுகள் |
|---|---|---|---|---|---|
| 3. | முத்துச்சிவி-கை, குடை சின்னம் கொடுத்தது | திருநெல் வாயில் அரத்துறை | "எந்தை ஈசன்" | 2:226 | திருஞானசம்பந்தர் புராணம், *195*<br>ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி, *40, 83*<br>ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை, *4, 28*<br>ஆளுடையபிள்ளையார் திருவுலாமாலை, *79*<br>ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம், *9*<br>ஆளுடையபிள்ளையார் திருத்தொகை, வரி.*23-25*<br>திருக்களிற்றுப்படியார், *70* |
| 4. | முத்துப்பந்தர் கொடுத்தது | பட்டீச்சரம் | "பாடன்மறை சூடன் மதி" | 3:331 | திருஞானசம்பந்தர் புராணம், *392-395* |
| 5. | பாலை நெய்தல் ஆகப் பாடிய்து | திருநனிபள்ளி | " காரைகள் கூகை " | 2:220 | திருஞானசம்பந்தர் புராணம், *115*<br>ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி, *17*<br>ஆளுடையபிள்ளையார் திருச்சண்பை விருத்தம், *4*<br>ஆளிடையபிள்ளையார் திருவுலாமாலை, கண்ணி, *75*<br>ஆளுடையபிள்ளையார் திருத்தொகை, *17*<br>திருக்களிற்றுப்படியார், *12, 70* |
| 6. | சோதியிற் கலத்தல் | திருநல்லூர் | " கல்லூர்ப் பெருமணம் " | 3:383 | ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி, *60*<br>ஆளுடையபிள்ளையார் திருச்சண்பை விருத்தம், *10*<br>ஆளுடையபிள்ளையார் திருத்தொகை, வரி.*64-65* |

## பின்னிணைப்பு எண் 2
## இறைவன் அருளால் திருஞானசம்பந்தர் பிறருக்கு ஆற்றிய அற்புதங்கள்

| எண் | அற்புதங்கள் | நிகழ்ந்த இடம் | பாடிய பதிகத் தொடக்கம் | திருமுறை: பதிக எண் | அற்புதம் நிகழ்ந்ததற்கான சான்றுகள் |
|---|---|---|---|---|---|
| 1. | முயலகன் நோய் தீர்த்தல் | திருப்பாச்சி-லாச்சிரமம் | "துணி வளர் திங்கள்" | 1:44 | திருஞானசம்பந்தர் புராணம், *318*<br>ஆளுடையபிள்ளையார் திருத்தொகை, வரி *30-32* |
| 2. | பனிநோய் நீக்கல் | திருச்செங் குன்றூர் | "அவ்வினைக் கிவ்வினை" | 1:116 | திருஞானசம்பந்தர் புராணம், *336*<br>ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி, *88* |
| 3. | உலவாக்கிழி பெறுதல் | திரு ஆவடுதுறை | "இடரினும் தளரினும்" | 3:263 | திருஞானசம்பந்தர் புராணம், *426, 427*<br>ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி, *85*<br>ஆளுடையபிள்ளையார் திருவுலாமாலை, கண்ணி *79*<br>ஆளுடையபிள்ளையார் திருத்தொகை, *18*<br>ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை, *1*<br>திருநாவுக்கரசர் தேவாரம் *4:56:1*<br>திருக்களிற்றுப்படியார், *70* |
| 4. | விடம் தீர்த்தது | திருமருகல் | "சடையாய் எனுமால்" | 2:154 | திருஞானசம்பந்தர் புராணம், *481-483*<br>ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி, *49*<br>ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை,<br>ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம், *18*<br>ஆளுடையபிள்ளையார் திருத்தொகை, வரி.*21* |

| எண் | அற்புதங்கள் | நிகழ்ந்த இடம் | பாடிய பதிகத் தொடக்கம் | திருமுறை: பதிக எண் | அற்புதம் நிகழ்ந்ததற்கான சான்றுகள் |
|---|---|---|---|---|---|
| 5. | படிக்காசு பெற்றது | திருவீழி மிழலை | "வாசி தீரவே" | 1:92 | திருஞானசம்பந்தர் தேவாரம் 1:92:1.2<br>சுந்தரர் தேவாரம், 7:88:8<br>ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி, 80<br>ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம், 24<br>ஆளுடையபிள்ளையார் திருத்தொகை வரி. 11<br>ஆளுடையபிள்ளையார் திருவுலாமாலை, கண்ணி 78 |
| 6. | மறைக்கதவு அடைத்தது | திருமறைக் காடு | "சதுரம் மறை" | 2:173 | திருஞானசம்பந்தர் புராணம், 587<br>ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி, 39, 81<br>ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை, 4<br>ஆளுடையபிள்ளையார் திருவுலாமாலை, கண்ணி 76<br>ஆளுடையபிள்ளையார் திருத்தொகை, வரி.25-27 |
| 7. | பாண்டியன் சுரநோய் தீர்த்தது | திரு ஆலவாய் (அரசனின் அரண்மனை-யில்) | "மந்திர மாவது நீறு" | 2:202 | திருஞானசம்பந்தர் தேவாரம் 2:202:11<br>திருஞானசம்பந்தர் புராணம், 765-770<br>ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி, 71<br>திருக்களிற்றுப்படியார், 70 |

| எண் | அற்புதங்கள் | நிகழ்ந்த இடம் | பாடிய பதிகத் தொடக்கம் | திருமுறை: பதிக எண் | அற்புதம் நிகழ்ந்ததற்கான சான்றுகள் |
|---|---|---|---|---|---|
| 8. | அனல்வாதில் வென்றது | திரு ஆலவாய் (அரசனின் பேரவை முன்) | "தளிரிள வளரொளி" (பாடியது) | 3:345 | திருஞானசம்பந்தர் தேவாரம், *3:345:11*<br>திருஞானசம்பந்தர் புராணம், *777-786* |
| | | | "போகமார்த்த" (ஏட்டில் எழுதியது) | 1:49 | ஆளுடையபிள்ளையாரின் திருத்தொகை வரி.*13*, வரி *42.* |
| 9. | புனல்வாதில் வென்றது | திரு ஆலவாய் (வைகை ஆற்றங் கரையில்) | "வாழ்க அந்தணர்" | 3:312 | திருஞானசம்பந்தர் தேவாரம், *3:312:11*<br>திருஞானசம்பந்தர் புராணம், *846*<br>ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக் கோவை, *13*<br>ஆளுடையபிள்ளையார் திருத்தொகை, வரி.*34-35*<br>ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம், *34, 14*<br>ஆளுடையபிள்ளையார் திருவுலாமாலை, கண்ணி *75*<br>திருக்களிற்றுப்படியார், *70* |
| 10. | ஓடம் செலுத்தியது | திருக் கொள்ளம் புதூர் | "கொட்டமே" | *3:264* | திருஞானசம்பந்தர் தேவாரம், *3:264:6*<br>திருஞானசம்பந்தர் புராணம், *898-899*<br>ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை,*4*<br>ஆளுடையபிள்ளையார் திருவுலாமாலை, கண்ணி *76*<br>ஆளுடையபிள்ளையார் திருத்தொகை, வரி.*30-31.*<br>திருக்களிற்றுப்படியார், *70* |

| எண் | அற்புதங்கள் | நிகழ்ந்த இடம் | பாடிய பதிகத் தொடக்கம் | திருமுறை: பதிக எண் | அற்புதம் நிகழ்ந்ததற்கான சான்றுகள் |
|---|---|---|---|---|---|
| 11. | ஆண்பனையைப் பெண்பனை ஆக்கல் | திருவோத்தூர் | "பூத்தேர்ந் தாயன" | 1:54 | திருஞானசம்பந்தர் தேவாரம், *1:54:1*<br>திருஞானசம்பந்தர் புராணம், *980*<br>ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி, *39*<br>ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை, *4*<br>ஆளுடையபிள்ளையார் திருவுலாமாலை, கண்ணி *80*<br>ஆளுடையபிள்ளையார் திருத்தொகை, வரி.*28*<br>திருக்களிற்றுப்படியார், *70* |
| 12. | எலும்பைப் பெண்ணாக்கல் | மயிலாப்பூர் | "மட்டிட்ட புன்னை" | 2:183 | திருஞானசம்பந்தர் புராணம், *1086-1090*<br>ஆளுடையபிள்ளையார் திருத்தொகை வரி. *35-37*<br>திருக்களிற்றுப்படியார், *70* |

## பின்னிணைப்பு எண் 3
## அற்புதங்களுக்கான அகச் சான்றுகள்

| எண் | அற்புதங்கள் | திருஞானசம்பந்தரின் பாடல் தொடர் | திருமுறை எண் பதிக எண் பாடல் எண் |
|---|---|---|---|
| 1. | ஞானப்பால் உண்டது | " போதையார் பொற்கிண்ணத் தடிசில் பொல் லாதெனத் தாதையார் முனிவுறத் தான்எனை யாண்டவன் "<br>" தோற்றங்காட்டி யாட்கொண்டீர் " | 3:282:2<br>2:191:10 |
| 2. | படிக்காசு பெற்றது | " வாசி தீரவே, காசு நல்குவீர் "<br>" கறைகொள் காசினை, முறைமை நல்குமே " | 1:92:1<br>1:92:2 |
| 3. | வெப்புநோய் தீர்த்தது | " ,,,,, தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச் சாற்றிய பாடல்கள் " | 2:202:11 |
| 4. | அனல்வாதில் வென்றது | " கொற்றவ னெதிரிடை யெரியினி லிடலிவை "<br>" எரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே " | 3:345:11<br>3:345:1-10 |
| 5. | புனல்வாதில் வென்றது | " தெற்றென்று தெய்வந் தெளியார் கரைக்கோலை தெண்ணீர்ப் பற்றின்றிப் பாங்கெதிர்வி னூரவும் " | 3:312:11 |

| எண் | அற்புதங்கள் | திருஞானசம்பந்தரின் பாடல் தொடர் | திருமுறை எண் பதிக எண் பாடல் எண் |
|---|---|---|---|
| 6. | ஓடம் விட்டது | " ஓடம் வந் தணையுங் கொள்ளம்புதூர் " | 3:264:6 |
| 7. | ஆண்பனையைப் பெண்பனையாக்கியது | " குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர் " | 1:54:11 |
| 8. | மறைக்கதவு அடைத்தது | " இது நன்கிறை வைத்தருள் செய்த வெனக்குன் கதவந்திருக் காப்புக்கொள் ளுங்கருத்தாலே " | 2:173:1 |
| 9. | சோதியில் கலத்தல் | " நக்கிருந் தீரின்று நல்லூர்ப் பெருமணம் புக்கிருந் தீரெம்மைப் போக்கரு ளீரே " | 3:383:8 |
| | | " நாதனை நல்லூர்ப் பெருமண மேவிய வேதன தாள் தொழ வீடெளி தாமே " | 3:383:10 |

## பின்னிணைப்பு எண் 4
## பன்னிரு திருமுறை வைப்புமுறை

| எண் | திருமுறை | ஆசிரியர் பெயர் | நூல் பெயர் |
|---|---|---|---|
| 1. | முதல் திருமுறை | திருஞானசம்பந்தர் | தேவாரம் |
| 2. | இரண்டாம் திருமுறை | திருஞானசம்பந்தர் | தேவாரம் |
| 3. | மூன்றாம் திருமுறை | திருஞானசம்பந்தர் | தேவாரம் |
| 4. | நான்காம் திருமுறை | திருநாவுக்கரசர் | தேவாரம் |
| 5. | ஐந்தாம் திருமுறை | திருநாவுக்கரசர் | தேவாரம் |
| 6. | ஆறாம் திருமுறை | திருநாவுக்கரசர் | தேவாரம் |
| 7. | ஏழாம் திருமுறை | சுந்தரர் | தேவாரம் |
| 8. | எட்டாம் திருமுறை | மாணிக்கவாசகர் | திருவாசகம் |
| | | | திருக் கோவையார் |
| 9. | ஒன்பதாம் திருமுறை | திருமாளிகைத் தேவர் | திருவிசைப்பா |
| | | சேந்தனார் | திருவிசைப்பா |
| | | | திருப் பல்லாண்டு |
| | | கருவூர்த்தேவர் | திருவிசைப்பா |
| | | பூந்துருத்திநம்பி காடநம்பி | திருவிசைப்பா |
| | | கண்டராதித்தர் | திருவிசைப்பா |
| | | வேணாட்டடிகள் | திருவிசைப்பா |
| | | திருவாலிய முதனார் | திருவிசைப்பா |
| | | புருடோத்தம நம்பி | திருவிசைப்பா |
| | | சேதிராயர் | திருவிசைப்பா |
| 10. | பத்தாம் திருமுறை | திருமூலர் | திருமந்திரம் |
| 11. | பதினோராம் திருமுறை | திருஆலவாய் உடையார் | திருமுகப் பாசுரம் |
| | | காரைக் காலம்மையார் | திருவாலங் காட்டு மூத்த திருப்பதிகம் |
| | | | திருவிரட்டை மணிமாலை |

| எண் | திருமுறை | ஆசிரியர் பெயர் | நூல் பெயர் |
|---|---|---|---|
| | | | அற்புதத் திருவந்தாதி |
| | | ஐயடிகள் காடவர்கோன் | க்ஷேத்திரத் திருவெண்பா |
| | | சேரமான் பெருமாள் நாயனார் | பொன்வண்ணத்தந்தாதி |
| | | | திருவாரூர் மும்மணிக் கோவை |
| | | | திருக்கைலாய ஞானவுலா |
| | | நக்கீரதேவ நாயனார் | கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி |
| | | | திருவீங்கோய் மலை எழுபது |
| | | | திருவலஞ்சுழி மும்மணிக் கோவை |
| | | | திருஎழு கூற்றிருக்கை |
| | | | பெருந்தேவ பாணி |
| | | | கோபப் பிரசாதம் |
| | | | கார் எட்டு |
| | | | போற்றித் திருக் கலிவெண்பா |
| | | | திருமுருகாற்றுப்படை |
| | | | திருக்கண்ணப் பத்தேவர் திருமறம் |
| | | கல்லாடதேவ நாயனார் | திருக்கண்ணப் பத்தேவர் திருமறம் |

| எண் | திருமுறை | ஆசிரியர் பெயர் | நூல் பெயர் |
|---|---|---|---|
| | | கபிலதேவ நாயனார் | மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை |
| | | | சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை |
| | | | சிவபெருமான் திருவந்தாதி |
| | | பரணதேவ நாயனார் | சிவபெருமான் திருவந்தாதி |
| | | இளம்பெருமான் அடிகள் | சிவபெருமான் திருமும் மணிக்கோவை |
| | | அதிராவடிகள் | மூத்த பிள்ளையார் திருமும்மணிக் கோவை |
| | | பட்டினத்துப் பிள்ளையார் | கோயில் நான் மணிமாலை |
| | | | திருக்கழுமல மும்மணிக் கோவை |
| | | | திருவிடைமரு தூர்மும்மணிக் கோவை |
| | | | திருவேகம்ப முடையார் திருவந்தாதி |
| | | | திருவொற்றியூர் ஒருபா ஒருஃபது |
| | | நம்பியாண்டார் நம்பி | திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை |
| | | | கோயில் திருப்பண்ணியர் விருத்தம் |

| எண் | திருமுறை | ஆசிரியர் பெயர் | நூல் பெயர் |
|---|---|---|---|
| | | | திருத் தொண்டர் திருவந்தாதி |
| | | | ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி |
| | | | ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம் |
| | | | ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக் கோவை |
| | | | ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை |
| | | | ஆளுடைய பிள்ளையார் திருக் கலம்பகம் |
| | | | ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை |
| | | | திருநாவுக் கரசு தேவர் திருவேகாதச மாலை |
| 12. | பன்னிரண்டாம் திருமுறை | சேக்கிழார் | பெரிய புராணம் |

## பின்னிணைப்பு எண் 5
## முதல் மூன்று திருமுறைகளின் அமைப்பு

| திருமுறை | பண்கள் | பண்கள் கொண்ட பதிகங்களின் மொத்த எண் | பாடல்களின் மொத்த எண் | பாடப்பட்ட தலங்களின் மொத்த எண் |
|---|---|---|---|---|
| **1.** முதல் திருமுறை | *1.* நட்டபாடை | 22 | | |
| | *2.* தக்கராகம் | 24 | | |
| | *3.* பழந்தக்கராகம் | 16 | 1469 | 90 |
| | *4.* தக்கேசி | 13 | | |
| | *5.* குறிஞ்சி | 28 | | |
| | *6.* வியாழக் குறிஞ்சி | 25 | | |
| | *7.* மேகராகக் குறிஞ்சி | 7 | | |
| | *8.* யாழ்மூரி | 1 | | |
| | | **136** | | |
| **2.** இரண்டாம் திருமுறை | *1.* இந்தளம் | 39 | | |
| | *2.* சீகாமரம் | 16 | 1310 | 88 |
| | *3.* காந்தாரம் | 29 | | |
| | *4.* பியந்தைக் காந்தாரம் | 14 | | |
| | *5.* நட்டராகம் | 14 | | |
| | *6.* செவ்வழி | 10 | | |
| | | **122** | | |

| திருமுறை | பண்கள் | பண்கள் கொண்ட பதிகங் களின் மொத்த எண் | பாடல் களின் மொத்த எண் | பாடப் பட்ட தலங் களின் மொத்த எண் |
|---|---|---|---|---|
| 3. மூன்றாம் திருமுறை | 1. காந்தார பஞ்சமம் | 23 | | |
| | 2. கொல்லி | 18 | | |
| | 3. கொல்லிக் கௌவாணம் | 1 | 1350 | 85 |
| | 4. கவுசிகம் | 14 | | |
| | 5. பஞ்சமம் | 11 | | |
| | 6. சாதாரி | 33 | | |
| | 7. பழம் பஞ்சுரம் | 17 | | |
| | 8. புறநீர்மை | 6 | | |
| | 9. அந்தாளிக் குறிஞ்சி | 2 | | |
| | | **125** | | |

பழந்தமிழ்ச் சான்றோர் வகுத்துரைத்த நூற்றுமூன்று பண்களுள் 23 பண்கள் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் உள்ளன.

## பின்னிணைப்பு எண் 6

## பாடல்களின் எண்ணிக்கை வேறுபட்டுள்ள திருஞானசம்பந்தரின் பதிகங்கள்

| எண் | பதிகங்களிலுள்ள பாடல்களின் எண்ணிக்கை | பதிக எண்கள் | பதிக மொத்த எண் |
|---|---|---|---|
| 1. | ஆறு பாடல்கள் | 382 | 1 |
| 2. | ஏழு பாடல்கள் | 81, 358 | 2 |
| 3. | எட்டுப் பாடல்கள் | 175, 308, 357 | 3 |
| 4. | ஒன்பது பாடல்கள் | 53, 106, 291, 2[illegible] | 4 |
| 5. | பத்துப் பாடல்கள் | 5, 6, 9, 18, 55, 66, 68, 89, 102, 103, 105, 113, 116, 133, 137, 145, 147, 153, 159, 172, 181, 194, 200, 217, 219, 225, 231, 233, 244, 258, 268, 281, 290, 304, 313, 321, 332, 334, 349, 352, 379, 381. | 47 |
| 6. | பன்னிரண்டு பாடல்கள் | 45, 63, 90, 117, 127, 142, 206, 209, 210, 312, 325, 368, 369, 371 | 14 |
| 7. | பதினோரு பாடல்கள் | முன்கூறிய பதிக எண்கள் தவிரப் பிற | 313 |
| 8. | ஒரே பாடல் | *(திருஎழுகூற்றிருக்கை)* 128 | 1 |

## பின்னிணைப்பு எண் 7

### அடிக்குறையுடைய பாடல்கள் கொண்ட திருஞானசம்பந்தரின் பதிகங்கள்

| எண் | கிடைக்கும் அடிகள் | பதிக எண் | பாடல் எண் |
|---|---|---|---|
| 1. | 1 அடியின் பகுதி மட்டும் | 115 | 11 |
| 2. | 1 அடி | 232 | 11 |
| 3. | 2 அடிகள் | 53 | 11 |
| | | 145 | 11 |
| | | 175 | 5 |
| 4. | 2 அடிகளும், 1 அடியின் பகுதியும் | 175 | 8 |
| | | 332 | 10 |
| 5. | 3 அடிகள் | 175 | 7 |

## பின்னிணைப்பு எண் 8

### ஒருமைப்பாட்டுச் செய்தி வேறுபட்டுள்ள பதிகங்கள்

### 8.1. இராவணண் செய்தி வேறுபட்டுள்ள பதிகங்கள்

இராவணன் செய்தி பொதுவாக எட்டாம் பாடலில் கூறப்படும். அவ்வாறு எட்டாவது பாடலில் குறிப்பிடப்படாமல் வேறுபாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ள பதிகங்கள் மொத்தம் 19 ஆகும். அவற்றுள் இராவணன் செய்தி ஒன்பதாவது பாடலில் கூறப்பட்டுள்ள பதிகங்கள் மொத்தம் 17 ஆகும். அவை : 1 : 39, 1 : 57, 1 : 78, 1 : 90, 1 : 45, 1 : 117, 1 : 127, 2 : 138, 2 : 142, 2 : 156, 2 : 204, 2 : 209, 2 : 210, 2 : 253, 3 : 316, 3 : 330, 3 : 368.

இராவணன் செய்தி பத்தாவது பாடலில் கூறப்பட்டுள்ள பதிக எண். 3 : 371

பதினோராவது பாடலில் கூறப்பட்டுள்ள பதிக எண். 1 : 18.

எட்டாம் பாடல் கிடைக்காத பதிக எண். 3 : 304.

இராவணன் செய்தி குறிப்பிடப்படாத பதிகங்கள் மொத்தம் 27 ஆகும். அவை : 1 : 5, 1 : 25, 1 : 49, 1 : 56, 1 : 60, 1 : 73, 1 : 83, 1 : 87, 1 : 118, 1 : 119, 1 : 121, 2 : 157, 2 : 203, 2 : 213, 2 : 215, 2 : 247, 2 : 248, 3 : 259, 3 : 311, 3 : 312, 3 : 321, 3 : 352, 3 : 360, 3 : 362, 3 : 370, 3 : 382.

இராவணனின் ஆணவத்தை அடக்கிய செய்தி கூறப்படாமல் வேறு செய்தி கூறப்படும் பதிகம் 1. அது: 3 : 349.

## பின்னிணைப்பு எண் 8.2

## அடிமுடி தேடிய செய்தி வேறுபட்டுள்ள பதிகங்கள்

திருமாலும் பிரமனும் அடிமுடி தேடிய செய்தி பொதுவாகத் திருஞானசம்பந்தர் பதிகங்களில் ஒன்பதாம் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. சில பதிகங்களில் இச்செய்தி வேறு பாடலில் கூறப்பட்டுள்ளது.

ஏழாம் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள பதிகம் ஒன்று - 2 : 206.

எட்டாம் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள பதிகங்கள் மூன்று - 2:147, 2 : 194, 3 : 295.

பத்தாவது பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள பதிகங்கள் மொத்தம் பத்தொன்பது ஆகும். அவை : 1 : 45, 1 : 57, 1 : 78, 1 : 87, 1 : 90, 1 : 117, 1 : 127, 2 : 138, 2 : 142, 2 : 156, 2 : 203, 2 : 209, 2 : 210, 2 : 214, 2 : 215, 2 : 248, 2 : 253, 3 : 330, 3 : 368.

பதினோராம் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள பதிகங்கள் மூன்று ஆகும். அவை : 1 : 63, 3 : 311, 3 : 371.

இச்செய்தி பதிகம் முழுவதும் கூறப்பட்டுள்ள பதிகம் 3 : 367.

இச்செய்தியே கூறப்படாத பதிகங்கள் பன்னிரண்டு ஆகும். அவை : 1 : 5, 1 : 60, 2 : 179, 2 : 213, 2 : 247, 3 : 259, 3 : 312, 3 : 321, 3 : 352, 3 : 360, 3 : 370, 3 : 382.

## பின்னிணைப்பு எண் 8.3

## புறச்சமயத் செய்தி வேறுபட்டுள்ள பதிகங்கள்

திருஞானசம்பந்தர் பதிகங்களில் புறச்சமயச் செய்தி பொதுவாகப் பத்தாவது பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. சில பதிகங்களில் இச்செய்தி வேறுபாடலில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒன்பதாம் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள பதிகங்கள் மூன்று ஆகும். அவை : **1 : 63, 2 : 206, 2 : 295.**

பதினொன்றாம் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள பதிகங்கள் ஆறு ஆகும். **1 : 45, 1 : 90, 2 : 142, 2 : 209, 2 : 210, 3 : 368.**

புறச்சமயம் பற்றிக் குறிப்பிடப்படாத பதிகங்கள் இருபது. **1 : 56, 1 : 57, 1 : 60, 1 : 73, 1 : 78, 2 : 138, 2 : 156, 2 : 179, 2 : 203, 2 : 214, 2 : 215, 2 : 247, 2 : 248, 2 : 253, 3 : 316, 3 : 321, 3 : 330, 3 : 352, 3 : 370, 3 : 382.**

## பின்னிணைப்பு எண் 9

## மெய்கண்ட சாத்திர நூல்கள்

| எண் | நூலின் பெயர் | ஆசிரியர் | காலம்* (சுமார்) | பாடல் வகை | பாடல்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1. | திருவுந்தியார் | திருவியலூர் உய்யவந்த தேவர் | கி.பி. 1148 | மூன்றடி கொண்ட கலித்தாழிசை | 45 |
| 2. | திருக்களிற்றுப் படியார் | திருக்கடவூர் உய்யவந்த தேவர் | கி.பி. 1178 | வெண்பா | 100 |
| 3. | சிவஞானபோதம் | மெய்க்கண்டதேவர் | கி.பி. 1223 | நூற்பா 12<br>வெண்பா 81 | 93 |
| 4. | சிவஞானசித்தியார் | அருணந்தி சிவாசாரியார் | கி.பி. 1253 | விருத்தப்பா -<br>பரபக்கம் 311<br>சுபக்கம் 328 | 639 |
| 5. | இருபா இருபஃது | அருணந்தி சிவாசாரியார் | கி.பி. 1254 | வெண்பா 10<br>ஆசிரியப்பா 10 | 20 |
| 6. | உண்மை விளக்கம் | மனவாசகங்கடந்தார் | கி.பி. 1255 | வெண்பா | 54 |
| 7. | சிவப்பிரகாசம் | உமாபதிசிவம் | கி.பி. 1306 | விருத்தம் | 100 |
| 8. | திருவருட்பயன் | உமாபதிசிவம் | கி.பி. 1307 | குறள்வெண்பா | 100 |

| எண் | நூலின் பெயர் | ஆசிரியர் | காலம்* (சுமார்) | பாடல் வகை | பாடல்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 9. | வினாவெண்பா | உமாபதிசிவம் | கி.பி. 1308 | வெண்பா | 13 |
| 10. | போற்றிப் பஃறொடை | உமாபதிசிவம் | கி.பி. 1309 | பஃறொடை வெண்பா | 95கண்ணிகள் (190 வரிகள்) |
| 11. | கொடிக்கவி | உமாபதிசிவம் | கி.பி. 1310 | கட்டளைக் கலித்துறை 1<br>வெண்பா 4 | 5 |
| 12. | நெஞ்சுவிடுதூது | உமாபதிசிவம் | கி.பி. 1311 | கலிவெண்பா | 125 கண்ணி கள் |
| 13. | உண்மைநெறி விளக்கம் | உமாபதிசிவம் | கி.பி. 1312 | தனிவெண்பா 1<br>ஆசிரிய விருத்தப்பா 6 | 7 (பாயிரத் துடன்) |
| 14. | சங்கற்ப நிராகரணம் | உமாபதிசிவம் | கி.பி. 1313 | அகவற்பா 20<br>வெண்பா 1 | 21 |

அடிப்படை : (V. Ponnaiah, The Saiva Siddhanata Theory of Knowledge, Annamalai University, 1952, PP.25-26).

## பின்னிணைப்பு எண் 10

## தசகாரியம்

1. தத்துவரூபம் : நிலம் முதல் சிவம் ஈறாக உள்ள முப்பத்தாறு தத்துவங்களின் வடிவினைத் தனக்கு வேறாக அறிதல்.
2. தத்துவக் காட்சி : அந்த முப்பத்தாறு தத்துவங்களும் உயிர்களுக்குக் கட்டினை விளைவிப்பதாய்ச் சடமாய் உள்ளது என அறிதல்.
3. தத்துவ சுத்தி : அந்த முப்பத்தாறு தத்துவங்களில் ஒன்றையும் தான் பற்றி நில்லாமல் இறையருளால் அவற்றை விட்டு நீங்குதல் தத்துவசுத்தி எனப்படும்.
4. ஆன்ம ரூபம் : உயிர் ஆணவமலத்திலிருந்து நீங்கப் பெற்றுத் திருவருளைத் தன் அறிவின்கண் காணல்.
5. ஆன்ம தரிசனம் : உயிர் தன் செயலற்று நிற்பது.
6. ஆன்ம சுத்தி : உயிர் இதுவரை உலகியல் பொருட்கள் ஒவ்வொன்றிலும் அழுந்தியும் அறிந்தும் நின்ற நிலை நீங்கப் பெற்றுத் திருவருளால் சிவத்தில் அடங்கித் தான் தோன்றா நிலையிலிருப்பது.
7. சிவரூபம் : இறைவன் உயிர்கள் வினையிலிருந்து நீங்கி இன்புறுவதற்காகப் படைத்தல் முதலிய ஐந்தொழில்களைச் செய்கின்றான் என உயிர் தன் அறிவில் காண்பது சிவரூபமாகும்.
8. சிவதரிசனம் : யான் எனது என்னும் செருக்கறுமாறு திருவருள் உயிர்களிடத்துப் பொருந்தியிருப்பதே இறை வனின் திருவடியாகும். பார்க்குமிடம் எங்கும் சிவமாகவே தோன்றுவது இறைவனின் திருமுகமாகும். இறைவனி டத்து விளங்கி நிற்கும் பேரின்பமே இறைவனின் திருமுடியாகும். இறை உண்மையை உணர்ந்த உயிர் தன் உடல், கருவி, உலகு முதலிய கட்டுகளில் இருந்தும் சுழன்று திருவருள் இன்பத்தைப் பெறுவதே சிவதரிசனமாகும்.

9. **சிவயோகம் :** உயிர்கள் இறைவனையே பற்றி நின்று நினைவு, மறப்பு, உணர்வு, துய்ப்பு ஆகிய அனைத்திற்கும் இறைவனே காரணம் என்பதை நன்கு உணர்ந்து அவனோடு வேறறக் கலந்து நிற்றல்.

10. **சிவபோகம் :** இறைவன் தன்னையடைந்த அருளாளர்களின் செயல்களைத் தம் செயலாக ஏற்றுத் தன்வயமாக்குவதால் அவ்வுயிர்கள் பெறும் இன்பம் சிவபோகம் எனப்படும்.

* அடிப்படை : உண்மைநெறி விளக்கம் 1-6.

## பின்னிணைப்பு எண் 11

## திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் ஒப்புமை

| திருவுந்தியார் (செய்யுள் எண்) | திருக்களிற்றுப்படியார் (செய்யுள் எண்) |
|---|---|
| 1 | 4–5 |
| 2 | 6–7 |
| 3 | 8 |
| 4 | 9–10 |
| 5 | 11 |
| 6 | 12–13 |
| 7 | 14–21 |
| 8 | 22 |
| 9 | 23–24 |
| 10 | 25 |
| 11 | 26 |
| 12 | 27–28 |
| 13 | 29 |
| 14 | 30 |
| 15 | 31 |
| 16 | 32 |
| 17 | 33 |
| 18 | 34 |
| 19 | 35 |
| 20 | 36–37 |
| 21 | 38–40 |
| 22 | 41 |
| 23 | 42–43 |

| திருவுந்தியார் (செய்யுள் எண்) | திருக்களிற்றுப்படியார் (செய்யுள் எண்) |
|---|---|
| 24 | 44–45 |
| 25 | 46–50 |
| 26 | 51–52 |
| 27 | 53–56 |
| 28 | 57 |
| 29 | 58–62 |
| 30 | 63–64 |
| 31 | 65–68 |
| 32 | 69–75 |
| 33 | 76 |
| 34 | 77 |
| 35 | 78–79 |
| 36 | 80–81 |
| 37 | 82–83 |
| 38 | 84 |
| 39 | 85–91 |
| 40 | 92 |
| 41 | 93–94 |
| 42 | 95–96 |
| 43 | 97–99 |
| 44 | 100 |

## பின்னிணைப்பு எண் 12

| சிவஞானசித்தியார் பரபக்கத்தில் மறுக்கப்படும் மதங்கள் | சங்கற்ப நிராகரணத்தில் மறுக்கப்படும் மதங்கள் |
|---|---|
| 1. உலகாயதம் | 1. மாயாவாதம் |
| 2. சௌந்திராந்திகம் | 2. ஐக்கியவாதம் |
| 3. யோகாசாரம் | 3. பாடாணவாதம் |
| 4. மாத்தியமிகம் | 4. பேதவாதம் |
| 5. வைபாடிகம் | 5. சிவசமவாதம் |
| 6. நிகண்டவாதம் | 6. சங்கிராந்தவாதம் |
| 7. ஆசீவகம் | 7. ஈசுவர அவிகாரவாதம் |
| 8. பட்டாசாரியன் மதம் | 8. நிமித்தகாரண பரிணாமவாதம் |
| 9. பிரபாகரன் மதம் | 9. சைவவாதம் |
| 10. சத்தப்பிரம்ம வாதம் | |
| 11. மாயாவாதம் | |
| 12. பாற்கரிய மதம் | |
| 13. நிரீச்சுரசாங்கியம் | |
| 14. பாஞ்சராத்திரம் | |

## பின்னிணைப்பு எண் 13
## மெய்கண்ட சாத்திர நூல்களுக்குப் பின் தோன்றிய சைவசித்தாந்த நூல்கள்

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | காலம் (நூற்றாண்டு) | பாடல் வகை | பாடல் மொத்த எண் | உரையாசிரியர் | பதிப்பும் காலமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1. | அவ்வை குறள் | பிற்கால அவ்வையார் | கி.பி. 14 | குறட்பா | 310 | — | |
| 2. | இரங்கல் மூன்று | சிற்றம்பலநாடிகள் | கி.பி. 14 | — | 153 | | திருவாவடுதுறை ஆதீனம், 1954. |
| 3. | உருப சொருப அகவல் | காவை அம்பலவாணத் தம்பிரான் | கி.பி. 14 | அகவற்பா | 1 | | |
| 4. | சத்திநிபாத அகவல் | " | கி.பி. 14 | ஆசிரியப்பா | 1 | வெள்ளியம்பலவாணத் தம்பிரான் உரை | |
| 5. | சதமணிக் கோவை | மறைஞான சம்பந்தர் | கி.பி. 14 | வெண்பா | 106 | த.ச.மீனாட்சி சுந்தரம் பிள்ளை | திருவாவடுதுறை ஆதீனம், 1949. |

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | காலம் (நூற்றாண்டு) | பாடல் வகை | பாடல் மொத்த எண் | உரையாசிரியர் | பதிப்பும் காலமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 6. | சர்வஞானோத்திரம் | தெரியவில்லை | கி.பி. 14 | விருத்தம் | 71 | — | மூலம் மட்டும், 1904. 1923. |
| 7. | சித்தாந்த சாரம் | பரமமுனிவர் | " | எண்சீர் விருத்தம் | 32 | பொ.முத்தையா பிள்ளை | 1. ரிப்பன் பிரஸ் பதிப்பு 2. அனவரத விநாயகம் பிள்ளை (ப.ஆ), சித்தாந்தம், 1933. 3. தருமபுர ஆதீனம் |
| 8. | சிவானந்த மாலை | சம்பந்தமுனிவர் | " | வெண்பா | 414 | | அனவரதவிநாயகம் பிள்ளை (ப.ஆ), 1910 |
| 9. | சிற்றம்பல நாடிகள் அனுபூதி விளக்கம் | சிற்றம்பலநாடிகள் | " | | 65 | | திருவாவடுதுறை ஆதீனம், 1954. |

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | காலம் (நூற்றாண்டு) | பாடல் வகை | பாடல் மொத்த எண் | உரையாசிரியர் | பதிப்பும் காலமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 10. | சிற்றம்பல நாடிகள் | சிற்றம்பலநாடிகள் | கி.பி. *14* | கலித்துறை | 54 | | திருவாவடுதுறை ஆதீனம், *1954.* |
| 11. | சிற்றம்பல நாடி தாலாட்டு | " | " | — | 63 | | திருவாவடுதுறை ஆதீனம், *1954.* |
| 12. | சிற்றம்பல நாடி | " | " | வெண்பா | 65 | | திருவாவடுதுறை ஆதீனம், *1954.* |
| 13. | ஞானஅந்தி யேட்டி | அருள் நமச்சிவாய தேசிகர் | " | — | 2 | | — |
| 14. | ஞானதிட் சாவிதி | " | " | விருத்தம் | 8 | | — |
| 15. | ஞானபூஜா கரணம் | " | " | விருத்தம் | 30 | | — |
| 16. | ஞானபூஜை | " | " | " | 18 | சட்டை நாதத் தம்பிரான் குறிப்புரை | தருமபுரம், *1934.* திருவாவடுதுறை ஆதீனம், *1942, 1952.* |

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | காலம் (நூற்றாண்டு) | பாடல் வகை | பாடல் மொத்த எண் | உரையாசிரியர் | பதிப்பும் காலமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 17. | தத்துவப் பிரகாசம் | தத்துவப் பிரகாசர் | கி.பி. *14* | விருத்தம் | 337 | பரம முனிவர் | — |
| 18 | தத்துவ விளக்கம் | சம்பந்த சரணாலயர் | " | கட்டளைக் கலித்துறை | 51 | செந்தி நாதையர் | 1918. |
| 19. | திருப்புன் முறுவல் | சிற்றம்பலநாடிகள் | " | விருத்தம் | 11 | | திருவாவடுதுறை ஆதீனம், *1954.* |
| 20. | துகளறு போதம் | " | " | வெண்பா | 101 | (ஈசானசிவன்) | *1.* பால்வண்ண முதலியார்(ப.ஆ). *2.* நாகை வேதா சலம்பிள்ளை (ப.ஆ), *1898* *3.* திருமயிலை சண் முகம்பிள்ளை (ப.ஆ), *1904.* *4.* சமாசம், *1934.* *5.* யாழ்ப்பாணம், *1950.* *6.* திருவாவடுதுறை ஆதீனம், *1952.* |

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | காலம் (நூற் றாண்டு) | பாடல் வகை | பாடல் மொத்த எண் | உரையா சிரியர் | பதிப்பும் காலமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 21. | தேவி காலோத் திரம் | தெரியவில்லை | கி.பி. *14.* | விருத்தம் | 73 | ... பொ. முத்தையா பிள்ளை | 1. 1848<br>2. 1925 |
| 22. | பஞ்சமலக் கழற்றி | கண்ணுடைய வள்ளல் | கி.பி.*14* (இறுதி) | வெண்பா | 5 | | சித்தாந்தம், *1940.* |
| 23. | பஞ்சாக்கர மாலை | " | " | " | 60 | | சித்தாந்தம், *1932.* |
| 24. | போசன விதி | அருள்நமச்சிவாய தேசிகர் | " | " | 2 | | — |
| 25. | மாயாப் பிரலாபம் | கண்ணுடைய வள்ளல் | " | " | 83 | | சைவசித்தாந்த நூற்பதிப்பு *1899, 1934,* |
| 26. | வள்ளல் ஞான சாரம் | " | " | விருத்தம் | 118 | | சித்தாந்தம், *1961.* |

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | காலம் (நூற்றாண்டு) | பாடல் வகை | பாடல் மொத்த எண் | உரையாசிரியர் | பதிப்பும் காலமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 27. | இராமாயண தாற்பரிய சங்கிரகம் | சபாபதி நாவலர் (மொ.ஆ.) | கி.பி. 15 | விருத்தம் | 31 | | 1876. |
| 28. | உபதேச மாலை | சிவஞான வள்ளல் | " | வெண்பா | 100 | | பார்த்தசாரதி அய்யங்கார் பதிப்பு, 1907. |
| 29. | ஒழிவிலொடுக்கம் | கண்ணுடைய வள்ளல் | கி.பி 15 (முற்பகுதி) | " | 253 | திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் | |
| 30. | சகலாகம சாரம் (அச்சாகவில்லை) | களந்தை ஞானப் பிரகாசர் | கி.பி. 15 | " | | | |
| 31. | சதாசிவ ரூபம் | சட்டைநாதவள்ளல் | " | அகவற்பா | 151 | மாணாக்கர் உரை | |
| 32. | தசகாரியம் | களந்தை ஞானப் பிரகாசர் | " | விருத்தப்பா | 302 | | சிவானந்தையர் (ப.ஆ.), 1911. |

| எண் 1 | நூற்பெயர் 2 | ஆசிரியர் பெயர் 3 | காலம் (நூற்றாண்டு) 4 | பாடல் வகை 5 | பாடல் மொத்த எண் 6 | உரையாசிரியர் 7 | பதிப்பும் காலமும் 8 |
|---|---|---|---|---|---|---|---|
| 33. | திருநெறி விளக்கம் | கண்ணுடைய வள்ளலின் மாணாக்கர் | கி.பி. *15* | விருத்தம் | 117 | | சித்தாந்தம், *1960.* |
| 34. | திருவாவடுதுறை ஆதீனம் பண்டார சாத்திரங்கள் | | | | | | |
| | *1.* அதிசய மாலை | அம்பலவாண தேசிகர் | கி.பி. *15* | கட்டளைக் கலித்துறை | 76 | | *1.* சதாசிவ முதலியார், ச.(ப.ஆ), மூலம், திரிபுர சுந்தரி அச்சியந்திரசாலை, காழி, *1926.* |
| | | | | | | ச.தண்டபாணி தேசிகர் | *2.* திருவாவடுதுறை ஆதீனம், *1966.* |

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | காலம் (நூற்றாண்டு) | பாடல் வகை | பாடல் மொத்த எண் | உரையாசிரியர் | பதிப்பும் காலமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| | 2. உபதேச வெண்பா | அம்பலவாண தேசிகர் | கி.பி. 15 | வெண்பா | 45 | | 1. சதாசிவ முதலியார், ச.(ப.ஆ), மூலம், திரிபுர சுந்தரி அச்சியந்திரசாலை, காழி, 1926. |
| | | | | | | | 2. முத்துத் தாண்டவராயபிள்ளை, (ப.ஆ.), 1926. |
| | | | | | | ச.தண்டபாணி தேசிகர் | 3. திருவாவடுதுறை ஆதீனம், 1965. |
| | 3. உபதேசப் பஃறொடை | தெக்கணாமூர்த்தி தேசிகர் | " | பஃறெடை வெண்பா | கண்ணி 199 | | 1. சதாசிவ முதலியார், ச.(ப.ஆ), மூலம், திரிபுர சுந்தரி அச்சியந்திரசாலை, காழி, 1926. |

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | காலம் (நூற்றாண்டு) | பாடல் வகை | பாடல் மொத்த எண் | உரையாசிரியர் | பதிப்பும் காலமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| | *4.* உபாய நிட்டை வெண்பா | அம்பலவாண தேசிகர் | கி.பி. *15* | வெண்பா | 46 | | *1.* சதாசிவ முதலியார், ச.(ப.ஆ), மூலம், திரிபுர சுந்தரி அச்சியந்திரசாலை, காழி, *1926.* |
| | *5.* சன்மார்க்க சித்தியார் | அம்பலவாண தேசிகர் | " | " | 28 | | *1.* சதாசிவ முதலியார், ச.(ப.ஆ), மூலம், திரிபுர சுந்தரி அச்சியந்திரசாலை, காழி, *1926.* |
| | | | | | | ச.தண்டபாணி தேசிகர் | *2.* திருவாவடுதுறை ஆதீனம், *1960* |

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | காலம் (நூற்றாண்டு) | பாடல் வகை | பாடல் மொத்த எண் | உரையாசிரியர் | பதிப்பும் காலமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| | 6. சித்தாந்த சிகாமணி | அம்பலவாண தேசிகர் | கி.பி. *15* | வெண்பா | 91 | | *1.* சதாசிவ முதலியார், ச.(ப.ஆ), மூலம், திரிபுர சுந்தரி அச்சியந்திரசாலை, காழி, *1926.* |
| | | | | | | | 2. திருவாவடுதுறை ஆதீனம், *1963.* |
| | *7.* சித்தாந்தப் பஃறொடை | " | " | பஃறொடை வெண்பா | கண்ணி *650* | | *1.* சதாசிவ முதலியார், ச.(ப.ஆ), மூலம், திரிபுர சுந்தரி அச்சியந்திரசாலை, காழி, *1926.* |
| | | | | | | ச.தண்டபாணி தேசிகர் | 2. திருவாவடுதுறை ஆதீனம், *1961.* |

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | காலம் (நூற்றாண்டு) | பாடல் வகை | பாடல் மொத்த எண் | உரையாசிரியர் | பதிப்பும் காலமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| | 8. சிவாக் கிரமத் தெளிவு | அம்பலவாண தேசிகர் | கி.பி. *15* | வெண்பா | 70 | | *1.* சதாசிவ முதலியார், ச.(ப.ஆ), மூலம், திரிபுர சுந்தரி அச்சியந்திரசாலை, காழி, *1926.* |
| | | | | | | ச.தண்டபாணி தேசிகர் | *2.* திருவாவடுதுறை ஆதீனம், *1960.* |
| | *9.* தச காரியம் | " | " | ஆசிரிய விருத்தம் | 55 | | *1.* சதாசிவ முதலியார், ச.(ப.ஆ), மூலம், திரிபுர சுந்தரி அச்சியந்திரசாலை, காழி, *1926.* |

332

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | காலம் (நூற் றாண்டு) | பாடல் வகை | பாடல் மொத்த எண் | உரையா சிரியர் | பதிப்பும் காலமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| | *10. தச காரியம்* | *சுவாமிநாத தேசிகர்* | *கி.பி.15* | *ஆசிரிய விருத்தம்* | 24 | | *1. சதாசிவ முதலி யார், ச.(ப.ஆ), மூலம், திரிபுர சுந்தரி அச்சியந் திரசாலை, காழி, 1926.* |
| | | | | | | *ச.தண்ட பாணி தேசிகர்* | *2. திருவாவடுதுறை ஆதீனம், 1959.* |
| | *11. தச காரியம்* | *தெக்கணாமூர்த்தி தேசிகர்* | " | " | 13 | | *1. சதாசிவ முதலி யார், ச.(ப.ஆ), மூலம், திரிபுர சுந்தரி அச்சியந் திரசாலை, காழி, 1926.* |
| | | | | | | *ச.தண்ட பாணி தேசிகர்* | *2. திருவாவடுதுறை ஆதீனம், 1959.* |

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | காலம் (நூற்றாண்டு) | பாடல் வகை | பாடல் மொத்த எண் | உரையாசிரியர் | பதிப்பும் காலமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| | 12. நமச்சிவாய மாலை | அம்பலவாண தேசிகர் | கி.பி. 15 | கட்டளைக் கலித்துறை | 137 | | 1. சதாசிவ முதலியார், ச.(ப.ஆ), மூலம், திரிபுரசுந்தரி அச்சியந்திரசாலை, காழி, 1926. |
| | 13. நிட்டை விளக்கம் | " | " | " | 28 | | " |
| | 14. பஞ்சாக்கரப் பஃறொடை | வேலப்ப தேசிகர் | " | பஃறொடை வெண்பா | கண்ணி 42 | | " |
| 35. | நியதிப் பயன் | கண்ணுடைய வள்ளல் | கி.பி. 15 (முற்பகுதி) | கட்டளைக் கலித்துறை | 103 | | செந்தமிழ்ச்செல்வி, 1934. |
| 36. | பரப்பிரம்ம விளக்கம் | காளமேகப் புலவர் | கி.பி. 15 | வெண்பா | 85 | | 1. 1891<br>2. திருவாவடுதுறை ஆதீனம், 1953. |

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | காலம் (நூற்றாண்டு) | பாடல் வகை | பாடல் மொத்த எண் | உரையாசிரியர் | பதிப்பும் காலமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 37. | பாரத தாற்பரிய சங்கிரகம் | சபாபதி நாவலர் (மொ.ஆ.) | கி.பி. 15 | | 21 | | 1. 1876, 2. சித்தாந்த வித்தியாநுபாலனயந்திர சாலை, 1888 3. திருவாவடுதுறை ஆதீனம், 1951. |
| 38. | பிராசாத தீபம் | காழி கண்ணுடைய வள்ளலின் மாணாக்கர் | " | விருத்தம் | 39 | குமாரசாமி குருக்கள் | அச்சுவேலி, 1933. |
| 39. | அட்டாங்க யோகக் குறள் | கண்கட்டி மறைஞான சம்பந்த தேசிகர் | கி.பி. 16 | குறட்பா | 65 | சே.ரா. சுப்பிரமணிய கவிராயர் | மதுரைத் தமிழ்ச்சங்கம், 1923 |
| 40. | அத்துவித சாரம் | கமலை ஞானப்பிரகாசர் | " | | 64 | | சித்தாந்தம், 1933. |
| 41. | ஆன்ம லிங்க மாலை | சிதம்பரநாத தேசிகரின் மாணாக்கர் | " | ஆசிரிய விருத்தம் | 11 | | |

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | காலம் (நூற்றாண்டு) | பாடல் வகை | பாடல் மொத்த எண் | உரையாசிரியர் | பதிப்பும் காலமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 42. | இறைவ னூற்பயன் | மறைஞான சம்பந்தர் | கி.பி. 16 | | | | |
| 43. | உருத்தி ராக்க விசிட்டம் | " | " | வெண்பா | 108 | | திருவாவடுதுறை ஆதீனம், 1954. |
| 44. | ஐக்கியவியல் | " | " | " | 15 | | " |
| 45. | குருமொழி | | கி.பி. 16 (இறுதி) | காப்பு வெண்பா<br>ஆசிரியப்பா | 1<br>1 | | அனவரத விநாயகம்பிள்ளை (ப.ஆ.), சித்தாந்தம். |
| 46. | சங்கற்ப நிரா கரணம் | கண்கட்டிமடம் மறைஞானதேசிகர் | கி.பி. 16 | வெண்பா<br>குறள் வெண்பா | 2<br>424 | | திருவாவடுதுறை ஆதீனம், 1954. |
| 47. | சிவஞான தீபம் | ரேவணசித்தர் | " | விருத்தம் | 127 | | 1. மனோன்மணி விலாசு அச்சுக் கூடம், சென்னை 1910.<br>2. திருவாவடுதுறை ஆதீனம், 1962. |

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | காலம் (நூற்றாண்டு) | பாடல் வகை | பாடல் மொத்த எண் | உரையாசிரியர் | பதிப்பும் காலமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 48. | சிவதருமோத்திரம் | கண்கட்டிமடம் மறைஞானதேசிகர் | கி.பி. 16 | விருத்தம் | 1269 | | 1. முத்தமிழாகர அச்சுக்கூடம், 1867.<br>2. மீனாட்சியம்மை கலாநிதி அச்சுக்கூடம், 1888.<br>3. ரிப்பன் பிரஸ், சென்னை, 1919 |
| 49. | சிவநெறிப் பிரகாசம் | சிவாக்கிரயோகி | " | " | 215 | | |
| 50. | சிவ புண்ணியத் தெளிவு | கமலை ஞானப் பிரகாசரின் மாணாக்கர். பெயர் தெரியவில்லை | " | | 145 | | |
| 51. | சிவபூசை அகவல் | கமலை ஞானப் பிரகாசர் | " | அகவற்பா | | | |
| 52. | சிவபோக சாரம் | குருஞான சம்பந்தர் | " | தனிப் பாடல்கள்<br>வெண்பா | சில<br>139 | | தருமபுர ஆதீனம், 1971. |

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | காலம் (நூற்றாண்டு) | பாடல் வகை | பாடல் மொத்த எண் | உரையாசிரியர் | பதிப்பும் காலமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 53. | சிவானந்த போதசாரம் | சிவானந்த முனிவர் | கி.பி. 16 | ஆசிரியப்பா | 1 | | |
| 54. | சுலோக பஞ்சகம் | சிவஞான சுவாமிகள் (மொ.ஆ). | " | " | 1 | | |
| 55. | சைவா னுட்டான அகவல் | கமலை ஞானப்பிரகாசர் | " | அகவற்பா | 1 | | |
| 56. | சைவசமய நெறி | கண்கட்டிமடம் மறைஞான சம்பந்தர் | " | குறட்பா | 727 | ஆறுமுக நாவலர் | ஆறுமுக நாவலர் பதிப்பு. |
| 57. | சோமவார கற்பம் | " | " | " | 216 | | திருவாவடுதுறை ஆதீனம், 1954. |
| 58. | சோமவார சிவராத்திரி கற்பம் | " | " | " | 17 | | " |

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | காலம் (நூற் றாண்டு) | பாடல் வகை | பாடல் மொத்த எண் | உரையா சிரியர் | பதிப்பும் காலமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 59. | திரிப-தார்த்த ரூபாதி தசகாரிய அகவல் | திருஞானசம்பந்தர் | *கி.பி. 16* | ஆசிரியப்பா | 40 | | தருமபுர ஆதினம், *1971.* |
| 60. | திருக் கோயிற் குற்றம் | கண்கட்டிமடம் மறைஞான சம்பந்தர் | " | ஆசிரிய விருத்தம் | 2 | | திருவாவடுதுறை ஆதீனம், *1954.* |
| 61. | பதிபசுபாசத் தொகை | மறைஞானதேசிகர் | " | குறட்பா | 25 | | தருமபுர ஆதினம், *1940.* |
| 62. | பதிபசு பாசப் பனுவல் | கண்கட்டிமடம் மறைஞான சம்பந்தர் | " | ஆசிரியப்பா<br>குறள் வெண்பா | 1<br>336 | | திருவாவடுதுறை ஆதீனம், *1954.* |
| 63. | பரமோப-தேசம் | | " | குறள் வெண்பா | 41 | | " |
| 64. | பிரசாத அகவல் | காவை அம்பலநாதத் தம்பிரான் | " | ஆசிரியப்பா<br>வெண்பா | 1<br>1 | | சோமசுந்தர தேசிகர் (ப.ஆ), சித்தாந்தம், *1935.* |

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | காலம் (நூற்றாண்டு) | பாடல் வகை | பாடல் மொத்த எண் | உரையாசிரியர் | பதிப்பும் காலமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 65 | பிராசாத மாலை | கமலை ஞானப்பிரகாசர் | *கி.பி. 16* | விருத்தம் | 12 | | சாது அச்சுக்கூடம், *1925.* |
| 66 | பிராசாத விருத்தம் | குருஞானசம்பந்தர் | " | " | 7 | | *1931.* |
| 67 | புட்பவிதி | கமலை ஞானப்-பிரகாசர் | " | வெண்பா<br>விருத்தம் | 1<br>56 | | |
| 68 | பூமாலை | " | " | | | | |
| 69 | மகா சிவராத்திரி கற்பம் | கண்கட்டிமடம் மறைஞான சம்பந்தர் | " | குறள்-வெண்பா | 39 | | மீனாட்சிசுந்தரம் பிள்ளை, த.ச.(ப.ஆ.). திருவாவடுதுறை ஆதீனம், *1954.* |
| 70. | மாத சிவராத்திரி கற்பம் | " | " | " | 14 | | திருவாவடுதுறை ஆதீனம், *1954.* |

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | காலம் (நூற்றாண்டு) | பாடல் வகை | பாடல் மொத்த எண் | உரையாசிரியர் | பதிப்பும் காலமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 71. | முக்தி நிச்சயம் | குருஞானசம்பந்தர் | கி.பி. 16 | வெண்பா | 22 | 1. வெள்ளியம்பல வாணத் தம்பிரான் சிற்றுரை<br>2. வெள்ளியம்பல வாணத் தம்பிரான் பேருரை. | 1. 1934<br>2. 1946<br>3. தருமபுர ஆதினம், 1971 |
| 72. | முக்திநிலை | கண்கட்டிமடம் மறைஞான-சம்பந்தர் | " | வெண்பா<br>குறள் வெண்பா | 19<br>1 | | சித்தாந்தம், 1936. |
| 73. | வருத்தமற உய்யும்வழி | " | " | குறட்பா | 25 | | மதுரைத் தமிழ்ச் சங்கம் 1923.<br>திருவாவடுதுறை ஆதினம், 1954. |
| 74. | சுகாத்தமணி மாலை | | கி.பி.17 | வெண்பா | 50 | | |

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | காலம் (நூற்றாண்டு) | பாடல் வகை | பாடல் மொத்த எண் | உரையாசிரியர் | பதிப்பும் காலமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 75. | நித்திய கன்மநெறி | சிதம்பரநாத முனிவர் | கி.பி. 17 | வெண்பா<br>குறள் வெண்பா | 1<br>755 | | *1927.* |
| 76. | புட்பபலன் | தெரியவில்லை | " | <br>விருத்தம் | 149<br>9 | | ரிப்பன் பிரஸ், *1906.* |
| 77. | சம்பிரதாய தீபம் | சிவானந்த முனிவர் | கி.பி. 18 | வெண்பா | 186 | | முத்துத் தாண்டவராயப்பிள்ளை (ப.ஆ.), *1928.* |
| 78. | சித்தாந்த நிச்சயம் | திருநாவுக்கரசு தேசிகர் | " | விருத்தம் | 99 | | " |
| 79. | சிவஞான விளக்கம் | தெரியவில்லை | " | வெண்பா | 120 | | *1923.* |
| 80. | சைவ சித்தாந்த சாரம் | சிவானந்த முனிவர் | " | விருத்தம் | 51 | | கழகம், *1934.* |
| 81. | திரிபதார்த்ததீபம் | அழகிய திருச்சிற்றம்பல தேசிகர் | " | | | | |

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | காலம் (நூற்றாண்டு) | பாடல் வகை | பாடல் மொத்த எண் | உரையாசிரியர் | பதிப்பும் காலமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 82. | திருஞான-சாகரம் | பரஞ்சோதி முனிவர் சீடர் | கி.பி. *18* | வெண்பா | 101 | | திருவாவடுதுறை ஆதீனம், *1952.* |
| 83. | திருவருட் பயன் உதாரணக் கலித்துறை | காவை அம்பலவாணர் | " | | 100 | | தருமபுரம், *1940* |
| 84. | பிராயச்-சித்த சமுச்சியம் | வைத்தியநாத தேசிகர் | " | | | | யாழ்ப்பாணம் |
| 85. | பேரானந்த சித்தியார் | | " | விருத்தம் | 108 | | *1908.* |
| 86. | சிவபூசை அந்தாதி | அழகிய சொக்க நாத வரோதயன் | கி.பி. *19* | " | 127 | | சுப்பிரமணியக் குருக்கள் (ப.ஆ.), *1880.* |
| 87. | நித்திய கருமவிதி | | " | " | 288 | | *1869.* |

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | காலம் (நூற்றாண்டு) | பாடல் வகை | பாடல் மொத்த எண் | உரையாசிரியர் | பதிப்பும் காலமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 38. | அரிகரதார தம்மியம் | திருஞானசம்பந்தம் பிள்ளை (மொ.ஆ.) | | | 111 | | 1. 1865. 2. திருவாவடுதுறை ஆதீனம், 1953. |
| 89. | அனுக்கிரக சாரம் | தெரியவில்லை | | வெண்பா | 141 | | |
| 90. | ஆசௌச தீபிகை | நெல்லை தமிழாகர முனிவர் | | விருத்தம் | 175 | ஆ. சபாரத்தினக் குருக்கள் | யாழ்ப்பாணம். 1882, 1964 |
| 91. | சிதம்பர விலாசம் | தெரியவில்லை | | ஆசிரியப்பா | 1 | | |
| 92. | சதுர்வேத-தாற்பரிய சங்கிரகம் | வீரபத்திரர் (மொ.ஆ.) | | விருத்தம் | 287 | | |
| 93. | தசகாரியம் | | | அகவற்பா | 1 | | |
| 94. | திருமெய்ஞ் ஞானப் பயன் | தெரியவில்லை | | குறள் வெண்பா | 101 | | சித்தாந்தம், 1942. |

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | காலம் (நூற் றாண்டு) | பாடல் வகை | பாடல் மொத்த எண் | உரையா சிரியர் | பதிப்பும் காலமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 95. | பஞ்சாக்கர அனுபூதி | சொர்க்கபுர ஆதீனம் சரவண தேசிகர் | | ஆசிரியப்பா | | | சித்தாந்தம், *1946.* |
| 96. | முத்திரா லக்ஷணம் | | | *1.* விருத்தம் *2.* நூற்பா | 34 | | சாது அச்சுக்கூடம், *1925.* |
| 97. | முனிமொழி முப்பது | | | விருத்தம் | 30 | | காசிமடம், *1957.* |

## பின்னிணைப்பு எண் 13.1

## சைவசித்தாந்த வசன நூல்கள் (கட்டளைகள்)

1. சிவப்பிரகாசக் கட்டளை
2. திருவாலவாய்க்கட்டளை
3. திருநந்திதேவர் விண்ணப்பித்த பதினாறுபேறு
4. சித்தாந்தக் கட்டளை
5. சித்தாந்த சாதனக்கட்டளை
6. சித்தாந்த தசகாரியக்கட்டளை
7. சித்தாந்தப் பிரகாசிகை
8. சித்தாந்த தத்துவலக்ஷணம்
9. நாநாசீவ வாதக்கட்டளை
10. வேதாந்த தத்துவக்கட்டளை
11. ஞானக்கட்டளை
12. தத்வாமிர்தக்கட்டளை
13. உபதேச உண்மைக்கட்டளை
14. வேதாந்த தசாவத்தைக் கட்டளைச்சுருக்கம்
15. வேதாந்த தசகாரியக்கட்டளை
16. பிரமோபதேசக்கட்டளை
17. உபதேச சித்தாந்தக்கட்டளை
18. வேதாந்த ஸாராமிர்தம்
19. பஞ்சீகரண வேதாந்த சித்தாந்தம்
20. தத்துவதீபிகை
21. ஜீவோற்பத்திசிந்தாமணி
22. அத்துவாதத்துவ கலைஞானம்

23. தத்துவ ஞானதீபிகை

24. தத்துவோற்பத்திலயக்கிரமம்

25. தத்துவசங்கிரகதீபிகை

26. தத்துவாத்மசொரூபநிர்ணயம்

27. தத்துவாத்மாநாத்மவிசாரம்

28. தத்துவ பிரமஞானம்

29. தத்துவ பிரமஞானாதி சதுஷ்டயம்

30. தத்துவ பிரமஞானாதி துவந்துவம்

31. தத்துவ மஹாவாக்கியார்த்தம்

32. தத்துவ விசேஷார்த்தசங்கிரகம்

– பூவை. கலியாணசுந்தரயதீந்திரர் (ஆ), 32 கட்டளைகள் சேர்ந்த கட்டளைத் திரட்டு, அ. முத்துவடிவேல் முதலியார் (ப.ஆ.), பூமகள் விலாச அச்சுக்கூடம், சென்னை, 1931.

## பின்னிணைப்பு எண் 14
## வடமொழியிலுள்ள சைவசித்தாந்த நூல்கள்

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | காலம் (நூற்றாண்டு) | உரையாசிரியரும் காலமும் (நூற்றாண்டு) | பதிப்பின் இடமும் காலமும் |
|---|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீமிருகேந்திர தந்திரம் (வித்யா, யோக, பாதங்கள்) | பரம்பொருள் சிவனே அருளியதாக ஐதீகம் | கி.பி. 5-9 | நாராயணக்கந்தா (கி.பி. 10) | ஸ்ரீநகர், 1930. |
| 2. | ஸ்ரீமிருகேந்திர ஆகமம் | " | கி.பி. 5-9 | பட்டா நாராயணக் கந்தா, அகோர சிவாசாரியார் (கி.பி. 10-11) | தேவகோட்டை, 1928. |
| 3. | மதங்க பரமேசுவர ஆகமம் | " | கி.பி. 5-9 | பட்டா ராமகந்தா (கி.பி. 10-11) | பாண்டிச்சேரி, 1977. |
| 4. | பௌஸ்கர ஆகமம் | " | கி.பி. 5-9 | உமாபதிசிவம் (கி.பி.14) | சிதம்பரம், 1925. |
| 5. | சித்தாந்த சாராவளி | திரிலோகன சிவம் | கி.பி. 10 | ஆனந்தசிவம் (கி.பி. 10) | சென்னை, 1975. |
| 6. | தத்துவப்பிரகாசிகா | போஜதேவன் | கி.பி. 11 | ஸ்ரீகுமாரா | திருவனந்தபுரம், 1920. |

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | காலம் (நூற்றாண்டு) | உரையாசிரியரும் காலமும் (நூற்றாண்டு) | பதிப்பின் இடமும் காலமும் |
|---|---|---|---|---|---|
| 7. | தத்துவப்பிரகாசிகா | போஜதேவன் | கி.பி. 11 | அகோர சிவா சாரியார் (கி.பி. 11) | தேவகோட்டை, 1925 |
| 8. | ரத்தினத்திரயா | ஸ்ரீகந்தசாரியா | கி.பி.11 | அகோர சிவா சாரியார் (கி.பி. 11) | தேவகோட்டை, 1925 |
| 9. | தத்துவ சாங்கிரகா | சத்யோஜோதி | கி.பி.11 | அகோர சிவா சாரியார் (கி.பி. 11) | தேவகோட்டை, 1925 |
| 10. | தத்துவதிரய நிர்ணயா | சத்யோஜோதி | கி.பி.11 | அகோர சிவா சாரியார் (கி.பி. 11) | தேவகோட்டை, 1925 |
| 11. | போககாரிகா | சத்யோஜோதி | கி.பி. 11 | அகோர சிவா சாரியார் (கி.பி. 11) | தேவகோட்டை, 1925 |
| 12. | நாதகாரிகா | பட்டா ராமகந்தா | கி.பி. 11 | அகோர சிவா சாரியார் (கி.பி. 11) | தேவகோட்டை, 1925 |
| 13. | மோக்ஷகாரிகா | சத்யோஜோதி | கி.பி.11 | பட்டா ராமகந்தா (கி.பி. 10-11) | தேவகோட்டை, 1925 |
| 14. | பரமோக்ஷ நிராசகர்ரிகா | சத்யோஜோதி | கி.பி. 11 | பட்டா ராமகந்தா (கி.பி. 10-11) | தேவகோட்டை, 1925 |

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | காலம் (நூற்றாண்டு) | உரையாசிரியரும் காலமும் (நூற்றாண்டு) | பதிப்பின் இடமும் காலமும் |
|---|---|---|---|---|---|
| 15. | சைவசித்தாந்த பரிபாஷா | சூர்யாபட்டா | கி.பி. 16 | இல்லை | தேவகோட்டை, 1926. |
| 16. | சிவாக்கிரபாஷ்ய | சிவாக்கிரயோகி | கி.பி.16 | ——— | சூரியனார் கோவில், 1926. |
| 17. | சைவபரிபாஷா | சிவாக்கிரயோகி | கி.பி.16 | ——— | மைசூர், 1950 |
| 18. | சிவஞானபோத விருத்தி | தட்சணாமூர்த்தி ஞானதேவர் | கி.பி.17 | ——— | மதுரை, 1977. |

# பின்னிணைப்பு எண் 15

## நால்வகைச் சாதனநெறிகள்

| எண் | நெறிகள் | மார்க்கங்கள் | இறை வழிபாடு | அருள்பதிதல் | உவமை | பயன் | முக்திநிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | சரியை | தாசமார்க்கம் | உருவம் | மந்ததரம் | அரும்பு | சாலோகம் | பதமுத்தி |
| 2. | கிரியை | சத்புத்திர-மார்க்கம் | அருஉருவம் | மந்தம் | மலர் | சாமீபம் | பதமுத்தி |
| 3. | யோகம் | சகமார்க்கம் | அருவம் | தீவிரம் | காய் | சாரூபம் | பதமுத்தி |
| 4. | ஞானம் | சத்மார்க்கம் | அறிவு | தீவிரதரம் | கனி | சாயுச்சியம் | பரமுத்தி |

## பின்னிணைப்பு எண் 16

## இறைவனின் ஐந்தொழில்களும் தத்துவங்களும் *

| எண் | தொழில் | விளக்கம் | செய்யப்படக் காரணம் | செய்யும் அதி தெய்வம் |
|---|---|---|---|---|
| 1. | படைத்தல் | சூக்குமநிலையில் உள்ளவற்றைத் தூலநிலையில் கொணர்தல் | உயிர்களின் ஆணவமலத்தை வலியறுத்துப் பக்குவப்படுத்த | பிரமன் |
| 2. | காத்தல் | தூலநிலையில் கொணர்ந்த வற்றை அந்நிலை யில்நிறுத்துதல் | கன்மமலம் வலியற நுகரத் தக்கவற்றை நுகர்விக்க | திருமால் |
| 3. | அழித்தல் | தூலநிலையில் உள்ளவற்றைச் சூக்குமநிலையில் ஒடுக்குதல் | உயிர்களை இளைப்பாற்று விக்க | உருத்-திரன் |
| 4. | மறைத்தல் | தான் (இறைவன்) புலப்படாது மறைந்து நிற்றல் | உயிர்களை நுகர்ச்சியில் நிலைநிறுத்த. உயிர்களுக்கு அருள்புரிய | மகேசு-வரன் |
| 5. | அருளல் | உயிர்களுக்குப் பேரின்பத்தை நல்குதல் | உயிர்களைத் தன் திருவடியில் சேர்த்துக் கொள்ள | சதா-சிவன் |

* அடிப்படை : சிவஞானசித்தியார் சுபக்கம், 57
சிவப்பிரகாசம், 18

## பின்னிணைப்பு எண் 17
## உயிரின் அவத்தைகள் *

- காரண அவத்தைகள்
  - கேவலம்
  - சகலம்
  - சுத்தம்
- காரிய அவத்தைகள்
  - நனவு
  - கனவு
  - உறக்கம்
  - பேருறக்கம்
  - உயிர்ப் படங்கல்


* அடிப்படை : சிவஞானசித்தியார் சுபக்கம், 227 226.

| எண் | காரிய அவத்தைகள் | வட மொழிப் பெயர்கள் | தொழிற்படும் கருவிகள் | | உயிர் நிலை |
|---|---|---|---|---|---|
| 1. | நனவு | சாக்கிரம் | 35 | | |
| | | | ஞானேந்திரியம் | 5 | |
| | | | கன்மேந்திரியம் | 5 | |
| | | | விடயங்கள் | 10 | புருவநடு |
| | | | வாயுக்கள் | 10 | |
| | | | அந்தக்கரணம் | 4 | |
| | | | புருடன் | 1 | |
| 2. | கனவு | சொப்பனம் | ஞானேந்திரியம், கன்மேந்திரியம் நீங்கிய ஏனை 25 கருவிகள் | | கண்டம் |
| 3. | உறக்கம் | சுழுத்தி | சித்தம் | 1 | |
| | | | பிராணன் | 1 | இதயம் |
| | | | புருடன் | 1 | |
| | | | | 3 | |
| 4. | பேருறக்கம் | துரியம் | பிராணன் | 1 | உந்தி |
| | | | புருடன் | 1 | |
| | | | | 2 | |
| 5. | உயிர்ப் படங்கல் | துரியாதீதம் | புருடன் | 1 | மூலாதாரம் |

*அடிப்படை : சிவஞானசித்தியார் சுபக்கம், 223.

## பின்னிணைப்பு எண் 18

### முப்பத்தாறு தத்துவங்கள்



- அகங்காரம் 22
  - தைசதம் 22அ. (சாத்வீகம்)
    - ஞானேந்திரியங்கள்
      - மனம் 16
      - சுரோத்திரம் (செவி) 15
      - துவக்கு (மெய்) 14
      - சட்சு (கண்)13
      - சிங்குவை (நாக்கு)12
      - கிராணம் (மூக்கு) 11
  - வைகாரியம் 22ஆ. (இராட்சதம்)
    - கன்மேந்திரியங்கள்
      - வாக்கு (வாய்) 21
      - பாதம் (கால்) 20
      - பாணி (கை)19
      - பாயு (அபானம்)18
      - உபத்தம் (குறி) 17
  - பூதாதி 22இ. (தாமதம்)
    - தன்மாத்திரைகள்
      - சத்தம் (ஓசை)10
      - பரிசம் (ஊறு)9
      - ரூபம் (ஒளி)8
      - ரசம் (சுவை)7
      - கந்தம் (நாற்றம்) 6
    - பஞ்சபூதங்கள்
      - ஆகாயம்(வான் வெளி)5
      - வாயு (காற்று) 4
      - தேயு (தீ) 3
      - அப்பு (நீர்) 2
      - பிருதிவி (நிலம்) 1

எண்கள் தத்துவ எண்களைக் குறிக்கும்.

1-24 வரை ஆன்மதத்துவம்

25-31 வரை வித்தியாதத்துவம்

32-36 வரை சிவதத்துவம்

( ) இக்குறியீட்டுக்குள் எழுதியுள்ளவை ஒருபொருட் சொற்கள்

## பின்னிணைப்பு எண் 19.1

## தத்துவ விளக்கம்

### 1. ஆன்ம தத்துவம் இருபத்து நான்கின் விளக்கம் *

| எண் | பூதங்கள் | வடிவு | நிறம் | எழுத்துக்கள் | அடையாளம் | அதி தெய்வங்களும் அவர்கள் தொழில்களும் | | குணம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | நிலம் | நாற்கோணம் | பொன்மை | ல | வச்சிரம் | நான்முகன் | படைத்தல் | திண்மையானது |
| 2. | நீர் | அரைமதி | வெண்மை | வ | தாமரை | திருமால் | காத்தல் | குளிர்ந்தது |
| 3. | தீ | முக்கோணம் | செம்மை | ர | சுவத்திகம் | உருத்திரர் | அழித்தல் | எரிப்பது |
| 4. | காற்று | அறுகோணம் | கருமை | ய | அறுபுள்ளி | மகேசுவரர் | மறைத்தல் | எங்கும் பரந்திருப்பது |
| 5. | விண் | வட்டம் | புகைநிறம் | அ | அமுதத்துளி | சதாசிவர் | அருளல் | எங்கும் நிறைந்திருப்பது |

| அறிவுப்பொறிகள் 5ம் புலன் 5ம் (ஞானேந்திரியம்) | | தொழிற்பொறிகள் 5ம் அவைதொழிற்படுமாறும் (கன்மேந்திரியம்) | | அந்தக்கரணம் 4ம் அவற்றின் தொழிலும் | |
|---|---|---|---|---|---|
| பொறி | புலன் | | | | |
| மெய் | - காற்றிடமாக நின்று ஊற்றின்பத்தைச் செய்யும் | சொல் | - வானிடமாக நின்று ஒலிக்கும் | மனம் | - பற்றும் |
| வாய் | - நீரிடமாக நின்று சுவையை அறியும் | கால் | - காற்றிடமாக நின்று நடக்கும் | புத்தி | - உறுதிப்படுத்தும் |
| கண் | - நெருப்பிடமாக நின்று உருவைக்காணும் | கை | - நெருப்பிடமாக நின்று இடுதலையும் ஏற்றலையும் செய்யும் | ஆங்காரம் | - பலமுறையும் ஒன்றைப் பற்றி எழும் |
| மூக்கு | - மண் இடமாக நின்று நாற்றத்தை அறியும் | எருவாய் | - நீரிடமாக நின்று மலம் நீரினைப் பிரிக்கும் | சித்தம் | - தம்மிடத்து உற்ற பொருளைச் சிந்திக்கும் |
| செவி | - விண் இடமாகக் கொண்டு ஓசையை அறியும் | கருவாய் | - மண்ணிடமாக நின்று விந்துவை வெளிப்படுத்தும் | | |

## பின்னிணைப்பு எண் 19.2
## தத்துவ விளக்கம்*

### 2. வித்தியா தத்துவங்கள் 7

1. காலம் - முக்காலத்தையும் விளக்கும்
2. நியதி - உயிர் செய்யும் வினைப்பயன், அதனைச் சாருமாறு வரையறைப்படுத்தும்
3. கலை - ஆணவத்தைச் சிறிது நீக்கி உயிருக்குத் தொழில் செய்யும் ஆற்றலை எழுப்புவிக்கும்
4. வித்தை - உயிர் விரைவில் அறியும் ஆற்றலை எழுப்பு விக்கும்
5. அராகம் - பெற்ற பொருளைச் சிறிதாக்கிப் பெறாத பொருளில் விருப்பத்தை உண்டாக்கும்.
6. புருடன் (ஆன்மா) - உயிர் ஐம்புலன்களை நுகருங்கால் அப்பொருளில் அதனை அழுத்துவிக்கும்.
7. மாயை - ஒன்றையும் நினையவொட்டாமல் மயக்கத்தைச் செய்யும்

* அடிப்படை : உண்மை விளக்கம் 19.

## பின்னிணைப்பு எண் 19.3
## தத்துவ விளக்கம்*

### 3. சிவதத்துவம் 5

1. சுத்தவித்தை - அறிவு மேற்படத் தொழில் குறைந்து நிற்கும்
2. ஈசுரம் - தொழில் மேற்பட அறிவு குறைந்து நிற்கும்
3. சதாசிவம் - அறிவும் தொழிலும் ஒத்து இருக்கும்
4. சத்தி - தொழிற்படுத்தும்
5. சிவம் - அறிவாயிருக்கும்

* அடிப்படை : உண்மை விளக்கம் 21

துணைநூற் பட்டியல்

## முதன்மை ஆதாரங்கள்

## திருஞானசம்பந்தர் தேவாரம்


1. கந்தசாமிப்பிள்ளை, அ.(உ.ஆ.), திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரப் பதிகங்கள் மூன்றாவது திருமுறை, தருமபுர ஆதீனம், 1955.
2. சண்முகம்பிள்ளை (ப.ஆ.), மூவர் தேவாரம் அடங்கல் முறை, நிரஞ்சன விலாச அச்சுக்கூடம், சென்னை, 1904.
3. சபாபதி முதலியார் (ப.ஆ.), திருஞானசம்பந்தர் தேவாரம், மனோன்மணிவிலாஸ அச்சுக் கூடம், சென்னை, 1893.
4. ————————, திருஞானசம்பந்தர் தேவாரம், ஸன் ஆப் இந்தியா பிரஸ், சென்னை, 1906.
5. ஞானசம்பந்தம்பிள்ளை, திருஞானசம்பந்தர் தேவாரம் அடங்கல் முறை, கலாரத் நாகர அச்சுக்கூடம், சென்னை, 1881.
6. ————————, திருஞானசம்பந்தர் தேவாரம், கழகம், 1927.
7. ————————, திருஞானசம்பந்தர் தேவாரம், சமாசம், சென்னை, 1931.

8. தண்டபாணி தேசிகர்,ச.(உ.ஆ.), திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் முதல் திருமுறை, தருமபுர ஆதீனம், 1953.

9. பட்டுச்சாமி ஓதுவார், தி.(உ.ஆ.), திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் (தலமுறை), காசி மடம், திருப்பனந்தாள், 1950.

10. மாணிக்கவாசக முதலியார், முத்து.சு.(உ.ஆ.), திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்கள் இரண்டாவது திருமுறை, தருமபுர ஆதீனம், 1954.


## மெய்கண்ட சாத்திரங்கள்


11. அருணந்தி சிவாசாரியார், சிவஞானசித்தியார், சிவஞான சுவாமிகள் (உ.ஆ.), சமாசம், 1940.

12. --------, இருபது இருபஃது, சீகாழித் தத்துவநாதர் (உ.ஆ.), சமாசம், 1940.

13. உமாபதிசிவம், உண்மைநெறி விளக்கம், சிந்தனையுரை, சமாசம், 1940.

14. --------, கொடிக்கவி, பழைய உரை, சமாசம், 1940.

15. --------, சங்கற்ப நிராகரணம், ஞானப்பிரகாச தேசிகர் உரை, சமாசம், 1940.

16. ---------, சிவப்பிரகாசம், மதுரைச் சிவப்பிர காசர் உரை, சமாசம், 1940.

17. ---------, திருவருட்பயன், சிந்தனையுரை, சமாசம், 1940.

18. ---------, நெஞ்சுவிடுதூது, பழையஉரை, சமாசம், 1940.

19. ---------, போற்றிப்பஃறொடை, பழைய உரை, சமாசம், 1940.

20. ---------, வினாவெண்பா, நமச்சி- வாயத் தம்பிரான் உரை, சமாசம், 1940.

21. திருக்கடவூர் உய்யவந்ததேவர், திருக்களிற்றுப்படியார், பழைய பொழிப்புரை, சமாசம், 1940.

22. திருவியலூர் உய்யவந்ததேவர், திருவுந்தியார், பழைய பொழிப் புரை,சமாசம், 1940.

23. மனவாசகங்கடந்தார், உண்மை விளக்கம், சமாசம், 1940.

24. மெய்கண்டதேவர், சிவஞானபோதம், சிவஞான சுவாமிகள் உரை, சமாசம், 1940.

குறிப்பு மேற்கூறிய மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கும், சித்தாந்த சாத்திரம் பதினான்கு மூலமும் உரையும் என்று சமாசப் பதிப்பாக ஒரே நூலாக வெளிவந்துள்ளது.

## துணைமை ஆதாரங்கள்

### தமிழ் நூல்கள் :


25. அண்ணா (பு.பெ.) (உ.ஆ.), யஜுர் வேத ஸந்தியா வந்தனம், ராமகிருஷ்ணமடம், சென்னை, 1962.

26. அரங்கசாமி முதலியார், க., சிவஞானபோதம் எளியவுரை, சேலம் கூட்டுறவு அச்சகம், சேலம், 1969.

27. அருணாசலம், ப., சைவசமயம் (ஓர் அறிமுகம்), நாகர்கோவில், 1979.

28. --------, பக்தி இலக்கியம் ஓர் அறிமுகம். தமிழ்ப்புத்த காலயம், சென்னை, 1973.

29. அருணாசலம், மு., சைவசமயம்,பாரி நிலையம் (வி.உ.), சென்னை, 1969.

30. --------, சைவசித்தாந்தச் சிறுநூல்கள் சிறு ஆராய்ச்சிக் குறிப்பு, திருச்சிற்றம்பலம், 1966.

31. --------, தமிழ் இலக்கிய வரலாறு பன்னிரண்டாம் நூற்றாண்டு இரண்டாம் பாகம், காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம் பலம், மாயூரம், 1973.

32. --------, தமிழ் இலக்கிய வரலாறு பதினான்காம் நூற்றாண்டு, காந்தி வித்தியாலயம், திருச் சிற்றம்பலம், மாயூரம், 1969.

33. --------, தமிழ் இலக்கிய வரலாறு பதினைந்தாம் நூற்றாண்டு, காந்தி வித்தியாலயம், திருச் சிற்றம்பலம், மாயூரம், 1969.

34. --------, தமிழ் இலக்கிய வரலாறு பதினாறாம் நூற்றாண்டு இரண்டாம் பாகம், காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம் பலம், மாயூரம், 1975.

35. அருணைவடிவேல் முதலியார்,சி., சித்தாந்தத் தெளிவியல், தருமபுர ஆதீனம், 1968.

36. --------, சித்தாந்த வினா விடை, தருமபுர ஆதீனம், 1975.

37. --------, முப்பொருள் இயல்பு, சமாசம், 1976.

38. ஆலாலசுந்தரம்பிள்ளை, கா., திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம், புரொகிரஸிவ் அச்சுக் கூடம், சென்னை, 1938.

39. ஆறுமுகநாவலர், கே., இந்துமத இணைப்பு விளக்கம், தொண்டன் காரி யாலயம், நாகர்கோவில், 1975.

40. ஆறுமுகநாவலர், சைவ வினாவிடைஇரண்டு பகுதிகள், வித்தியாநுபாலன அச்சகம், சென்னை, 1977.

41. ஆறுமுகனார், யாழ்.ஏ. (தொ.ஆ.), தேவாரத் திரட்டு (உரையுடன்), ஞானசம்பந்தர் பிரஸ், தருமபுர ஆதீனம், 1952.

42. இரத்தினசபாபதி, வை., திருஞானசம்பந்தர்ஓர் ஆய்வு முதற்பகுதி, டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் மெய்யுணர்வு மேல்நிலைக் கல்வி நிறுவனம், சென்னைப் பல்கலைக் கழகம்,சென்னை, 1981.

43. ————————, திருமுறைத் தெளிவே சிவ ஞான போதம், சென்னைப் பல்கலைக் கழகத் தத்துவத் துறை வெளியீடு,சென்னை, 1979.

44. ————————, வீரசைவம், தேவசேனாபதி, வ.ஆ (பொ.ப.ஆ.), சென்னைப்பல்கலைக்கழகம், சென்னை, 1977.

45. இரத்தினஞ்செட்டியார், முரு. பழ., தடைகளும் விடைகளும் முதற்பகுதி,மறைமலையடிகள் மன்றம், புன்செய்ப் புளியம் பட்டி, 1976.

46. ————————, தடைகளும் விடைகளும் இரண்டாம் பகுதி, மறைமலையடிகள் மன்றம், புன்செய்ப் புளியம்பட்டி, 1975.

47. இராசமாணிக்கனார், மா., சைவசமய வளர்ச்சி, பாரி நிலையம், சென்னை, 1972.

48. ————————, பெரியபுராண ஆராய்ச்சி, பழனியப்பா பிரதர்ஸ்,சென்னை, 1960.

| | | |
|---|---|---|
| 49. | இராமசாமி முதலியார், ராம.ச.(தொ.ஆ), | சித்தாந்த சைவ விளக்கக் கட்டுரைகள், ஸ்ரீ நிலையம் அச்சகம், காஞ்சிபுரம், 1947. |
| 50. | இராமநாதபிள்ளை, ப.(உ.ஆ.), | உமாபதி சிவாசாரியார் திரட்டியருளிய தேவார அருள் முறைத் திரட்டு, கழகம், சென்னை, 1961. |
| 51. | ———————, | தேவாரத் திருப்பதிகத் திரட்டு சம்பந்தர், கழகம், சென்னை, 1964. |
| 52. | ———————, | சங்கற்ப நிராகரணம் உரையும் விளக்கமும், கழகம், சென்னை, 1968. |
| 53. | ———————, | மெய்கண்ட சாத்திரம் பதினான்கு மூலமும் உரையும் முதற்பகுதி, கழகம், 1969. |
| 54. | இராமநாதபிள்ளை, ப.(ப.ஆ.), | மெய்கண்ட சாத்திரம் பதினான்கு மூலமும் உரையும் இரண்டாம் பகுதி, கழகம், சென்னை, 1969. |
| 55. | இராமலிங்கத் தம்பிரான், கொ. (உ.ஆ.), | வச்சணந்தி மாலை என்னும் வெண்பாப் பாட்டியலும் வரை யறுத்த பாட்டியலும், கழகம், சென்னை, 1969. |
| 56. | இராமலிங்க முதலியார், கீ., | உண்மை நெறி விளக்க ஆராய்ச்சியுரை, மெய்-கண்டார் கழக வெளியீடு, காஞ்சிபுரம், 1948. |

57. ஈசுவரமூர்த்திப்பிள்ளை, ஆ., போற்றிப்பஃறொடையும் வினாவெண்பாவும், மகாலட்சுமி விலாசம் பிரஸ், சென்னை, 1928.

58. உமாபதிசிவம், திருமுறைகண்ட புராணம், சுவாமிநாத பண்டிதர் (ப.ஆ.), திருவாவடுதுறை ஆதீனம், 1968.

59. கங்காதரன்,ச., சைவசித்தாந்த அடிப்படைக் கொள்கைகள், பண்ணை பிரிண்டர்ஸ், மதுரை, 1980.

60. கந்தசாமி,சோ.ந., தமிழும் தத்துவமும், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1976.

61. ————————, பௌத்தம், இராதா கிருஷ்ணன் மெய்யுணர்வு மேல்நிலைக்கல்வி நிறுவனம், சென்னைப் பல்கலைக்கழகம், 1977.

62. கந்தசாமிக் கவிராயர் மு.ரா., சைவசித்தாந்த விளக்கம், விவேகபானு அச்சுக்கூடம், மதுரை, 1913.

63. கலியாணசுந்தரயதீந்திரர், பூவை. 32 கட்டளைகள், முத்துவேல் முதலியார், அ.(ப.ஆ.), பூமகள் விலாச அச்சுக்கூடம்,சென்னை, 1931.

| | | |
|---|---|---|
| 63.அ. | – – – – – – – – (வி.ஆ.), | தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு, திருமகள் விலாச அச்சியந்திரசாலை, சென்னை, 1924. |
| 64. | காந்திமதிநாத பிள்ளை, வி.பி., | சிவஞானபோதச் சொற்பொழிவு நூல், கழகம், சென்னை, 1960. |
| 65. | கிருபானந்தவாரியார் (ப.ஆ.), | சிவஞானபோதம் (உரையுடன்), அப்பர் அருட் பணிக்கழகம், சென்னை, 1956. |
| 66. | – – – – – – – –, | சிவனருட் செல்வர், வானதி பதிப்பகம், சென்னை, 1970. |
| 67. | குமரகுருபரன்பிள்ளை, டி.எம் (ப.ஆ.), | திருமந்திரம், பன்னிரு திருமுறைப் பதிப்புநிதி வெளியீடு, குமரகுருபரன் சங்கம், ஸ்ரீ வைகுண்டம், 1968. |
| 68. | குமாரசுவாமிக் குருக்கள், ச., | முப்பொருள் விளக்கம், கலாநிதி யந்திர சாலை, பருத்தித் துறை, 1955. |
| 69. | குமாரவேலுப்பிள்ளை, வீ., | வினாவெண்பா ஆராய்ச்சி, ராயல் அச்சகம், சென்னை, 1950. |
| 70. | கோவிந்தசாமி, மு., | இலக்கியத் தோற்றம், பாரி நிலையம், (வி.உ.), சென்னை, 1960. |
| 71. | கோவிந்தனார், வெ., | தமிழர் சமயம் அல்லது சைவசமயம், கழகம், சென்னை, 1967. |

72. சதாசிவ செட்டியார் (உ.ஆ.), அகத்தியர் தேவாரத் திரட்டு, கழகம், சென்னை, 1929.

73. சஞ்சீவி, ந.(ப.ஆ.), தெய்வத்தமிழ், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1975.

74. சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் (ப.ஆ.), மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு திருமுறைத் திரு நாள் நிகழ்ச்சிகள், தருமபுர ஆதீனம், 1944.

75. சாமிநாதையர், உ.வே. (ப.ஆ.), சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், 1960.

76. ————————, மணிமேகலை, கபீர் அச்சுக் கூடம், சென்னை, 1965.

77. சிங்காரவேலன், சொ., திருஞானசம்பந்தர் வரலாற்றாராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும், கழகம், சென்னை, 1969.

78. சித்தலிங்கையா, டி.பி., சைவசமயத் தோற்றமும் வளர்ச்சியும், சோமு நூலகம், சென்னை, 1979.

79. சித்பவானந்த சுவாமி, கடவுளின் வடிவங்கள், இராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை, 1975.

80. ————————, சிவதத்துவம், இராமகிருஷ்ண தபோவனம் , திருப்பராய்த்துறை, 1976.

81. சிவகுருநாதபிள்ளை, ந., சிவஞானசித்தியார் ஆராய்ச்சி, கழகம், சென்னை, 1949.

82. ————————, (தொ.ஆ.), நால்வர் சரித்திரம், சைவ சித்தாந்த சபை, தூத்துக்குடி, 1941.

83. சிவஞானம்பிள்ளை, சே., திருஞானசம்பந்தர், ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ், அரோரா அச்சகம், சென்னை, 1931.

84. சிவஞானயோகிகள், காஞ்சிப்புராணம், புங்கத்தூர் கந்தசுவாமி முதலியார் (ப.ஆ.), ஆதி கலாநிதி அச்சுக்கூடம், சென்னை, வெகுதானிய ஆண்டு.

85. ————————, சிவஞானபோதமும் சிவஞானபாடியமும், கழகம், சென்னை, 1952.

86. சிவஞானயோகிகள்,சாமி. விருதை., சிவஞானபோத வினா விடை, சைவப்பிரகாச அச்சு யந்திர சாலை, தூத்துக்குடி, 1930.

87. சிவபாதசுந்தரம், சு., சைவசமயசாரம், ஆறுமுக நாவலர் வித்தியாநுபாலன அச்சகம்,சென்னை, 1957.

88. ————————, சைவசித்தாந்தம், விவேகானந்த சபைப் பிரசுரம், கொழும்பு, 1932.

89. ————————, (உ.ஆ.), திருவருட்பயன், சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம், 1950.

90. சுப்பிரமணிய பிள்ளை, கா., இலக்கிய வரலாறுஇரண்டாம் பாகம், கழகம், 1958.

91. ————————, சைவசித்தாந்தம் உண்மை வரலாறு, கழகம், சென்னை, 1927.

92. ————————, சைவசித்தாந்த சந்தானா சிரியர்களும் அவர்களின் அருள்நூல்களும், கழகம், சென்னை, 1958.

93. ————————, தமிழ் நாட்டு இந்து சமயங்களின் சுருக்க வரலாறு, கழகம், சென்னை, 1927.

94. ————————, தமிழர் சமயம், கழகம், சென்னை, 1953.

95. ————————, திருஞானசம்பந்த சுவாமிகள் சரித்திரம், கழகம், சென்னை.

96. ————————, மெய்கண்டாரும் சிவஞான போதமும், சமாசம், சென்னை, 1932.

97. சுப்பிரமணிய பிள்ளை, கா., மெய்கண்ட நூல்கள் உரைநடை, தொண்டை நன்னாட்டுச் சைவசித்தாந்தக் கழகம், காஞ்சிபுரம், 1938.

98. சுப்பிரமணிய பிள்ளை, சி.கே (உ.ஆ.), 'திருஞானசம்பந்த நாயனார் புராணம்', திருத்தொண்டர் புராணம் நான்காம் பகுதி, தமிழ்ச் சங்கம், கோயம் புத்தூர், 1949.

99. ————————, 'திருஞானசம்பந்த நாயனார் புராணம்' திருத்தொண்டர் புராணம்ஐந்தாம் பகுதி, தமிழ்ச்சங்கம், கோயம்புத்தூர், 1950.

100. ————————, திருப்பாசுர விளக்கம், தமிழ்ச் சங்கம்,கோயம்புத்தூர், 1949.

101. ————————, சித்தாந்தச் செம்பொருள் விளக்கம், திருவாவடுதுறை ஆதீனம், 1961.

102. சுப்பிரமணியம்; கே. (ப.ஆ.), சேக்கிழார் சுவாமிகள் அருளிச் செய்த திருத் தொண்டர் புராணம் என வழங்கும் பெரியபுராணம், பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதி வெளியீடு, காசிமடம், திருப்பனந்தாள், 1974.

103. சுப்பிரமணியன்,ச.வே., ஆராய்ச்சி நெறிமுறைகள், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 1975.

104. சுத்தானந்த பாரதியார், சமய விளக்கம், சுத்தானந்த நூலகம்,சென்னை, 1965.

105. சுந்தரமுர்த்தி, கு.(ப.ஆ.), இருபா இருபஃது (தெளிவுரையுடன்), காசிமடம், திருப்பனந்தாள், 1981.

106. ————————, உண்மைநெறி விளக்கம் (தெளிவுரையுடன்), காசிமடம், திருப்பனந்தாள், 1978.

107. ————————, உண்மை விளக்கம் (தெளிவுரையுடன்), காசிமடம்,திருப்பனந்தாள், 1979.

108. ————————, கொடிக்கவியும் வினாவெண்பாவும் (தெளிவுரையுடன்), காசிமடம், திருப்பனந்தாள், 1980.

109 சுந்தரமுர்த்தி, கு.(ப.ஆ.), திருக்களிற்றுப்படியார் (தெளிவுரையுடன்), காசிமடம், திருப்பனந்தாள், 1980.

110. ————————, திருவருட்பயன் (தெளிவுரையுடன்), காசிமடம், திருப்பனந்தாள், 1978.

111. ————————, திருவுந்தியார் (தெளிவுரையுடன்), காசிமடம், திருப்பனந்தாள், 1979.

112. சுந்தரமூர்த்தி, கோ., சைவசமயம், சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1977.

113. செங்கல்வராய பிள்ளை, வ.சு., தேவார ஒளிநெறி (சம்பந்தர்) முதல்தொகுதி, கழகம், சென்னை, 1946.

114. ————————, தேவார ஒளிநெறி (சம்பந்தர்) இரண்டாம் தொகுதி, கழகம், சென்னை, 1963.

115. ————————, தேவார ஒளிநெறி (சம்பந்தர்) மூன்றாம் தொகுதி, கழகம், சென்னை, 1954.

116. ————————, தேவார ஒளிநெறிக் கட்டுரை, லிபர்ட்டி அச்சுக்கூடம், சென்னை, 1944.

117. செந்திநாதையர், தேவாரம் வேதசாரம், சைவ வித்தியாநுபாலனயந்திர சாலை, சென்னை, பிங்கல வருடம்.

118. சேக்கிழார். திருத்தொண்டர் மாக்கதை, இராமசாமிப் புலவர், சு.அ.(வி.ஆ.), கழகம், சென்னை, 1970.

119. சோமசுந்தரம் செட்டியார், சைவசித்தாந்தச் சொற் பொழிவுகள், ஜகந்நாதா சார்யா (தொ.ஆ.), சென்னை, 1972.

120. சோமசுந்தரத் தம்பிரான் (உ.ஆ.), தோடுடைய செவியன் என்னும் தேவார உரை, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் சைவசமய குருகுல வெளியீடு,சீகாழி, 1942.

| | | |
|---|---|---|
| 121. | ஞானசம்பந்தன், அ.ச., | தத்துவமும் பக்தியும், தெய்வத்தமிழ் மன்றம், மாயூரம், 1977. |
| 122. | ஞானமூர்த்தி, தா.எ., | சமணம், இராதாகிருஷ்ணன் மெய்யுணர்வு மேல்நிலைக் கல்வி நிறுவனம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1977. |
| 123. | தண்டபாணி செட்டியார், எஸ்., | திருஞானசம்பந்தர், ஸி.குமாரசாமி நாயுடு ஸன்ஸ், சென்னை, 1921. |
| 124. | திருஞானசம்பந்தப் பிள்ளை, ம.வே (தொ.ஆ.), | சமயக் குரவர் சந்தான குரவர் சரித்திரச் சுருக்கம், 1953. |
| 125. | திருநாவுக்கரசு, மறை., | பெரியபுராண ஆய்வுரை மூன்றாம் தொகுதிசம்பந்தர், மறைமலையடிகள் பதிப்பகம், சென்னை, 1975. |
| 126. | திருவிளங்கம், மு(உ.ஆ.), | சிவஞானசித்தியார் சுபக்கம், கூட்டுறவு அச்சகம், யாழ்ப் பாணம், 1971. |
| 127. | ————————, | சிவப்பிரகாசம், திருமகள் அச்சியந்திரசாலை, கண்ணாகரம், 1933. |
| 128. | துரைசாமிப்பிள்ளை, ஔவை.சு., | சைவ இலக்கிய வரலாறு, அ.ப.கழகம், அண்ணாமலை நகர், 1958. |

129. --------, சிவஞானபோத மூலமும் சிவஞான சுவாமிகள் அருளிய சிற்றுரையும், அ.ப.கழகம், அண்ணாமலை நகர், 1953.

130. --------, ஞானசம்பந்தர் வழங்கிய ஞானவுரை, தருமபுர ஆதீனம், 1945.

131. --------, ஞானமிர்தம் மூலமும் பழைய உரையும், அ.ப.கழகம், அண்ணாமலை நகர், 1954.

132. --------, மெய்கண்டார், விவேகானந்த அச்சகம், மதுரை, வருடம் இல்லை.

133. நடேசக்கவுண்டர், கு., அப்பர் வரலாற்றாராய்ச்சியும், தேவாரத்திறனாய்வும், கழகம், சென்னை, 1972.

134. நல்லசாமி பிள்ளை, ஜே.எம். சைவசித்தாந்த ஆராய்ச்சி அத்வைதம், மெய்கண்டான் அச்சுக்கூடம், 1910.

135. நெல்லையப்ப பிள்ளை, மா.வே., உமாபதி சிவாசாரியார் திரட்டியருளிய தேவார அருள்முறைத் திரட்டு, கணேசன் பிரிண்டிங் பிரஸ், திருநெல்வேலி, 1939.

136. பக்தவத்சலம், எம். (ப.ஆ.), பன்னிரு திருமுறைத் தெளிவு திருஞானசம்பந்தர் திருமுறைகள், மீனாட்சி சுந்தரேசுவரர் தேவஸ்தான வெளியீடு, மதுரை, 1964.

137. பழநியப்பன், கி., ஒன்றே குலம் ஒருவனே தேவன், விவேகாநந்தா அச்சகம், மதுரை, 1982.

138. பாலசுந்தரன், ஆதி., சம்பந்தர் அருள்வாக்கு, சக்தி பதிப்பகம், சென்னை, 1981.

139. பாலசுந்தரம்பிள்ளை., தி.சு., (இளவழகனார்) (உ.ஆ.), தொல்காப்பியம், கழகம், 1967.

140. பாலசுப்பிரமணிய முதலியார், ம., நால்வர் சரித்திரமும் அற்புதத் தேவாரத் திரட்டும், தருமபுர ஆதீனம், 1941.

141. பாலசுப்பிரமணியன், ம., சிவஞானசித்தியார் சுபக்கமும் சிவஞான சுவாமிகள் அருளிச்செய்த பொழிப்புரையும், சமாசம், சென்னை, 1940.

142. பெரியசாமிப்பிள்ளை, எஸ்., திருமுறைச் சிறப்பு, சாது அச்சுக்கூடம்,சென்னை, 1943.

143. பெரியசாமிப்பிள்ளை, ம., சித்தாந்தப் பொன்மொழி, சைவசித்தாந்த சபை, திரிசிரபுரம், 1936.

144. மகாலிங்கத் தம்பிரான், (ப.ஆ.), சிவஞானத் திருமுறை, காசிமடம், திருப்பனந்தாள், 1956.

145. மறைமலையடிகள், சிவஞானபோத ஆராய்ச்சி, கழகம், 1958.

146. ———————, சைவசித்தாந்த ஞானபோதம், திருமுருகன் அச்சுக்கூடம், பல்லாவரம், 1935.

147. ———————, மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் பகுதி 2, சென்னை, 1957.

148, மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகள், (வி.ஆ.), சிவஞானபோத விளக்கம், கபாலீசுவரர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை, 1963.

149. ———————, சைவசமய அறிமுகம், திருவரங்கனார் அச்சகம், சென்னை, 1972.

150. மாணிக்கவாசகம் பிள்ளை, வே.(உ.ஆ.), சிவப்பிரகாசம் பதவுரை, மீரானிய அச்சகம், நெல்லை, 1959.

151. மாணிக்கவாசகர், திருவாசகம், வரதராஜன், ஜி.(வி.ஆ.), பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1971.

152. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, த.ச.(கு,ஆ.), சந்தானாசாரிய புராண சங்கிரகம்,திருவாவடுதுறை ஆதீனம், 1951.

153. மீனாட்சிசுந்தரனார், தெ.பொ., சம்பந்தரும் சமணரும், ருத்திரா பதிப்பகம், சென்னை, 1957.

154. முத்துக்குமாரத் தம்பிரான், (தொ.ஆ.), திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் உரை, தில்லைத்திருமுறைக் கழகம், சிதம்பரம், 1951.

155. முத்துராமன், சைவசித்தாந்தம், தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1975.

156. முருகவேல், ந.ரா., தமிழ் ஞானசம்பந்தர், திருவள்ளுவர் செந்தமிழ்ச் சிவநெறிக் கழகம், சென்னை, 1955.

157. --------, தெய்வத் திருவுருவங்கள், தணிகைப் பதிப்பகம், சென்னை, 1974.

158. --------, மெய்கண்ட நூல்களின் வாழ்வியல் உண்மைகள், குருகுலம், மதுராந்தகம், 1973.

159. ராமானுஜாசாரி, ர., சைவசித்தாந்தம், ஹோமியோபதி பிரஸ், கும்பகோணம், 1963.

160. வச்சிரவேல் முதலியார், க., சிவஞானபாடியத் திறவு, பொன்விழா வெளியீடு, இராதாகிருஷ்ணன் மெய்யுணர்வு மேல்நிலைக்கல்வி நிறுவனம், சென்னைப் பல்கலைக்கழகம், 1977.

161. வச்சிரவேல் முதலியார், க., சைவசித்தாந்தத் திறவு, ம.கா.ப.கழகம், மதுரை, 1980.

162. ---------, திருக்குறளின் உட்கிடை சைவசித்தாந்தம், திருவருள் தவநெறி மன்றம், மதுரை, 1953.

163. ---------, (உ.ஆ.), திருவருட்பயன், இந்து மாணவர் சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை, 1967.

164. ---------, திருவுந்தியார், சமாசம், திருச்சிராப்பள்ளி, 1966.

165. வச்சிரவேல் முதலியார், க., கங்காதரன், ச.(ப.ஆ.), சிவஞானபோதமும் வார்த்திகப் பொழிப்பும், ம.கா.ப.கழகம், மதுரை, 1978.

166. வச்சிரவேல் முதலியார், க., வெங்கடாசாரிய சுவாமிகள், உ.வே., சைவமும் வைணவமும், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, 1976.

167. வரதராசனார், மு.(உ.ஆ.), திருக்குறள், கழகம், 1976.

168. வாலையானந்த சுவாமிகள், சிவஞானபோதச் சுருக்கம், சோல்டன் கம்பெனி, திருவல்லிக்கேனி, 1928.

169. வெள்ளைவாரணன், க.(வி.ஆ.), திருவருட்பயன் நிரம்ப அழகிய தேசிகர் உரை, சமாச மணிவிழா நினைவுமலர் வெளியீடு, சிதம்பரம், 1965.

170. வெள்ளைவாரணன், க., பன்னிரு திருமுறை வரலாறு முதற்பகுதி, அ.ப.கழகம், அண்ணாமலைநகர், 1962.

171. வேங்கடசாமி, மயிலை.சீனி., சமணமும் தமிழும், கழகம், 1970.

172. வேங்கடாசலம், தண்.கி., சம்பந்தர், 1968.

173. வேங்கடேச சர்மா, ஆங்கிரஸ, எஸ்.(உ.ஆ.), மூவர் தமிழ்மாலை - மாலை 1, டெலிபோஸ்ட் காலனி, குறுக்குத்தெரு, சென்னை, சனவரி, 1978.

174. ————————, மூவர் தமிழ்மாலை - மாலை 2, டெலிபோஸ்ட் காலனி, சென்னை, ஏப்ரல், 1978.

175. ————————, மூவர் தமிழ்மாலை - மாலை 3, டெலிபோஸ்ட் காலனி, சென்னை, மே, 1978.

176. ————————, மூவர் தமிழ்மாலை - மாலை 4, டெலிபோஸ்ட் காலனி, சென்னை, ஆகஸ்ட், 1978.

177. ————————, மூவர் தமிழ்மாலை - மாலை 5, டெலிபோஸ்ட் காலனி, சென்னை, பிப்ரவரி, 1979.

178. ————————, மூவர் தமிழ்மாலை - மாலை 6, டெலிபோஸ்ட் காலனி, சென்னை, ஜூன், 1979.

179. வேலாயுத முதலியார், திருஞானசம்பந்தர், கழகம், சென்னை, 1938.

180. வேலாயுதம், கா., திருஞானசம்பந்தர் வரலாறு, சிவநெறிக் கழகம், கரூர், 1963.

181. வேலுப்பிள்ளை, ஆ., தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், சென்னை, 1969.

182. ————————, தமிழர் சமய வரலாறு, பாரிப் புத்தகப் பண்ணை, சென்னை, 1980.

183. லக்ஷ்மணன், கி., இந்திய தத்துவஞானம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1980.

184. ஜகந்நாதன், கி.வா., சிற்றம்பலம், அமுத நிலையம் லிமிடெட், சென்னை, 1972.

185. ————————, பதினோராந் திருமுறை, காசிமடம், திருப்பனந்தாள், 1950.

186. ஸ்ரீ நிவாஸாசாரியன், தே.ஆ., சிவஞானபோதமும் பன்னிரு திருமுறையும், திருவாவடு துறை ஆதீனம், 1954.

187. ————————, திருவருள்மொழி, ஸ்ரீ இராம கிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை, 1943.

187அ. ————————, கடோபநிடதம் II, ராம கிருஷ்ணமடம், சென்னை, 1948.

## கட்டுரைகள்

188. அன்னி மிருதுலகுமாரி தாமசு, "சம்பந்தர் தேவாரம் பாவமைப்பு" ஆய்வுக்கோவை, ஐந்தாவது கருத்தரங்கு, இ.ப.க.த.மன்றம், அண்ணாமலைநகர், 1973.

189. அருணாசலம், மு., "அவையே தானே ஆதல்" சமாச பொன்விழா மலர், சென்னை, 1955.

190. --------, "சித்தாந்த சாத்திரங்கள் வரலாறு" ஸ்ரீ குமரகுருபரன், தொகுதி 4, பகுதி 9, ஜூன், 1982.

191. அருணைவடிவேல் முதலியார், சி., "சித்தாந்த நூல்கள், ஞானசம்பந்தம் வெள்ளிவிழா மலர், தருமபுர ஆதீனம், 1965.

192. இரவீந்திரன், தி., "முப்பொருள்", ஆய்வுக்கோவை - ஐந்தாவது கருத்தரங்கு,, இ.ப.க.த. மன்றம், 1973.

193. இராமநாதன் செட்டியார், "சிவஞானசித்தியார்" சமாச பொன்விழா மலர், சென்னை, 1955.

194. இராமநாதன் செட்டியார், வே., "திருமுறைகளும் மெய்கண்ட நூல்களும்" ஞானசம்பந்தம் வெள்ளிவிழா மலர், தருமபுர ஆதீனம், 1965.

195. இராமநாதபிள்ளை, ப., "திருப்பாசுரமும் சிவஞான போதமும்" செந்தமிழ்ச் செல்வி - சிலம்பு 31, கழகம், 1956.

196. கோமதி, "ஞானசம்பந்தர் தேவாரத்தின் முதல்பதிகச் சிறப்பும் அதிலுள்ள சைவசித்தாந்தக் கருத்துக்களும்",

ஆய்வுக்கோவை பன்னிரண்டாவது கருத்தரங்கு, தொகுதி 1, இ.ப.க.த. மன்றம், அண்ணா மலைநகர், 1980.

197. சிதம்பரநாத செட்டியார், அ., "திருவைந்தெழுத்து'' சமாச பொன்விழா மலர், சென்னை, 1955.

198. சிதம்பரனார், அ., "அடங்கன்முறை ஆராய்ச்சி'', கரந்தைத் தமிழ்ச் சங்க வெள்ளிவிழா மலர், தஞ்சாவூர், 1938.

199. சிவஞானத் தம்பிரான் சுவாமிகள், "ஆணவம்'',சித்தாந்தம், மலர் 36, இதழ் 5,மே, 1963.

200. சிவலிங்கனார், ஆ., "சைவசித்தாந்த சாத்திர நூல்கள்'', தமிழ் இலக்கியக் கொள்கை 5, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1980.

201. சுந்தரமூர்த்தி, கு., "மெய்கண்ட நூல்கள்'', ஞானசம்பந்தம், மலர் 36, இதழ்·12,நவம்பர், 1977.

202. சுப்பிரமணியபிள்ளை, சி.கே., "உண்மை விளக்கம்'', சமாச பொன்விழாமலர், சென்னை, 1955.

203. ————————. "சைவம்'', மதுரைத் தமிழ்ச்சங்கம் பொன்விழா மலர், 1956.

204. தணிகாசல முதலியார், நெ., "திருஞானசம்பந்தர் பதிக அமைப்பு", சித்தாந்தம், மலர் 6, இதழ் 9, செப்டம்பர், 1933.

205. தியாகராசன், மா.ப., "தருபவன் ஒருவன் வேண்டும்", சித்தாந்தம், மலர் 36, இதழ் 5, மே, 1963.

206. துரைசாமிப்பிள்ளை, ஔவை.சு., "ஊனவெம்பந்தம் போக்க ஞானசம்பந்தம் காக்க" சித்தாந்தம், மலர் 11, இதழ் 3, மார்ச், 1938.

207. பாலகிருஷ்ணன், சு., "தலை அல்லது பாசம்", ஆய்வுக்கோவை பதின்மூன்றாவது கருத்தரங்கு, தொகுதி 3, இ.ப.க.த. மன்றம், 1981.

208. பாலச்சந்திரன், சு., "தேவாரம்", தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி 1, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 1975.

209. முத்துத்தாண்டவராயபிள்ளை, பி.அ., "காழித்தேவாரச் சிறப்பு", செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 2, கழகம், 1924.

210. முருகவேள், ந.ரா., "இத்தை விளைவித்தல் மலம்", சித்தாந்தம், மலர் 35, இதழ் 7, ஜூலை, 1962.

211. வச்சிரவேல் முதலியார், க., "சைவசித்தாந்தம்", அப்பர் சுவாமிகள் குருபூஜை விழா மலர், திருவாரூர், 1969.

212. வெள்ளைவாரணன், "தேவார ஆசிரியர்கள் மேற் கொண்டொழுகிய சமயக்கொள்கை", கரந்தைத் தமிழ்ச்சங்க வெள்ளிவிழா மலர், தஞ்சாவூர், 1938.

213. வெள்ளைவாரணம், தா.ம., "நான்கு நெறிகள்", குமரகுருபரர், தொகுதி 3, பகுதி 1, அக்டோபர், 1980.

214. வெள்ளைவாரணன், ப., "வினா விடை", குமரகுருபரர், தொகுதி 2, பகுதி 11, ஆகஸ்ட், 1980.

215. வெங்கட்டராமையா, கே.எம்., "பன்னிரு திருமுறைச் சிறப்பு", ஞானசம்பந்தம், மலர் 7, இதழ் 3, 1948.


ஆங்கில நூல்கள் :


216. Balasubramanian, K.M., **Special Lectures on Saiva Siddhanta,** The Annamalai University, Annamalai Nagar, 1959.

217. Devasenapathy, V.A., **Of Human Bondage and Divine Grace,** Annamalai University, Annamalai Nagar, 1963.

218. ————————, **Saiva Siddhanta,** University of Madras, Madras, 1950.

219. Dorai Arangasamy, M.A., **The Religion and Philosophy of Thevaram-Book I,** University of Madras, Madras, 1958.

220. --------, **The Religion and Philosophy of Thevaram - Book II,** University of Madras, Madras, 1959.

221. Gangadaran, S., **Studies in Jnanamrtam,** Madurai Kamaraj University, Madurai, 1981.

222. Gnana Prakasar, S., **Philosophical Saivism,** St. Joseph's Catholic Press, Jaffna, Ceylon, 1917.

223. Kanthimathinatha Pillai, V.P., **The Cult of Siva or Lessons in Sivagnana botham,** Kazhagam, Madras, 1961.

224. Maraimalai Adigal, **The Saiva Siddhanta as Philosophy of Practical Knowledge,** Kazhagam, Madras, 1966.

225 Murugesa Mudaliar, N., **The Relevance of Saiva Siddhanta Philosophy,** Annamalai University, Annamalai Nagar, 1979.

226. --------, **Collected Lectures on Saiva Siddhanta (1946-1954),** Annamalai University, Annamalai Nagar, 1965.

227. Nallaswami Pillai, J.M., **Studies in Saiva Siddhanta,** Dharmapuram Adinam, 1962.

228. Narayana Iyer, C.V., **Origin and Early History of Saivism in South India,** University of Madras, Madras, 1936.

229. Paranjothi, V., **Saiva Siddhanta,** Luzac & Co Ltd., London, 1954.

230. Ponnaiah, V., **The Saiva Siddhanta Theory of Knowledge,** Annamalai University, Annamalai Nagar, 1952.

231. Pope, G.U., **Tiruvacagam** (Translation), University of Madras, Madras, 1959.

232. Ramanujachari, R., **Saiva Siddhanta,** Annamalai University, Annamalai Nagar, 1964.

233. Ratna Ammaiyar Navratnam, **Siddhanta Saivam in Essence and Manifestation,** Annamalai University, Annamalai Nagar, 1979.

234. Sabaratna Mudaliar, S., **Life of Thiru Gnana Sambbanthar,** Madras, 1920.

235. Siddalingaiah, T.B., **Origin and development of Saiva Siddhanta upto 14th Century,** Madurai Kamaraj University, Madurai, 1979.

236. Shivapadasundaram, S., **An outline of Shivagnana bodham,** Saiva Prakasa Press, Jaffna, 1951.

237. Soundra, P., **A Study of Saint Thirugnana Campantar,** Annamalai University, Annamalai Nagar, 1979.

238. Subramania Pillai, G., **Introduction and History of Saiva Siddhanta,** Annamalai University, Annamalai Nagar, 1948.

239. ————————, **The Metaphysics of Saiva Siddhanta System,** Kazhagam, Madras, 1958.

240. Sundaramoorthy, G., **Saivism**, Malasia Hindu Sangam, KualaLumpur, 1976.

241. · Vajravel Mudaliar, K., **Lectures on Saiva Siddhanta**, Annamalai University, Annamalai Nagar, 1953.

## Articles-English:

242. Arunachalam, M., " The Saiva Saints", **Saiva Siddhanta**, Madras, Vol.I No.2, 1966.

243. Mahadevan, T.M.P., " Saiva Siddhanta'', **History of Philosophy Eastern and western - Vol. I, George Allen and Unwin Ltd., London, 1967.**

244. Meenakshisundaram, T.P., "Saivism and Tamil Literature'', **Saiva Siddhanta.** Madras, Vol.I, No.I, 1966.

### ஆய்வேடுகள் :

245 அறிவுடைநம்பி, ம.சா., திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படும் இலக்கியக் கொள்கைகள், பிஎச்.டி.ஆய்வேடு, ம.கா.ப.கழகம், மதுரை, 1981.

246. சவகர்லால், ச., தேவாரத்தில் தொன்மைக் கூறுகள், பிஎச்.டி,ஆய்வேடு, ம.கா.ப.கழகம், மதுரை, 1981.

247. பரிமணம், அ.மா., அப்பர் தேவார ஆய்வு, பிஎச்.டி. ஆய்வேடு, ம.கா.ப. கழகம், மதுரை, 1974.

248. Rajalakshmi, S., "Critical Study of St. Gnana Sambandar's Thevaram", M. Litt. Thesis, Madras University, Madras, 1955.

கலைக்களஞ்சியம் :

249. கலைக்களஞ்சியம், தொகுதி ஐந்து, தமிழ் வளர்ச்சிக்கழகம், சென்னை, 1958.

## Lexicon :

250. Tamil Lexicon, Vol.I, University of Madras, 1982.

251. Tamil Lexicon, Vol.III, University of Madras,, 1928.

252. Tamil Lexicon, Vol.IV, University of Madras,, 198?.

253. Tamil Lexicon, Vol.V - Part I, University of Madras, 1932.

254. Tamil Lexicon, Vol.VI, University of Madras, 1982.

### தத்துவக் கலைச் சொல், அருஞ்சொற்பொருள் விளக்கம்

### அகரவரிசை

| | | |
|---|---|---|
| அகண்டகாரம் | - | எல்லைக்குள் அடங்காத வடிவம், பெருவெளி, வரம்பிலாமை. |
| அகிதம் | - | வேதாகமங்களில் விதித்தவற்றிற்கு மறுதலையானவற்றைச் செய்தல். |
| அசத்து | - | காரியரூபத்தில் தோன்றிக் காரண ரூபத்தில் மறைந்துபோகும் பொருள். |
| அசுத்தமாயை | - | மலகன்மங்களோடு விரவி இன்ப துன்பம் இரண்டும் பயப்பது. அசுத்த உலகிற்குக் காரணமாய் நிற்பது. சுத்தமாயையின் கீழாய் அடங்கி நிற்பது. |
| அச்சு | - | உடம்பு |
| அஞ்ஞானம் | - | அறியாமை. |
| அணு | - | சூக்கும உடம்பு, நுண்ணுடம்பு. |
| அணுபரிணாமம் | - | அணு அளவு. |

| | | |
|---|---|---|
| அணைந்தோர் | - | உடல் உள்ளபோதே முக்தி இன்பம் பெறுவர். |
| அதிசூக்குமம் | - | மிகுநுண்மை. |
| அத்துவிதம் | - | இரண்டன்மை, வேறன்மை, வேற்றுமை யின்றி நிற்றல். |
| அநாதி | - | தோற்றமில்லாதது. |
| அரன் | - | உயிர்களின் பாசத்தை அரிப்பவன். |
| அருவம் | - | உருவற்றது. |
| அருவுருவம் | - | உருவற்ற பொருளைக் குறிக்கின்ற ஒரு உருவ அடையாளம். |
| அவத்தை | - | நிலை. |
| அவயவப் பகுப்பு | - | உறுப்பு உறுப்பாய்ப் பிரிக்கப்படும் தன்மை. |
| அன்னியம் | - | வேற்றுமையின்மை. |
| ஆகந்துகமலம் | - | இடையில் வந்து கூடும் மலம், (மாயை, கன்மம்) |
| ஆகாமியம் | - | உயிர்களின் விருப்பு, வெறுப்பு. (இது மறுபிறவிக்கு விதையாகும்.) |
| ஆணவம் | - | உயிரறிவைச் சுருங்கச் செய்வது. |
| ஆதிதைவிகம் | - | தெய்வத்தால் வரும் துன்பம். |
| ஆதிபௌதிகம் | - | பூதத்தால் வரும் துன்பம் |
| ஆதியான்மிகம் | - | தன்னாலும் பிற உயிர்களாலும் வரும் துன்பம் |
| ஆன்மா | - | உயிர். |
| இதம் | - | உயிர்க்குறுதியென வேதாகமங்களில் விதித்தவற்றைச் செய்தல். |
| இருவினை ஒப்பு | - | விருப்பு வெறுப்பற்ற நிலை, இன்ப துன்பங் களைச் சமமாகப் பாவிக்கும் நிலை. |
| இறைபணி | - | உயிர், இறைவன் அருள்வழி நின்று செயலாற்றுதல். |
| உலககாரணன் | - | உலகம் தோன்றவும் ஒடுங்கவும் காரணமாயுள்ளவன். |
| உலகருபி | - | உலகப்பொருட்களில் நிறைந்தவன். |

| | | |
|---|---|---|
| உலகாதிகன் | - | உலகத்தைக் கடந்து நிற்பவன். |
| உலகாந்தர்யாமி | - | உலகப் பொருட்களையும் உயிர்களையும் உள்நின்று தொழிற்படும்படிச் செய்பவன். |
| ஊனக்கண் | - | புறக்கண், குறையுணர்வு |
| கடவுள் | - | தத்துவங்களைக் கடந்த உண்மைப் பொருள். |
| கரணம் | - | கருவி. |
| கன்மம் | - | வினை |
| காரண அவத்தை | - | காரியத்துக்கு முற்பட்ட அருவநிலை. |
| கான்மியம் | - | புண்ணிய, பாவம். |
| கிரியை | - | இறைவனின் அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு; வழிபாட்டிற்குரிய புறத்தொழில்களைச் செய்து அகத்தால் வழிபடுதல். |
| கேவலம் | - | உயிர் ஆணவத்தில் அழுந்தியுள்ள நிலை உயிரின் அறிவு, இச்சை, செயல்கள் சிறிதும் நிகழாது உயிர் மட்டும் உளதாதல். |
| சகசமலம் | - | உடன்தோன்றிய மலம், ஒன்றி நிற்கும் மலம், ஆணவம். |
| சகமார்க்கம் | - | தோழமை நெறி |
| சகலம் | - | பிறப்பு நிலை. |
| சகலர் | - | ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களால் பிணிக்கப்பட்டவர்கள். ஆணவத்தால் வலிமையாகக் கட்டப்பட்டவர்கள். இவர்களுக்கு இறைவன் குருவடிவில் வந்து ஞானம் வழங்குவான். |
| சங்காரகாரணன் | - | அழித்தல் தொழில் செய்பவன். |
| சங்காரத்தொழில் | - | அழித்தல் தொழில். |
| சச்சிதானந்தம் | - | உண்மை, அறிவு, இன்பம் |
| சத்திநிபாதம் | - | அருளினது வீழ்ச்சி |
| சத்து | - | உள்பொருள். |
| சத்புத்திரமார்க்கம் | - | மகன்மை நெறி. |

| | | |
|---|---|---|
| சரியை | - | இறைவனின் உருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு; வழிபாட்டிற்குரிய புறத்தொழில்களைச் செய்தல். |
| சன்மார்க்கம் | - | ஞானநெறி. |
| சாக்கிரம் | - | நனவு. |
| சாமீபம் | - | இறைவனின் அருகிலிருக்கும் நிலை. |
| சாமுசித்தர் | - | முற்பிறவிகளில் சரியை, கிரியை, யோக நெறிகளில் நின்று எடுத்துள்ள பிறவியில் விரைவில் வீடுபேறு அடையும் நிலையிலுள்ளவர்கள். |
| சாயுச்சியம் | - | உயிர் இறைவனிடம் ஐக்கியமாகும் நிலை. |
| சார்ந்ததன் வண்ணம் | - | சேர்ந்த பொருளின் தன்மை. |
| சாரூபம் | - | இறைவனைப் போலாகுதல். |
| சாலோகம் | - | இறைவனின் உலகை அடைதல். |
| சிற்சக்தி | - | ஞானசக்தி, அறிவாற்றல். |
| சீவன்முத்தன் | - | சீவிக்கும் பொழுதே (உயிருள்ளபொழுதே) பாசத்திலிருந்து விடுபட்டவன். |
| சுத்தம் | - | உயிர் அருளோடு ஒன்றிய நிலை. |
| சுத்தமாயை | - | சுத்த உலகிற்குக் காரணமாய்த் துன்பத் தோடு விரவுதலின்றி இன்பம் மட்டும் பயப்பது. |
| சுழுத்தி | - | உறக்கம் |
| சுழுமுனை | - | நடுநாடி |
| சூக்கும உடம்பு | - | கண்ணுக்குப் புலனாகாத உடம்பு |
| சூக்கும பஞ்சாக்கரம் | - | சி, வ, ய, ந, ம. |
| சொரூபலக்கணம் | - | பொருளின் சிறப்பியல்பு. |
| ஞானம் (சாதனம்) | - | அறிவு வழிபாடு. |
| தடத்தலக்கணம் | - | பொது இயல்பு |
| தத்துவம் | - | உள்பொருள். |
| தாசமார்க்கம் | - | அடிமைநெறி |
| தாதான்மியம் | - | பிரிப்பின்றி நிற்றல். |

திரோதானம் - இறைவனின் மறைத்தல் சக்தி; மும்மலங்களையும் தொழிற்படுத்தும் சக்தி.

தீக்கை - மலத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுத்தல்.

துரியம் - பேருறக்கம்

துரியாதீதம் - உயிர்ப்படங்கல்

தூலஉடம்பு - கண்ணுக்குப் புலனாகும் உடம்பு.

தோற்றகாரணன் - படைப்புத் தொழிலைச் செய்பவன்.

நிமித்தகாரணன் - வினைமுதற் காரணன். (பானை வனைதற்குக் குயவன் போல).

பசு - உயிர்

பசுஞானம் - உயிரறிவால் உண்டாகும் ஞானம்.

பசுத்துவம் - ஆணவம்.

பசுபதி - உயிர்களுக்குத் தலைவன்.

பவம் - பிறவி.

பாசம் - ஆணவம், கன்மம், மாயை

பாசஞானம் - உலகியல் அறிவால் உண்டாகும் ஞானம்.

பதி - இறைவன், கடவுள்.

பதிஞானம் - இறையருளால் உண்டாகும் ஞானம்.

பிரமாணம் - அளவைக்கருவி.

பிரபஞ்சம் - உலகம்.

பிரளயாகலர் - ஆணவம், கன்மம் என்ற இருமலர்களால் கட்டப்பட்டவர்கள். ஆணவம் இவர்களை இடைப்பட்ட நிலையில் பிணித்திருக்கும். இவர்களுக்கு இறைவன் தெய்வவடிவில் தோன்றி ஞானம் வழங்குவான்.

பிராரத்தம் - சஞ்சித வினையிலிருந்து ஒரு பிறவியில் அனுபவிக்க எடுத்து வந்த வினைப்பகுதி, வினையினால் உயிர் அனுபவிக்கும் இன்ப துன்பம்.

பெத்தம் - பிறப்புநிலை, கட்டுநிலை.

பெத்தர் - பாசக்கட்டுடையவர்.

| | | |
|---|---|---|
| மந்திரம் | - | நினைப்பவனைக் காப்பது. மந் -நினைத்தல்; திர - காத்தல்; மறைமொழி. |
| மலபரிபாகம் | - | ஆணவத்தின் வலிமை கெடுதல். |
| மாயா | - | மா-ஒடுங்குதல், யா-வருதல். எல்லாக் காரியங்களும் தன்பால் வந்து ஒடுங்குவதற்கும், தன்னினின்றுந் தோன்றுவதற்கும் காரணமாய் இருப்பது. |
| மாயேயம் | - | மாயையின் காரியம். |
| முத்தர் | - | பாசத்திலிருந்து விடுபட்டவர். |
| யோகம் | - | இறைவனின் அருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் அகவழிபாடு. |
| யோனி | - | கருப்பை. |
| வல்லி | - | மாயை. |
| விஞ்ஞானகலர் | - | ஆணவமலத்தால் மென்மையாகக் கட்டப்பட்டவர்கள். இவர்களுக்கு இறைவன் உள்நின்று உணர்த்தி ஞானம் வழங்குவான். |
| வீடுபேறு | - | முக்தி. |



இந்நூலாசிரியர் அறிஞர் கோமதி சூரியமூர்த்தி அவர்கள் திருமந்திரநகர் எனப் போற்றப்படும் தூத்துக்குடியில் 1940ல் பிறந்தவர். இளம் அறிவியல் (B.Sc., Chem.), ஆசிரியப் பயிற்சி (B.T.), முதுகலை (M.A.Tamil - விருப்பப்பாடம் சைவ சித்தாந்தம்) ஆகிய பட்டங்கள் பெற்றவர். "திருஞானசம்பந்தர் தேவாரமும் சைவ சித்தாந்தக் கருத்துக்களும்" என்ற பொருள் பற்றி ஆய்வு செய்து அறிஞர் (Ph.D) பட்டமும் பெற்றவர். கணிப்பொறி செயல்படும் திட்ட நிரல் படித்து முதுநிலைப் பட்டயம் (PGDCP) பெற்றவர். சைவ சித்தாந்தத் துறையில் மிகவும் ஈடுபாடு கொண்ட அறிஞர்கள் பலர் உள்ள பாரம்பரியக் குடும்பத்தைச் சேர்ந்தவர். 1985 முதல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்தத் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகின்றார். சுமார் 65க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை பல்வேறு சமய திங்கள் இதழ்களிலும், மலர்களிலும்; தஞ்சைத் தமிழ் பல்கலைக்கழக கலைக்களஞ்சியத்திலும் வெளியிட்டுள்ளார். இவருடைய கட்டுரைகள் பத்தினைத் தொகுத்து மலாயா அருள் நெறித் திருக்கூட்டத்தார் தங்கள் பவளவிழாவில் "சைவ சமய சாத்திரக் கட்டுரைகள்" என நூலாக வெளியிட்டுள்ளனர். சைவ சித்தாந்தத் துறையில் மாணவர்களுக்கு டாக்டர் பட்டத்திற்கும் M.Phil. பட்டத்திற்கும் ஆய்வு வழிகாட்டியாக இருந்து வருகிறார். அமெரிக்க ஐக்கிய நாட்டில் சில காலம் வாழ்ந்த அனுபவம் கொண்டவர்.